கோபமும் அமைதியும்

ராபர்ட் மாகிடாப்

ராபர்ட் மகிதாப்

கோபமும் அனுதாபமும்

ருஷியாபற்றிய ஓர் அறிக்கை
(In Anger and Pity)

தமிழாக்கம் :
ஸ்ரீ வத்ஸன்

கார்டன் ஸிடி, நியுயார்க்
டபில்டே அண்டு கம்பனி, இங்க்., 1949.

I-1

Printed in the United States by Doubleday & Co., Inc.
at the Country Life Press, Garden City N.Y.

The author wishes to express his thanks for permission to reprint material from the pages of the Saturday Review of Literature, the New York Times Book Review, the Saturday Evening Post, This Week Magazine, Factory Management. Business Week, and the Atlantic Monthly.

Publisher (Tamil Edn.) S. Narayanan and Printed by A. Sendall at the Associated Printers (Madras) Ltd., Madras.

அ-32

யுனைட்டெட் ஸ்டேட்ஸில், நியுயார்க்கில், கார்டன் ஸிடியில் கண்ட்ரி லைப் பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது.

தி சாட்டர்டே ரெவியு ஆப் லிட்டரேச்சர், தி நியுயார்க் டைம்ஸ், புக் ரெவியு, தி சாட்டர்டே ஈவினிங் போஸ்ட், திஸ் வீக் மாகஸின், பாக்டரி மானேஜ்மெண்ட், பிஸினஸ் வீக், அட்லாண்டிக் மந்த்லி ஆகிய பத்திரிகைகளின் பக்கங்களிலிருந்து விஷயத்தை மீண்டும் அச்சிட்டுக்கொள்ள அனுமதியளித்ததற்காக, ஆசிரியர் தம் வந்தனத்தைத் தெரிவிக்க விரும்புகிறார்.

கோபமும் அனுதாபமும்

ருஷியாபற்றிய ஓர் அறிக்கை

ராபர்ட் மகிதாப் எழுதியது

ராபர்ட் மகிதாப், திடுமென, வேவுகாரர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு மூன்று நாள் கெடுவில் ருஷியாவினின்று வெளியேறிவிடுமாறு உத்தரவிடப்படுமுன், அந்நாட்டில் நேஷனல் ஒலிபரப்புக் கம்பெனிக்கு எழு வருஷம் உள்பட மொத்தம் பன்னிரண்டு வருஷம் அமெரிக்கச் செய்தி நிருபராக இருந்தவர். ஆகவே, ஏதோ இரண்டுமாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்து அதில் தமக்கேற்படும் அனுபவங்களைக் கொண்டு அவசரம் அவசரமாகப் புத்தகம் எழுதிவிட்டாரென நாம் அவரைப்பற்றிக் கூற முடியாது. ருஷிய வரலாற்றில் மிக முக்யமான பன்னிரண்டு வருஷகாலத்தில் தமக்கு அந்நாட்டில் வாய்ந்த அனுபவங்களில் கவனமும் சிந்தனையும் செலுத்திய அவர் இந் நூலில் பல அரிய விஷயங்களை நமக்கு அறிவிக்கிறார்.

இந்நூலை ராபர்ட் மகிதாப்பின் சொந்த வாழ்க்கையின் ஒரு வரலாறெனச் சிறப்பாகக் கூறலாம். அவருடைய ருஷிய மனைவி, அவருடைய பணியாட்கள், அவருடைய ருஷிய நண்பரிற் சிலர், அவரோடு வேலை செய்த ருஷியர், மாஸ்கோவில் அயல் நாட்டினரின் வாழ்க்கை ஆகிய விஷயங்களை இதில் காணலாம். இன்று நடந்துவரும் பிரசார யுத்தத்துடன் இணைந்த கலை, இசை, இலக்கியம், ஆகியவற்றை நன்கு விளக்கும் அத்தியாயங்கள் இதில் உள்ளன. கடைசி அத்தியாயத்தில், சோவியத் யூனியனின் உள்நாட்டு, வெளிநாட்டு ராஜீயக் கொள்கைகளை நிர்ணயிக்கும் 'பொலித் பீரோ' எனப்படும் கம்யூனிஸ்ட் கட்சியின் அந்தரங்கக் குழுவினர், ஸ்டாலின் ஆகியவர்களைப் பற்றிய சர்ச்சையும், அமெரிக்காவை எதிர்த்து நிற்கும் சோவியத் யுத்த சக்தியும், ருஷியரின் இன்றைய உண்மையான

நோக்கங்களும், இந்நோக்கங்களைப் பற்றிய நுட்பமான ஒரு மதிப்பீடும் இதில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ மகிதாப் ருஷியாவைப்பற்றி எழுதியுள்ள இந்த அறிக்கை மிதமாகவே உள்ளது. ஆழ்ந்த கருத்துக்கள் கொண்டதாயினும், சோவியத் வாழ்க்கையின் பல விசித்திரமான அம்சங்களும் இதில் அடங்கியுள்ளன. ருஷிய மாதர் சுறுசுறுப்பான ஐரோப்பிய நடையுடை பாவனைகளின் ரீதியைப் பின்பற்றும் போது அணிந்துகொள்வதைப் பற்றிய வர்ணனையொன்று தமாஷாகவே உள்ளது. ருஷிய தளகர்த்தர் ராஜீய தூதுவரின் தேநீர் விருந்துக்களில் நடந்துகொள்ளும் விதம் பற்றிய சொற் சித்திரங்கள் வேடிக்கையாக உள்ளன.

எளிய முறையில் எழுதப்பட்ட இந்நூலில், உண்மையான மக்களையும் அவர்களின் இன்ப துன்பங்களையும் பற்றிய விளக்கங்கள் பல காண்கின்றன. இதுவரையில் அமெரிக்கப் பொது ஜனங்களுக்குக் கிடைத்திருக்கும் ருஷியரின் தினசரி வாழ்க்கை பற்றிய விவரமான ஆராய்ச்சிகளுள் இதுவே சிறந்ததொன்று.

ராபர்ட் மகிதாப்

அமெரிக்கப் பத்திரிகை நிருபரான ராபர்ட் மகிதாப் ருஷிய மரபில் தோன்றியவர். 1935-ல்தான் அவர் முதன் முதலாக ருஷியா சென்றார். அடுத்த பன்னிரண்டு வருஷங்கள் அஸ்ஸோஸ்ஸியேடட் பிரஸ் ஸ்தாபனத்திற்குச் செய்திகள், அறிக்கைகள் பல அனுப்பினார். நேஷனல் ஒலிபரப்புக் கம்பனிக்கு 1,200 ஒலிபரப்புகள் செய்தார். பிரதான அமெரிக்கப் பத்திரிகைகளுக்குப் பொது, விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதி வந்தார். சோவியத்-ஜெர்மன் யுத்த காலமுழுவதும் ருஷியாவில் இருந்த அமெரிக்கப் பத்திரிகையாளர் அவர் ஒருவரேயாவர். இரும்புத் திரையிட்ட நாடுகள் உள்பட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் அவர் பிரயாணஞ் செய்திருக்கிறார். அவர் விஸ்கான்ஸின் சர்வ கலாசாலையில் பட்டம் பெற்றவர். அவருடைய ருஷிய மனைவி ஸ்ரீமதி நீலாவும் அவரும் கெண்டுக்கியில் உள்ள லூயிவீலில் வசிக்கின்றனர்.

பொருளடக்கம்

பகுதி ஒன்று

கிரெம்லின் என்னை ஒற்றன் என்றது

அத்தியாயம் 1

என் காரியதரிசி

" எனக்கு ஒரு உதவி செய்வீர்களா ? ஐயாயிரம் ரூபில் கடன் வேண்டும்."

குழந்தை முகமும் நீல விழிகளுமுடைய அப்பெண் இவ் விதமாகக் கேட்டாள். நான் ஒருகால் மறுக்கக் கூடுமோ என்று அஞ்சியதுபோல அவள் உடனேயே சொன்னுள் :

" இப்போதே வேண்டாம். இரண்டு வாரத்திற்குள் தந் தால் போதும். என் கணவரும் என் தகப்பனுரும் குடியிருக்க மாஸ்கோ நகர்ப்புறத்தில் வீடு ஒன்று பார்த்துக்கொண்டிருந் தனர். கடைசியாக ஏதோ ஒன்று அகப்பட்டிருக்கிறது. அது மிகவும் பழுதான நிலையில் இருக்கிறது. ஆனுல் என் தகப்ப னுருக்குத் தச்சுவேலை தெரியும். கோடைக் காலத்திற்குள் அதை வாசத்திற்கு உரியதாகச் செய்திடுவார். அதனுல் தான் விலை அவ்வளவு குறைவு. பத்தொன்பதினுயிரம் ரூபில்தான். எங்களிடம் பதினுன்காயிரம் உள்ளது. மிச் சத்தைக் கொடுத்து உதவ எங்களுக்கு வேறெவரும் இல்லை."

" கடனைத் திருப்பித் தர எவ்வளவு காலம் ஆகும் ?"

" நான் ஏற்கெனவே உமக்குத் தொண்ணூறு ரூபில் தர வேண்டும். மொத்தமாக அமெரிக்க நாணயத்தில் அது 800 டாலருக்குச் சிறிது அதிகமாகலாம். என் கணவரும் என் தகப்பனுரும் நானுமாகச் சேர்ந்து முழுத் தொகையையும் ஒரு வருஷத்தில் திருப்பித்தரக் கூடும்."

" நான் இங்கே நீண்ட காலம் இருக்கமாட்டேன். ஆயினும் உனக்குப் பணம் தருகிறேன். எனக்குப் பின்னுல் வருகிறவர் அக்கடனை ஏற்பார். அவரிடம் கடைசி தவணையைச் செலுத்தி விடலாம்."

“ நான் உங்கள்பால் எவ்வளவு நன்றியுடையவளாக இருக்கிறேன் தெரியுமா, ராபர்ட் அவர்களே ?”

இந்தச் சம்பாஷணையானது 1948, ஏப்ரல் 10, சனிக்கிழமையன்று மெட்ரோபோல் ஓட்டலிலுள்ள என் ஆபீஸில் எனக்கும் என் மாஸ்கோ காரியதரிசியான செசீலியா நெல்சனுக்கும் நடந்தது. அதே நாள் மாலே என் மனைவி நீலா தற்செயலாக ஆபீசுக்கு வந்தாள். அப்போது நான் வெளியே சென்றிருந்தேன். பெண்கள் இருவரும் உரையாடினர். அது சமயம், செசீலியா, நான் கடன் கொடுப்பதாக வாக்களித்ததையும் தன் நன்றியையும் பற்றி நீலாவிடம் சொன்னுள். அநியாய வாடகை கொடுத்து வைத்திருந்த ஜாகையிலிருந்து விரட்டப் பட்டால் என்ன செய்வது என்ற பயம் நீங்கியது. குடும்பம் ஒன்ருக இருக்கும். தான் செய்து வந்த வேறு இரண்டு வேலேகளும் நீடித்தால் குறித்த காலத்திற்கு முன்பே கடனைத் திருப்பித் தந்துவிடுவாள். ராய்ட்டர் ஸ்தாபனத்தைச் சார்ந்த டான் டல்லஸ் என்பவரும் நானுமாகச் சேர்ந்து செசீலியாவை ஒரு வருஷமாக வேலேக்கு வைத்துக்கொண்டிருக்கிருேம். காலேயில் அவருக்கும் பிற்பகலில் எனக்குமாக அவள் வேலே செய்து வந்தாள்.

அடுத்த திங்கட்கிழமையன்று மற்ருெரு சிறு உதவியை என்னிடம் நாடினுள். செவ்வாய் பிற்பகல் தனக்கு மிக அவசர மான காரியம் ஒன்று இருந்ததனுல், வழக்கமான நேரத்திற்கு முன்பாகவே ஆபீசை விட்டுச் செல்ல உத்தரவு கேட்டாள். எனக்கு யாதொரு ஆட்சேபமுமில்லேயாதலால், அன்றைய தினம் 5 மணிக்கே சென்ருள். அன்று அவள் பரபரப்பாகவும் அசாதாரணமானதொரு வசீகரத்துடனும் தோன்றினுள். அதனுல், சிநேகிதப் பிள்ளேயாண்டான் ஒருவனுடன் ஏற்படுத்திக் கொண்ட குறியிடம் செல்லவே வேலேயை விட்டு அவ்வளவு சீக்கிரம் போகிருள் என நானும் என் உதவியாளரான ஆண்டுரு ஸ்டெய்கரும் அவளேக் கேலி செய்தோம். அவள் விஷமச் சிரிப்புடன் எங்களேப் பார்த்து விடைப்பெற்றுச் சென்ருள்.

புதன்கிழமை காலை குறித்த நேரத்திற்குப் பின் ஒரு மணி ஆகியும், செசீலியா வரவில்லை. டான் டல்லஸ்ஸுக்கு ருஷிய தஸ்தாவேஜ்களைப் படிக்கவேண்டியிருந்தது. அவர் என் காரியாலயத்திற்கு போன் செய்து செசீலியா இருக்கிறாளா என்று கவலையுடன் கேட்டார். ஆந்தியும் நானும் பத்திரிகையிலும் விசேஷமில்லை என்று உறுதி கூறினோம். ஆயினும், முன்னெச்சரிக்கையோ, தகுந்த காரணமோ ஒன்றுமில்லாமல் ஒரு நாள்கூட செசீலியா வேலையைச் சோரவிட்டது கிடையாதே என்று கவலைப்பட்டோம். டான் டல்லஸ்ஸின் ஆங்கிலம் பேசும் மோட்டார் டிரைவர் அவள் வீட்டுக்குச் சென்று விசாரித்ததில், அவளேனும் அவள் கணவனேனும் இரவில் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை என்று கேள்விப்பட்டதாகச் சொன்னான். என் யோசனையின்மேல் டான் தம் டிரைவரை செசீலியாவின் வீட்டுக்கு அனுப்பினார். அவன் வேறொரு கதையுடன் திரும்பி வந்தான். அவளுடைய கணவன் டோய்க் இரவெல்லாம் வீட்டுக்கு வரவில்லையாம். அவள் மட்டும் திரும்பி வந்தாளாம் தாமதமாக. அவள் சோர்ந்திருந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. வீட்டுக்காரியிடம் தனக்கு ஏதோ ஒரு வேலை இருந்தது என்றாளாம். கணவன் திரும்பி வராததைக் குறித்து அவள் கவலைப்படவே இல்லையாம். வீட்டுக்காரி காலையில் எழுந்திருப்பதற்குள் செசீலியா புறப்பட்டுப் போய் விட்டாளாம். பிற் பகலிலும் அவள் காரியாலயத்திற்கு வரவில்லை. உத்தியோக தோரணையில் விசாரிக்குமுன் அடுத்த நாள் வரையில் பொறுத்திருக்கலாமெனத் தீர்மானம் செய்தோம்.

ஏப்ரல் 15-ந் தேதி வியாழக்கிழமை காலை என் மாஸ்கோ அறையில் டெலிபோன் மணி அடித்தது. நான் விழித்தேன். கை நடுங்க டெலிபோன் ரிசீவரை எடுத்தேன். லயனின் மறுமுனையில் அஸ்ஸோஸியேட்டட் பிரஸ் மாஸ்கோ ஆபீசின் தலைவரான எட்டி கில்மோர் பேசினார். அவருடைய குரல் விறைப்பாயும் கரகரப்பாயும் இருந்தது. காலை வந்தனம் என்றுகூடச் சொல்லாமல் அவர் சொன்னதாவது ;

" பாப், நீ அறிக்கையொன்று வெளியிட வேண்டும் ".

" அறிக்கையா ? என்னப்பா சொல்லுகிருய் ?"

" உனக்கென்ன விஷயமே தெரியாதா அல்லது பொறுத்துப் பார்க்கலாம் என்று இருக்கிருயா ?"

" இதோ பார் எட்டி, நீ என்னை விழிக்கச் செய்து அறிக்கை என்று என்னவோ சொல்கிருய். நான் இன்னும் அரை தூக்கத்தில் இருக்கிறேன். என்ன விசேஷம் ?"

சிறிதுநேர மௌனத்திற்குப் பின் :

" ராபர்ட், வருந்துகிறேன். 'இஸ்வெஸ்தியா' பத்திரிகை இன்று காலை உன் காரியதரிசியின் கடிதம் ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதில், நீ ஒரு அமெரிக்க ஒற்றன் என்று அவள் சொல்லியிருக்கிருள்."

நான் முற்றும் விழித்துக்கொண்டேன்.

" அதை எந்த விதமாக எழுதியிருக்கிருள், எட்டி ?"

" அது நீண்டதொரு சிக்கலான கடிதம். அதை நீயே மூலத்தில் படித்தால்தான் அதன் முழு அர்த்தம் விளங்கும்".

எட்டி அத்தோடு டெலிபோன் ரிசீவரைத் தொங்க விட்டு இந்தக் கதையை வேறெவரும் வெளியிடுமுன் டைப் அடித்து அனுப்ப விரைந்தார். நான் ஆடை அணியவாரம்பித்தேன். நீலா டெலிபோனண்டை அமர்ந்து இஸ்வெஸ்தியா பிரதியை எவரேனும் உடனே அனுப்பச் செய்ய முயன்ருள்.

நான் ஒரு ஒற்றன் என்பதை இவ்விதமாகவே முதன் முதலாக அறிந்தேன்.

'இஸ்வெஸ்தியா' ருஷியாவின் உயர் சோவியத் தலைவர்களால் வெளியிடப்படுவது. அதைச் சாதாரணமாகச் சோவியத் அரசாங்கப் பத்திரிகை எனக் கூறுவர். செசிலியா நெல்சன்

ஆசிரியருக்கு எழுதிய கடிதம் 1948, ஏப்ரல் 15-ந் தேதி வியாழக்கிழமை இதழில் 4-ம் பக்கத்தில் ஆசிரியருக்குக் கடிதம் என்ற தலைப்பின்கீழ் பிரதானமாக வெளியிடப்பட்டிருந்தது. அது வருமாறு :

வணக்கத்திற்குரிய ஆசிரியர்—பிரஜை,

நான் இன்றுவரையில் மகிதாப் என்னும் அமெரிக்க நிருபரின் காரியதரிசியாக இருந்துவந்தேன். கீழே விவரித்துள்ள நிலைமையில், என் வேலையைத் துறந்து உங்களுக்கு இக் கடிதத்தை எழுத நேர்ந்திருக்கிறது.

நான் அமெரிக்காவில் மிச்சிகன் ராச்சியத்தில் பிறந்து வளர்ந்து போதனு கலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றவள். சென்ற சில ஆண்டுகளாக சோவியத் யூனியனில் வசித்துவருகிறேன்.

இங்ஙனம் வசித்துவருகையில் நான் ருஷிய மக்களுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அதனுல் சோவியத்தின் உண்மை நிலை எனக்கு நேராகத் தெரியும். சோவியத் நாட்டில் மட்டுமே சாமான்ய மக்கள் உண்மையான சுதந்திரத்துடன் வாழமுடியும் என்றும், இங்கேதான் மக்கள் அச்சமின்றியும் தைரியமாயும் தம் எதிர்கால வாழ்க்கையை நோக்கி நிற்கின்றனர் என்றும் நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தில் பிரஸ் இலாகாவில் நான் பார்த்துவந்த வேலையை விட்டு, 1914, ஆகஸ்டில், ராபர்ட் மகிதாப் என்னும் அமெரிக்க நிருபரின் காரியதரிசியானேன்.

பல ஆண்டுகள் அவருடன் வேலேசெய்து வந்த காலத்தில், அவர் முற்போக்குடையவர் என்றும் சோவியத் யூனியன்பற்றி விருப்பு வெறுப்பற்ற நடுநிலே மனப்போக்குடையவர் என்றும் நிச்சயமாக நம்பினேன். மகிதாப் ருஷியப்பெண் ஒருத்தியை மணந்துள்ளார். அவர் எப்போதும் சோவியத் மக்களுடன் மகிழ்ச்சியுடனும் உற்சாகமாகவுமே பழகி வந்திருக்கிருர்.

சமீபகாலமாகத்தான் அவர் முதல் தடவையாக அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த ராணுவ, கப்பற்படை நிபுணர்களுடன் அந்தரங்கத் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிருர். மகிதாப்பையும் அவர்களேயும் இணைக்கும் பொதுவான அம்சங்கள் யாதொன்றுமில்லேயாதலால், அவர் வைத்துக்கொண்ட இத் தொடர்புகள் எனக்கு விபரீதமாகத் தோன்றின. ஆயினும், இதில் விசேஷம் ஏதாகிலும் இருக்குமென நான் கருதவில்லே. ஆனல், சென்ற சில நாட்களாக மகிதாப்பின் நடத்தையை விளக்கவல்ல சில விஷயங்கள் எனக்குத் தெரியலாயின. சோவியத் யூனியனில் பல்லாண்டுகள் வசித்துவரும் அம்மனிதர், சோவியத் யூனியனுக்கு எதிராகப் பழி செய்வதற்கு எளிதாக இருக்கும்பொருட்டே வேஷம் போடுகிருர் என்றே அவை எனக்குத் தெளிவாகப் புலப்படுத்தின.

நான் மகிதாப்பின் காரியதரிசியாதலால், அயல்நாடுகளிருலிந்து அவருக்கு வரும் தஸ்தாவேஜ்களும் அவர் நியமிக்கப்பட்ட வேலேகள் விஷயமாக அவர் எழுதின பதில்களும் எனக்குப் பழக்கமாயிருந்தன.

அவர் பிரிட்டிஷ் எக்ஸ்சேஞ்சு தந்தி செய்தி ஏஜன்ஸி, அமெரிக்க தேசீய ஒலிபரப்பு கம்பெனி

இவற்றின் பிரதிநிதியாக இருந்ததுடன், கடைசியாக மெக்கிரா-ஹில் என்னும் அமெரிக்க பிரசுர கம்பனியின் பிரதிநிதியாகவும் இருந்துவந்தார்.

அந்த பிரசுர கம்பனியிடமிருந்து மகிதாப்புக்கு வழக்கமாக வந்த தஸ்தாவேஜ்களிலிருந்து, அக் கம்பனியானது சோவியத் பத்திரிகைகளும் விஞ்ஞான தொழில் நுணுக்க சஞ்சிகைகளும், சோவியத் விஞ்ஞானமும் சோவியத் தொழில்முறை நுணுக்கங்களும் சாதித்துள்ள விஷயமாக வெளியிட்ட செய்திகளில் அக்கறை கொண்டிருந்தது தெளிவாயிற்று.

பல நாட்களுக்குமுன், மகிதாப்பின் ஆபீசில் நான் தனியாக இருந்தபோது, தேவையாயிருந்த ஏதோ ஒரு கடிதத்திற்காகத் தேடினேன். அது சமயம், மகிதாப்பின் காகிதங்களில் என் கை மூலம் செல்லாமல், மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தின் மூலமாக மகிதாப்புக்குக் கிடைத்த பல தஸ்தாவேஜ்களைத் தற்செயலாகக் கண்டேன்.

இந்த தஸ்தாவேஜ்களிலிருந்து, மகிதாப் சோவியத் ருஷியாவில் வேவுபார்த்த செய்திகளைத் திரட்டி அனுப்புவதற்காக ஒழுங்காக நியமனங்கள் பெற்று வந்திருக்கிறார் என்பதும், நியூயார்க்கிலுள்ள மெக்கிரா-ஹில் பிரசுர கம்பனியில் உள்ள சிப்பந்திகள் சிலர் வேவுபார்க்கவே தம் உத்தியோகத்தைப் பயன் படுத்தி வருகின்றனர் என்பதும் வெளிப்படையாகத் தெரிகின்றன.

இக் கடிதங்கள் சிலவற்றில், தேவையான செய்திகளைப் பெறுவதற்குச் சோவியத் பிரமுகருடன் எங்ஙனம் பரிச்சயம் செய்துகொள்ளலாம் என்பதுபற்றிய ஆலோசனைகளும் காண்கின்றன.

அமெரிக்காவிலிருந்து வந்த 1947, ஜூன் 26-ந் தேதியிட்ட கடிதம் ஒன்றில், பூமிக்கடியில் உள்ள இயந்திர தளவாடங்கள் பற்றிய முழு விவரங்களை யும் சேகரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. அந்த தஸ் தாவெஜில் நேராக இவ்விதம் காண்கின்றது :

" இப்பிரச்னையைக் குறித்த செய்திகள் யாவற்றை யும் திரட்டுவது நம் வேலையாகும். இப்பிரச்னை யுடன் நேராகச் சம்பந்தப்பட்ட மற்ற புள்ளி விவரங் களையும் திரட்டவேண்டும். அதே காலத்தில், கூடு மானல், உன் ஆதாரங்களையும் நாங்கள் அறிய வேண்டும்."

இந்த தஸ்தாவேஜில் பூமிக்கடியிலுள்ள இயந்திர தளவாடங்கள் பற்றிய கேள்விகள் வருமாறு :—

" தளவாட அமைப்புக்கள் எந்தவிடத்தில் உள்ளன? ராணுவ முக்யமான நிலை பெயர்ந்துள்ள பிரதேசங் கள் யாவை ? வெடிகுண்டு வீச்சால் அவ்வளவு சேதமடைய முடியாத இடங்கள் எவை ? "

" விஷ வாயுக்களுக்கு எதிர் பாதுகாப்புக்கள் செய்துகொள்ளமுடியுமா ? ரேடியக் கிளர்ச்சியுள்ள அணுக்களுக்கு எதிராகப் பாதுகாப்புக்கள் செய்து கொள்ளமுடியுமா ? "

மகிதாப்புக்கு மெக்கிரா-ஹில் 1947, ஜூனில் எழுதிய கடிதமொன்றில், ரகசிய விஷயங்களைப் பற்றிய செய்தி களைச் சேகரிப்பது விஷயமாக விரிவான யோசனைகள் காண்கின்றன. அதில் ஒரு பாராவில், " அணுசக்தி துறையில் எத்தகைய ஆராய்ச்சி செய்யப்படுகிறது ? கூடுமானவரையில் திட்டமாகக் கூறு," என்று கேட் கப்பட்டுள்ளது.

1947, ஜூலை 30-ந் தேதியிட்ட கடிதம் சோவியத் விமானப்போக்குவரத்து, விமானத் துறை விஷய மான செய்திகளைத் திரட்ட மகிதாப்புக்குக் கட்டளை யிடுகிறது. அதில், "விமானப் போக்குவரத்து பற் றிய சேதி என்ன? அது எவ்வளவு வேகமாக வளர்ச்சி யடைந்து வருகின்றது? புதிதாகப் பெரிய விமான நிலையங்கள் ஏதேனும் உண்டா? சாமான் ஏற்றிச் செல்லும் விமான லயன்கள் பெருகிவருகின்றதா?" என்று கேட்கப்பட்டிருக்கின்றன.

இந்த தஸ்தாவேஜ்களின் இடையே, மகிதாப் அனுப் பிய அறிக்கைகளின் பிரதிகளையும் கண்டேன். இவற் றிலிருந்து அவர் தம் அறிக்கைகளைத் தாமே நேரா கத் தபால் மூலம் அனுப்பாமல் தூதுவராலயத்தின் மூலமாக அனுப்பினுர் என்று தெரிகிறது. இவ் வறிக்கைகளின் ஒரு பகுதியேனும் பத்திரிகைகளில் பிரசுரமாகிவிடலாம் என்று அஞ்சி, தாம் அனுப்பிய தாக வெளியிடாமல் பாதுகாக்குமாறு மெக்கிரா-ஹில் லைத் திட்டமாகக் கேட்டிருக்கிருர்.

1947, நவம்பர் 26-ந் தேதியிட்ட கடிதம் ருஷிய தொழிலமைப்பு பற்றிய விவரங்களைச் சேகரிக்குமாறு கேட்டது. அவர் 1928, ஜனவரி 3-ந் தேதி தம் பதிலைத் தூதுவராலயத்தின்மூலம் அனுப்பினுர். அறிக்கையில் ஒரு குறிப்பில், தாம் அனுப்பியதெனத் தெரியக்கூடாதெனக் கேட்டுக்கொண்டார்.

இக் கடிதங்களைப் படித்தபின், மகிதாப் செய்தி நிருபராக வேலை பார்த்துக்கொண்டே, அவ்வேலையை சோவியத்துக்கு விரோதமான உளவு வேலையில் பயன் படுத்திக்கொண்டிருக்கிருர் என்பது எனக்குத் தெளி வாயிற்று.

இந்த தஸ்தாவேஜ்களை ஆராய்ந்து பார்த்ததில் மேலும் பல விஷயங்கள் தெரிகின்றன. சமீபகால மாக, தூதுவர் பரிவாரங்களைச் சார்ந்த அமெரிக்க ராணுவ, கப்பற்படை நிபுணருடன் இவர் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதன் காரணங்கள் இப்போது தெளிவாகத் தெரிகின்றன.

யுத்தம் மக்களினத்திற்கே பேராபத்து விளைவிக்கக் கூடும் என்பது என் கருத்து. அமெரிக்க முதலாளி கள் யுத்தமொன்று நடத்தத் தயாராகிவருகின்றனர். அங்ஙனம் தயாராகுகையில் செய்துவரும் இழிமை யின் ஓர் அம்சமாகவே மகிதாப் சோவியத் பற்றிய விஷயங்களைச் சேகரித்து வருகிறார்.

மாஸ்கோவில் அமெரிக்க நிருபராக உள்ள மகிதாப் உண்மையில் என்ன செய்துவருகிறார் என்பதைத் தயக்கமில்லாமல் வெளிப்படுத்துமாறு இவையாவும் என்னைத் தூண்டியுள்ளன. நான் சொல்லியிருப் பதற்கு அத்தாட்சியாக, நான் குறிப்பிட்டுள்ள தஸ்தா வேஜ்களை உரிய சோவியத் ஸ்தாபனங்களிடம் ஒப்படைத் திருக்கிறேன்.

(கையொப்பம்) செசீலியா நெல்சன்.

மாஸ்கோ, ஏப்ரல் 14, 1948.

ஒரு வாரமாகவே இன்னதுதான் நடக்கப்போகிறது என்று நிச்சயமாகச் சொல்லமுடியாத நிலையில் இருந்துவந்தேன். அது சமயமே இக்கடிதம் வெளியாயிற்று. நீலாவையும் என் னையும் கடந்த ஏழு நாட்களாக எவரோ பின் தொடர்ந்து கண்காணித்து வந்தனர். ஆகவே, ஏதோ ஒரு அடி எங் களுக்குக் காத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிந்தோம். ஆனால், குற்றச்சாட்டு இவ்வளவு பொருத்தமற்றதாயும், பரி காசத்திற்கு இடமானதாயும், இவ்வளவு அபாயகரமானதாயும் இருக்குமென்று எங்களுக்குத் தோன்றவேயில்லை.

சரியாகக் காலை 9 மணிக்கு அமெரிக்க தூதுவராலயம் சென்று, ஜனரல் வால்டர் பெடெல் ஸ்மித்திடம் என் காரியதரிசியின் கடிதம்பற்றிச் சொன்னேன். வீட்டை விட்டு ஒரு அடி எடுத்துவைத்ததும் எந்த நேரத்திலும் நான் கைது செய்யப்படலாம். அதன்பின் தூதுவரைப் பார்க்கும் வாய்ப்பே கிடைக்காது. ஆகவே, சிறிதுநேரம் அவகாசம் ஏற்படுத்திக் கொள்ள தூதுவராலய மோட்டார் கார் ஒன்று தரும்படியாகக் கேட்டேன். அவர் பாதுகாப்பளிக்கும் அமெரிக்கக் கொடி பறக்கும் தம் லிங்கன் காருக்குச் சொல்லி அனுப்பினுர்.

மோகோவயா தெருவில் கிரெம்லின் என்று வழங்கும் ருஷிய அரசாங்க மாளிகைக்கு எதிராகவுள்ள தூதுவராலயத்தை நீலாவும் நானும் அடைந்தபோது பெடெல் ஸ்மித் வழக்கம் போல அமைதியாக இருந்தார். குரல் சமமாக இருந்தது. அவரது கம்பீரமான முகத்தை எப்போதும் மிருதுவாக்கின அவர் விழிகளில் தாண்டவமாடிய சந்தோஷ ஒளிதான் காணவில்லை.

அவர் எங்களை உடனே தம் இருப்பிடமான ஸ்பாஸ்ஸோ மாளிகைக்கு அழைத்துப் போகப் போவதாக உறுதியாகக் கூறினுர். அயல்நாட்டு மந்திரி மோலடாவிடம் விவாதித்து சோவியத் யூனியனைவிட்டுச் செல்ல அனுமதி பெறும்வரையில் அங்கே அவருடையவும் அவர் மனைவியுடையவும் விருந்தினராக இருக்கவேண்டுமெனச் சொன்னுர்.

நீலாவும் நானும் இத்திட்டத்தை ஆட்சேபித்தோம்.

“ஜனரல் அவர்களே, உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆனுல் நாங்கள் ஸ்பாஸ்ஸோவுக்குப் போக விரும்பவில்லை. நான் சோவியத் யூனியனுக்கு விரோதமாகக் குற்றம் ஒன்றும் செய்யவில்லை. மறைமுகமாகவேனும் ஏதோ ஒரு குற்றத்தை ஒப்புக்கொண்டவன்போல கருதப்படக்கூடிய எதையும் நான் செய்யவிரும்பவில்லை.

பெடெல் ஸ்மித் என்னை நேராகப் பார்த்து "உனக்கு ஆபத்து நேரிடக்கூடும் என்பதை அறிவாயா?" என்றுகேட்டார்.

"பன்னிரண்டு வருஷத்திற்கு மேலாக ருஷியாவில் வசித் திருக்கும் எனக்கு அதுதான் நன்ருகத் தெரியுமே. ஆனுல் போராடவேனும் வாய்ப்பு ஒன்றுள்ளது. அதைப் பயன் படுத்திக்கொள்வேன். நாங்கள் ஸ்பாஸ்ஸோவுக்குப்போனுல், நான் குற்றவாளி என்றறிந்தே அடைக்கலம் புக நேரிட்ட தென்று கூற ருஷியர்களுக்கு வாய்ப்பு அளித்தது போலாகும். அதைத்தான் அவர்கள் எதிர் பார்க்கின்றனர். தூதுவராலய மும் மெக்கிரா-ஹில் பிரசுர கம்பனியும் இக்குற்றத்திற்கு உடந் தையாயிருந்தன எனக் கூறப்படும்."

அந்த நிலையில், தூதுவர், தூதுவராலய ஆலோசகர்களான எல்டிராஜ் தர்ப்ரோ, முதல் காரியதரிசி ப்வாய் கோஹலர், ருஷியாவையும் ஏனைய ஐரோப்பாவையும் நன்கறிந்த முதல் காரியதரிசி பிரெடெரிக் ரெய்ன்ஹார்ட் ஆகியோரை அழைத்தார். இவர்கள் ருஷிய விஷயங்களில் நிபுணர்கள்.

தூதுவர் எங்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது, மூவரும் ஆலோசனை நடத்தி, போராட வாய்ப்புள்ளதென்றும், அதை நான் ஏற்கவேண்டுமென்றும் முடிவு செய்தனர்.

தூதுவர் கண்கள் பிரகாசித்தன. அவர் முகம் மலர்ந்தது. நல்ல போராட்டத்தில் களிக்கும் வீரரல்லவா அவர்?

ஆயினும், எங்களுக்குத் தேவையான வரையிலும் தூதுவ ராலய மோட்டார் வண்டியை எங்கள் வசம் ஒப்படைப்பதன் மூலம் எனக்கும் நீலாவுக்கும் சிறிது பாதுகாப்பளிக்கக் கடைசி முயற்சியொன்று செய்தார். அந்த யோசனையையும் நாங்கள் ஏற்கவில்லை. அதுமுதல், போகும் இடமெல்லாம் கால் நடையாகச் செல்லவே தீர்மானித்தோம். மாஸ்கோவின் ஜன நெருக்கமான தெருக்களில் வேண்டுமானுல் எங்களைக் கைது செய்துகொள்ளட்டுமே.

ஆகவே, தூதுவராலயத்தை விட்டுக் கால்நடையாகவே சென்றோம். மோகோவயாவிலிருந்து என் ஆபீஸ் உள்ள ஒட்டல் மிட்ரோபோலுக்குக் கால் நடையாகச் சென்று சில நிமிஷங்களுள் அடைந்தேன். நீலா எங்கள் ஜாகைக்குச் சென்றாள்.

நடந்து சென்றபோது எவரும் என்னைப் பின்தொடரவில்லை என்று அறிய வியப்படைந்தேன். நீலா வீடு சென்றதும், தானும் பின் தொடரப்படவில்லை என்று டெலிபோன் மூலம் தெரிவித்தாள்.

நான் ஆபீசில் நுழைந்ததும், பிட்ஸ்பர்க்கிலிருந்து வந்திருந்த ஆந்தி, விடியற்காலை 3 மணிக்கு செசீலியா போன் செய்தாள் என்று அறிவித்தார். அவள் என்னிடம் ஏதோ தகாத விஷயமொன்று கண்டு பிடித்துவிட்டதாயும், இனி என்னிடம் வேலை செய்யமுடியாதென்றும் என்னிடம் சொல்லி விடுமாறு கேட்டுக்கொண்டு உடனே போனைத் தொங்கவிட்டுப் போய்விட்டாளாம். அவ்வளவு சீக்கிரத்தில் 'இஸ்வெஸ்தியா' வில் அவளுடைய கடிதம் வெளியாகிவிடும் என்று கருதவில்லையாதலால், இந்தச் சேதியைத் தெரிவிக்க அந்த நேரத்தில் என்னை எழுப்ப விரும்பவில்லையென ஆந்தி தெரிவித்தார்.

என்மேசைமீது செசீலியாவிடமிருந்து வந்த கையெழுத்திடாத குறிப்பொன்று இருக்கக் கண்டேன். அதில், "ஆறு மாதத்திற்குமுன் உம்மிடமிருந்து வாங்கிய கடன் தொகையை இதோ திரும்பப் பெற்றுக்கொள்ளுங்கள்" என்றிருந்தது. உறையினுள்ளே 900 ரூபில்கள் இருந்தன.

செசீலியாவின் பூர்வோத்தரம்.

செசீலியா பொன்னிறமாகவும் சுந்தரமாகவும் இருப்பாள். 5 அடி 2 அங்குல உயரம். 1915, ஜூன் 29-ந் தேதி மிச்சிகனிலுள்ள நியூபெரியில் பிறந்தாள். ஸ்டௌவில் ஆரம்பக் கல்வியும், மேனார்டில் உயர்தரக் கல்வியும் பெற்று, பின் லோவல் உபாத்திமார் கலாசாலையில் இரண்டு வருஷங்கள் படித்தாள்.

ப்வின் இனத்தில் பிறந்தவரும் தச்சுத் தொழில் செய்து வருமான அவளுடைய தகப்பனார் தம் குடும்பத்துடன் சோவியத் கரேலியா சென்று அங்கே குடியேறினார்.

சோவியத் ருஷியாவில் குடியேறின ப்வின்களில் பலர் சோவியத் பிரஜைகளாயினர். ஆனால் அவர்கள் சோவியத் அதிகார வர்க்கத்தினரின் கட்டுப்பாடுகளுக்கு உட்படவில்லை. தாழ்ந்த வாழ்க்கைத்தரமும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. பலர் சைபீரியாவுக்கு வெளியேற்றப்பட்டனர். வெகு சிலர் வெளியேற்றப்படாமல் தப்பினர். இவர்களுள் செசீலியாவின் குடும்பம் ஒன்று. அனைவரும் சோவியத் பிரஜைகளாயினர்.

செசீலியா, அமெரிக்காவில் பிறந்த ப்வின் ஒருவனை ருஷியாவில் மணந்தாள். அவன் பெயர் டோவியோ. அவன் உயரமாயும் அழகாயும் இருப்பான். செசீலியாவைப்போல அவனும் சோவியத் பிரஜை.

செசீலியா இளஞ்சிறுவர் பள்ளிக்கூடத்தில் உபாத்தினியாக வேலை பார்த்தாள். அதிகச் சம்பளமும் நல்ல யுத்தகால உணவு ரேஷனும் தந்த அயலவர்களிடம் மெல்ல வேலைக்குப் போய்ச் சேர்ந்தாள். முதலில், மோரிஸ் இந்தசின் டைப் பிஸ்டாகவும், பிறகு நியூயார்க் டிரிபியூனின் மாஸ்கோ நிருப ராகவும் இருந்தாள். அங்கிருந்து ஈவினிங் போஸ்ட் பத்திரிகை யைச் சேர்ந்த எட்கார் ஸ்நோவிடம் சென்றாள். கடைசியாக, அமெரிக்க தூதுவராலயத்தின் பத்திரிகை இலாகாவில் குமாஸ் தாவாக அமர்ந்தாள்.

1944-ல் என்னிடம் காரியதரிசி வேலைக்கு வந்தபோது பெரிய இடத்துச் சிபார்சுகளெல்லாம் அவளிடம் இருந்தன. ஆகவே, தயக்கமின்றி வேலைக்கு எடுத்துக்கொண்டேன். சற் றேறக்குறைய நாலு வருஷம் என்னோடு இணைந்து வேலை செய்தபின், அவள் நேர்மையாகவும் விசுவாசமாகவும் உழைத் தாள் என்றே எனக்குத் தோன்றியது. அவள் சோவியத் பிரஜையாக இருந்ததும், சோவியத் பிரஜைகளின் மகளாயும்

மனைவியாயும் இருந்ததுமே அவள் குற்றம். என்னை எப்படி யேனும் மாட்டிவிட விரும்பின சோவியத் அதிகாரிகள் அவளை என் விஷயமாக எதையேனும் கண்டுபிடித்துச் சொல்லும்படி யாகவும், என்மீது குற்றஞ் சாட்ட உதவிபுரியுமாறும் உத்தர விட்டபோது, அவள் சொன்னபடியெல்லாம் செய்துதானே தீர வேண்டும். இஸ்வெஸ்தியாவில் தன் கையெழுத்தில் வெளி யான கடிதத்தை அவள் சுயமாகவே எழுதியிருக்கமுடியாது. நடை, சோவியத் யூனியன் பற்றிய புகழ்ச்சியுரை; விஷய ஜோடனை—இவையாவும் அயல்நாட்டு இலாகாவைச் சேர்ந்த ஒருவரின் குறுக்கீட்டைப் புலப்படுத்தின.

குற்றச்சாட்டுகளுக்குப் பதில்.

அவளுடைய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலுரையாக, இஸ்வெஸ் தியாவுக்கு அறிக்கையொன்று எழுதி அதை வெளியிடுமாறு கேட்டேன். நாஷனல் ஒலிபரப்புக் கம்பனிக்கும், மெக்கிரா-ஹில் பிரசுராலயத்திற்கும் நிருபன் என அங்கீகரித்துக்கொண்ட அயல்நாட்டுக் காரியாலயத்தின் பத்திரிகை இலாகா தலைவனுக் கும் அதேமாதிரியொரு கடிதம் எழுதினேன். பின் சொன்ன கடிதத்தின் வாசகம் வருமாறு :—

ஏப்ரல் 15, 1948.

ஸ்ரீ வாஸிலங்கோ,
பத்திரிகை இலாகா,
அயல்நாட்டு விவகாரக் காரியாலயம்,
மாஸ்கோ.

அன்பார்ந்த ஸ்ரீ வாஸிலங்கோ,

முன்னே என் காரியதரிசியாக இருந்த செசீலியா நெல்சன் 'இஸ்வெஸ்தியா'வின் இன்றைய இதழில், நான், மெக்கிரா-ஹில்லுக்குக்காகத் துப்பறியும் வேலை செய்து வருவதாயும், அமெரிக்கத் தூதுவராலயம் மூலமாக அவர்களிடமிருந்து கட்டளை பெற்றுவருவ

தாயும், சாதாரண தபால் வழியாக் இல்லாமல்; தூதர் கடிதப் பை மூலம் என் கதைகளை அனுப்பி வருவதாயும், தூதுவராலய பரிவாரங்களைச் சார்ந்த அமெரிக்க ராணுவ, கப்பற்படை நிபுணருடன் விசேஷ நட்புகொண்டுள்ளதாயும் என்மீது குற்றஞ்சாட்டியுள்ளாள்.

உண்மை என்னவெனில், நான் சோவியத் யூனியனில் வேலைபார்த்து வந்திருக்கும் இந்த பன்னிரண்டு வருஷகால முழுதும் சாதாரண தபால் மூலம் இல்லாமல், மெக்கிரா-ஹில்லிடமிருந்தோ, அல்லது வேறு எவரிடமிருந்தோ, எத்தகைய தனிக் கடிதமோ, கேபிலோ அல்லது வேறு எந்த உருவிலாயினும் எத்தகைய செய்தியோ பெற்றது கிடையாது. அயல்நாடுகளிலுள்ள மற்ற அமெரிக்கரைப் போலவே எனக்குரிய தபால்களும் அமெரிக்கத் தூதுவராலயம் விலாசம் பார்த்து என்று விலாசமிட்டு வருவது உண்மையே. ஆனல் என் தபால்கள் யாவும் சாதாரண தபால்கள் மூலமே செல்கின்றன.

வழக்கமான தணிக்கை அதிகாரிகள் மூலமாக அல்லாமல் வேறுவழியில் நான் எத்தகைய கதைகளையும் மாஸ்கோவிலிருந்து அனுப்பியது கிடையாது.

நியாயமான வழிகளில் இல்லாமல் நான் எத்தகைய செய்தியையும் சேகரித்ததோ, சேகரிக்க முயன்றதோ கிடையாது.

மாஸ்கோவில் தூதுவராலயத்தைச் சார்ந்த ராணுவ பரிவாரங்கள் உள்பட குடியேறியுள்ள அயலவர்களுடன் நான் கொண்டுள்ள தொடர்புகள் விஷயமாக நான் சொல்லவேண்டியது என்னவெனில், அமெரிக்க பிரஜை என்ற முறையிலும், அனுமதிக்கப்பட்ட அயல்

நாட்டு நிருபன் என்ற முறையிலும் நான் அவர்களுடன் சாதாரண சமூகத்தொடர்புகளையே கொண்டுள்ளேன்.

இங்குள்ள, அமெரிக்க ராணுவ பரிவாரங்களுடன் நான் அடிக்கடி நெருங்கிப் பழகுவதை என் காரிய தரிசி சமீபத்தில் பார்த்திருக்கவேண்டும்.

ஆனால், மத்திய ஐரோப்பாவில் பிரயாணஞ் செய்ய நான் போட்டுள்ள திட்டத்தின்படி ஆஸ்திரேலியாவில் அமெரிக்கப் பிராந்தியத்தைப் பார்வையிட அமெரிக்க ராணுவ நிர்வாகிகளின் அனுமதியைப் பெறச் செய்த முயற்சிகளில் நான் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது.

மெக்கிரா-ஹில்லின் நியூயார்க் காரியாலயத்திலிருந்து வந்த வேண்டுகோள்கள் சாதாரண தபால் மூலமாகவே அனுப்பப்பட்டன. நான் நியமிக்கப்பட்ட வேலைகள் விஷயமாகச் செய்ததையெல்லாம் சாதாரண தணிக்கைக்கு உட்பட்டே செய்தேன்.

உங்கள் உண்மையான,
ராபர்ட் மகிதாப்.

மேலே சொன்ன கடிதங்களின் பிரதிகளை மாஸ்கோவிலுள்ள அயல்நாட்டு நிருபர்களிடம் தந்தேன். அவர்கள் அனைவரும் இக்கடிதங்கள் விஷயமாக எழுதிச் சோவியத் தணிக்கை அதிகாரியிடம் சமர்ப்பித்தனர்.

அமெரிக்கத் தூதுவர் வால்டர் பெடெல் ஸ்மித் 'இஸ்வெஸ்தியா'வில் ராபர்ட் மகிதாப் விஷயமாக வெளியிட்ட கதையைக் குறித்து விடுத்த அறிக்கை வருமாறு :—

நான் மாஸ்கோவில் இரண்டு வருஷங்களுக்கு மேலாக இருந்துவருகிறேன். இக்காலத்தில் எந்த நிருபரும் ராஜதந்திர தபால் போக்குவரத்தின் மூலமாகச் செய்திக் கதைகள் எவற்றையும் அனுப்பியது கிடையாது. அவ்விதம் அனுப்ப அனுமதியும் அளிக்கப்படமாட்டாது. ஸ்ரீ மகிதாப்போ அல்லது வேறு எந்த நிருபரோ மாஸ்கோவிலுள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தின் மூலமாக தஸ்தாவேஜ்களோ கட்டளைகளோ பெற்றதே கிடையாது. நான் இக்காலை ஸ்ரீ மகிதாப்புடன் பேசினேன். எங்கள் பேச்சிலிருந்து, மிஸ் நெல்சன் குறிப்பிட்டுள்ள ' தஸ்தாவேஜ்களும் கட்டளைகளும்' சாதாரண சோவியத் தபால்கள் மூலமாகவே வந்தன என்னும் உண்மை உறுதிப்படுகிறது. அவற்றில் கேட்கப்பட்டிருந்த செய்தி விவரங்கள் அமெரிக்காவிலும் பிறநாடுகளிலும் வெறும் செய்திகளாகவே கருதப்படுகின்றன. பொது ஜனங்கள் அறிய உரிமை பெற்றுள்ள அவ்விஷயங்கள் சகஜமாகப் பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.

மாஸ்கோவிலுள்ள இதர அமெரிக்க நிருபர்களைப் போலவே மகிதாப்பும் அமெரிக்கத் தூதுவராலய சிப்பந்திகளுடனும் ராணுவ, கப்பற்படை பரிவாரங்களுடனும் நெருங்கிப் பழகுகிறவர். இங்கேயுள்ள அமெரிக்கர் வெகு சிலரே. சமீபகாலத்தில், நாங்கள் விரும்பாவிடினும், சோவியத் பிரஜைகளுடன் எங்கள் தொடர்புகள் பெரும்பாலும் உத்தியோக சம்பந்தமான தொடர்புகளே. ஆகவே, சகஜமான சமூகத் தொடர்புகளுக்கும் தோழமைக்கும் நாங்கள் ஒருவரையொருவர் சார்ந்து நிற்கவேண்டியிருக்கிறது. மகிதாப் எங்கள் ராணுவ, கப்பற்படை பரிவாரங்களுடன் கொண்ட தொடர்பு முற்றும் சமூக இயல்புடையவேயாகும்.

இந்த மிஷனைச் சார்ந்த் ராஜதந்திர, ராணுவ, கப்பற் படைச் சிப்பந்திகள், நியாயமாகவும் அதிகார தோரணை யிலும் கிடைக்கக்கூடிய செய்திகளுடன் நின்றுவிடு மாறு வலியுறுத்தியிருக்கிறேன். அவ்விதமாகவே நடக்கின்றன என நான் உறுதியாகக் கூறுவேன். சோவியத் பிரஜையான மிஸ் நெல்சன் இஸ்வெஸ்தி யாவில் வெளியிட்டுள்ள கூற்றுக்கள் முற்றும் பொய் யானவை எனத் தாம் கருதுவதாக மிஸ்டர் மகிதாப் என்னிடம் கூறுகிறார். அமெரிக்கத் தூதுவராலய சிப்பந்திகள் பொறுத்தவரையிலாவது அவை முற்றும் பொய் என்பதை நான் உறுதிப்படுத்துகிறேன்.

மகிதாப் இக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் எழுதிவரு வதாக என்னிடம் தெரிவித்தார். குற்றச்சாட்டுக்களை வெளியிட்ட மாதிரியாகவே இப்பதிலும் வெளியிடப் பெறுமென நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

இவ்விஷயங்களைப் பற்றிய செய்திகள், உண்மை கள், என் அறிக்கை ஆகிய யாவற்றையும் வாஷிங்டனி லுள்ள ராஜாங்க இலாகாவுக்குத் தெரிவித்துவரு கிறேன். அவை அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளி வருமென்றே எண்ணுகிறேன்.

மாஸ்கோ, ஏப்ரல் 15, 1948.

மெக்கிரா-ஹில் ஒர்ல்ட் நியூஸ் நியூயார்க் காரியாலயம் விடுத்த அறிக்கை வருமாறு :—

மெக்கிரா-ஹில் 'உலகச் செய்தி'களின் மாஸ்கோ நிருபராகிய ஸ்ரீ ராபர்ட் மகிதாப் வேவு பார்க்கும் குற்றம் செய்கிருரென அவருடைய காரியதரிசி வெளியிட்டிருப்பதற்கு யாதொரு ஆதாரமும் இடை யாது.

இக்குற்றச்சாட்டுகள் 1947 ஜூனில் ஸ்ரீ மகிதாப்புக்கு அனுப்பப்பட்ட மாமூலான செய்திகளை அடிப்படையாகக் கொண்டனவாகவே உள்ளன.

சமீபத்தில் நடைபெற்ற யுத்தத்தின்போது பூமிக் கடியில் அமைக்கப்பட்டுள்ள இயந்திர தளவாடங்கள் எவ்வளவு தூரம் பலனளிக்கத் தக்கனவாக இருந் தன என்பதை நிர்ணயிக்க உலகம் அளாவிய ஆராய்ச்சியொன்று நடத்திவருகிறோம். இது சம் பந்தமான செய்தி சேகரிக்கும் வேலைகள் ருஷிய நிரு பர்களுக்குப் போலவே, இங்கிலாந்து, பிரான்ஸ், சுவீடன், செக்கோஸ்லோவேகியா, இத்தாலி, ஜர்மனி, ஆஸ்திரியா, ஜப்பான் ஆகிய நாடுகளிலுள்ள எங்கள் நிருபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

எங்கள் நிருபர்கள் ருஷியாவைத் தவிர மற் றெல்லா நாடுகளிலிருந்தும் அறிக்கைகள் அனுப்ப முடிந்தது. ஸ்ரீ மகிதாப் இது சம்பந்தமாக, யாதொன்றும் எழுதியனுப்பவில்லை. மெக்கிரா-ஹில் சஞ்சிகைகளில் வெளியிடுவதற்காக இந்த அறிக்கைகள் நியூயார்க்கில் கட்டுரை உருவில் ஒன்று சேர்க்கப்பட்டன. சென்ற யுத்தத்தின்போது பெற்ற படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு, அமெரிக்கத் தொழில் களையும் பூமிக்கடியில் நடத்தவேண்டுமானால் அவை சமாளிக்க வேண்டியுள்ள பிரச்னைகளைப்பற்றி ஆதார பூர்வமாக விவரங்களை அறிவிப்பதே இந்த ஆராய்ச்சி களின் கருத்தாகும். இவ்விஷயத்தில் மெக்கிரா-ஹில் தொழில் வாசகர்கள் கொண்டுள்ள அக்கறையை கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

இதுவரையில் இவ்வறிக்கைகளில் இரண்டு வெளி யிடப்பட்டுள்ளன. 'ரசாயனப் பொருள்கள் பூமிக்குள் செல்லுமா?' என்ற தலைப்புடையது கெமிகல் இஞ்சி

னியரிங் பத்திரிகையின் 1948 மார்ச் இதழில் வெளி வந்தது. "தொழில் பூமிக்குள் அமைக்கப்படவேண் டிய அவசியம் ஏற்பட்டால்" என்ற தலைப்புடையது "பாக்டரி மானேஜ்மண்ட் அண்டு மெய்ன்டினன்ஸ்" என்ற பத்திரிகையின் 1948 மார்ச் இதழில் வெளி வந்தது.

மெக்கிரா-ஹில், தொழில், டெக்னிகல், வியாபார, விஞ்ஞானத் துறைகளில் 35 சஞ்சிகைகளை நடத்து கிறது. "ஓர்ல்ட் நியூஸ்" என்பது இச்சஞ்சிகை களுக்குப் பிரத்யேகமாக அயல் நாட்டுச் செய்திகளை அனுப்பும் ஏஜன்ஸியாகும்.

மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்ட செய்தியில் அசாதா ரணமானது ஒன்றுமில்லை. இத்தகைய அஸ்ஸைன் மெண்ட்கள் மாமூலானவை. 1945-ம் வருஷம் முதற் கொண்டு மகிதாப் தொழில், டெக்னிகல் சம்பந்தமான பல அஸ்ஸைன்மெண்ட்களைக் கையாண்டிருக்கிறார். சோவியத் தணிக்கை விதிகள் காரணமாக இவற்றில் சிலவற்றை ஸ்ரீ மகிதாப் ஏற்று நடத்தமுடியவில்லை.

ரஸ்ஸல் எப். ஆண்டர்சன்
ஆசிரியர்
மெக்கிரா-ஹில்,
'ஓர்ல்ட் நியூஸ்,'
நியுயார்க், ஏப்ரல் 15, 1948.

'இஸ்வெஸ்தியா' என் பதிலைப் பிரசுரிக்கவேயில்லை. பத்திரிகை இலாகா தலைவர் அதை என் எதிரில் படிக்கக்கூட இல்லை. முதல் எழுச்சியிலேயே, நான் ருஷியாவை விட்டுப் போய்விடவேண்டும் என்று என்னைப் பார்த்துச் சொன்னார். என் அறிக்கைமீது நிருபர்கள் எழுதிய கதைகளையும் தணிக்கை அதிகாரிகள் அமுக்கிவிட்டனர்.

என்மீது குற்றஞ்சாட்டிய செசீலியா கடிதம், மோலடாவ், விஷன்ஸ்கி இப்பிரமுகர்களின் அனுமதியின்பேரிலேயே 'இஸ்வெஸ் தியா'வில் வெளிவந்தது என்பதையும், அதிகாரிகள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொள்வர் என்பதையும் நன்கறிந்த நான் அவளுடைய குற்றச்சாட்டுகளை ஒவ்வொன்றாக மறுக்கக் கவலைப்படவில்லை. குற்றச்சாட்டுகள் பொருந்தாதன. அவற்றை இப்போது மறுப்பதில் அர்த்தமேயில்லை. ஆனால் குற்றம் சாட்டுவதில் சோவியத் கையாளும் முறைகளையும், ருஷிய அரசாங்கம் தனக்கு அனுகூலமாக இருக்கும் போதெல்லாம் உண்மையின் மீது காட்டும் அலட்சியத்தையும் நன்கு விளக்கும் சில விவரங்களைக் கூற விரும்புவேன். சோவியத் யூனியனில் வசிக்கும் அயலவர்மீது குற்றஞ்சாட்டுவது இதுவே முதல்தடவையன்று; கடைசியாகவும் இருக்கப்போவதில்லை. ஆகவே இவ்விவரங்களை ஆராய்வது உபயோகமாக இருக்கும்.

செசீலியா குறிப்பிட்டுள்ள கேள்விகள் நியூயார்க்கிலுள்ள மெக்கிரா காரியாலயம் மாமூலாகத் தன் அயல்நாட்டுக் கிளைகளுக்கு அனுப்பும் கேள்விகளே. அவை யாவும் சாதாரண தபாலின் மூலமாகவும் மெக்கிரா-ஹில்லின் இதர கடிதப் போக்குவரத்துடன் சேர்ந்துமே எனக்குக் கிடைத்தன. அக் கடிதங்கள் எப்போதுமே பூட்டிவைக்கப்பட்டதில்லை. அதனால்தான் செசீலியா அவற்றை எளிதில் கண்டுபிடிக்க முடிந்தது. பூமிக்கு அடியிலுள்ள இயந்திர தளவாடங்கள், அணுவாராய்ச்சி இவைபற்றிய முதல் இரண்டு கேள்விகள் விஷயமாக எனக்குத் தகவல் ஒன்றும் தெரியாது. விரும்பிய தகவல்களைப் பெறுவதற்கான நியாயமான மார்க்கத்தையும் நான் அறியேன். ஏனெனில், சமாதான காலத்துத் தொழில் உற்பத்திக்கு அவற்றைப் பிரயோகிப்பது உள்பட அத்தகைய விஷயங்களின் ஒவ்வொரு அம்சமும் ருஷியாவில் பரமரகசியமாக வைத்துக்கொள்ளப்படுகின்றன, ஆகவே, அக்கேள்விகளுக்கு பதிலளிக்க நான் யாதொரு முயற்சியும் செய்யவில்லை.

ருஷியாவிலிருந்து வெளியேற்றப்பட்டு, அமெரிக்காவை அடைந்தபின், மெக்கிரா-ஹில் வெளியிடும் 'ஒர்ல்ட் நியூஸ்' பத்திராதிபரான ரஸ்ஸல் ஆந்தர்ஸன், அதே கேள்விகள் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்வீடன், செக்கோஸ்லோவேகியா, ஆஸ்திரியா, ஜப்பான், ஆகிய நாடுகளிலுள்ள தம் நிருபர் அனைவருக்கும் அனுப்பப்பட்டன என்றும், அவர்கள் பதில் அனுப்பினர் என்றும், என்னிடமிருந்து மட்டுமே பதில் வரவில்லை என்றும், என் கஷ்டங்களை அறிவாராதலால், அவர் என்னை மேலும் வற்புறுத்தவில்லையென்றும் அறிவித்தார்.

சோவியத் ஆகாயவிமானப் போக்குவரத்துபற்றியது மூன்றுவது கேள்வி. ருஷியப் பத்திரிகைகளில் இவ்விஷயத்தைப் பற்றிய தகவல்கள் நிரம்ப இருந்தன. நான் வேறு வேலையாக இருந்ததால், ஆந்தி ருஷியப் பத்திரிகைகளில் வெளிவந்த இக்கட்டுரைகளின் சாராம்சத்தை எழுதி அனுப்பினார். ஆந்தி அனுப்பியதை ருஷிய தணிக்கை அதிகாரிகள் அனுமதித்தனர். இதுவே மெக்கிரா-ஹில் பத்திரிகைகளில் வெளிவந்தன. இதற்காக நான் வெளியேற்றப்பட்டேன்!

யூஜன் வர்க்கா என்பவர் சோவியத் பொருளாதார நிபுணரில் ஒருவர். "முதலாளித்துவத்தின் கடைசிக் கோட்டை" யான அமெரிக்காவில் இன்னும் பொருளாதார மந்தம் ஏற்படவில்லை என்று ஒரு சமயம் துணிந்து சொல்லிவிட்டார். அதற்காக அவர் தாக்கப்பட்டார். அவர் தலைமையில் நடந்த கழகம் கலைக்கப்பட்டது. அவர் பதிப்பித்த சிறந்த பொருளாதாரப் பத்திரிகை நிறுத்தப்பட்டது. அவர் ஒரு சமயம் மெக்கிரா-ஹில் வெளியிட்ட நூல் ஒன்றை அனுப்புமாறு என்னைக் கேட்டிருந்தார். மெக்கிரா-ஹில் அப் புத்தகத்தை எனக்கனுப்பி, அதை அவரிடம் கொடுத்து அவருடன் மேலும் தொடர்பு வைத்துக்கொள்ளுமாறு என்னைக் கேட்டார். இவ்விதம் செய்வதில் யாதொரு தவறுமில்லை. ஆயினும், சோவியத் அதிகாரிகள் ருஷிய உத்தியோகஸ்தர்களுக்கும் அயலவர்களுக்கும் ஏற்படும் நேரான தொடர்புகள் பற்றிச் சந்தேகப்

படுவது எனக்குத் தெரியும். ஆகவே, நான் அப்புத்தகத்தை அவருக்கு வெறுமனே அனுப்பி, தேவையிருப்பின் அவர் என்னைவந்து பார்க்கலாம் என்று எழுதியிருந்தேன். வர்க்கா தமக்கு நூல் கிடைத்ததுபற்றி எனக்கு யாதொன்றும் எழுதவில்லை. நானும் அவரைப் போய்ப் பார்க்க முயலவில்லை.

வாஸிலங்கோவுடன் பேட்டி.

நிற்க, என் அறிக்கையை எழுதியனுப்பிய பின், சோவியத் அயல்நாட்டுக் காரியாலயத்தின் பத்திரிகை இலாகாவுக்குப் போன் செய்து, அதன் தலைவர் வாஸிலங்கோவைக் காண விரும்பினேன். சில நிமிஷங்களுக்குப் பின் நான் அழைக்கப்பட்டேன். வாஸிலங்கோ எழுந்து கொஞ்ச தூரம் முன்வந்து (ஒற்றனுகிய) என் கையைக் குலுக்கினுர்.

வாஸிலங்கோ உக்கிரேனியப் பிரதேசத்தவர். நல்ல உயரம்; மெலிந்த உடல்; கறுத்த கேசம், அறிஞரின் அன்பு நிறைந்த நீலக்கண். அவர் இலக்கியத்தையும் தத்துவத்தையும் ஆழ்ந்து கற்றவர்.

பேட்டி முழுதும் அவர் என்னை நேராகப் பார்க்கக்கூட இல்லை. அவர் கலவரப்பட்டதாகவே தோன்றியது. மேலிடத்துக் கட்டளையின்படி அவர் சொல்ல நேரிட்டதாவது :

"மிஸ் நெல்சன் கடிதத்திலிருந்து கிடைத்த தகவல்களுக்குப் பின், நீங்கள் பத்திரிகைக் கார்டைத் தொடர்ந்து வைத்திருக்க பத்திரிகை இலாகா அனுமதிக்க முடியாது. அயல்நாட்டு விவகாரக் காரியாலயம் உங்களைச் சோவியத் யூனியனில் இரண்டு மூன்று நாட்களுக்குமேல் தங்கியிருக்க அனுமதிக்கமுடியாது."

சோவியத் யூனியனைவிட்டுப் போகையில், ஒரு குறித்த மார்க்கம் மூலமாகத்தான் நானும் என் மனைவியும் செல்லவேண்டுமென பத்திரிகை இலாகா விரும்புகிறதா என்று நான்

அவரைக் கேட்டேன். அயலவர் மாமூலாகச் செல்லும் ஏதாவது ஒரு வழியாகச் சென்றால் போதுமென்றும், ஆனால், ரயில்வண்டியைவிட விமானமூலம் செல்வதையே தாம் விரும்புவதாயும் அவர் என்னிடம் சொன்னார்.

சம்பாஷணையின்போது, பிரதிகூலமான நிலைமையில் திடுமென நான் ருஷியாவைவிட்டுப் போக நேரிட்டிருப்பதால், என்வேலை, காரியாலயம், ஜாகை இவை விஷயமாகப் பல பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியிருப்பதுபற்றி அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் நான் கவனிப்பதற்குப் போதிய அவகாசம் இல்லாத விஷயங்களை எனக்குப் பின்னால் வருகிறவர் ஏற்று பைசல் செய்வதில் கஷ்டமிராது என்று மிகவும் சிநேகபாவமாக உறுதிகூறினார். வெளியேறும் நிருபன் பின்னால் வரும் நிருபனிடம் ஆபீசையும் ஜாகையையும் ஒப்படைத்துவிடுவது மாமூல்போலச் சொன்னார்.

எனக்குப் பின் ஸ்டெய்கர் நிருபராக வருவதைப் பத்திரிகை இலாகா விரும்புமாவெனக் கேட்டேன். வாஸிலங்கோ சிறிது தயங்கி, ஸ்டெய்கர் அந்தமாதிரி எழுதி மனு போடலாம் என்று ஆலோசனை சொன்னார். அன்றைய தினம் மாலையே ஆந்தி ஸ்டெய்கர் மனு போட்டார். சனிக்கிழமையன்று, அதாவது, நான் புறப்படுவதற்கு ஒரு நாள்முன்பு, பத்திரிகை இலாகா ஸ்டெய்கருக்கு என் வேலையைத் தொடர்ந்து செய்ய அனுமதியளித்தது.

டாஸ் (சோவியத் அரசாங்க செய்தி ஏஜென்ஸி) என்னைப்பற்றி அறிக்கையொன்று வெளியிட்டது. அது ஸோவியத் யூனியனிலுள்ள பத்திரிகைகளில் எல்லாம் வெளி வந்தது. 1948, ஏப்ரல் 16-ந் தேதி ரேடியோவிலும் அது ஒலிபரப்பப்பட்டது. அது வருமாறு :

“ மாஸ்கோவில் அமெரிக்க நிருபரான மகிதாப்பின் வேவு பார்க்கும் வேலையைக் குறித்துப் பிரஜை சி. நெல்சன் இஸ்வெஸ்தியா ஏப்ரல் 15-ந் தேதி இதழில்

வெளியிட்ட கடிதம் சம்பந்தமாக மகிதாப் சோவியத் ருஷியாவின் அயல்நாட்டு நிர்வாக மந்திரி காரியால யத்தில் அழைக்கப்பட்டு அவர் உடனே சோவியத் யூனியன் நாட்டை விட்டுப் போய்விட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டார்."

அத்தியாயம் 2

வேவுகாரர் தொல்லை

அமெரிக்கத் தூதுவராலயத்தை விட்டு, அயல்நாட்டு வியாபார பாங்கிக்கும் அயல்நாட்டு விவகார மந்திரி காரியால யத்துக்குமாக நடந்து செல்லுகையில், எவரும் எங்களைப் பின் தொடரவில்லை என்ற எண்ணம் மேலும் உறுதிப்பட்டது.

என்மீது வழக்கு ஒன்று சோடிக்கும் பொருட்டு ஒரு வாரம் முழுதும் எங்களைப் பின்தொடர்ந்து துப்பு பார்த்ததன் நோக்கம், எங்களை எப்படியாவது ஸ்பாஸ்ஸோ மாளிகையில் அடைக்கலம் புகுந்து தூதுவரின் பாதுகாப்பை நாடச் செய்ய வேண்டும் என்பதே என் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். செசிலியாவின் கடிதம் பிரசுரமாகு முன்போ, அதற்குப் பின்போ, நான் தூதுவர் மாளிகையில் அடைக்கலம் புக முயன்றிருந்தால், என்மீதுள்ள வழக்கு அவர்கள் கையில் பிரசாரத்திற்குப் பெரிதும் பயன்பட்டிருக்கும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது.

எங்களைத் துப்பறிவோர் பின்தொடர்ந்தகாலத்திலும் சரி, என் காரியதரிசி என்மீது குற்றஞ்சாட்டின பிறகும் சரி, தூதுவர் ஸ்மித் எங்களைத் தம்முடன் தங்குமாறு இரண்டு தடவை கேட்டார். உண்மையில் பிற அமெரிக்கரையெல்லாம் விட தூது வர்தான் ரகஸ்யப் போலீஸாரால் இடைவிடாமல் பின்தொடரப் படுகிறார். வெயிலிலும் மழையிலும் சுற்றிவரும் இத்தோழர் கள் சோவியத் தலைநகரின் பிரதான தெருக்களின் முக்கிய மூலைகளிலும், மந்திரி காரியாலயங்கள், தூதுவர் காரியாலயங் கள் இவற்றின் முன்னும் சிறப்பாகக் காணப்படுவர். சோவி யத் தலைவர்கள் அரசாங்க மாளிகையினின்று நகர்ப்புறமுள்ள

தம் வீடுகளுக்குச் செல்லும் பாதையில் காவல் செய்யும் பொருட்டு இவர்கள் நகரின் மத்தியப் பகுதியில் எல்லாம் காணப்படுவர்.

ஸ்டாலினேயோ, மோலடாவையோ, அல்லது கம்யூனிஸ்ட் கட்சியின் அந்தரங்க அவையைச் சேர்ந்த வேறெந்த அங்கத்தினரையோ ஏற்றிச் செல்லும்படியான குண்டு பட்டாலும் பழுதடையாத வண்டியானது நடமாட்டம் மிகுந்த அர்ப்பத் சதுக்கத்தின் மூலையில் தோன்றியதும் காணும் காட்சியே காட்சி! அதை நாம் என்றும் மறக்கவே முடியாது. வண்டியின் விளக்குகள் யாவும் பயமுறுத்தும் மஞ்சள் நிறமாக மாறுகின் றன. பாதையில் செல்வோர் ஒவ்வொருவரும் நின்று, பிர தான வண்டியும் மெய்க்காப்பாளர் வண்டிகளும் ரோட் விதி களைமீறி சதுக்கத்தின் குறுக்கே செல்வதை கவனிப்பர். மூலை யில் நின்றுள்ள தோழர்கள் விறைப்பாயும், கடுகடுப்பாயும், வண்டிக்கு வண்டி, முகத்துக்கு முகம், கண்களைச் சுழற்றிச் சுழற்றிப் பார்ப்பர்.

விட்டுக்கும் ஆபீசுக்குமாகப் போகையில், அர்ப்பத் சதுக்கத்தை தினம் இரண்டு தடவையாவது தாண்டிச் செல்வேன். பல வருஷங்கள் இக் காட்சியைப் பலதடவை பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு தடவையும், ஏதோ ஒரு தவிர்க்க முடியாத பெரிய விபத்து ஏற்படும் போன்ற உணர்ச்சி எழும். அப்படி யொன்றும் ஏற்பட்டதில்லை.

வெயிலில் காயும் தோழர்களை அவர்கள் அணியும் உடை மூலம் தெரிந்துகொள்ளலாம். அவர்கள் யூனிபாரம் தரிப்ப தில்லை. ஒரே வித கறுப்பு அல்லது ஊதா தொப்பியொன்று எப்போதும் அவர்கள் தலைமீது இருக்கும். வசந்தத்தில் கறு நீல கோட்டும் மழை காலத்தில் கருஞ்சாம்பல் வர்ண ஓவர் கோட்டும் அணிவர். கோடையில், பிறர் அணிவதைப் போலவே அணியும் அவர்களை எளிதில் கண்டுபிடிக்க முடியாது.

ஆனால் தூதுவர் போகுமிடமெல்லாம் பின்தொடர்ந்து செல்லும் மப்டி ஸி.ஐ.டிகளுக்கு இந்த விதியெல்லாம் பொருந்தாது. தலைநகரிலே அவர்கள்தாம் சிறந்த ஆடை அணிவர். வானம் நிர்மலமாக இருந்தாலும் சரி, சூரியன் நன்றாகப் பிரகாசித்தாலும் சரி, அவர்கள் மழைக் கோட்டுகள் அணிந்து, தம்மைக் காட்டிக்கொண்டு ஆடம்பரமாக ஊர்வலம் செய்வர். அவர்கள் கண்காணிக்கும் அமெரிக்கத் தூதுவரில் ஒருவர்கூட நன்கொடை அளிப்பதன் மூலம் அவர்களைக் கெடுத்தது கிடையாது. ஆயினும், அப்பழுக்கில்லாத அந்த போல்ஷிவிக் ஆத்மாக்களில் சிலர் ' இழிவுற்ற' முதலாளிகளின் செல்வாக்கினால் கறைபட நேர்ந்ததை நான் அறிவேன்.

ஸோவியத் யூனியனில் ராஜீயத் தூதுவர் ஒருவர் செல்லுமிடமெல்லாம் பின்தொடர்ந்து செல்வது கெட்ட எண்ணத்துடன் செய்யப்படுவதெனக் கொள்வதற்கில்லை. பந்தோபஸ்து உணர்ச்சியுள்ள ருஷியா நாட்டில் மெய்க்காப்பாளர் தவிர்க்க முடியாதவர். ஆனால் நீலாவைப்போலவும் என்னைப்போலவும் அனுமதிச்சீட்டு பெற்றவர்கள் எங்கும் இடைவிடாமல் பின்தொடரப்பட்டால், அது அச்சப்படுவதற்குரியதொரு விஷயமேயாகும்.

துப்பறிவோர் எங்களைப் பின்தொடர்வதை முதன்முதலாக ஏப்ரல் மாதம் 8-ந்தேதி வியாழனன்றுதான் அறிந்தேன். அன்றையதினம் காலை ஆபீசுக்குச் செல்ல ஆயத்தம்செய்துகொண்டிருக்கையில், ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். கறுப்புக் கோட்டும் குல்லாவும் அணிந்த ஒருவனைப் பார்த்தேன். " நீலா, நம் வீட்டிலுள்ள யாரையோ வேவுபார்க்கின்றனர்." என்றேன். நாங்கள் இருந்த வீடு பெரிதாதலாலும், அதில் பிரதான சோவியத் ஆபீசர்களும் அயல் நாட்டினர் மூவரும் இருந்து வந்தாலும், அவனைப்பற்றி யாதொரு கவலையும் கொள்ளாமல் என் ஆபீசுக்குச் சென்றேன். ஆனால், ஜன்னலிலிருந்து பார்த்த நீலா, எனக்குச் சில அடி முன்னால் தானும் செல்ல ஆரம்பித்ததைக் கவனித்தாள்.

நான் பகல் உணவுக்குத் திரும்பிவந்தபோது, அவன் எங்கள் வீட்டின் முன் மீண்டும் தோன்றினான். அவன் வேவுகாரன்தானா என்பதை நிச்சயப்படுத்த, சாப்பாட்டுக்குப் பின் நானும் நீலாவும் உலாவச் சென்றோம். அவன் எங்களைப் பின்தொடர்ந்தான். ஒரு முனையில் நாங்கள் பிரிந்தோம். முதலில் அவன் நீலாவின் பின்னால் சென்றான். பிறகு எண்ணம் மாறி என்னைப் பின்தொடர்ந்தான். அன்றைய தினம் மாலை இரண்டு பேர்கள் தெருவில் நின்று எங்கள் ஜன்னலைப் பார்த்த வண்ணமாக இருந்தனர். அடுத்த நாள் காலை பெண்கள் இருவர் அவர்களைச் சேர்ந்தனர். 'இஸ்வெஸ்தியா' நான் அமெரிக்க ஒற்றன் என்று உலகுக்கு அறிவித்த வரையில் இந்நால்வரும் பாரா போட்டனர்.

இந்த நிலையில், நள்ளிரவிலும் எங்களைக் கைது செய்யலாம். தூதுவராலயத்தில் இருப்போருக்கே பாதுகாப்பு உண்டு. எங்களைப் போன்றவர்களுக்கு அது ஏது? நள்ளிரவில் ஏதேனும் நடந்தால், தூதுவராலயத்திற்குச் செய்தி அறிவிக்க வழி கண்டு பிடித்தேன்.

அமெரிக்கத் தூதுவராலய கலாசாரப் பகுதியைச் சேர்ந்த மெல்வின் ரக்கில்சும் அவர் குடும்பத்தினரும் அதே கட்டிடத்தில் எங்களுக்கு மேலேயுள்ள மாடியில் வசித்தனர். போலீசார் கைது செய்ய வந்ததும், நான் என் படுக்கைமீதேறி, கூரைமீது ஒரு பலமான கழியினால் தட்டினால் அவர்கள் விஷயத்தை அறிந்துகொள்வர் என்பது ஏற்பாடு.

நள்ளிரவில் எவரும் வரவில்லை, வேவு பார்த்த இருவர் எங்களை ஒன்றும் செய்யவில்லை. மறைந்துகொள்ளவும் அவர்கள் முயற்சி ஒன்றும் செய்யவில்லை. நாங்கள் சென்றவிடமெல்லாம் அவர் பின்னாலேயே வந்தனர். அவர்கள் எங்களைத் தொந்தரவு செய்யவில்லைதான். ஆனால் எங்களுக்குச் சங்கடமாகவே இருந்தது.

நான் மாஸ்கோ புத்தகசாலை ஒன்றுக்கு வழக்கமாகச் சென்று அங்கே சுவையுள்ள வரலாறுகளுக்காகவும் ருஷிய இலக்கிய நாடோடிக் கதைகளுக்காகவும் செல்வதுண்டு. புதுப் புத்தகங்கள் மிகக் குறைவாக இருந்தபடியால் பழம் புத்தக சாலைகளுக்கு மாதம் இருமுறை செல்வேன். ஒற்றர்கள் என்னுடன் நுழைவர். என் ஒவ்வொரு இயக்கத்தையும் கவனிப்பர். கடைக் குமாஸ்தாக்கள் என் சுவையை அறிந்து தகுந்த புத்தகங்களைக் காட்டுவர். அவர்களுக்குக் கஷ்டமேற் படக்கூடாதென்று நான் அவர்களுடன் அதிகமாகப் பேசுவதில்லை. ஒரு கடையில் பெண் ஒருத்தி மட்டும் இருந்தாள். அவள் என்னைப் பார்த்து நாடோடிப் புத்தகமொன்றை ஒரு வாடிக்கைக்காரன் கொண்டு வருவதாகச் சொன்னதாக அறிவித்தாள். அவளுக்கு என் நன்றியைத் தெரிவித்தேன். அதற்குள் ஒற்றன் வந்து அவளிடம் ஏதோ பேசினான். அவள் முகம் வெளுத்தது. அவள் என்னை விழித்துப்பார்த்தாள்.

'இஸ்வெஸ்தியா'வில் என் காரியதரிசியின் கடிதம் வெளியாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன், நீலாவும் நானும் அரசாங்க மாளிகைக்கு அருகாமையிலுள்ள காலினின் தெரு வழியாக நிதானமாக நடந்து சென்றோம். பல மாதங்களாக லிட்வினவ் பற்றி ஒன்றுமே தெரியாமலிருந்ததல்லவா. அவர் எங்களை நோக்கி எதிரே நடந்து வந்தார். அவர் முதுமையடைந்தும், கண்குழிந்தும், சோர்வால் விகாரமாயும் இருந்தார். ஆனால் நன்றாகவே ஆடை அணிந்திருந்தார். அவர் எங்கள் பால் புன்னகை செய்து நேர்த்தியான ஐரோப்பிய முறையில் தொப்பியை உயர்த்தினார். சோவியத் ராஜதந்திரத்தில் சிறந்து விளங்கிய அவர் சிறிது நின்று எங்களிடம் சில வார்த்தைகள் பேச விரும்பியது போலப் பட்டது. ஆனால், அவர் வேலையினின்று நீக்கப்பட்டது பற்றியும், இன்று சோவியத் அயல் நாட்டுக் கொள்கைகளை நிர்ணயிப்போரிடம் செல்வாக்கு யாவும் போய்விட்டது பற்றியும் நினைத்து, பதில் வந்தனம் மட்டும் செய்துவிட்டு, அவர் பேச வந்ததைக் கவனிக்காதது போல நேராக நடந்தோம்.

மற்றொரு தடவை எங்கள் தெருவின் அருகேயுள்ள சாலையில், அது சமயம் காயலாவாக இருந்த அபிசினிய தூதுவரின் ருஷிய மனைவியைச் சந்தித்தோம். ஒரு நிமிஷம் நின்று அவள் கணவரின் உடல் நிலைபற்றி விசாரித்தோம். அவளை விட்டுச் சென்றதுதான் தாமதம்; உடனே ஒற்றன் ஒருவன் அவளிடம் சென்று ஏதோ சொன்னான்.

அத்தியாயம் 3

வீட்டைக் காலிசெய்யும் தொல்லை

இனி எங்களைக் கைது செய்யும் அபாயம் உடனடியாக இல்லை. ஆனால், பன்னிரண்டு வருஷ வாழ்க்கையை 48 மணி நேரத்திற்குள் முடித்துக்கொண்டு புறப்படுவது அவசரமான காரியமாயும் எங்களுக்கு வருத்தமளிப்பதாயும் இருந்தது. நாங்கள் முதல் முதலாக குடித்தனம் வைத்துக்கொண்ட எங்கள் சிறு மாஸ்கோ ஜாகையின்மீது அன்பு செலுத்தினோம்.

எங்கள் ஜாகையில் இருப்பதற்குத் தகுதியான அறை ஒன்றே தான். அதுவே என் படிக்கும் அறையாகவும் இருந்தது. அன்றியும், ஒரு சாப்பாட்டு அறையும், ஒரு படுக்கை அறையும், ஒரு குசினியும், ஒரு குளிக்கும் அறையும் இருந்தன. 'ருஷியாவில் என் வாழ்க்கை' என்பதன் ஆசிரியனான மார்க்கூஷா பிஷருக்குப் பின் இந்த ஜாகையை சோவியத் அதிகாரிகள் எங்களுக்கு அளித்தனர். ருஷியாவில் ஒரு ஜாகைக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் ஒரு பண்டசாலைக்குச் சென்று அப்படியே வாங்கிவிட முடியாது. அவற்றை அயல் நாடுகளி லிருந்து தருவித்துக்கொள்ளவேண்டும். அல்லது மாஸ்கோ கமிஷன் ஷாப்புகளில், ருஷியாவை விட்டுச் செல்வோர் விட்டு விட்டுப்போகும் சாமான்கள் கிடைக்குமா என்று பார்க்கவேண்டும். எளிய குடியானவர் குடும்பத்தில் பிறந்த நிலா ஒவ்வொன்றை யும் சந்தோஷமாக வாங்கினாள். சோவியத் பிரஜைக்குச் சாதார ணமாக அவசியமில்லாத மின்சார இஸ்திரி, ரேடியோ, குளிர்ச்சிப் பெட்டி, தட்டுகள் போன்றவை சாதாரண அமெரிக்கப் பிரஜைக்கு இன்றியமையாதன. நிலா இவற்றையெல்லாம் முதலிலேயே வாங்கினாள்.

ஆந்தி பல சாமான்கள் அடங்கிய எங்கள் ஜாகையை அப்படியே ஏற்றுக்கொண்டார். என்னுடைய 600 புத்தகங்களை அமெரிக்காவுக்குப் பாக் செய்து அனுப்பும் பொறுப்பு ஏற்ருர். பார்சல்கள் வந்துகொண்டே இருக்கின்றன. ஹாயிலில் உள்ள எங்கள் வீட்டில் பெரிய ருஷிய புத்தகாலயம் ஒன்று வைத்திருக்கிறேன்.

நாங்கள் ஞாயிறன்று விமானம் ஏறிப் போகவேண்டும். தூதுவர் போன் செய்து எங்களுக்குள்ள 24 மணி சாவகாசத்தையும் ஸ்பாஸ்லோ மாளிகையில் கழிக்கும்படி அழைத்தார். அந்த அழைப்பு எங்கள் உள்ளத்தை நெகிழச் செய்தது. ஆனால் அதை நாங்கள் ஏற்கவில்லை. நான் பயந்துகொண்டு அடைக்கலம் புகுகிறேன் என்று ருஷியர் ஒரு நிமிஷம்கூட எண்ணிவிடலாகாது என்பதே என் கருத்து. ஆயினும், சனிக்கிழமையன்று தூதுவர் ஸ்மித் தம்பதிகளுடன் கடைசி விருந்துண்ணச் சம்மதித்தோம்.

எதிர்பாராத ஒரு சிக்கலால் தாமதமேற்பட்டது. ஸ்பாஸ்லோ மாளிகை செல்ல நானும் என் மனைவியும் ஆடை தரித்துக் கொண்டிருந்தோம். ஆந்தி புத்தகாலயத்தில் ஏதோ வேலையாயிருந்தார். ருஷியப் பெண்கள் இருவர் நுழைந்து, தாங்கள் அயல்நாட்டுக் காரியாலயத்தைச் சார்ந்த இன்ஸ்பெக்டர்கள் என்றும் மாஸ்கோவிலுள்ள அயல்நாட்டு வாசிகளின் சிக்கலான பிரச்னைகளைத் தீர்க்க உதவுவதே தங்கள் வேலையென்றும் கூறினர். அடுத்தநாள் காலை 7 மணிக்குள் நாங்கள் விமானத் துறைக்குப் புறப்படுமுன், எங்கள் சாமான்களையெல்லாம் ஜாகையிலிருந்து அப்புறப்படுத்தி சாவியை அவர்களிடம் கொடுத்துவிடவேண்டுமென்றும் அறிவித்தனர். இதைக் கேட்ட எங்களுக்குக் கோபம் பொத்திக்கொண்டு வந்தது. ஏற்கெனவே எங்களைப் பின்தொடர்ந்த ஒற்றர்களின் தொல்லையும் நான் ஒற்றன் என்ற குற்றச்சாட்டும், எங்கள் வீட்டின் குலைவும் எங்களை வருத்தி வாட்டின.

இந்த இன்ஸ்பெக்டர்களில் ஒருத்தி குட்டையாயும் கறுப்பாயும் மூக்குக் கண்ணாடி அணிந்தவராயும் இருந்தாள். எங்களுக்கு அவள் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஜன நெருக்கமுள்ள மாஸ்கோவில் மூன்று அறை ஜாகையையுடைய ஒரு அமெரிக்க ஒற்றறைத் துரத்தும் வேலையைச் செய்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்தவள்போலவே அவள் வேலை செய்தாள். மற்றொருத்தி உயரமானவள் ; பொன்னிறத்தவள். சாதாரண நிலையில் அவள் புன்னகை வசீகரமாக இருக்கும். முதல் சொன்ன பயங்கர இன்ஸ்பெக்டரைப்போலல்லாமல், ஒரு சமூகத் தொண்டரைப்போல் மிருதுவாக நடந்துகொண்டாள். ஆயினும் மற்றவளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டியவளாகவே இருந்தாள்.

அவர்கள் சொன்னபடி செய்ய மறுத்தேன். எனக்குப் பின்னால் வருகிறவர் எங்கள் ஜாகையை எடுத்துக்கொள்ளப் போவதாயும், அவ்விஷயத்தில் யாதொரு சிரமமும் இராதென வாஷிலங்கோவே உறுதியளித்திருப்பதாகவும் சொன்னேன். அதைக் கேட்ட கறுப்புப் பெண் கோபமடைந்து பத்திரிகை இலாகா ஜாகைகளை நிர்வகிப்பதில்லையென்றும் ஜாகை விஷயம் தன்னைப் பொறுத்ததென்றும் அயல்நாட்டு ஆபீசின் மற்றொரு கிளையைத் தன் வேலையில் குறுக்கிட விடமாட்டாள் என்றும், தானே ஜாகையை யார் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை நிர்ணயிக்க உரிமை பெற்றவள் என்றும் சொன்னாள். நான் தோல்வியடைந்தேன். ஆயினும், இவ்வளவு குறுகிய கால நோட்டீஸில் சாமான்களை அப்புறப்படுத்த முடியாது என்றேன். நீண்ட விவாதம் நடந்தது. கறுப்புப் பெண் தன் தலைவருக்குப் போன் செய்தாள். கடைசியில், அடுத்த நாள் அவள் சாவியைப் பெறுவாள் என்றும், சாமான்கள் தாற்காலிகமாக ஜாகையிலேயே இருக்குமென்றும், ஆந்தி சாமான்களின் பட்டியல் ஒன்று தயாரிப்பார் என்றும் ஏற்பாடாயிற்று.

வீட்டுச் சாமான்களை விற்க, ஆந்தி கமிஷன் ஏஜெண்ட் ஒருவரைக் கூப்பிட்டார். இரண்டு நாட்களுள் காலி செய்ய முடிய

வில்லை. எல்லாச் சாமான்களையும் வண்டியில் ஏற்றிக் கமிஷன் கடைக்கு அனுப்பினர்.

நீலா மாஸ்கோவிலிருந்த கடைசி நாட்களை அமைதியாகவே கழித்தாள். ஆனல் அந்த இன்ஸ்பெக்டரின் ஆர்ப்பாட்டம் அவளை நிலைகுலையச் செய்தது. அவர்கள் சென்றதும் அவள் கண்ணீர் விட்டாள். பிறகு கொஞ்சம் கலவரத்துடனேயே ஸ்பாஸ்ஸோ மாளிகை சென்றோம். ஸ்மித் தம்பதிகளின் இனிய வரவேற்பும், இனிய பேச்சும், பானமும் எங்கள் நகைச் சுவைக்கு உயிர் ஊட்டின. பழைய குஷி திரும்பியது.

அத்தியாயம் 4

சுங்கத் தொல்லை

மாஸ்கோவிலிருந்து புறப்பட்ட காலை எட்டி இல்மோரும் வால்டர் கிரான்கைட்டும் காரில் வந்து எங்களைப் பார்த்தனர். அவசரம் அவசரமாகக் காப்பி அருந்தியதும் ஆந்தி, பணிப் பெண் லையேனு, இன்ஸ்பெக்டர்கள் முதலியோரிடம் விடை பெற்றுக்கொண்டோம். விமானத்துறையில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் தூதுவர் ஸ்மித்தும் அவரைப் பின்பற்றிய துப் பறியும் தோழர் இருவரும், ராஜதந்திரிகள், நிருபர்கள், ஆகி யோரும் எங்களுக்கு விடையளிக்க வந்திருந்தனர்.

இடையே எங்கும் இறங்காமல் நேராகச் செல்லும் மாஸ்கோ-பெர்லின் விமானத்திற்கு டிக்கட்டுகள் கேட்டும், மாஸ்கோ மின்ஸ்-பெர்லின் விமானத்துக்கே டிக்கட்டுகள் கிடைத்தன. இது பற்றி எங்களுக்கு மிகவும் வருத்தம். தாமதமாகும் என்பதல்ல. இடையே விமானம் நிற்குமிடங்களில் தூதுவர் பிரதிநிதிகளோ, அமெரிக்க நிருபர்களோ இருக்கமாட்டார்களே என்பதுதான். ருஷியர் ஏதேனும் சூழ்ச்சி செய்தால், எங்களுக்குச் சாட்சிகளோ பாதுகாப்போ இரா. சுங்க ஆபீஸர்கள் விமானம் சோவியத் நாட்டிலிருந்து செல்லுமுன் கடைசி பீடத்தில் பிரயாணிகளையும் சாமான்களையும் சோதித்துப்பார்ப் பர். அங்ஙனம் பார்வையிடும்போது சோவியத் பிரஜைகளே சாட்சியாக இருப்பர். ஆயினும், இதுபற்றி ஒன்றும் செய் வதற்கில்லை. கடைசியாகக் கைகுலுக்கிவிட்டு மாஸ்கோவி னின்று விலகினோம்.

காலைக்காட்சி அழகாயிருந்தது. விமானம் மேலே எழுந்த போது தரை இருளோ வென்றிருந்தது. அந்த விமானத் தில் நாங்கள் மட்டுமே அயல்நாட்டினர். மற்றவர் சோவியத்

பிரஜைகள். அவர்களிற் பலர் பைலோருஷியக் குடியரசின் தலைநகரான மின்ஸ்கில் இறங்கிவிடுவர்.

விமானம் அவ்வூரில் இறங்கியது. நாங்கள் சுங்க ஆபீசுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். எங்களுடன் நீல யூனிபாரம் உடை அணிந்த சுங்க அதிகாரியும், பச்சைக் குல்லாய் அணிந்த எல்லைக்காவல் அதிகாரியும், பெர்லின் சென்ற ருஷியர் மூவரும், முதிய சோவியத் கர்னல் ஒருவரும், வாலிப கப்பற்படை ஆபீசர் ஒருவரும் அவருடைய மனைவியும் வந்தனர். விமானத்தில் நடந்த சம்பாஷணையிலிருந்து அந்தக் கப்பற்படை அதிகாரி சோவியத் யூனியனுக்காகக் கட்டப்பட்டுவரும் சில கப்பல்களைப் பார்வையிட பேர் குறிப்பிடாத ஐரோப்பியத் துறைமுகம் ஒன்றுக்குச் சென்று கொண்டிருந்ததாகத் தெரிந்தது. மனைவியும் அவருடன் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

சோவியத் சுங்க அதிகாரிகள் சாதாரணமாகத் தம் நாட்டினரிடம் கண்டிப்பாகவும் அயலவர் விஷயத்தில் தாராளமாகவும் இருப்பர். ஆனால் இதுசமயம் அவர்கள் அனைவரிடமும் மிகக் கண்டிப்பாக இருந்தனர். ருஷியரிடமிருந்தவைகளை விரைந்து சோதித்துப் பார்த்துவிட்டு அவர்களுடைய ஜேபியிலுள்ளதைக் காலி செய்யச் சொல்லித் தடவிப் பார்த்தனர். கப்பற்படை அதிகாரியும் அவர் மனைவியும் இதையெல்லாம் பொறுத்து அமைதியாக இருந்தனர். ஆனால் முதிய கர்னல் மட்டும் முகம் வெளுத்து கோபத்துடன் நடுங்கினார். இது சந்தேகம் எழுப்பவே, சுங்க அதிகாரிகள் அவரைக் கடுமையாகச் சோதித்தனர். சோவியத் பிரயாணிகளிடம் எதுவும் காணப்படவில்லை. சோவியத் சுங்க அதிகாரி பிறகு எங்களிடம் கவனஞ் செலுத்தினார்.

எங்களைச் சாதாரணமாக 20 நிமிஷங்களில் சோதித்து விடலாம். ஆனால் 1 மணி நேரம் 25 நிமிஷங்கள் எங்களைச் சோதித்தனர். உடையின் ஒவ்வோர் அங்குலத்தையும் அவர்கள் தொட்டுப் பார்த்தனர். நீலாவின் ஆடையிலுள்ள தோள் பட்டை பஞ்சால் திணிக்கப்பட்டிருந்தது. அதற்குள் எதா

கிலும் ஒளிக்கப்பட்டுள்ளனவா என்று பார்க்கத் தையலேப் பிரித்துச் சோதித்தனர். ஒரு பையிலிருந்த முகக்கண்ணுடியில் உட்புறமாக பருத்த பெல்ட் உறை ஒன்றிருந்தது. அதைக் கிழித்து அதில் ஏதாகிலும் ஒளிக்கப்பட்டுள்ளனவா என்று பார்த்தனர். என் பையில் குறிப்புக்கள், கடிதங்கள், புத்தகங்கள், போட்டோக்கள், நீலாவின் ஆங்கில-பிரெஞ்சு நோட்டுப் புத்தகங்கள், ஒன்ருக பைண்டு செய்யப்பட்ட எழுதும் தாள்கள் முதலியன இருந்தன. இத்தாள்களில் நீலா சில பயிற்சிகளேயும் சொற்களேயும் எழுதியிருந்தாள். பச்சைக் குல்லா அணிந்திருந்த எல்லேக் காவலன் தாள்களிலுள்ள எழுத்துக்களே படிக்க முயன்ருன். சில எழுத்துக்கள் அவனுக்கு விளங்கவேயில்லே. ஆகவே அத்தாள்களேயெல்லாம் எடுத்துக்கொண்டான். இங்ஙனம் எடுத்துக்கொள்ளப்பட்ட பொருள்கள் மாஸ்கோவில் சோதிக்கப்பட்டபின் குறித்த சொந்தக்காரர்களுக்குத் திருப்பியனுப்பப்படுமாம். என் பொருள்களே அமெரிக்கத் தூதர் காரியாலயத்திலோ அல்லது ஸ்டெய்களிடமோ திருப்பித் தந்துவிடலாமெனச் சொன்னேன். ஆனுல் ஐந்து மாதங்களுக்குப் பிறகும் அவை எனக்குத் திரும்பிவரவில்லே. நீலாவினுடையவும் என்னுடையவும் போட்டோக்களே மட்டும் வைத்துக்கொள்ள அனுமதித்தனர். எங்களுக்கு தெரிந்த ருஷியப் பெண் ஒருத்தியின் போட்டோ ஒன்றிருந்தது. அதை அவர்கள் கண்டபோது, எங்கள் முகம் வெளுத்தது. ஆயினும், நீலா அமைதியாக "இது நான் சிறு பெண்ணுயிருந்தபோது எடுத்துக்கொண்ட படம்" என்று ஒரு போடு போட்டாள். சுங்க அதிகாரி போட்டோவையும் நீலாவின் கருங்கூந்தலேயும் பார்த்து ஏதோ சொல்ல இருந்தான். அதற்குள் அவள்," என் கூந்தலின் நிறத்தை நீக்குவது என் வழக்கம். அந்த விழிகள் என் விழிகளே என்பதைப் பார்க்கவில்லேயா?" என்ருள். அவன் அவ்விதமாகவே இருக்கலாமென்று கருதி, 'என்ன இருந்தாலும் நீ மிகவும் மாறியிருக்கிருய்' என்று சொல்லிக்கொண்டே அப்போட்டோவைத் திரும்பத் தந்துவிட்டான்.

சில படங்களில் நான் அமெரிக்க யுத்த நிருபரின் யூனிபாரம் உடையில் இரானிலுள்ள அமெரிக்க ராணுவ ஆபீசர்களுடனும், பெல்கிரேட்டில் மார்ஷல் டிட்டோவுடனும் காணப்பட்டேன். ஒரு படத்தில், ஈஜிப்டில் பிரமிட்ஸ்களுக்கு எதிரே, தொலைவில் ஸ்பிங்ஸ் அலட்சியமாகப் பிரகாசித்துக்கொண்டிருக்க, நான் ஒட்டகத்தின்மீது அமர்ந்திருந்தேன். இப்படத்திற்கும் மற்றும் சிலவற்றிற்கும் ஆட்சேபம் ஒன்றும் சொல்ல முடியாது. ஆயினும், அதிகாரி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டுவிட்டான்.

" உங்களை ஒரு தயவு கேட்கலாமா ? " என்று கேட்டாள் நீலா அந்த அதிகாரியை. " என் மாஜி பிரெஞ்சு உபாத்தியாயினி பாரிஸ்ஸில் இருக்கிருள். அவளைப் பார்க்கவேண்டும். நீங்கள் எடுத்துக்கொண்ட விலாசங்கள் புத்தகத்திலிருந்து அவள் விலாசத்தை நகல் செய்துகொள்ள அனுமதிப்பீர்களா ? "

குமாரி ஆன்னெட் தோரெட்டின் பாரிஸ் விலாசத்தை நீலா நகல் செய்துகொள்ள அதிகாரி அனுமதிதந்தான். அது முடிந்ததும் அதை மீண்டும் வாங்கி வைத்துக்கொண்டான்.

ஆன்னெட் தோரெட்டின் கதை.

இந்த குமாரி ஆன்னட் தோரெட் யார் ? சிறிது பின்னோக்கிச் சென்று இந்த பிரெஞ்சுப் பெண்ணின் அசாதாரணக் கதையைக் கூறுகிறேன்.

நாங்கள் குமாரி ஆன்னெட்டை முதன் முதலாக 1940-ல் குளிர்காலத்தில் சோவியத் தலைநகரில் சந்தித்தோம். அவளுடைய குரலும் பேசிய பிரெஞ்சும் தேவகானம்போலிருந்தன. ஆனால் அவள் மிக மெலிந்து பழைய உருவின் நிழல்போலவே தென்பட்டாள்.

சமீபத்தில்தான் அவளுக்குப் பாரிஸ்ஸில் சிற்றுண்டி விடுதியொன்று ஆஸ்தியாகக் கிடைத்தது. அந்த விடுதியில் ஒரு

நாள் அன்புகனிந்த அவளுடைய நீல விழிகள் தற்செயலாக அங்கே வந்த ருஷிய ஆபீசர் ஒருவனின் நீல விழிகளைச் சந்தித்தன. அவளுடைய பார்வையும் மொழியும் இனிய வையாக இருந்தன. அந்த ஆபீசர் அன்று முதல் அந்த இனிமையைப்பற்றி அவளிடம் விடாமல் சொல்லிவந்தான். தாம் இருவரும் ஒருவர் மற்றொருவருக்காகவே சிருஷ்டிக்கப் பட்டவர்கள் என இழிந்த ஜர்மனும் இழிந்த பிரெஞ்சும் கலந்ததொரு மொழியில் அவளுக்கு உணர்த்தினான். லெப்டி னண்ட் நிக்கோலாய் பிரதசாவ் தன்னை அவள் மணந்து பிரான்ஸைவிட்டு, தன் சேனை கலைக்கப்பட்டதும் வட காகசஸ் ஸிலுள்ள கிராஸ்நோதர் என்ற தன் சொந்த ஊருக்கு வந்துவிடவேண்டுமென்றும், மற்றும் பல விஷயங்களையும் அவள் மனத்தில் படும்படிச் சொன்னான். அன்றியும், ஓட்டலையும் இதர சொத்துக்களையும் விற்றுத் தங்க சாமான்களாக மாற்றிவிடத் தூண்டினான். யுத்த பிற்கால பாரிஸ்ஸில் தங்க சாமான்கள் மிகவும் கிராக்கி. தம்பதிகள் எப்படியோ சமா ளித்து வைரம் பதிக்கப்பெற்ற இரண்டு கடிகாரங்கள், இரண்டு சிகரெட் பெட்டிகள், விலையுயர்ந்த சிகரெட் பீடிகள் ஆகிய வற்றை வாங்கினர். ருஷியாவில் இவற்றை விட்டு குபான் தலைநகரான கிராஸ்னோதரில் பல்லாண்டு சிறப்பாக வாழலா மென அவன் உறுதி கூறினான்.

ஆனால் ஆன்னெட் தன் பிரெஞ்சு பிரஜா உரிமையைத் துறந்து சிறப்புவாய்ந்த சோவியத் யூனியனின் பிரஜையாக மட்டும் மறுத்தாள். பாரிஸ்ஸிலுள்ள சோவியத் தூதுவ ராலயத்தில் அவர்கள் எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அவள் இசையவில்லை. நிக்கோலாய் பிரதசாவுக்கு இது ஒரு குறை யாகத்தான் இருந்தது. ஆயினும் பாரிஸ்ஸிலிருந்து சோவி யத் எல்லையை அடையும்வரையில் அவளிடம் அவன் மிக இனிமையாகவே நடந்துகொண்டான். எல்லையைக் கடந்தது தான் தாமதம், அவன் பயங்கர மாறுதலடைந்தான். ரயிலில் பிரயாணம் செய்கையில் அவள் தனக்குத் தெரிந்த சில டஜன் ருஷிய சொற்களைக் கொண்டு, வண்டியிலிருந்தவருடன்

சம்பாஷிக்க முயன்றதைக் கண்டு எரிச்சலடைந்தான். அவர்களும் இவ் அயல்நாட்டுப் பெண்ணைப்பற்றி அவனிடம் கேள்விகள் கேட்டனர். இறுதியில் அவள் யாரிடமும் பேசலாகாதெனப் பணித்து தன் பக்கத்திலேயே உட்காரச்செய்து தானும் கடுகடுப்பாகவும் மௌனமாகவும் இருந்தான்.

கிராஸ்ஷேதரை அடைந்ததும் எல்லா மூட்டைகளையும் அவளையே தூக்கிவரச் செய்தான். தாயார் வீட்டிலிருக்கிறாளா என்றறிய டெலிபோன் செய்யப்போவதாகச் சொல்லி அவளை ரயில் ஸ்டேஷனிலேயே காத்திருக்கச் செய்தான். இருபது நிமிஷங்களுக்குப்பின் திரும்பிவந்து, தன் பிரெஞ்சு பாஸ்போர்ட், கலியாண சர்ட்டிபிகட், பாரிஸ் சோவியத் தூதுவராலயத்தில் தாங்கள் தம்பதிகளாகப் பதிவு செய்துகொண்டதாகக் கொடுத்த வாக்குமூலம் இவற்றையெல்லாம் தன்னிடம் தரக்கேட்டான். அவள் மறுத்தாள். அவன் முகம் வெளுத்தது. அவளைச் சுட்டுவிடுவதுபோலக் கோபத்துடன் உற்றுப்பார்த்தான். அவனுடைய ஒவ்வொரு சொல்லும் அவளுடைய உள்ளத்தில் குண்டுபோலப் பாய்ந்தது. தன் தாயார் சிறிது தூரத்தில் ஒரு கூட்டுப்பண்ணைக்குச் சென்றுவிட்டாள் என்றும், தன் பழைய மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் பற்றி அவளிடம் சொல்ல மறந்துவிட்டான் என்றும், இப்போது தன் குடும்பத்தினரிடம் திரும்பிச் செல்லத் தீர்மானம் செய்துவிட்டான் என்றும் தெரிவித்தான். துணிகளும் தங்க சாமான்களும் அடங்கிய மூன்று பெட்டிகளையும் எடுத்துக்கொண்டு அவளைவிட்டு அகன்றான். பிரமித்து அவள் அழுதாள். முன்பு பாரிஸ் நகரில் உயர்தரப் பள்ளியொன்றின் உபாத்தினியாயும், ஓட்டல் ஒன்றின் சொந்தக்காரியாயும் இருந்த அவள் இப்போது தன் காதலனால் காட்டுப் பிரதேசமான குபானில் கைவிடப்பட்டு அநாதையாக நின்றாள்.

பண்ணைகளிலிருந்து உருளைக்கிழங்கு, காய்கறிகள்கொண்ட கோணி மூட்டைகளுடன் கிராஸ்ஷேதர் மார்க்கெட்டில் விற்க வந்துகொண்டிருந்த பெண்கள் அவளுடைய அதிசய பாரிஸ்

மோஸ்தர் ஆடைகளைப் பார்த்து ஆச்சரியத்துடன் நோக்கினர். பிறகு வயதான குள்ள பெண் ஒருத்தி ஆன்னெட்டின் தோள்மீது கைவைத்து தான் அவளுக்கு ஏதாகிலும் உதவி செய்யக்கூடுமாவென ஜெர்மன் மொழியில் கேட்டாள். ஆன் னெட் பதிலளிக்க ஆரம்பித்ததும், அவள் பிரெஞ்சு மொழியில் பேச ஆரம்பித்தாள். அவள் கிராஸ்னோதர் அயல்மொழிகள் கழகத்தில் ஓர் ஆசிரியை. அன்னெட் அம்முதியவள் காட்டிய அனுதாபத்திற்காக நன்றி செலுத்தி, அவளுடன் தன் கதை யைச் சொன்னாள். ஆனால் அம்முதியவள் உள்நாட்டு விவகார மந்திரி காரியாலயத்திற்குச் செல்ல யோசனை கூறியபோது பீதியினால் பின்வாங்கி, இதுவும் ஒரு சூழ்ச்சியோவெனச் சந் தேகித்தாள். பிறகு வேறு வழியின்றி அவளுடன் உள் நாட்டு மந்திரியின் காரியாலயத்திற்குச் சென்றாள். காரியா லயத்திலிருந்த அதிகாரி அவள் வைத்திருந்த தஸ்தாவேஜ் களைக் கவனமாகப் பார்வையிட்டு அவளுக்கு ஓட்டலில் ஓர் அறை வாங்கிக்கொடுத்து உதவினான். அவளுடைய கணவன் இன்னான் என்பதை 24 மணி நேரத்தில் கண்டுபிடித்து அவனை ஆன்னெட்டிடம் திரும்ப உத்தரவிட்டான்.

பிரதசாவ் அவளை கிராஸ்னோதருக்கு அழைத்துச் செல்லா மல், கூட்டுப்பண்ணையிலிருந்த தன் தாயாரின் குடிசைக்கு அழைத்துச் சென்றான். அங்கே அவளை அக்கிழவியிடமும் தன் சகோதரர் சகோதரிகளிடமும் விட்டுத் தன் குடும்பத்தி னரிடம் திரும்பிச் சென்றான். அவளை அடிக்கடி வந்து பார்த்தான். உள்நாட்டுக் காரியாலய அதிகாரியிடம் மீண்டும் செல்வதாக அவள் பயமுறுத்தவே, அவன் அவளை நன்றாகப் புடைத்து, மீண்டுமொரு தடவை அங்கே சென்றால் கொன்று விடுவதாகப் பயமுறுத்தினான். அவள் பீதியுற்று தன் புதிய வீட்டில் வசித்தாள். அவள் விருப்புடன் நன்றாக வேலை செய்யக்கூடியவளேயாயினும் அவர்கள் அவளை வெறுத்தனர். அவள் தினந்தோறும் புருஷ்ஷால் பல் தேய்ப்பாளாம். இர வில் சன்னமான பட்டு கவுனில் உடம்பெல்லாம் தெரிய வெட்க மின்றி உறங்குவாளாம். அது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

வயலில் வேலை செய்துவந்தபோது, மணமாகாத வயதான மாதொருத்தியின் நட்பு அவளுக்குக் கிடைத்தது. அவள் தன் னுடன் வசிக்குமாறு ஆன்னெட்டைத் தூண்டினாள். அவள் சிபார்சின்மீது ஆன்னெட் கூட்டுப்பண்ணையின் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டாள். மரியா ஸ்டெபனேவ்னா என்ற அந்த சிநேகிதி நல்லவள். பண்ணைபற்றிய பல விஷயங் களையும் குபான் கோஸாக்குகளின் நடையுடை பாவனைகள் பற்றியும் அவள் ஆன்னெட்டுக்குச் சொல்லித் தந்தாள். ஒவ் வொருநாள் இரவும் அவள் குடித்துவிட்டுத் தன் பழங் கதைகளையெல்லாம் சொல்வாள். மரியா பலவந்தமாக அவ ளையும் குடிக்கச் செய்தாள். வொட்காபானம் ஆன்னெட் டுக்கு முதலில் பிடிக்கவில்லை. மெல்ல மெல்ல பிடித்தது.

ஆன்னெட் உருளைக்கிழங்குகளைத் தோண்டியெடுத்தாள் ; பசுமாட்டுக்களைக் கறந்தாள் ; கோஸாக்குகளின் இழிந்த ருஷிய மொழியைக் கற்றாள் ; பிரதசாவுடன் பாரிஸ் நகரில் கழித்த நாட்களை நினைத்தாள். இங்ஙனமாகப் பல மாதங்கள் கழிந்தன.

ஒருநாள் அவள் உள்ளம் கிளர்த்தெழுந்தது. அவள் இரண்டு மைல் நடந்து ஸ்டேஷன் சென்று கிராஸ்னேதருக்கு வண்டி ஏறினாள். அயல்நாட்டு விவகார காரியாலய அதி காரியிடம் நேராகச் சென்றாள். உருவே தெரியாமல் மிகவும் மாறியிருந்த அவளைக் கண்ட அவன் பீதியும் அருவருப்பும் அடைந்தான். அவளுடைய கணவனை ஆபீசுக்கு இழுத்து வந்து அவளைப் பாதுகாக்குமாறு செய்வதாகக் கூறினான். ஆனால் அவள் பாரிஸ் திரும்பிச் செல்லவே விரும்பினாள். அவன் மறுக்கக்கூடுமென்று பயந்து தான் தற்கொலை புரியப் போவதாகவும், பிரெஞ்சு அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதி விடப்போவதாகவும் பயமுறுத்தினாள். எப்படியேனும் தொலை யட்டுமென அவன் அவளை மாஸ்கோவுக்கு டிக்கெட் வாங்கி அனுப்பினான்.

சோவியத் தலைநகரில் பிரயாண அனுமதிச் சீட்டுக்காக சற்றேறக்குறைய ஒரு வருஷம் காத்திருந்தாள். பிறகு ஒருநாள் அனுமதியளிக்கும் இலாகாவுக்கு அழைக்கப்பட்டாள். அங்கே அவர்கள் பிரதசாவுக்கு முன்பே மணமாயிருக்கிற தெனக் கண்டுபிடித்ததாகவும், ஆன்னெட் தனக்கு உண்மை யாக மணம் நடக்கவில்லையெனக் கருதலாமென்றும் சொன் னார்கள். பாரிஸ் செல்ல யாதொரு தடையுமில்லை. அதற் குள் அயலவர் குடியேற்றத்தில் நல்ல பிரெஞ்சு உபாத்தினி எனப் பெயர் பெற்றிருந்தபோதிலும் உடனே பாரிஸ் செல்லவே விரும்பினாள். பிரெஞ்சு தூதுவரின் மனைவி, ஆன்னெட் பிரெஞ்சுப் பெண்ணாகப் பிறந்தும் சோவியத் ருஷியன் ஒரு வனை மணந்து இழிவுற்றதுபற்றிக் கடிந்தாள். ஆன்னெட் அதற்கு "என்ன அம்மா செய்வது? காதல்தான் காரணம்" என்றாள். ஆன்னெட் பாரிசுக்குச் செல்லுமுன் தன் விசு வாசமுள்ள மாணவியான நீலாவுக்குப் பாரிஸ்ஸில் உள்ள நண்பர் ஒருவரின் விலாசம் தந்திருந்தாள். அந்த விலாசத் தையே நீலா சோவியத் அதிகாரிகள் பறிமுதல் செய்த விலாசப் புத்தகத்திலிருந்து பிரதிசெய்தாள்.

கடைசியாக பாழடைந்த பெர்லின் தென்பட்டது. சோவியத் பகுதியிலிருந்து அமெரிக்கப் பகுதிக்குச் சென்ற பிறகே மூன்று நாட்களுக்குப் பின் முதல் தடவையாக அபாய எல்லையைக் கடந்து சுயேச்சையாக வாழ உரிமை பெற்றோம்.

பகுதி இரண்டு

முதல் தடவை அல்ல; கடைசியாகவும் இராது

அத்தியாயம் 5

அமெரிக்கர் மீது இடைவிடாமல் குற்றச்சாட்டுகள்

ஒன்றன்பின் ஒன்ருகத் தொடர்ச்சியாக நடந்த இப் பைத்தியக்காரத்தனமான சம்பவங்கள் மாற்ற முடியாத ஒரு தர்க்க ரீதியிலேயே நடந்தன. இதைப் புறிந்துகொள்வது அமெரிக்கருக்குக் கடினமாக இருக்கும். ஆயினும் இதுவே உண்மை நிலை.

என்னைச் சிக்கவைத்த இவ்வழக்கு மாஸ்கோவில் அயலவர்களுக்கு விரோதமான நிகழ்ச்சிகளின் வரிசையில் முதலாவதாகவும் இல்லை, கடைசியானதாகவும் இருக்கப்போவதில்லை.

1947-ம் வருஷ இறுதியில், பிரிட்டிஷ் தூதர் பரிவாரங்களைச் சேர்ந்த ஜனரல் ஹில்டன் மாஸ்கோ நதிக் கரைகள் ஓரமாக பனிக்கட்டி தளத்தின்மீது 'நீண்ட மரப் பாதரட்சை அணிந்து சருக்கும் விளையாட்டிற்குரிய இடங்களைப் பார்த்துக்கொண்டே நடந்தபோது, ஒரு நாள் மாலை பிடிக்கப்பட்டதிலிருந்து இவை தொடங்கின. அருகாமையிலிருந்த ஒரு ரசாயன இயந்திர சாலையைப் போட்டோ எடுத்துக்கொண்டிருந்ததாக அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அவர் அருகாமையில் அத்தகைய இயந்திரசாலையொன்று இருந்ததாகத் தமக்குத் தெரியாதென்றும், தம்மிடம் போட்டோ எடுக்கும் காமிராவேயில்லையென்றும் சொன்னார். தம்மை வேண்டுமானல் சோதனையிடலாமெனப் பலதடவை சொல்லியும் ருஷியர் மறுத்தனர். ஜேபியிலிருந்ததை வெளியே எடுத்துக் காட்டியும் அவர்கள் பரிசீலனைச் செய்ய மறுத்தனர். ஆயினும், அடுத்த நாள் காலை சோவியத் பத்திரிகைகள் அவர் ராணுவ முக்யத்துவமுள்ள ஒரு ஸ்தாப

னத்தைப் போட்டோ பிடித்ததாகக் குற்றஞ்சாட்டின. இவ் விஷயமாக ஜனரல் ஹில்டன் சொன்னதைப் பற்றிய எங்கள் அறிக்கைகளைத் தணிக்கையாளர் அமுக்கிவிட்டார்.

தூதுவர் பரிவாரங்களைச் சேர்ந்தவர்க்கு விசேஷ உரிமைகள் உண்டு ஆதலால், சோவியத் அதிகாரிகள் அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் நான் மாஸ்கோவை விட்டுவந்த நாள் வரையில் அவர் நடந்து சென்ற ஒவ்வொரு தடவையும் பிடிக்கப்பட்டார். உடனே மன்னிப்பு கேட்டுக்கொண்டு அவர் விடுவிக்கப்பட்டார். இவ்விதம் செய்தால் வெறுப்புற்று தம் பதவிக்காலம் முடியுமுன்பே சோவியத் தலைநகரிலிருந்து போய் விடுவார் என்பது அவர்கள் கருத்து. காலத்திற்கு முன்பே சென்றால் அதை தம் பிரசாரத்திற்காகப் பயன்படுத்திக்கொள் ளும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கும். ஆனால் அந்தக் கிழவர் முரடர். இதற்கெல்லாம் அசைந்து கொடுக்காமல் பல தடவை கைது செய்யப்பட்டார்.

1948, ஜனவரியில், பிரிட்டிஷ் தூதுவராலயத்தின் பத்தி ரிகைப் பகுதி ஆபீசரான ஸ்ரீ சாம்சன், துணிமணிகளையும் உப யோகத்திற்கான இதர சாமான்களையும் இறக்குமதி செய்து கொள்ளை லாபத்திற்கு விற்ற தன் ருஷிய காரியதரிசிக்கு உடந்தையாக இருந்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டார். அழகும் வசீகரமும் வாய்ந்த அக் காரியதரிசி அது சமயம் சூல் கொண்டிருந்தும் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார். ஸ்ரீ சாம்சன் சோவியத் யூனியனை விட்டுப் போகக் கட்டாயப் படுத்தப்பட்டார்.

இதற்கு ஒரு மாதத்திற்குப் பிறகு, பிரிட்டிஷ் தூதுவ ராலயத்தைச் சார்ந்த ஒரு சாமானிய சிப்பந்தி, ரெஜினா என் னும் ருஷியப் பெண்ணுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டு அவளிடம் மேகநோய் உண்டாக்கினன் எனக் குற்றஞ் சாட்டப் பட்டான். அவன் பிரிட்டிஷ் தூதுவராலயத்தில் அடைக்கலம் புகுந்தான். நீதிஸ்தலம் அவன் நேரில் வராமலேயே விசா

ரணை செய்து குற்றவாளியெனத் தீர்ப்பளித்தது. அவன் 18 மாதம் கடுங்காவல் தண்டனையும் 6000 ரூபில அபராதமும் விதிக்கப்பட்டான். இந்த அபராதத்தை ரெஜினுவுக்கு விசேஷ சிகிச்சை அளிக்கவும் நல்ல ஆகாரம் தரவும் பயன்படுத்த உத்தர வாயிற்று. அவளுடைய வக்கில்களோ அவளுடைய தன்னல மற்ற காதலுக்கே அவள் பலியானுள் என்றனர். வழக்கு விசாரணை மிகவும் அசங்கியமான முறையில் நடந்தது.

உலகில் தூதுவராலய வரலாற்றில் இத்தகைய நிகழ்ச்சிகள் சர்வசாதாரணம். ஆனுல், மாஸ்கோவில் சமீபத்தில் நடந்த சம்பவங்களின் முக்கியத்துவம், குற்றம் செய்ததாகக் கூறப் படும் தூதுவராலய சிப்பந்தியொருவனை விரும்பத்தகாதவன் என அறிவித்துவிடாமலும், குறைந்த பட்சம், நியாயமான விசாரணை நடத்தாமலும் அயலவரைத் தவருது குற்றவாளி யெனத் தீர்ப்பளித்து விடுவதில்தான் உள்ளது. பிறகு, ருஷி யர் மேலை நாடுகளுக்கு விரோதமாக நடத்தும் பிரசாரப் போரில் பயன்படுத்திக்கொள்ள இதையெல்லாம் பகிரங்கப்படுத்து கின்றனர்.

உண்மையில் அமெரிக்க பிரஜைகளிடம்தான் ருஷியருக்கு ஆத்திரம் அதிகம்.

மாஸ்கோவில் அமெரிக்க செய்தி சர்விஸ்ஸின் டைரெக்ட ரான அர்மாந்து வில்லிஸ் 1947, ஏப்ரல் 17-ந்தேதி வால்டர் கிரோன்கைட் என்பவருக்கு அளித்த பேட்டியில், அமெரிக்க தூதுவராலயத்தில், ருஷியரைப் பகைப்பதையே தொழிலாகக் கொண்டவர் சோவியத் யூனியனுடன் கலாசாரத் தொடர்புகளை வளர்க்கத் தாம் செய்யும் முயற்சிகள் பயனளிக் காதவாறு நாச வேலை செய்கின்றனர் எனக் குற்றஞ் சாட்டினுர். அர்மாந்து நான் குடியிருக்கும் வீட்டில் எனக்கு மேல் மாடியில் இருந்தவர். பல தடவை அவருடன் பேசியுள்ள நான், அவர் எவ்வளவு கடவுள் பக்தியும் நேர்மையும் உடையவர் என்பதை யும், இல்லாததை இருப்பதாகப் பாவித்து தர்ம யுத்தம் செய் யும் டான் குவிக்ஸாட் போன்றவர் என்பதையும் அறிவேன்.

அவர் சொன்னதைப் பத்திரிகைகள் யாவும் பிரசுரித்தன. ஆயினும், அதற்குப் பல நாட்களுக்குப் பின், வாஷிலங்கோ வின் வீட்டில் ஒரு சிறு அறையில் நான் அவர் அழைப்புக்காகக் காத்திருந்தபோது, யூனிபாரம் அணிந்த இரண்டு உத்தியோகஸ் தர்கள் பின்வருமாறு பேசியதைக் கேட்டேன்.''

"ஆமாம், யாரப்பா இந்த அர்மாந்து வில்லிஸ் ?''

"அவருடைய பூர்வோத்தரங்களை ஆராய்ந்து பார்த்தேன். அவர் அமெரிக்கக் கப்பற்படை துப்பறிவோர் கோஷ்டியில் அனு பவம் வாய்ந்த ஒரு பழம் பெருச்சாளி.''

அர்மாந்து வில்லிஸ் அமெரிக்கக் கப்பற்படையில் ஆபீசராக 52 மாதம் யுத்தகால சேவை செய்தார். நீண்ட காலம் கப்பற் படை துப்பறிவோர் இலாகாவிலும் சேவை செய்திருக்கிறார். ருஷியருக்கு இவை யாவும் தெரியும். ஆயினும், அவர் யுத்தகால சேவையும், மாஸ்கோ தூதுவராலயத்தில் பார்த்து வந்த வேலையும் உளவாளியின் ஓர் அம்சமேயென ருஷியர் கருதுகின்றனர். அவருடைய நேர்மையான அறிக்கையையும் உளவாளியின் ஒரு தந்திரம் என்றே கொள்வர்.

அவருடைய ஆபீசில் வேலை செய்த பென்சில்வானியா வைச் சேர்ந்த மிஸ் அன்னுபெல் புகார் அமெரிக்க தூதுவ ராலயத்திலிருந்து விலகி சோவியத்தைச் சேர்ந்தாள். அவள் சோவியத் பத்திரிகையில் வெளியிட்ட கடிதத்தில் கூறுவதாவது:

"பிற்போக்காளர் சிலர் அமெரிக்கருக்கும் சோவியத் மக்க ளுக்கும் இடையே மனஸ்தாபம் உண்டாக்கத் தம்மால் ஆனதை யெல்லாம் செய்கின்றனர். இவ்வுலகை வாழ்வதற்குரிய சிறந்த இடமாக்க ருஷியர் பெரிதும் முயன்று வருகின்றனர்'' என அவர்களைப் புகழ்ந்தாள். ருஷிய நாட்டையும் ருஷிய மக்களையும் சரியாக அறிந்து கொண்டதன்பயனாகவே அமெ ரிக்க தூதுவராலயத்தை விட்டுவிட வேண்டியிருந்தது என்றாள். அன்றியும், ருஷியன் ஒருவனுடன் காதல் கொண்டு இன்ப

மடைந்ததனாலேயே இம் முடிவுக்கு வந்தாள் என்றும் சொன்னாள்.

ருஷியர் எவ்விதமாகவெல்லாம் வேலை செய்கின்றனர் என்பதை அறியும் நான், அவள் விஷயத்தில் பலவந்தம் இல்லையென நான் நம்ப முடியாது. அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் இடையே நடக்கும் பிரசார யுத்தத்தில் காதலும் நுழைந்தது. மிஸ் புகார், கோன்ஸ்டாண்டின் ல்ப்ஷின் என்னும் சோவியத் இசைவாணனை அறியவந்தாள். அவனுடைய வசிகர குணங்கள் அவளை இழுத்தன. அவன் அதைப் பயன்படுத்திக்கொண்டான்.

அதன் பின் வந்தது என்மீதுள்ள குற்றச்சாட்டு. பிறகு தூதுவராலயத்தில் ராணுவப் பகுதியில் டெலிடைப் ஆபரேடராக வேலை செய்த சார்ஜண்ட் ஜேம்ஸ் மெக்மில்லன் அமெரிக்கப் படையைக் கைவிட்டோடினான். அவன் ராஜினாமா செய்யவில்லை. அமெரிக்கப் பிரஜா உரிமையைக் கைவிட்டுத் தன் நாட்டுக்குத் துரோகம் செய்யும் நோக்கத்துடன் சோவியத் பிரஜையாக ருஷியாவில் தங்க முடிவு செய்தான். சோவியத் பத்திரிகைகளில் அவன் கையெழுத்தில் வெளிவந்த கடிதம் என் காரியதரிசியும் அன்னபெல் புகாரும் எழுதின கடிதங்களின் தோரணையிலேயே உள்ளது. அதுவும் சோவியத் ஆசிரியர்களின் நடையிலேயே உள்ளது. மெக்மில்லன் அமெரிக்காவின் தீங்குகளைத் தாக்கி சோவியத் யூனியனின் குணச்சிறப்புகளைப் புகழ்ந்தான்.

அமெரிக்கன் ஒருவன் சிக்கிக்கொண்ட கடைசியான வழக்கு, 1948, ஆகஸ்ட் 19-ந் தேதியன்று பொது ஜனங்களின் கவனத்தை இழுத்தது. ருஷியப் பத்திரிகைகளின்படி, மாஸ்கோவில் அமெரிக்க தூதுவர் பரிவாரங்களைச் சேர்ந்த கப்பற்படை உதவி அதிகாரியான லெப்டினண்ட் ராபர்ட் டிரெகர் என்பவரைச் சோவியத் அரசாங்கம் ருஷியாவை விட்டுச் செல்லுமாறு கேட்டது.

'பிரவ்தா' வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, சோவியத் உள்நாட்டு விவகார மந்திரி காரியாலயத்தின் ஏஜெண்டுகள், அமெரிக்கக் கடற்படை இரகசிய இலாகாவின் ஏஜண்டு எனக் கூறப்படும் ருஷிய சுங்க ஆபீசரிடமிருந்து டிரெகர் ரகசிய ராணுவச் செய்தியைப் பெறும்போது கையும் பிடியுமாகப் பிடித்தனர். டிரெகர் மாஸ்கோவை விட்டுப் போன நான்கு மாதங்களுக்குப் பிறகே இதைப்பற்றிய விவகாரங்கள் வெளியிடப்பட்டன. ஆகஸ்ட் மாத நடு வரையில் இது விஷயமாக ருஷியர் மௌனமாக இருந்தனர். அந்த சமயத்தில்தான் அமெரிக்காவிலிருந்த ருஷிய உபாத்திமார்களான மைகேல் சமரின் தம்பதிகளும், ஸ்ரீமதி ஒக்ஸானு கோஸன்கினுவும் தம் தாய் நாட்டுக்குத் திரும்பிச்செல்ல மறுத்தனர். உலகெங்கும் இவ்விஷயம் பரவியதால் சோவியத் அதிகாரிகள் சினமடைந்து அமெரிக்கா மீது பழி வாங்கத் தயாராயிருந்தனர். தூதுவர் ஸ்மித் எதற்கும் தயாராக இருந்தார். அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த சிப்பந்திகள் கூடுமான வரையில் தூதுவராலயத்திற்கு அருகாமையிலே இருக்க வேண்டுமென்றும், சோவியத் தலை நகரின் தெருக்களில் சென்றபோது குறைந்தது மூன்று பேர்களாவது கூட்டமாகச் செல்ல வேண்டுமென்றும் ஆலோசனை கூறப்பட்டது.

அத்தியாயம் 6

பத்திரிகை நிருபரிடம் அவநம்பிக்கை

ரெஜினு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பிரிட்டிஷ்காரர் விசாரணை செய்யப்பட்டபோது நீதிமன்ற அறையில் என் பக்கத்தில் அமர்ந்திருந்த டான் டல்லஸ்ஸிடம் நான் சொன்னதாவது :

"சீக்கிரத்திலேயே வேறொரு வழக்கைப் பற்றியும் நாம் அறிக்கை வெளியிடப் போகிறோம், பாருங்களேன். ஆனால், இந்தத்தடவை, அநேகமாக, ஒரு அமெரிக்க செய்தி நிருபன் சிக்கிக்கொள்ளப் போகிறான் என்றே தோன்றுகிறது."

இங்ஙனம் சொன்னதில் 'நாம்' என்று சொன்னதுதான் தப்பு. அந்த வழக்கைப் பற்றி அறிக்கையிடுவதில் நான் எப்படி கலந்துகொள்ள முடியும்? நான்தானே அந்த அமெரிக்கச் செய்தி நிருபனாக ஆகும்படி நேர்ந்தது!

மாஸ்கோவில் வேலைசெய்து வந்த அயல்நாட்டுப் பத்திரிகைகாரர்களைச் சோவியத் அதிகாரிகள் அவநம்பிக்கையுடனேயே நடத்தினர். அகில ருஷியாவிலும் சோவியத் வாழ்க்கையின் போக்கைப் பற்றியும் சோவியத் அதிகாரிகளின் பிரதிநிதிகளைப் பற்றியும் நாங்களே எங்கள் மனத்தில் பட்டதையெல்லாம் தைரியமாக வெளியிட்டோம். ராஜதந்திரிகள் அவ்விதமாகத் தைரியமாக எதையும் சொல்லவோ செய்யவோ முடியாது. அவர்கள் சில ஒழுங்கு முறைகளுக்குக் கட்டுப் பட்டவர்கள். உதாரணமாக, ராஜீயத் தூதுவர் எவரும் மோலடாவ் அல்லது விஷன்ஸ்கியின் முன்னிலையில் சோவியத் குறிப்பு ஒன்றை ஆத்திரத்துடன் கிழித்து எறிய முடியாது. ஆனால், பத்திரிகையாளர் ஜிம்மோ, ஒரு சமயம், குற்றமற்ற செய்தியொன்றைத் தணிக்கையாளர் அமுக்கிவிட்டதாகச் சினமடைந்து அதைத்

துண்டு துண்டாகக் கிழித்துக் காற்றில் பறக்க விட்டார். சோவியத் அதிகாரிகள் பத்திரிகை நிருபர்களைப் பயமுறுத்துவதன் பொருட்டு ஜிம்மியைத் தண்டித்தனர். பத்திரிகைக்காரரின் அனுமதிச் சீட்டு அவரிடமிருந்து வாபசு பெறப்பட்டது. பத்திரிகைக் கார்டு இன்றி எச் செய்தியையும் ஒலிபரப்பு செய்ய முடியாதாகையால், அது வெளியேற்றப்படுவதற்குச் சமான மானதேயாகும். ஜிம்மி தம் ஓட்டலில் ஜாகை வைத்துக் கொள்ள முடியாது. உணவு ரேஷன், உணவு டிக்கட்டுகளை எந்த ஓட்டலிலிருந்தும் பெற முடியாது. பத்திரிகை இலாகா அதிகாரி ஒருவரை அவமானப்படுத்தியதற்காக அந்த இலாகா வின் தலைவர் ஜிம்மிக்கு எதிராக மேற்கொண்ட இந்நடவடிக்கை 1944-ல் நடந்தது. பத்திரிகை நிருபர்கள் ஜிம்மியின் சார்பாகப் போராடினர். ஆனால் அவருக்கு உதவியாக யாதொன்றும் செய்ய முடியவில்லை.

ஆயினும், நாங்கள் எப்போதுமே தோல்வியடைந்தோம் என்று சொல்வதற்கில்லை. 1944, ஜூன் 1-ந் தேதியன்று இருந்த இடத்தைவிட்டு நகராத வேலைநிறுத்தமொன்று நடத்தினோம். மாஸ்கோவிலுள்ள அயல்நாட்டு நிருபர்களிடையே அதன் நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது. அமெரிக்க விமானப்படைகளின் ஷட்டில்—பாம்பிங் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் அமெரிக்க சூபர்பாம்பர் விமானங்கள் போல்டாவா வில் வந்திறங்குவதைக் காண அன்றையதினம் அவ்வூருக்குப் பறந்து செல்ல நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். சோவியத்-அமெரிக்கக் கூட்டுறவுக்கு நல்ல உதாரணமாக விளங்கும் மங்களமான சந்தர்ப்பம் அது. போல்டாவா செல்ல நாங்கள் மாஸ்கோ ராணுவ விமானத்துறையில் கூடியிருந்தோம். பத்திரிகை இலாகா முதலில் நான்கு நிருபர்களையே அழைத்திருந்தது. ஆனால், மாஸ்கோவிலுள்ள அமெரிக்க ராணுவ மிஷனின் தலைவர் மேஜர் ஜனரல் ஜான் ரஸ்ஸல் டீன் இரட்டித்தனை பேரை அழைக்கவேண்டுமென வாதித்தார். சோவியத் தலைநகரிலுள்ள ஆங்கில-அமெரிக்க நிருபர்களாகிய 18 பேரும்

போக உறுதிகொண்டு விமானத்துறையில் வந்திருந்தோம். நிருபர் காட்டின ஒற்றுமை தணிக்கையாளருக்கு எரிச்சலாக இருந்தது. அவர் ஒக்காவ் என்னும் வாலிபர். புத்தி சாலியாயினும் முரடர். முடிவற்ற வாதம் பிரதிவாதங்கள் நடந்தன. அவருக்கும் அயல்நாட்டுக் காரியாலயத்திலுள்ள அவருக்கு மேலேயுள்ள அதிகாரிகளுக்கும் டெலிபோன்கள் பறந்தன. எங்கள் பிடிவாதம் கடைசியாகப் பலித்தது. நாங்கள் அனைவரும் சென்றோம். எங்கள் வற்புறுத்தலின் நியாயத்தை உணராமல், சோவியத் அதிகாரிகள் நேசக் கட்சி யினரின் துடுக்குக்கு இது மற்றுமோர் உதாரணமெனவே கொண்டனர்.

நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டியவளவு நிகழ்ச்சிகளைப் பூராவாகவும் பட்சபாதமின்றியும் வெளியிடுவதும், அதிகாரி களின் விருப்பு வெறுப்புக்களை மதிக்காமல் அவற்றை விளக் கிக்கூறுவதுமே நம் தொழிலின் சுதந்திரமானதும் சம்பிரதாய மானதுமான தர்மமாகும். இதுவே சோவியத் அதிகாரிகள் நிருபர்மீது கொண்டுள்ள உட்பகைக்கு எப்போதுமே காரணமாக இருந்து வந்திருக்கிறது.

நிருபர்களைப் பல கஷ்டங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உட்படுத்துவதன்மூலம் இச்சுதந்திரத்தைப் பறிப்பது ருஷிய மக்களின் சம்பிரதாயமான விருந்தோம்பும் இயல்புக்கே விரோத மாகும். ருஷியர்கள் தம் நாட்டில் வதியும் அயலவர்களை எப்போதுமே விருந்தாளிகளாகப் பாவித்துத் தங்களுக்குள்ள சொற்ப வசதிகளைக் கொண்டு தங்கள் சொந்த மக்களுக்குக் கிடைப்பதைவிடச் சிறந்த வசதிகளையும் உணவு ரேஷன்களையும் நமக்கு அளித்துள்ளனர். ஆனால், விருந்தோம்பலின் விதி கள் அவ்வளவோடு நின்றுவிடவில்லை. விருந்தினருக்கும் தெளிவாக கடமைகள் உண்டு. விருந்தளிப்பவரைக் குறைகூறு வதோ அல்லது கீழ்ப்படியாமலிருப்பதோ மரியாதையற்ற செய லாகும். "விருந்தாளி விருந்தளிப்பவருக்கு எதிராயிருத்தல் தகாது" என்றொரு ருஷிய முதுமொழியுண்டு.

அன்றியும், மாஸ்கோவிலுள்ள அயல்நாட்டு நிருபர்களுக்குப் பல அசௌகரியங்களையும் தொல்லைகளையும் உண்டாக்கி வாழ்க்கை கசக்கும்படியாகச் செய்வதன்மூலம் அவர்களைச் சீர்திருத்த முடியாதென்பதை போல்ஷிவிக்கர் நன்கு அறிவர். இத்தகைய போக்கால் யாதொரு நன்மையும் பயக்காது என்பதையும், பிரதிகூலமான விஷயங்களே மேலும் பிரசுரமாகும் என்பதையும் ருஷியர் அறிவர். ஆகவே, எங்கள் அறிக்கைகளை கடுமையாகத் தணிக்கை செய்வதன் மூலமாகவே எங்களுக்குத் தீங்கு செய்தனர்.

இப்போது தணிக்கை கடுமையாயிருக்கிறது; நியாயமற்றதாயும் உள்ளது. ஆனால், யுத்தத்திற்கு முன்பு, போன் மூலமாகக்கூட எந்தச் செய்தியையும் தாராளமாக அனுப்பலாம். சோவியத் யூனியனுக்கு விரோதமாக எழுதினாலும் கவனிப்பாரில்லை. லிட்வினவுக்குப் பிறகு மோலடாவ் அயல் நாட்டு மந்திரியானபோது, அவர் முதல் காரியமாக தணிக்கையை ரத்து செய்தார். ஆனால், 1940 மார்ச்சில் சோவியத்-பின்னிஷ் யுத்தம் முடிவடைந்த சமயம் தணிக்கை மீண்டும் வந்தது. படிப்படியாக இன்றைய மோசமான நிலை ஏற்பட்டது. 1946-ல் அது அயல்நாட்டு மந்திரியின் பத்திரிகை இலாகாவிலிருந்து பிரிக்கப்பட்டு, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு மட்டுமே பொறுப்பு செலுத்தவேண்டிய உள்நாட்டு சோவியத் தணிக்கை அதிகாரிகளான பயங்கர கிளாவ்லிட்டின் கீழ் வேலை செய்ய ஆரம்பித்தது.

அயல்நாட்டு நிருபர் விஷயமான தணிக்கை முறையில் இப்போது தணிக்கையாளர் பத்திரிகைக்காரர்களைப் பார்ப்பதே இல்லை. மாஸ்கோவிலுள்ள நிருபர்கள் தணிக்கையாளர் வேலைசெய்யும் டெலிகிராப் கட்டிடத்திற்கு தம் அறிக்கையின் மூன்று பிரதிகள் மட்டுமே அனுப்புகின்றனர். தணிக்கையாளர் ஒரு பிரதியை தம் குறிப்புக்காக வைத்துக்கொள்கின்றனர். மற்றொன்றை டெலிகிராப் செய்து அனுப்புமாறு அனுப்புகின்றனர். மூன்றாவது பிரதி சில பாராக்கள் விலக்கப்

பட்டு எழுதியவருக்கே அனுப்பப்படுகிறது. இங்ஙனம் விலக்கப் பட்ட பகுதிகளை நிருபர்கள் பார்ப்பதற்கு அவகாசம் தந்து மிச்சத்தை வெளியிடுவதில் பயனுண்டாவென அவர்கள் தீர் மானிக்கும்வரையில் அறிக்கையைப் பதிவு செய்து அனுப்ப வேண்டாமெனக் கேட்பதுண்டு. தணிக்கையாளர் அதற்கு இணங்கக் கடமைப்பட்டுள்ளனர். ஆனால், இது கொள்கை அளவில்தான். தணிக்கையாளர் அநேகமாகக் காத்திருப்ப தில்லை. சிதைக்கப்பட்டபின் அர்த்தமேயாகாமலோ, நிருபர் கொண்ட கருத்துக்கு நேர்மாறாகவோ இருப்பினும், அதை அவர் அப்படியே அனுப்பிவிடுவதுண்டு.

ஒரு சமயம், சோவியத் அரசாங்க ஆதரவுடைய இஸ்வெஸ்தி யா பத்திரிகை அமெரிக்காவைக் கெட்ட எண்ணத்துடன் தாக்கி எழுதியிருந்தது. அதைக்குறித்து அமெரிக்க தேசீய ஒலி பரப்புக் கம்பனிக்கு அறிக்கையொன்று அனுப்பினேன். அதைத் தணிக்கையாளருக்கு அனுப்பியபோது, அவர் செய் துள்ள தணிக்கையை நான் பார்க்கும்வரையில் அதை அனுப்ப வேண்டாமென்று கேட்டிருந்தேன். ஆனால் அவர் அவ்விதமாக எனக்கு அவகாசம் அளிக்காமல் தணிக்கையால் சிதைந்த பிரதியை அப்படியே கேபில் செய்துவிட்டார். தணிக் கைசெய்யப்பட்ட அறிக்கை வெளியானபோது எனக்கு வந்த கோபத்திற்கு அளவேயில்லை. தாக்குதலை வெளியிட்ட பத் திரிகையின் பெயர், அதை எழுதியவரின் பெயர் யாவும் தணிக்கையாளரால் அடிக்கப்பட்டிருந்தது. அமெரிக்க நிருபர் ஒருவரே அமெரிக்காவின் மீது குற்றஞ்சாட்டுவதைப்போல அந்த அறிக்கை அமைந்திருந்தது! நியூயார்க்கிலுள்ள பத்திரிகைக் காரர்கள் புத்திசாலிகளானதால் விஷயத்தைப் புரிந்துகொண் டார்கள். அதே கட்டுரை விஷயமாக மற்ளுெரு நிருபர் எழு தியனுப்பியது தணிக்கையாளரால் வெட்டப்படாமல் நல்லபடி யாக முழுசாகச் சென்றது. குற்றமற்ற பாராக்களை வெட்டு வதும், அனுப்புவதில் தாமதம் செய்வதும் அநேகமாக தணிக் கையாளருக்குப் போதிய ஆங்கில பாஷாஞானம் இராமலிருப்ப தனுல் ஏற்படுவன.

த்ணிக்கையை அடியோடு ரத்து செய்திருந்தால் அயல் நாடுகளில் ருஷியர்களுக்கு நல்ல பிரசாரம் கிடைத்திருக்குமென்பதே என் கருத்து. தணிக்கையாளர் மிதமான விமர்சனங்களையும் அடித்துவிடுவதால், சோவியத் அரசாங்கச் சட்டம் அல்லது நடவடிக்கை பற்றிய அனுகூலமான அறிக்கைகளையும் நிருபர் பலர் பிரசுரம் செய்ய விரும்பாமல் அப்படியே வாபசு பெற்ற பல உதாரணங்களை நான் அறிவேன்.

சோவியத் தலைநகரிலுள்ள அன்னிய நாட்டினர் பெரும்பாலோருக்கு பாஷை பெருந்தடையாகும். ஆனால் பீதியும் சந்தேகமும் ஏற்படுத்தும் தடையை நோக்கினால், பாஷைத் தடை சொற்பம் என்றே சொல்லவேண்டும். அமெரிக்காவின் தலைமையில் சோவியத்திற்கு எதிராகச் சூழ்ச்சி செய்வோரால் தாங்கள் சூழப்பட்டிருப்பதாக இடைவிடாமல் ருஷிய மக்களிடையே பிரசாரம் செய்யும் ருஷிய அரசாங்கமே இப் பீதியையும் அவநம்பிக்கையையும் உண்டாக்கியுள்ளது. இதனால் அயலவர் ருஷியருடன் நட்புகொள்ளவோ, பத்திரிகைக்காரர் ருஷிய பிரமுகருடன் தொடர்பேற்படுத்திக்கொள்ளவோ முடிவதில்லை.

தொழில், விவசாயம், பொக்கிஷ நிலை, வியாபாரம், போக்குவரத்து ஆகியன விஷயமாகவும், மற்றும் சோவியத் மந்திரி சபை வெளியிடுவதற்குரியனவல்ல எனத்திட்டம் செய்துள்ள விஷயங்களைப்பற்றியும் எச்செய்தியேனும் வெளியிடுவது ராஜாங்க துரோகம் அல்லது வேவு வேலை ஆகுமென்றும், பத்து முதல் 20 வருஷகாலம் வரையில் சிறைத்தண்டனை விதிக்கப்படுமென்றும் 1947 ஜூன் 4-ந் தேதி நிறைவேற்றப்பட்ட 'ராஜாங்கக் கட்டளை' யொன்று கூறுகிறது.

அயல்நாட்டுக் காரியாலயம் அல்லது அயல்நாட்டு வியாபார மந்திரி காரியாலயத்தின் ஆசியும் ஆதரவுமின்றி சோவியத் பிரஜைகள் அயல் நாட்டினருடன் எத்தகைய விவகாரமும் வைத்துக்கொள்ளக்கூடாதென 1948 ஜனவரியில் சோவியத்

மந்திரி சபை மற்றுமோர் கட்டளை பிறப்பித்துள்ளது. அதே சமயம், அமெரிக்கத் தூதுவராலயத்திலும் அயல்நாட்டு நிருபர்களிடமும் வேலை செய்யும் ருஷியச் சிப்பந்திகளை சோவியத் அரசாங்கம் பலவந்தமாக வெளியேறச் செய்தது. மாஸ்கோவில் நான் கடைசியாகத் தங்கின மூன்றுமாத காலத்தில் அமெரிக்க தூதுவராலயத்தில் வேலை செய்துவந்த காரியதரிசிகள், குசினிக்காரர்கள், மோட்டார் வண்டியோட்டிகள், துவிபாஷிகள் ஆகியோரில் குறைந்தது எழுவரும், அமெரிக்க நிருபர் ஒருவரின் காரியதரிசியும் கைது செய்யப்பட்டனர் அல்லது எவ்விதமாகவோ மறைந்தனர் என்பதை நான் அறிவேன்.

மேலே சொன்ன இந்நடவடிக்கைகள் அயலவரைத் தனிமைப்படுத்தி ஒதுக்கிவைத்தன. அவர்கள் ஒவ்வொருவரும் அயலவர் காலனி என்றழைக்கப்படும் ஒரு செயற்கைச் சேரியில் வாழ்கின்றனர்.

இத்தகைய நிலையை எதிர்த்து நின்று தம் கண்டனத்தை வெளியிடுபவர்கள் நிருபர்களேயாவர். அதனால் சோவியத் அதிகாரிகள் மேன்மேலும் அவர்கள்மீது தம் பகைமையையும் அவநம்பிக்கையையும் காட்டுகின்றனர்.

சோவியத் உலகுக்கும் அயலவருக்கும் இடையேயுள்ள தொடர்புகள் யாவும் அற்றுப்போனதற்கு மற்றுமோர் உதாரணம் கூறுவேன். நாடோடிக் கலைகள் விஷயத்தில், சிறப்பாக, புரட்சிகாலமுதல் ருஷியாவில் தோன்றியுள்ள நாடோடிக் கதைகளில் எனக்கு நீண்டகாலமாகப் பற்றுண்டு. நான் மாஸ்கோ சென்றது முதல் அத்துறையில் தொடர்பு வைத்துக்கொள்ள முயன்றுவந்திருக்கிறேன். ஜனவரியில் பிறப்பிக்கப்பட்ட சட்டம் பத்திரிகை இலாகாவின் குறுக்கீடின்றிப் பொதுப் புத்தகாலயங்களுக்குச் செல்வதை முடியாத காரியமாக்கி விட்டது. அன்னிய நாட்டுக் காரியாலயத்தின் தெளிவான கட்டளையின்றி நாடோடிக் கலைகள் சம்பந்தமான புத்தகங்களைக்கொண்ட எந்த புத்தகாலயத்துக்கும் நான் செல்ல முடியாதாகையால், எனக்கு அந்த அனுமதியைக் கிடைக்கச் செய்ய

இலாகாவைக் கேட்டேன். மனுபோட்டு ஒன்பது வாரம் ஆனபின் முயற்சியைக் கைவிட்டேன். பத்திரிகை இலாகா ஒன்றும் செய்யவில்லை.

சமீப எதிர்காலத்தில் சோவியத் தணிக்கை ஒழியுமென எதிர்பார்க்கமுடியாது. 1947, வசந்த காலத்தில் ஹாரல்ட் ஸ்டாஸ்ஸன் மாஸ்கோ வந்திருந்தபோது ஸ்டாலினே அவரிடம் அவ்விதமாகச் சொல்லிவிட்டார்.

கடைசியாகப் பார்க்கப்போனால், சோவியத் தணிக்கையின் நோக்கம் ஈடேறப்போவதில்லை. வால்டர் டியூராண்டி, ஹாரொல்ட் டென்னி, லூயி பிஷர் இவர்களைப் போன்றவர்களுடைய நல்ல எழுத்துக்கு வசதி கிடைப்பதில்லையாதலால், ருஷியத் தலை நகரிலுள்ள அன்னியநாட்டு நிருபர் ஏமாற்றமடைந்து யாதொரு நன்மையும் செய்ய அசக்தர்களாகிவிடுகின்றனர். கடைசியாக நல்லெண்ணமுள்ள லூயி பிஷர் போன்றவர்களும் சினமடைந்து கோப உணர்ச்சியால் நூல்களும் கட்டுரைகளும் எழுதுவர். ருஷிய அரசாங்கம் தற்கொலைக்குச் சமானமான இத்தணிக்கையை வற்புறுத்தும் வரையில் சோவியத் யூனியனுக்குச் செல்லும் ஒவ்வொரு நிருபனும் மேற்சொன்னவர்களின் அடிச்சுவட்டையே பின்பற்றுவர் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது.

என்மீது குற்றஞ்சாட்டியபின், ருஷியாவிலுள்ள நிருபர்கள் பொய்க்குற்றங்கள் தண்டனைகள் பற்றிக் கவலைப்படுவது இயல்பேயாகும். கோஸன்கிணு-சமரின் விவகாரம், யக்கோவ் லொமாகின் என்ற சோவியத் கான்ஸல்-ஜனரல் அமெரிக்காவிலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டது. இவற்றிற்குப்பின், தண்டனையானது நாடு கடத்தப்படுவதோடு நின்றுவிடாமல், இன்னும் கடுமையாகவே இருக்கலாம்.

மாஸ்கோவிலுள்ள நிருபர்கள் இவ் அபாயங்களை நன்கறிவர். வாஷிலங்கோவை நான் பேட்டி கண்டபின் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் என் தோழர்கள் கூடியிருந்தபோது அவர்கள் எவ்வளவு கவலையுற்றிருந்தனர் என்பது என் நினைவிலிருக்கிறது.

அத்தியாயம் 7

முதல் தடவை அல்ல; கடைசியாகவும் இராது.

அடுத்த தடவை அமெரிக்கர் ஒருவரே பலியாகப்போகிருர் என்று நான் தீர்க்கதரிசனம் கூறினேன் அல்லவா ? தினசரிப் பத்திரிகையைக் கவனமாகப் படிப்போருக்கு நான் ஏன் அவ் விதமாகக் கூறினேன் என்பதைக் கண்டுபிடிப்பதில் கஷ்டமே இருக்காது. சென்ற இரண்டு ஆண்டுகளாக, **பிரவ்தா, இஸ்வெஸ்தியா** அல்லது **லிட்டரரி கஜட்டில்** அமெரிக்காவுக்கு விரோதமான பலமானதாக்குதல் ஏதேனுமொன்று வெளி யாகாமல் ஒருநாள் கூட இருந்தது கிடையாது. இந்த இரக்க மற்ற போரில் எல்லாவிதமான பிரசாரங்களும் தங்குதடை யின்றி வெளிப்படும். பத்திரிகை, ரேடியோ, இலக்கியம், நாடகம், பிலிம், நடனம், சர்க்கஸ்—இவையாவும் அமெரிக்க வாழ்க்கை ரீதியையும் சிந்தனையையும் இழிந்தவையென்றும், பிறவற்றைக் கொள்ளையடிக்கும் இயல்புவாய்ந்தவையென்றும் விடாமல் இகழ்கின்றன.

நம் அரசியல் மேதைகள் ' சர்க்காரின் கைக்கூலிகள் '; தொழிலாளர் அடிமை விலங்கு தரித்து பாதுகாப்பில்லாதிருப் பவர்கள் ; நீக்ரோ சிறுபான்மையினர் இவ்விலங்குகளிலிருந்து என்றுமே விடுதலையடைந்தது கிடையாது ; நம் இலக்கியம் அழுகிப்போன, ஸ்திரி புருஷ ஆபாசங்களின் குட்டை ; ஹாலிவுட் குணக்கேட்டையும் குற்றம் புரியும் பலாத்காரத்தையும் போதிக் கும் பள்ளி ; பலகாலம் பாராட்டப்பட்டுவந்த அமெரிக்க டெக்னு லஜி மங்கி வருகிறது ; இழிந்த யாங்கிகள் ருஷிய ரிடமிருந்து எத்தனையோ புதிய கண்டுபிடிப்புக்களையும் நூதன முறைகளையும் திருடியுள்ளனர் ; அமெரிக்கக் கட்டிடச் சிற்பம் பயனற்றது ; ருஷியச்சிற்பிகளோ உலகிலே மிக உயர்ந்த, மிக

அழகான, மிக பூரணத்துவமுடைய வானேங்கும் கட்டிடங்களை எழுப்பப்போகிறவர்கள் ; இழிவுற்ற பிரபுக்கள் குடிவெறியில் ஆடுவதுபோல ஆடாத திடமாளிகைகளாக விளங்கும் அவை— இங்ஙனமாக அவை இகழ்ந்தன.

அயல்நாட்டு விவகார விஷயங்களில், அமெரிக்காவை யுத்த பிற்கால உலகில் பற்களை நெறித்து சின்னஞ்சிறு நாடுகளின் உருவிலுள்ள பன்றிக்குட்டிகளை விழுங்கும் கொடிய பெரிய ஓநாயாக ருஷிய அரசாங்கம் சித்திரிக்கின்றது. சமாதான த்தை விரும்பும் சோவியத் யூனியனுக்கும் புதிய ஜன நாயகங்களுக்கும் எதிராக ஆக்கிரமிப்பு வேலையில் இறங்கும் பொருட்டு அமெரிக்கா ஜப்பானுக்கும் ஜர்மனிக்கும் புத்துயி ரளித்துத் தயார்படுத்தி வருகிறதாம்.

துரதிருஷ்டவசமாக, அமெரிக்கா தன் யுத்த பிற்கால அயல்நாட்டுக் கொள்கையில் தவறுகள் செய்துள்ளது. இத் தவறுகள் நம் நேசக் கட்சியினரை மட்டுமன்றி, உலகெங்கு முள்ள ஜனநாயக சக்திகளையும் நம் நல்லெண்ணத்தில் சந் தேகங்கொள்ளச் செய்துள்ளன. ருஷிய அரசாங்கம் இவற் றைத் தன் பிரசாரத்திற்காகப் பயன்படுத்துகிறது. அமெரிக்கா சுதந்திரத்திற்காகப் போராடிப் புரட்சி செய்யும் மக்களை ஆதரிப் பதையே தன் கொள்கையாகக் கொண்டுவந்துள்ளது. ஆனால், சில சமயம், இப்புரட்சி ஏற்பட்ட நாடுகளில் அமெரிக்கா, உள்ள நிலை மாறுதிருக்க, புரட்சி செய்பவர்களுக்கு ஆதர வளிக்காமல் அதிக்கம் செலுத்துவோருக்கு ஆக்கமளித்துள்ளது. இதனால் ஆந்நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சியினர் புரட்சிக்குத் தலைமைவகித்து நடத்தினர். அமெரிக்காவல்ல, ருஷியாவே அந்நாடுகளில் சுதந்திரத்தை ஆதரித்த நாடாயிற்று.

இங்ஙனமாக, யுத்த பிற்கால உலகில் அமெரிக்கா சுதந்திர சக்திகளுக்கு ஆக்கமளிக்கத் தவறியபோதிலும், அமெரிக்க ஜனநாயக சக்தியின் எழுச்சிதரும் ஜீவ சக்தியும், உயரிய வாழ்க் கைத்தரமும், கடன் குத்தகைத் திட்டமும், தாராள புத்தியும்

அமெரிக்காவை இன்றைய பிரசார யுத்தத்தில் ஆற்றல் வாய்ந்த தொரு சக்தியாக ஆக்கிவிட்டன.

இச் சக்தியின் ஆற்றலை ருஷிய மக்களும் உணர்ந்து வரு கின்றனர். 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா' ஒலிபரப்புத் திட்டங்களை மக்கள் மேன்மேலும் ஆவலுடன் கேட்டு வருகின்றனர். அமெ ரிக்காவுக்கு விரோதமான பிரசாரம் மேன்மேலும் தீவிரமாக நடத்தப்பட்டு வருவது இந்த ஆற்றலுக்கு ஓர் அறிகுறியாகும். ருஷியர்களிடையே அமெரிக்காவின் சிறப்பு பற்றிய பிரமையையும் அமெரிக்க வாழ்க்கை பற்றிய அவர்களின் கனவையும் குலைப் பதே இப் பிரசாரத்தின் அடிப்படையான நோக்கம். அமெரிக் காவின் நல்லெண்ணத்தில் ருஷியர் வைக்கும் நம்பிக்கையைக் குலைக்கவும், இதர நாடுகளின் சுதந்திர அரசியலதிகாரத்தைக் குலைக்க அமெரிக்கர் திட்டம் போட்டுள்ளனர் என்ற சந்தேகத்தை எழுப்பி அதற்குத் தூபம் போடவும், அமெரிக்க நாகரிகம் எவ்விதத்திலேனும் நகல் செய்யப்படுவதற்கோ, பாராட்டப்படுவ தற்கோ, மறியாதை செய்யப்படுவ்தற்கோ உரியது என்ற எண் ணத்தைக்கூடப் பரிகசிக்கவும் ருஷிய அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.

போல்ஷிவிக் பிரசாரம் ருஷியாவின் யுத்தகால நேச நாடா கிய அமெரிக்காவை இன்று பலமாகத் தாக்குவதுபோல நாஜி ஜர்மனியைக்கூட அது தாக்கியது கிடையாது. ஆயினும், இது கடினமான நன்றிகெட்டதொரு காரியமாகும். அமெரிக்கரை ருஷியர் வெகு காலமாக நேசித்தும் பாராட்டியும் வருகின்றனர். சோவியத் ருஷியா அமெரிக்கரை எவ்வளவுதான் இழிமைப் படுத்திய போதிலும், அமெரிக்கர் மீது ருஷிய மக்கள் காட்டும் அன்பை மட்டும் குலைக்க முடியவில்லை

சோவியத் யூனியன் மக்கள் கடல் கடந்த பெரு நாடாகிய அமெரிக்காவின் 'அழகிய வாழ்க்கை' பற்றிய கற்பனைக் கதை யில் நம்பிக்கை வைத்து அமெரிக்காவைப் பகைக்கும் பிர சாரத்தை சாத்வீகமாக எதிர்த்து வருகின்றனர். அப்பிரசாரத்தை

அலட்சியம் செய்து, அமெரிக்கர் தொழிலில் அடைந்துள்ள வலிமை, அவர்களுடைய ஹாஸ்ய உணர்ச்சி, அரசியல் ஜன நாயகம், தினசரி நடத்தையிலும் அவர்கள் காட்டும் இனிய ஆனல் திகைப்பை உண்டு பண்ணும் ஜனநாயகம், ஆகியவற்றிற் காக அவர்களைத் தொடர்ந்து மெச்சுகின்றனர்.

அமெரிக்கரும் ருஷியரும் அதிகார தோரணையிலின்றி சாதா ரணமாக ஒருவரோடொருவர் நேராகத் தொடர்பு கொள்ளும் போது ஒருவரையொருவர் நன்கறிந்துகொண்டு அன்பு செலுத்து கின்றனர். யுத்த காலத்தில் உக்ரேனில் அமெரிக்க விமான தளங்களில் நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்க சோல்ஜர்கள் பிரிட்டி ஷாரிடம்விட ருஷியரிடமே மிகவும் சரசமாகப் பழகினரென் றும், பாஷை தடையாகவேயில்லையென்றும் என்னிடம் பல தடவை சொல்லினர்.

ருஷியரும் அமெரிக்கரைப் பற்றி அவ்விதமாகவே தம் உணர்ச்சியை வெளியிட்டுள்ளனர். ருஷியக் கவி இலியா செல்வின்ஸ்கி யுத்தம் முடிவதற்குச் சிறிது முன்பு அமெரிக்க எழுத்தாளரைப்பற்றி சொன்னதாவது :

" அவர்கள் அமெரிக்க மண்ணினின்று தோன்றி அதில் ஆழ்ந்து வேர் ஊன்றியவர்கள். அமெரிக்காவினின்று வெளியே வந்து தம்மைச் சூழ்ந்த உலகுக்குச் செவி சாய்த்தும் தம் இனத்தைச் சார்ந்த குரலொன்று அவர்கள் செவியில் விழுந்தது. தொலைவிலிருந்ததும், அன்னியமானது என்று தோன்றியதுமான ருஷியாவிலிருந்து அது வந்தது."

ஆனல், இப்போது இன சம்பந்தம் பற்றிய பேச்செல்லாம் நிஷித்தம். கடன்பட்டிருப்பதாகக் கூறினல் அது சோவியத் அரசாங்கத்துக்கு விரோதமாகச் செய்யப்படும் ஒரு குற்ற மாகும் ; இழிந்த மேலை நாட்டினரின் முன்னிலையில் மண்டி யிட்டுக் கொஞ்சுவது போலாகும். இக் குற்றம் செய்வோர் வேலையினின்று நீக்கப்படுவர். அன்னிய விஷயங்களில் மோகம் கொள்ளும் நோயினல் பீடிக்கப்பட்ட பிற்போக்கான

பிரஜைகளை விடுவிப்பதே சோவியத் பிரசாரத்தின் நோக்கங்களில் ஒன்றென வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. மற்றும், சோவியத் நாகரிகம் மிக உயரிய பூரண நிலை அடைந்துவிட்ட தென்றும், சோவியத் ருஷியப் பிரஜைகளிற் சிலர் மேலை நாட்டின்பால் வைத்துள்ள அடிமை மோகம் முற்றும் ஒழிவதற்கான சாத்தியங்கள் எல்லாம் இப்போது உள்ளன என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது.

இந்த அடிமை மோகத்தை ஒழிக்க, சோவியத் விஞ்ஞானிகள், எழுத்தாளர், நாடக பிலிம் உற்பத்தியாளர் பலர் கொடிய தண்டனைக்கு ஆளாயினர். 'குரோகடைல்' என்னும் ருஷிய ஹாஸ்யப் பத்திரிகையும் தப்பவில்லை. அதன் ஆசிரியர்கள் மக்களின் உணர்விலிருந்து முதலாளித்துவத்தின் அடையாளங்களை அடியோடு ஒழிக்கப் போர் தொடுக்குமாறு கட்டளையிடப் பட்டனர்.

உத்சாகமுள்ள பிரஜைகளிற் சிலர் ருஷிய மொழியோடு ஒன்றிவிட்ட அன்னிய சொற்களின் மீதும் போர் தொடுத்தனர். ருஷிய அரசாங்கம் அதற்கு மேலும் சென்றது. பிற நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டவையென உலகெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட பல கண்டுபிடிப்புகள் ருஷியாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டனவென அது உரிமை கொண்டாடுகிறது. சோவியத் நிபுணர் பின்கண்டவை ருஷியாவிலேயே முதன்முதலாகக் கண்டு பிடிக்கப்பட்டனவெனக் கூறுகின்றனர் :

ரேடியோ.
செயற்கை ரப்பர்.
நீராவி இஞ்சன்.
லோகோமோடிவ்.
ஆகாய விமானம்.
மின்சார விளக்கு.
நூற்கும் ஜென்னி.
அனிலைன் சாயங்கள்.
ஆயில் டாங்கர்.
சப்மரீன்.
பெனிஸிலின்.
கேடர்பில்லர் டிராக்டர்.
ஹார்வெஸ்டர் கம்பைன்.

அன்றியும் அமெரிக்கா, கானடாவிலுள்ள கோதுமைப் பயிர் முழுதும் ருஷிய 'கோதுமை ரகங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என எடுத்துக்காட்டப்படுகிறது. ருஷிய கோது மையே அமெரிக்காவைக் காப்பாற்றியது. இப்போது அமெரிக் காவில் பொதுவாக உபயோகிக்கப்படும் அல்பலாவும், சிறந்த ஆப்பிள் பழங்களும் ஆதியில் ருஷியாவினின்றே வந்தன. அமெரிக்காவை முதன்முதலாகக் கண்டு பிடித்தவர்களும் தாங்கள்தாம் என அவர்கள் உரிமை கொண்டாடுகின்றனர்.

ருஷியரிடையே ஓர் உயர்வு மனோநிலையை வளர்க்கவும், சோவியத் மனிதன் என்ற ஒரு பிரமையை உண்டாக்கவும் சோவியத் அரசாங்கம் செய்யும் முயற்சியைச் சேர்ந்தவையே இந்த தற்பெருமைகள். இந் நோக்கங்கள் நிறைவேற கலைத் துறைகளும் திரட்டப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. சோவியத் மனிதன், அவனுடைய ஒழுக்க உயர்வு, அவனது திரம், நேர்மை, அவனுடன் ஒப்பிடும்போது முதலாளித்துவ மனிதனை அற்பப் பதராக்கும் வகையில் அமைந்திருக்கும் அவனுடைய மற்ற குணச் சிறப்புகள்—இவை யாவற்றையும் சிறப்பிக்கும் கதை களை எழுத எழுத்தாளர்களும், நாடகங்களையும் சினிமாக்களையும் சிருஷ்டிக்க நாடகாசிரியர்களும் பிலிம் உற்பத்தியாளர்களும் தூண்டப்படுகின்றனர்.

சோவியத் யூனியனுக்கும் மேலை நாட்டுக்கும் இடையே கலா சாரப் பரிவர்த்தனையை உண்டாக்க வெளியிலிருந்து செய்யப் படும் ஒவ்வொரு முயற்சியும் சோவியத் அரசாங்கத்தாரால் தடுக்கப்பட்டுள்ளன.

1947-ம் ஆண்டு கோடைக் காலத்தில் பேராசிரியர் எர்னஸ்ட் சிம்மன்ஸ் மாஸ்கோவுக்குச் சென்ற துரதிருஷ்டமான பிரயா ணம் ஒரு நல்ல உதாரணமாகும். அவர் ருஷிய வரலாற் றையும் இலக்கியத்தையும் நன்கு கற்ற தலை சிறந்த பண்டி தரும், கொலம்பிய சர்வ கலாசாலையில் ஸ்லாவிக் இலாகாவின் தலைவரும், ருஷிய கழகத்தின் ஆலோசனையாளர் கூட்டத்

தலைவரும் ஆவர். பேராசிரியர் சிம்மன்ஸ் ராக்பெல்லர் ஸ்தாபன ஆதரவில் அமெரிக்கக் கலையாராய்ச்சி சங்கத்தின் சார்பாக ருஷியா சென்றார். மாணவர், உபாத்தியாயர், பிரசுரங்கள், புத்தகாலயங்கள் இவற்றின் பரிவர்த்தனைக்குரிய நிர்மாணத் திட்டங்களுடன் சென்றார். சிம்மன்ஸ் நுட்பமான அறிவும் நிதான புத்தியும் உடையவர். மாஸ்கோ பற்றி மதி மயக்கம் ஒன்றும் அவர் கொள்ளவில்லை. ஆயினும், தமக்குக் கிடைத்த வரவேற்பைப் பற்றி ஏமாற்றமே அடைந்தார். அயல்நாட்டுக் காரியாலயம், அயல் நாடுகளுடன் கலாசாரத் தொடர்புகள் அமைப்பதற்கான அகில சோவியத் யூனியன் சங்கம் ஆகியன முதல் மாஸ்கோ சர்வ காலாசாலையும் ருஷியாவில் மிகப் பெரிதும் உலகிலேயே மிகப் பெரியவற்றில் ஒன்றுனதுமான லெனின் புத்தகாலயமும் வரையில், யாவும் அவர் தொடர்பு கொள்ள முயன்ற ஒவ்வொரு தடவையும் அவருக்குத் தடை போட்டன.

அவர் ருஷியாவை விட்டுச் சென்றதும் சோவியத் பத்திரிகைகள் கொலம்பியா சர்வகலாசாலையின் ருஷியக் கழகம் ஒற்றர்களின் பள்ளிக்கூடமென்றும் அதன் தலைவரான ஜராயிட் ராபின்சன் தேர்ச்சி பெற்ற ஒரு ஒற்றனென்றும், சிம்மன்ஸ் ஒரு பொய்ப் பண்டிதரென்றும், அமெரிக்க விமர்சனக்காரர்கள் மிகவும் புகழ்ந்த அவர் எழுதிய டால்ஸ்டாய் வரலாறு பிரயோசன மற்றதென்றும் தாக்கி எழுதின.

சோவியத் மக்களிடையே பூர்ழுவா பண்பாடு செல்வாக்கு பெற்றுவிடுமோ என்று அஞ்சும் சோவியத் அரசாங்கம் அயல் நாடுகளின் கலாசாரத் தொடர்புகள் யாவற்றையுமே அடியோடு விலக்க இழி தந்திரங்களைப் பயன்படுத்தி வருகின்றது. ‘ புது ஜனநாயக நாடுகளுடன் மட்டுமே தொடர்புகள் வைக்கப்படுகின்றன. ஆனால் இந் நாடுகளின் கலாசார சாதனைகளைப் பற்றி அதிகம் அக்கறை காட்டுவதில்லை. ருஷியா தன் சொந்த கருத்துக்களையும் மதிப்புக்களையுமே வலியுறுத்துகிறது. இந் நாடுகளில் நிறந்தர மதிப்புடைய கலாசாரப் பண்புகள் அல்ல,

சோவியத்தின் சார்பாகவும் மேலை நாட்டுக்கு விரோதமாகவுமே பிரசாரம் செய்யப்படுகிறது.

இப் பிரசார யுத்தத்தின் உள்நாட்டு அம்சமே வெளிநாட்டு அம்சத்தைவிட முக்கியமானதாகும். ஹிட்லர் சோவியத் ருஷியாவைப் படையெடுத்தது முதல் சோவியத் அரசாங்கம் ருஷிய மக்களின் உள்ளத்தைப் பற்றப் போராடவேண்டியதாயிற்று.

போல்ஷிவிக்கர் 25 வருஷ காலம் ஆதிக்கம் செலுத்தியிருந்தும், யுத்தம் ஆரம்பித்ததும் மக்கள் கம்யூனிஸத்திற்காகப் போராட முன்வரவில்லை; ருஷியத் தாயைப் பாதுகாக்கத் தியாகங்கள் செய்யவே முன் வந்தனர். இதை ஸ்டாலினே ஹாரி ஹாப்கின்ஸிடம் ஒப்புக்கொண்டார்.

கோடிக்கணக்கான சோவியத் மக்களின் உள்ளத்தில் தேசியப் பற்றுடன் மதப்பற்றும் வலுவாக ஊன்றியிருந்தன. சோதனைக் காலத்தில் ஆறுதலுக்காக, மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் இவர்கள்பால் அன்று, புனித மும்மூர்த்திகளின் பாலேயே திரும்பினார். ஸ்டாலின் எழுதிய 'லெனினிஸம்' அல்லது 'கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு' என்ற நூல்களையல்ல, விவிலிய வேதத்தையே படிக்க விரும்பினார். ருஷிய அரசாங்கம் தன் செருக்கை அடக்கிக் கொண்டு திருச்சபையுடன் சமாதானம் செய்து கொள்ளவும் அதனுடன் நேசம் வைத்துக் கொள்ளவும் வேண்டியதாயிற்று.

ருஷிய வெற்றியின் பொருட்டுக் கம்யூனிஸ்ட் கட்சி ஆற்றிய மகத்தான தொண்டையோ, அல்லது அதன் அங்கத்தினர் செய்த தியாகத்தையும், காட்டிய தீரத்தையும் அவர்களுடைய கட்டுப்பாட்டையுமோ நான் குறைத்துக் கூற விரும்பவில்லை. உண்மையில் படுதோல்விகள் அடைந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்டுப்பாடும் அதிமானுஷ உழைப்பும் முன்னணியும் பின்னணியும் சிதையாமல் பாதுகாத்தன. ஆனால், கட்டுப்பாடு ஒன்றே நாஜிகளின் பெரு வெள்ளத்தைத் தடுத்திருக்க முடியாது.

ருஷிய தேசாபிமானத்துடனும் சமயத்துடனும் யுத்த கால நேச உடன்படிக்கை செய்து, யுத்த பிற்கால வாழ்வு சுபிட்சமாகவும் அமைதியாகவும் செல்வச் செழிப்புடனும் விளங்குமெனச் சோர்வுற்ற ருஷிய மக்களினிடையே அற்புதக் காட்சியொன்றை எழுப்பியதன் மூலமாகவே ருஷிய அரசாங்கம் ஒற்றுமையை நிலைநாட்டியது. யுத்தம் முடிந்ததும் இவ்வொற்றுமையில் பிளவுகள் ஏற்படலாயின. சோவியத் மக்களின் உள்ளத்தை மீண்டும் கவர வேண்டியிருந்தது. சோவியத் அதிகார ஆட்சிக்கு எதிராகக் கட்டுப்பாடான ஒரு எதிர்ப்பு இருக்கிறதெனக் கூறவில்லை. ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியும் யாவும் அளாவிய அதன் ரகசியப் போலீசும் அங்ஙனம் நேரிடாமல் பார்த்துக்கொண்டன. ஆயினும், மக்களினிடையே, சிறப்பாக, யுத்த அநுபவம் மிகுந்தவர்களிடையே கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்துள்ளன. இக் கேள்விகளுக்குப் பதில் சொல்லவும் ஐயங்களைத் தீர்க்கவும் கட்சி தன் முழு பிரசார இயந்திரத்தையும் ஈடுபடுத்தியுள்ளது. வாக்களிக்கப்பட்ட யுத்த பிற்கால சொர்க்க லோகம் எங்கே? ஓய்வும் செழிப்பும் எங்கே? வாழ்க்கையின்பத்தைக் குலைக்கும் யுத்த பீதி திரும்பிவருவானேன்?

ராணுவத்தைச் சார்ந்த இளைஞர்களில் பல்லாயிரம் பேர் ஜர்மனியிலும் ஆஸ்திரியாவிலுமுள்ள பிரிட்டிஷ், அமெரிக்க பிராந்தியங்களுக்கு ஓடிவிட்டனர். பல்லாயிரம் பேர் சோவியத் யூனியனுக்குத் திரும்ப மறுத்தனர். திரும்பி வந்த லட்சக் கணக்கானவர் கலைக்கப்பட்டு பரந்த ருஷியாவிலுள்ள பல்வகை வகுப்பினரிடையே லயமடைந்துவிட்டனர். ஆயினும், நினைவு நீடித்து நிற்கிறது. மேலைநாட்டு வாழ்க்கை முறையில் தோய்ந்தவர்கள் அல்லவா?

ஜர்மனியை வெல்ல ஆரம்பித்த காலத்தில் இந்த சோல்ஜர்கள் சோவியத் வாழ்க்கை முறையைப் பற்றி பெருமையுடன் பேசினர். பிறகு அதையெல்லாம் கைவிட்டனர். 'ஏன் ருஷியாவில் இன்னும் நிலைமை சீரடையவில்லை?' என்றுதான்

இப்போது மீண்டும் மீண்டும் கேட்கின்றனர். இதற்கெல்லாம் ருஷிய அரசாங்கத்தின் பதில் இதுதான்: "இதெல்லாம், கொள்ளையடிக்கும் ஏகாதிபத்திய அமெரிக்காவின் தீய வேலை".

என்மீது பொய்க் குற்றம் சாட்டப்பட்டதேன்? இக்கேள்விக்குப் பூரணமான பதிலளிக்க என்னால் எப்போதுமே முடியாமலிருக்கலாம். நான் ஊகம்தான் செய்யலாம்.

மெக்கிரா-ஹில் என்பது பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப சம்பந்தமான செய்திகளைத் திரட்டிப் பரப்புவதில் அக்கறையுள்ளதொரு ஸ்தாபனமாகும். இந்த ஸ்தாபனத்துக்கு வேலை செய்ய நான் ஏற்றுக்கொண்டது ருஷிய சந்தேகத்திற்கு என்னை ஆளாக்கியது.

எனக்கு சோவியத் பிரஜைகள் பலர் தெரியும். அவர்களில் சிலர் என் அந்தரங்க நண்பர். அவர்களிற் பலர் எழுத்தாளரும், கலைஞரும், நடிகருமாவர். பிரசார யுத்தத்தில் இவர்களே மிகவும் ஆற்றல் வாய்ந்தவர்கள் என்பது சோவியத் அரசாங்கத்தின் கருத்தாகும். இவர்களுடைய மதிப்பில் என்னை இழிவுபடுத்த அதிகாரிகள் விரும்பியிருக்கலாம்.

நான் விஷயங்களைச் சேகரித்து பிரசுரிப்பவன். அமெரிக்காவுக்கு எதிரான பிரசாரத்தையும், கலைத் துறைகளில் அரசாங்கம் விதிக்கும் கட்டுப்பாடுகளையும் பற்றி நான் தேசீய ஒலி பரப்புக் கம்பனிக்குச் செய்தி தெரிவிப்பவன். தணிக்கையாளர் என்னதான் என் செய்திகளைத் தணிக்கை செய்தாலும் என் மனக்கசப்பை உலகம் அறிந்தது.

நான் ருஷியாவில் பிறந்தேன் 14-ம் வயதில் அதை விட்டுச் சென்றேன். அமெரிக்காவின் மகத்தான ஜனநாயகம் என மனப்போக்கை உருப்படுத்தியது. அமெரிக்காவிலேயே முற்றும் ஐக்கியப்பட விரும்பி நியுயார்க்கிலிருந்து மாதிசனுக்கும் விஸ்கான்ஸினுக்கும் என் கலாசாலைப் படிப்புக்காகச் சென்றேன். அவ்விடங்களில் நான் இருந்த காலம் என்

வாழ்க்கையிலேயே மிக இன்பமானது. அங்கேதான் நான் முழுக்கமுழுக்க அமெரிக்கனாக என்னை எண்ணிக்கொள்ள ஆரம்பித்தேன். சோவியத் யூனியனில் தங்கியிருந்த நீண்ட காலத்தில் நான் ஒரு சுதந்தர நாட்டின் பிரஜை என்ற பெருமையுணர்ச்சி ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்தது.

ஆனால் 1935-ல் கோடையில் நான் முதன்முதலாக ருஷியாவுக்குச் சென்றபோது, சோவியத் நாட்டை அதிசய விழிகளால் பார்த்தேன். அது சமயம் அமெரிக்க வாழ்க்கை ரீதியில் உள்ள குறைகளை உணர்ந்தேன். பொருளாதார மந்தத்தினால் அது மிகவும் கஷ்டப்பட்டது. மகத்தான சோவியத் கற்பனை உலகம் என் உள்ளத்தைக் கவர்ந்தது. ஆனால் நான் கம்யூனிஸ்ட் அல்லன். பக்தர்களின் வெறி என்னை மயக்க வில்லை. கம்யூனிஸ்ட் கட்சி வேலை செய்த தோரணையே எனக்குப் பிடிக்கவில்லை.

அக் கட்சியின் போக்கு மனிதனின் சுய மரியாதைக்கும் கௌரவத்திற்கும் வேண்டுமென்றே பெருந்தீங்கு விளைவிக்கின்றது. பீதியினால் எதையும் அப்படியே ஏற்றுக்கொள்ளுமாறு அது மக்களைக் கட்டாயப்படுத்துகிறது. அந்த பீதியை அவர்கள் கட்டுப்பாடு அல்லது ஒழுங்கு என்பர். அது பயங்கர ஆட்சியாகும்.

மாக்ஸிம் கோர்க்கி மானிடனின் கௌரவத்தை வலியுறுத்தினார். உலக இலக்கியத்திற்கு அவர் செய்துள்ள மிக விழுமிய நன்கொடைகளுள் அது ஒன்று. "மனிதனாயிருப்பதில் பெருமை ஒன்றுள்ளது" என்றார் அவர்.

பகுதி மூன்று

மாஸ்கோவில் காதல் வாழ்க்கை

அத்தியாயம் 8

நீலா

1935 நவம்பர் இறுதியில் சோவியத் தலைநகரில் அன்றைய தினம் மாலை டைனமோ பனிக்கட்டி தளத்தைச் சுற்றிப் பாத ரக்ஷையின்மீது வழுக்கிச் சென்றபோது, உள்ளத்தில் இன்பம் நிறைந்த ஒரு வாலிபனாக இருந்தேன். என்னுடன் வந்தி ருந்த அமெரிக்கத் தூதுவராலயப் பெண் சீக்கிரத்திலேயே என்னைக் கைவிட்டு பனித்தளத்தின் மத்தியில் வழுக்கி விளையாடிக்கொண்டிருந்தவரிடம் போய்விட்டாள். தனியாக வழுக்கிக்கொண்டிருந்த நான் திடுமென இடறி விழுந்தேன். மீண்டும் எழுந்து நிற்க ருஷியப் பெண் ஒருத்தி உதவி செய் தாள். வழுக்கும் விளையாட்டில் சிறிதும் பயிற்சியற்றவன் என்று என்னை எண்ணினாள். அதை வாய்விட்டுச் சொல்லவும் சொல்லி நான் பாடம் கற்றுக்கொள்ள வேண்டுமென்று யோசனை கூறினாள். என்னைப் பார்த்துப் பரிகாசச் சிரிப்பு ஒன்று சிறித்துவிட்டு கும்பலோடு கும்பலாக மறைந்துவிட்டாள். அவளுடைய குரலின் இசையும், பச்சை-சாம்பல் நிறமான, அன்பு ததும்பிய, விழிகளிலிருந்து வீசிய உயிரொளியும் என்னைப் பிரமிக்கச்செய்தன.

அவளை மீண்டும் சந்திக்க அதிகநாள் பிடிக்கவில்லை. இந்தத் தடவை வேண்டுமென்றே சறுக்கி விழுந்தேன். குறி வைத்ததுபோல அவள் காலடியிலேயே விழுந்தேன். மீண்டு மொரு தடவை அவள் என்னைத் தூக்கிவிட்டாள். அவள் என்னை இலேசில் தூக்கிவிட விட்டேனா ? மீண்டும் மீண்டும் விழுந்தேன். அது எவ்வளவு நேரம் நீடிக்க முடியுமோ அவ்வளவு தூரம் நீடிக்கச் செய்தேன். அவள் கடைசியாகப் பொறுமையுடன், “ மீண்டும் விழாதிருக்க, என்னை நன்றாகப் பிடித்துக்கொள்ளுங்கள் ” என்றாள்.

அந்தப் பெண்ணின் பெயர் நிலா. அன்று முதல் நாங்கள் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டே இருந்துவருகிறோம்.

ஆனால், எளிதில் சொல்லிவிடலாம், செய்வதன்றோ சிரம மானது.

பல தடவை சந்தித்த பின் அன்றைய தினம் பனிக்கட்டி தளத்தில் அவளிடம் இருந்த உல்லாசம் பிறகு வெகு அபூர்வ மாகவே காணப்பட்டது என்பதை உணர்ந்தேன். அவள் மனத்தில் விபரீதமானதும் புறம்பானதுமான ஏதோ ஒன்று வாட்டி அவள் கவனத்தை என்னிடமிருந்து திருப்பியது. முகத்திலும் சரி, குரலிலும் சரி சகஜமான தென்பும் இல்லை.

அவள் ஒரு நாள்கூட என்னைத் தன் வீட்டுக்கு அழைக்க மாட்டாள்; என் வீட்டுக்கும் அவள் வருவதில்லை. அந்த காலத்தில் ருஷியர் அயலவருடன் சற்றேறக் குறைய தாராள மாகப் பழகிவந்தனர். அப்படியிருக்க, இவள் மட்டும் ஒரு ஓட்டலிலோ, நாடகக் கொட்டகையிலோ, பனிக்கட்டி தளத்திலோ தான் நாங்கள் சந்திக்கக்கூடுமென வற்புறுத்தியது எனக்கு விளங்கவில்லை. ஒரு நாள் குறிப்பாக "நான் உங்களுக்குத் தீங்கு ஒன்றும் செய்ய விரும்பவில்லை" என்றாள். அதற்கு மேல் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

சுதந்திர அமெரிக்கப் பிரஜையான எனக்கு அவள் தீங்கு செய்யக் கூடும் என்ற வெறும் எண்ணமும் எனக்குக் கோப மூட்டியது. அவள் சொன்னதெல்லாம் இது:

"நீங்கள் இருக்கிறீர்களே அமெரிக்கர், உங்களுக்குச் சூது வாது கபடம் ஒன்றும் தெரியாது."

பல மாதங்கள் சென்றன. நாங்கள் அடிக்கடி ஒருவரை யொருவர் பார்த்துவந்தோம். ஒரு நாள் என்னை மணந்து கொள்ளுமாறு அவளைக் கேட்டேன். அவள் காரணம் எதும் சொல்லாமல் மறுத்தாள்.

அரசாங்கத்தார் தமக்கு வேண்டாதவர்களை ஒழித்துவிடும் வேலையை மும்முரமாகச் செய்துவந்தனர். சீக்கிரத்தில் நானே அவளுக்குத் தீங்கு செய்யக்கூடும் என்ற பயம் வர ஆரம்பித்தது. என் அச்சங்களை அவளிடம் சொல்லி, அவள் என்னை மணக்க வேண்டும், இல்லையேல் நான் அமெரிக்கா சென்று விடுவேன் என்று கட்டாயமாகச் சொன்னேன். அப்போதே அவள் திடமிழந்து தன் வரலாற்றை என்னிடம் சொன்னாள். அவள் சோவியத் எழுத்தாளன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டவள். அவன் வாலிபன். லெனின்கிராடில் நாவலாசிரியன். 1934-ல் கிரோவ் கொலை செய்யப்பட்டான். உடனே அரசாங்கம் தன் ஒழிப்பு வேலையை ஆரம்பித்தது. அவளுடைய கணவன் லெனின்கிராட் எழுத்தாளர் உலகின் பிரதான இளைஞர் பலருடன் கைது செய்யப்பட்டான். பல மாதங்களுக்குப் பின் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டு ஊர் பேர் தெரியாத ஓரிடத்தில் அவன் உயிர் துறந்தான். அவள் என்னைக் காதலித்ததாகவே கருதினாள். ஆனால், "மக்களின் பகைவன்" ஒருவனின் மாஜி மனைவியை நான் மணந்தால், அவன் இறந்துவிட்டானாயினும், எனக்கு தீங்கு ஏற்படுமென அவள் அஞ்சினாள்.

ஒருவரை ஒருவர் காதலித்த இளம் பருவத்தினர் இருவர், மற்றொருவருக்குத் தீங்கு ஏற்படுமோ என்றஞ்சி, ஒருவர் மற்றொருவரைக் கைவிட விரும்பினர். அந்த நிலையில்தான் நாங்கள் இருந்தோம். என் உத்தியோகப் பதவியும் அமெரிக்கப் பிரஜா உரிமையும் எனக்கு நிரம்பப் பாதுகாப்பு அளித்தன. ஆனால் அவளுக்கு ஏற்படக்கூடிய அபாயம் தெளிவாக இருந்தது. விரும்பாதவர்களை ஒழிப்பதற்கான விசாரணைகள் பற்றிய குறிப்புக்கள் எழுதிக்கொண்டிருந்த எனக்கு அயல் வல்லரசுகளின் பிரஜைகளுடன் தொடர்புகள் வைத்துக்கொள்வது எவ்வளவு ஆபத்தானது என்பது தெரியும். ஆனால் அவளுடைய கணவன் என்ற முறையில் நான் அவளுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடும் என்பதையும் உணர்ந்தேன். இறுதியாக, காலம் கழிந்துகொண்டிருந்ததை உத்தேசித்து

நாங்கள் உடனே மணந்துகொள்ள வேண்டும் என்று உணர்ந் தேன். ஆனால், தான் தயாராக இல்லையென அவள் மறுத் தாள்.

ஒழிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டவர்களின் மனைவி களையும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களையும் மாஸ்கோவிலிருந்து அடியோடு துடைத்துவிடுவதற்கான வேலை அமைதியாக நடந்து கொண்டிருந்ததை ஒரு நாள் அறிந்தேன். உடனே நீலா வேலை செய்த இடத்திற்குப் போன் செய்து அவளை உடனே பார்க்கவேண்டும் என்றேன். அவளும், முக்கியமான விஷய மொன்று என்னோடு சொல்ல எனக்காகப் பார்த்துக்கொண்டிருந் தாள். சாதாரணமாக செழிப்பாயும் உத்சாகமாகவும் ஒலிக்கும் அவள் குரல் அன்று ஜீவனற்றிருந்தது. கபே நாஷனலில் என்னைக் கண்டதும், தான் பதிவு செய்துகொண்டிருந்த அர்பத் பிரதேச மிலிஷியா தலைமை ஸ்தானத்திலிருந்து பெற்ற சீட் டொன்றை என்னிடம் காட்டினாள். அதில் அவள் ஒரு வாரத் திற்குள் ஆஜராகும்படிக் கட்டளையிடப்பட்டிருந்தாள்.

“ஏற்கெனவே மூட்டை கட்ட ஆரம்பித்துவிட்டேன். நேரத் திற்குள் தயாராகி விடுவேன்” என்று அலட்சியமாகச் சொன் னாள்.

“அப்படியொன்றும் இல்லை. உடனே என்னோடு திருமணப் பிரிவு ஆபீசுக்கு வா. நாம் புருஷனும் மனைவியுமாகப் பதிவு செய்துக்கொள்வோம்” என்றேன்.

“வெளியேயிருந்து பலவந்தம் ஒன்று பயமுறுத்திக்கொண் டிருக்கையில் உம்மை மணப்பது அழகாகாதே”.

“சற்றேறக்குறைய ஒரு வருஷ காலமாகவே உன்னை மணக்க விரும்பி நிற்கிறேன். நீயாக ஒப்புக்கொள்ளத் துணியாவிடி னும், என்னை உன் கணவனாகவே பாவித்து வந்திருக்கிறாய்.”

இன்னும் என்னென்ன அவளிடம் சொன்னேனோ, என் நினைவில் இல்லை. ஆனால், ஒரு மணி நேரத்திற்குள் பதிவு

ஆபீசுக்குச் சென்று பதிவு செய்துகொண்டோம். சடங்கு மிகச் சொற்பம். இசையில்லை, மலரில்லை, வெண்சரிகை கவுனில்லை. இருண்ட பழங்கட்டிடமொன்றில், இருண்டு நெருக்கமாயிருந்த ஆபீசில் களைத்துப்போன பெண்ணொருத்தி பிறப்பு, இறப்பு, திருமணச் சேர்க்கை, திருமணப் பிரிவினை இவற்றைப் பதிவு செய்துகொண்டிருந்தாள். அவ்வளவுதான்.

நடந்து சென்ற நீலாவை அவள் வேலை செய்யுமிடத்தில் விட்டுவிட்டு என் கடமைகளைச் செய்ய திரும்பிச் சென்றேன். அவள் மற்றொரு பெண்ணுடன் ஒரு சிறிய அறையில் வசித்து வந்தாள். நானோ குத்தகைக்கு எடுக்கப்பட்டு மறு குத்தகை யாக எனக்கு விடப்பட்டிருந்த அறையில் வசித்துவந்தேன். எந்த சோவியத் பெண்ணையும் அங்கே அழைத்துச் செல்லப் படாது என்ற நிபந்தனைமீது எனக்கு அது விடப்பட்டிருந்தது. அயல்நாட்டுப் பெண்களுக்கு ஆட்சேபமில்லை. ஏனெனில் அவர்கள் அறைக்கு உரிமை கொண்டாடமுடியாது. இது ஒரு பைத்தியக்காரத்தனமான விதியாயினும், என் வாக்குப்படி நடந்தாகவேண்டும். ருஷிய மனைவியைப் பற்றிய பேச்சு எடுத் தாலே அறை போய்விடும். நீலாவுக்கு ஒட்டல்கள் என்றால் பயம்.

திருமணமான இரவன்று சாப்பாட்டுக்காக அவளைச் சந் தித்தபோது அவள் முகம் வெளுத்திருந்தது; அவளுக்கு வேலை போய்விட்டது. பிரெஞ்சு மொழியில் நடந்த 'மாஸ்கோ ஜான'லின் கலைப்பகுதியின் உதவித் தலைவியாக இருந்தாள் அவள். அப்பத்திரிகை அயல்நாட்டுக் காரியாலயத்திற்காகப் பரிந்து எழுதும் பத்திரிகையாகும். அதன் நான்கு ஆசிரியர் களும் ஒருவர்பின் ஒருவராக ஒழிக்கப்பட்டனர். இப்போது அவளும் அனுப்பப்பட்டுவிட்டாள்.

எங்கள் திருமணமான முதல்வாரம் நரக வேதனையா யிருந்தது. தூதுவராலயம் என்றால் அவளுக்குப் பயம். அமெரிக்கத் தூதுவரான ஜோசப் டேவிஸ்வமிடம் உதவிக்குச் செல்லவேண்டாமென என்னைத் தடுத்தாள். இந்த பயம் எல்லாம் அடித்துத் திரும்பவரையில் எங்கள் மணத்தைத்

தூதுவராலயத்தில் பதிவு செய்யவேண்டாமென அவள் வாதாடினுள்.

நாட்கள் நீண்டன ; இரவுகள் இருண்டன. மழை, வெயில் என்று பாராமலும், எங்களைத் தாமதமாக நின்று உற்று நோக்கியவர்களைச் சட்டை செய்யாமலும் மாஸ்கோ தெருக் களில் அலைந்தோம்.

மிலிஷியா தலைமைஸ்தானத்தில் ஆஜராக வேண்டிய நாள் வந்தபோது, சோவியத் தலைநகரின் மத்திய பாகத்தில், ஸ்டா னிஸ்லாவ்ஸ்கி என்ற பிரபல ருஷிய உற்பத்தியாளரின் பெய ரால் வழங்கும் அழகிய அமைதியான தெருவில் உள்ள சிறிய கட்டிடவாயில் வரையில் அவளுடன் நடந்து சென்றேன். கண வன் என்ற உரிமையில் அவளுடன் செல்ல முயன்றேன். ஆனுல் அவள் அதனுல் பாதகமே ஏற்படுமென்றுள். அவள் வாதம் எனக்கு விளங்கவில்லையாயினும், அவள் விருப்பப் படியே விட்டேன்.

நீலா உள்ளே சென்று இருபது நிமிஷங்கள் ஆயின. முதல் பத்து நிமிஷத்திற்குள்ளேயே அவளுக்கு ஆபத்தேற் பட்டதென்று எண்ணி தூதுவராலயத்தின் உதவி நாடத் திட்ட மிட்டேன். அடுத்த பத்து நிமிஷம் தெருவைத்தாண்டிச் செல்வதும் மீண்டும் திரும்பி வருவதுமாக இருந்து கடைசியில் காத்திருந்த இடத்திலேயே நின்றேன்.

நீலா நச்சல்நிக்கிடம் அழைத்துச் செல்லப்பட்டாள். அவர் தந்த அச்சடித்த காகிதம் ஒன்றில், பிறந்த தேதி, பிறப்பிடம், முழுப்பெயர், கன்னிப்பெயர், விலாசம் முதலிய விவரங்களை எழுதினுள். விழிகள் பிதுங்க நச்சல்நிக் கேட்டார்.

" நீ இப்போது எழுதின பெயர் என்ன ? "

" அது என் கணவரின் பெயர்."

" அவர் என்ன செய்கிறுர் ?"

" அவர் அயல்நாட்டு நிருபரில் ஒருவர்."

" சிறிது பொறு."

அவர் அறையினின்று விரைந்து சென்ருர். போன் செய்வதற்காகப் போலிருந்தது. அவருடைய காரியதரிசி நீலா வந்தது முதல் முதல் தடவையாக விழிகளை உயர்த்தி நீலாவை அதிசயமாக நோக்கினுள். அந்தப் பெண் தன்னை ஏதேனும் கேள்வி கேட்கக்கூடும் என்று நீலா எண்ணினுள். அதற்குள் அதிகாரி திரும்பிவந்தார்.

"இன்னும் ஒரு வாரத்தில் திரும்பிவா. ஆனல், இரண்டாந்தடவை எங்களைப் பேட்டி காணுமுன் மாஸ்கோவை விட்டுப் போவதில்லையென ஒரு காகிதத்தில் கையெழுத்திடவேண்டும்" என்ருர்.

முந்திய வாரத்தைவிட இரண்டாவது வாரம் மேலும் சகிக்க முடியாமலிருந்தது. ஆயினும், இப்போது சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. நீலா வற்புறுத்தியதன்மேல் அவளுக்கு உதவியாக நான் யாதொன்றும் செய்யவில்லை. ஏழு நாட்கள் கழித்து தலைமைஸ்தானம் சென்ருள். நச்சல்நீக் உடனே அவளுக்குப் பேட்டியளித்து "எல்லாம் ஒரு தவறுதல் காரணமாக ஏற்பட்டுவிட்டது. இரண்டு தடவை இங்கே வர வேண்டியிருந்ததுபற்றி வருந்துகிறேன். மாஸ்கோவை விட்டுச் செல்வதில்லை என்று நீ எழுதிக்கொடுத்த சீட்டை இதோ வாபசு செய்துவிடுகிறேன். சோவியத் யூனியனுக்குள் எங்கு வேண்டுமானுலும் நீ பிரயாணம் செய்யலாம்" என்று சொல்லிவிட்டார்.

தாம் இப்போது சொன்னதெல்லாம் ஒரு தமாஷ்போல அவர் சிரித்தார். நீலா அவ்விதமாக எண்ணவில்லை. ஆனல், முகமெல்லாம் புன்னகை பொலிய அவள் வெளியே வந்தாள். அன்றிரவு நீலா நோயுற்ருள். மூன்று வாரங்களுக்குப் பின், கருங்கடல் கரையில் காகஸ்ஸஸ்ஸில் தேகாரோக்ய ஸ்தலம் ஒன்றுக்கு டிக்கட் வாங்கித் தந்தேன். நவம்பர் 7 விழாவுக்குப்பின் அவள் திரும்பிவருவதாக ஏற்பாடு. பிறகு, அதற்குள் அறையோ, ஜாகையோ அகப்படாவிடில் என்னுடன் ஹோட்டலில் தங்குவாள்.

க்டைசியாக விதி எங்கள்மீது புன்னகை செய்ய ஆரம்பித்தது. மெக்கிரா-ஹில் நடத்திய ' பிஸினஸ் வீக் 'இனுடையவும் லண்டன் எக்ஸ்சேஞ்சு டெலிகிராப்பின் நியூஸ் ஏஜன்ஸியினுடையவும் நிருபராயிருந்த கார்டன் கஷின் என்ற அமெரிக்க நண்பர் ஒருநாள் தம்மிடத்திற்கு என்னை அழைத்தார். குடியிருப்பதற்கான இடம் தம்மிடம் இருந்ததென எண்ணினார். நான் ஒரு ஜாகையைத் தேடிப்பார்த்துக்கொண்டிருந்ததை அவரும் அறிந்தார். அவரும் சரி, இதர நண்பர்களும் சரி, நான் திருமணம் ஆனவன் என்பதை அறியார்.

கார்டன் லண்டன் ' நியூஸ் கிரானிகில் ' லின் மாஸ்கோ நிருபராக இருந்த சாமுவேல் ரோட்மேனுடன் சேர்ந்து மூன்று அறைகள் கொண்ட ஜாகையொன்றில் குடியிருந்தார். ரோட்மேன் தம் வேலையையும் ஜாகையையும் கார்டனிடமே விட்டுவிட்டு இரண்டொரு நாட்களில் அமெரிக்கா செல்வதாக இருந்தார். கார்டன் என்னைத் தம்மோடிருக்க அழைத்தார்.

இந்த ஜாகை முன்பு லூயி பிஷர் வசித்த கட்டிடத்திலேயே தான் இருந்தது. 1939 ஜனவரியில் அவர் இடத்தைத் தான் நீலாவும் நானும் பெற்றோம்.

நான் கார்டனிடம் பேசிய இரண்டு நாட்களுக்குப்பின் நீலா காகஸஸ்ஸிலிருந்து திரும்பிவருவதாக இருந்தாள். நான் அவரிடம் நீலாவைப்பற்றி சொல்லிவிடுவது நல்லதென்றே எண்ணினேன். ஆனால் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டிருந்தேன். மனைவி என்று குறிப்பிட்டாலே காரியம் கெட்டுவிடும் என்று அஞ்சினேன்.

எங்கள் முதல் சாப்பாட்டின்போது எனக்குப் பெண் சிநேகிதி ஒருத்தி உண்டாவென கார்டன் கேட்டார். உண்டு என்றும் அடுத்த நாள் இரவு காகஸஸ்ஸிலிருந்து வருவாள் என்றும் அமைதியாகச் சொன்னேன்.

" நீ அவளைச் சாப்பாட்டுக்கு அழைத்துவாயேன். நான் அவளைச் சந்திக்கவும் ருஷிய மொழி பயிலவும் விரும்புவேன் " என்றார் கார்டன்.

" ஆகா, அழைத்துவருகிறேன் " என்று உறுதி கூறினேன். " முட்டாள் சிநேகிதா, நீ அவளைச் சந்திப்பாய். அவள் என் மனைவி. நான் அவளைக் காதலிக்கிறேன்! காதில் விழுகிறதா? நான் அவளைக் காதலிக்கிறேன். நீயும், ருஷியரும், உன் நாட்டு மந்திரி காரியாலயத்தினரும், அனைவரும் நாசமாய்ப் போக ! " என்று சொல்லாமற் போய்விட்டேனே என்று வெட்க மடைந்தேன்.

என் கண்களிலிருந்து ரகசியம் எதையோ அறிந்துவிட்ட வன்போல " பயப்படாதேயப்பா, அவளை உன்னிடமிருந்து எடுத் துக்கொண்டுபோய்விடமாட்டேன் " என்றார் கார்டன்.

நீலா காகஸஸ்ஸிலிருந்து திரும்பிவந்த அடுத்த நாள் எங்களுடன் உணவருந்தியபோது, அவளுடைய முகமும் திறந்த கரங்களும் மாநிறமான சூரியப்பிரகாசம் போல பிரகாசித்தன. அவளுடைய விழிகள் கடலைப்போலப் பச்சையாயிருந்தன.

கார்டனும் நானும் நீலாவை அவள் வீட்டுக்குக் கொண்டு வந்துவிட்டோம். திரும்பிவருகையில் அவர் என்னிடம் சொன் னதாவது.

" நீ சுத்த முட்டாள்."

" எப்படி ? "

" அந்தப் பெண்ணை நீ ஏன் மணந்துகொள்ளாமல் இருக் கிறாய் ? மணக்காவிடில் வேறொருவன் அவளை உன்னிட மிருந்து சீக்கிரத்திலேயே அடித்துக்கொண்டு போய்விடுவான்."

" நான் அவளை மணந்திருந்தால் ? "

" அப்படியானால் தனித்தனியாக இருப்பானேன் ?"

" எங்களுக்கு ஜாகை கிடைக்கவில்லையே."

"நம் இடத்திற்கு என்ன குறை?"

மூன்று நாட்களுக்குப்பின் நீலா வந்தாள்.

கார்டனின் ஜாகையானது சிவத்சவ் விரஜக்கில் 15-வது நம்பரில் ஆருவது மாடியில் மூன்று அறைகொண்டது. அவற்றுள் மிகச் சிறிய அறை எங்களுக்கு அளிக்கப்பட்டது. ஒரு அறையில் கார்டனின் ஆபீஸ் இருந்தது. அதில்தான் அவரும் அவர் காரியதரிசியும் பகலெல்லாம் வேலை செய்தனர். மூன்றுவது அறை வசிக்கும் அறை. அது சாப்பாட்டு அறையாகவும், புத்தகாலயமாகவும், கார்டனின் படுக்கை அறையாகவும் இருந்தது. வேலைக்காரி குசினியில் படுத்தாள்.

யுத்த பிற்காலத்திலும் புரட்சிக்காலத்திலும் பிறந்த நீலாவுக்கு, இந்த ஜன நெருக்கமாக, அலுவல் மிகுந்த இடம் அரமனைபோலவே இருந்தது. குளிர்ச்சிப் பெட்டி, ரேடியோ, மின்சார இஸ்திரி, ஒரேரகத் தட்டுகள் இவற்றையெல்லாம் பரவசத்துடன் நீலா தேடி ஆராய்ந்தாள்.

முதலில் எங்கள் சாப்பாடு சங்கடமானதொரு காரியமாக இருந்தது. முன்னைய அமெரிக்க எஜமானனுல் பயிற்சியளிக்கப்பட்ட வேலைக்காரி அமெரிக்க ரீதியிலேயே யாவற்றையும் ஒழுங்கு செய்தாள். நீலாவுக்கு அது கொஞ்சம் அதிசயமாகவே இருந்தது. பிறகு மெல்லமெல்ல பழகிக்கொண்டாள். கவலையொழிந்து அன்பு பெருகிய அவள் புது உலகின் வாழ்க்கைப்போக்கை புத்திசாலித்தனமாக ஆராய்வதில் முனைந்தாள்.

சின்னஞ்சிறு விஷயத்திலும் இன்பம் காண பெரிதும் முயன்ற அவள் நம் நாகரிக வாழ்க்கையின் அற்ப விஷயங்களிலும் அளப்பரிய இன்பம் கண்டாள். பிறகு தான் அறிந்ததைத் தன்னைப்போல தாராள வாழ்க்கையில் நுழைந்த நண்பர்களுக்குச் சொல்லித் தந்தாள்.

குழந்தைப்பிராய முதல் துணிமணிகள் மீது பெரு மோகம்கொண்ட நீலா சாதாரண பொருள்களைக் கொண்டும்

அற்புதங்கள் செய்வாள். தன் தேவைகளுக்கான ஆடைகளை அவளே பெரும்பாலும் தயாரித்துக்கொண்டாள். நான் அவளை முதலில் சந்தித்தபோது, இதர ருஷியப் பெண்களைப் போல என்னிடமிருந்து ஒன்றையும் நன்கொடையாகப் பெற மாட்டாள். பின்னரே, பொருள்கள் விஷயமாக நம்முடைய மனப்பான்மையை அறியவும் அதன்படி நடக்கவும் ஆரம்பித்தாள்.

ஒருநாள் இரவு நீலாவுடன் வீட்டுக்கு நடந்து சென்றபோது ஒரு துரும்பு கண்ணில்பட்டு விழிநீர் பெருகியது. என் ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்து அவளிடம் தந்தேன். அவளிடம் கைக்குட்டை இல்லை. இரவு வந்தனம் செலுத்திய போது கைக்குட்டையையும் எடுத்துச் செல்லச் சொன்னேன். அவள் படிக்கட்டுகள் பல ஏறவேண்டியிருந்தது. அவளுக்கு அது தேவையாயிருக்குமென்று எண்ணினேன்.

" நிரம்ப வந்தனம் உங்களுக்கு. அதை நன்றாகச் சுத்தம் செய்து அடுத்த தடவை சந்திக்கும்போது திரும்பத் தந்து விடுகிறேன் " என்றாள் அவள்.

" நாளைக்கு."

" நாளைக்குத்தான் இருக்கட்டும். இரவு வந்தனம்."

ஆனால் அடுத்த நாள் என்னை இன்னும் இரண்டொரு நாள் பார்க்கமுடியாதெனப் போன் செய்தாள். மீண்டும் போன் செய்வதாகச் சொல்லிவிட்டு, நான் ஏதாவது சொல்வேனோ என்றஞ்சி விரைவாக ரிசீவரைத் தொங்கவிட்டாள்.

ஒவ்வொரு நாளும் என்னைச் சந்திப்பதை ஒத்திப்போட்டுக் கொண்டே வந்தாள். ஒவ்வொரு தடவையும் டெலிபோன் ரிசீவரை விரைவாகத் தொங்கப்போட்டு என்னை சந்தேகத்துக்கும் பொறுமைக்கும் இரையாகவிட்டுச் சென்றாள்.

நடந்த விஷயம் இது. அன்றிரவு அவள் தன் அறையை அடைந்ததும் கைக்குட்டையைச் சுத்தம் செய்து திறந்த ஜன்ன

லண்டை உலரப்போட்டாள். அக்கைக்குட்டை எப்படியோ காற்றிலடிக்கப்பட்டு ஜன்னல் வழியாகப் பறந்து மறைந்தது. அது வெளி நாட்டில் செய்யப்பட்டது. பனிபோன்ற வெளுப்பு; ஓரத்தில் பூத்தையல் போடப்பட்டது. இலாகா பண்டசாலையில் அது 49 செண்டுக்குக் கிடைக்கும். ஆனால் மாஸ்கோவில் அதை எப்படி வாங்கி ஈடு செய்யமுடியும்? கமிஷன் ஷாப்புக்களில் எல்லாம் திரிந்து பார்த்தாள். இழந்த கைக்குட்டையைப்போல ஒன்றும் கிடைக்கவில்லை. நானோ அவளைப் பார்க்க விரும்பி விடாமல் வற்புறுத்தினேன். அவள் எந்த முகத்துடன் என்னைப்பார்ப்பாள்?

கைக்குட்டைப் பிரச்னை அதிருஷ்டவசமாக நல்ல படி தீர்ந்தது. எல்லா நிருபர்களையும்போலவே பெயரளவில் சுங்கம் செலுத்தி எவ்வளவு வேண்டுமானாலும் உணவையும் துணிமணிகளையும் இறக்குமதி செய்யலாம். கார்டன் ஜாகைக்குச் சென்றதும் ஸ்டாக்மேனிடமிருந்து ஒரு பார்சல் வந்தது. நீலா பரபரப்படைந்தாள். கார்டனிடம் பேசிக்கொண்டிருந்தபோது என்னை விட்டு தன் படுக்கையறையில் சென்று வந்த ஆடைகளைப் போட்டுப்பார்க்க முயன்றாள். சில நிமிஷங்கள் காத்திருந்தோம். அறையிலிருந்து முதலில் கேட்ட சத்தத்திற்குப் பிறகு ஒன்றுமே கேட்கவில்லை. கடைசியில் கதவைத் தட்டினேன். சத்தம் ஒன்றும் கேட்கவில்லை. மெல்ல கதவைத் திறந்து உள்ளே சென்றேன். நீலா படுக்கையில் உட்கார்ந்து கொண்டு கண்ணீர் பெருக்கினாள். ஒரே ஒரு ஆடைதான் அவளுக்குச் சரியாக இருந்தது. இரண்டாவது ஆடையும் இரண்டு ஜதை பாதரட்சையும் மிகவும் சிறியவையாக இருந்தன.

மெல்ல மெல்ல நீலாவின் உடுப்புக்கள் பெருகின. ராஜதந்திரிகளிடையேயும் என் நண்பர்களிடையேயும் சிநேகம் பிடித்தாள்.

நாடுதிரும்பும் அமெரிக்க தூதர் ஜோசப் டேவிஸ்ஸை கௌரவிக்க அயல்நாட்டுக் கமிஸ்ஸார் மாக்சிம் லிட்விஞவ் வைத்த

விருந்துக்கு ராபர்ட் மகிதாப் தம்பதிகளுக்கு ஒருநாள் அழைப்பு வந்தது.

நீலா கலந்துகொண்ட முதல் ராஜதந்திரிகள் கூட்டம் அதுவே. அவள் எத்தனையோ பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவளுக்கு மாலையில் அணியும் உடுப்போ, தங்க சிலிப்பர்களோ, சிலிப்பர்களுக்கு ஏற்ற பட்டு ஸ்டாக்கிங் களோ கிடையாது. அயலவர் காலனி நண்பரிடமிருந்து எதை யும் கேட்க நீலா விரும்பவில்லை. அவள் வெட்கப்பட்டாள். நீலா விருந்துக்குச் செல்வதை அறிந்த பெட்டி பார்ன்ஸ் ஒரு ஜதை சரிகை ஸ்டாக்கிங் அனுப்பினாள். அதை நீலா இன்றும் நினைவில் வைத்திருக்கிறாள். தன் உடுப்புக்காக சோவியத் பிலிம் உற்பத்தியாளரின் மனைவியான அன்னாவிடம் போக முடிவு செய்தாள்.

அன்னா நீலாவைவிடக் குட்டையாயும் பருமனாயும் இருந் தாள். மாலையில் அணியும் கவுன் அவளிடம் ஒன்றே ஒன்றுதான் இருந்தது. அது அகலமாயும் குட்டையாயும் கறுப்பாயும் பார்ப்பதற்கு விகாரமாயும் இருந்தது. அது தனக்குப் பொருந்தும்படியாகச் செய்ய தோள்பட்டைகளை வெட்டி துண்டு போட்டுத் தைத்துக்கொண்டாள். ஒட்டுக்களை மறைக்க அன்னாவிடமிருந்து பெற்ற சிவப்பு ஜாக்கெட்டு ஒன்றை அணிந்து கொண்டாள். அழுத்தமாக இருந்த தங்க சிலிப்பர்களையும் அன்னா தந்தாள். நீலாவைப் பார்க்க எனக்குப் பரிதாப மாயிருந்தது. ஆனால், அவளோ ராணியைப்போல அணிந் திருப்பதாக எண்ணிக்கொண்டாள். தனக்கு மயக்கம் வந்து விழுந்தால், டாக்டர் வந்து தோள்பட்டைகளிலிருக்கும் ஒட்டுக் களைப் பார்த்துவிடுவாரே என்ற ஒரே கவலைதான் அவளை வாட்டியது.

நீலா தன் முதல் நடனத்தை என்னுடன் ஆடினாள். நான் நன்றாக ஆடவில்லையாகையால் என்னிடமிருந்து பிரிந்து நின்றாள். அவளை இணைந்து ஆடவல்ல கார்டனிடம் அனுப்பி

னேன். நடனத்தின் மத்தியில் தரை பசைபோல ஒட்டிக் கொள்வதை அவர் கண்டார்.

" அது மெருகிடப்பட்டு பளபளவென்று எவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது !" என்ருள் நீலா. இருவரும் குனிந்து கீழே நோக்கினர். இடி இடியென்று சிரித்தனர். ஞாபக மறதியாக கார்டன் தன் ரப்பர்களை விலக்கவில்லை. விரைந்து அவர் நீலாவை என்னிடம் கொண்டுவந்து விட்டுவிட்டு ரப்பர் களை விலக்க அறையிலிருந்து வெளியே சென்ருர். அப் போது நான் மற்ெருரு நிருபரின் ருஷிய மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தேன். திடுமென ஒரு சிறு நாட்டைச் சார்ந்த ராணுவ பரிவாரத்தினன் ஒருவன் தன் யூனிபாரம் பள பளக்க நீலாவிடம்வந்து வணங்கி தன்னுடன் ஆட அழைத் தான். அழைப்பை ஏற்குமுன் அவள் சிறிது தயங்கிஞள். பக்கத்திலிருந்த பெண் முதுகில் தட்டி, " போ நீலா, வெட்கப் படாதே !" என்ருள்.

பல நூறு விருந்தினர் நாற்பது உணவுப்பொருள்கள் அடங்கிய சாப்பாட்டை ருசித்துக்கொண்டிருக்கையில் அதே பெண் வழியில் சென்றுகொண்டிருந்த பரிசாரகன் ஒருவனைப் பார்த்து, " ஹல்லோ, இவான் வாஸிலியெவிச் ! உன்னை இங்கே காண மகிழ்கிறேன் !" என்று திடுமென உரக்கச் சொன்ஞள்.

அவனிடம் உபசார வார்த்தை கூற எழுந்தாள். கையில் கௌதாரி வறுவலுல் தட்டுடன் சென்ற அவனுக்குச் சங்கட மாயிருந்தது. தட்டை அப்படியே கீழே நழுவவிட்டுவிடுவான் போலிருந்தது. அவன் இவளுடைய அண்டைவீட்டுக்காரன்.

தன் பக்கத்தில் மேசையைச் சுற்றி உட்கார்ந்திருந்த இதர விருந்தினரிடம், " நமக்கு ஜமாதான், நாம் விரும்பியதையெல் லாம் இரட்டத்தனை பெறலாம் " என்ருள்.

உணவு பதார்த்தங்களையும் மதுபான புட்டிகளையும் தாங்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்த மேசைகளைப் பார்த்த பட்டு கவுனுடனும் இஸ்திரி போட்ட குடுத்தாக்களுடனும் வந்திருந்த விருந்தாளிகள் சிரிப்பை அடக்கிக்கொண்டனர்.

நீலா தன் சாமர்த்தியத்தினாலும், கூர்ந்து நோக்கும் ஆற்ற லினாலும் நன்னடக்கை ஆசாரமுறைகளில் மிகவும் பரிகசிக்கத் தக்க தவறுகள் ஒன்றும் செய்யாது தப்பினாள். ஆனால் அவள் பேசும் ஆங்கில மொழியில் காணும் பிழைகள் அவ ளுடைய அமெரிக்க நண்பர்களுக்குத் தமாஷாகவே இருக்கும்.

அத்தியாயம் 9

நீனு

நான் ருஷியாவில் தங்கியிருந்த கடைசி வருஷங்களில் எனக்கொரு நல்ல மோட்டார் டிரைவர் கிடைத்திருந்தது என் பாக்கியமேயாகும். மாஸ்கோவிலிருந்த டிரைவர்கள் யாவரினும் பாவல் மிகச் செருக்கும் கர்வமும் பிடித்தவன். அவன் கறுப்பாயும் பார்வைக்கு அழகாயும், எப்போதும் கையில் கருவி கள் பிடித்தும் இருப்பான். அவன் வண்டியை நன்ருக ஓட்டுவான். 1933-ல் அமெரிக்க சோவியத் ருஷியாவை அங்கீ கரித்ததுமுதல் சோவியத் தலைநகரில் அவன் இரண்டு மிக வசீகரமான மோட்டார் கார்களை ஓட்டியிருக்கும் அபூர்வ சிறப் புடையவன். முதலில் தூதுவர் புல்லிட்டின் சொந்த வண்டி யோட்டியாயும் பொட்லராயும் இருந்தான். 1946-ல் நான் அமெரிக்காவிலிருந்து ஓஜார்க்புளூ ஸ்டுடிபேக்கர் கார் ஒன்றை இறக்குமதி செய்தேன். அதைப்பார்த்ததும், பாவல் "ஆ! இதுவே என் கனவு!" என்ருன். ஆசையோடு அதை ஸ்டுடிக் என்றும் புளுபர்ட் என்றும் அழைத்தான். கார் பழுதாகி விடும் என்று இனியும் தான் ஓட்டுவதை நிறுத்திக்கொண்டாள் நீலா. அது முதல் பாவலே தேவையான காரியங்களுக்கெல்லாம் ஓட்டிச் செல்வான். நான் ஓட்டப் பிரியப்பட்டபோது ராஜ தந்திரிக்குரிய சாமர்த்தியத்துடன் ஏதாவது சொல்லி என் யோசனையைக் கைவிடச் செய்வான்.

இந்த ஸ்டுடிக் பாவலின் பழைய மனப்புண் ஒன்றை ஆற் றியது. அமெரிக்க தூதுவராலயத்தில் வேலை செய்துவந்த போது, நீண்ட ரஸ்தா பிரயாணத்திற்கு ஏற்றதாயும், பார் வைக்கு நல்ல தோற்றமுடையதாயும் இருந்த மோட்டார் கார் ஒன்றை அவன் ஓட்டியிருக்கிருன். அயல் நாட்டுக் காலனி

யில் வேலே செய்த கார் ஓட்டிகள் அதன் சிறப்பைப் பற்றிக் கதைகள் கூறுவர். அவ்வளவு பெருமையுடன் வாழ்ந்த அவன், அயலவர் காலனியில் இருந்த, தான் இழி ஜனங்கள் எனத் துச்சமாகக் கருதிய, நிருபர்களிடம் வேலே செய்ய நேர்ந்த விதியைக் குறித்து மனம் நொந்தான். இப்போது இந்த சிறப்புவாய்ந்த ஸ்டூடிக் கிடைத்ததும் அவனுடைய பழைய அமைதியும் தென்பும் திரும்பிவந்தன. சற்றேறக்குறைய ஒரு வருஷத்திற்குள் மாஸ்கோவில் இதைப்போன்ற வேறு இரண்டு கார்கள் தோன்றின. இதற்குள் வேறொரு பிரச்னே யில் சிக்கிக்கொண்ட அவன் இவற்றை லட்சியம் செய்யவில்லே. இப்புதிய கார்களேப் பற்றி அவனிடம் குத்தலாகச் சொன்ன போது, காதில் வாங்கிக்கொள்ளாமல் "கிடக்கட்டுமே. பாதக மொன்றுமில்லே. நான்தானே முதலில் இப்புது ரக காரை ஓட்ட ஆரம்பித்தேன்" என்பான்.

அவன் சிக்கிக்கொண்ட பிரச்னேயின் வரலாறு 1946 நவம் பர் 23-ந்தேதியன்று தொடங்குகிறது. அன்றையதினம் இரவு ஸ்வீடிஷ் தூதுவராலய வரவேற்பில் கலந்துகொண்டு அதன் முடிவில் என் காரண்டை நடந்து சென்றபோது பனிக்கட்டியில் விழுந்து என் காலே முறித்துக்கொண்டேன். அங்கே காத் திருந்த இதர வண்டியோட்டிகளின் உதவி கொண்டு பாவல் என்னே வண்டிக்குத் தூக்கிப்போய் அவசர ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ருன். அங்கே நானும் நீலாவும் அணிந் திருந்த ஆடைகளேப் பார்த்து சிப்பந்திகள் பிரமித்து நின்றனர். சிகிச்சையின் பொருட்டு காத்திருக்கும் நோயாளியே யொழிய பொருட்காட்சிச் சாலேயில் உற்று நோக்கவேண்டிய அதிசயப் பொருளல்லவென்று அவர்களுக்கு நினேவூட்டவேண்டியிருந்தது.

நான் ஆஸ்பத்திரியில் படுத்திருந்த காலம் முழுதும், நீலா காலேயில் தபால்கள் பத்திரிகைகளுடன் வந்து காலேயாகாரம் படைத்துவிட்டு வீடு திரும்புவாள். பிறகு தன் நடுப்பகல் உணவுக்குப்பின் திரும்பிவருவாள். ஆஸ்பத்திரி சாப்பாடு மகாமோசம். ஆகவே வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டுவர

அவள் அனுமதி பெற்ருள். இதனுல், ஆஸ்பத்திரியில் எனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உணவை அதிகம் உழைப்பவரும், ஆனுல், போதிய உணவு கிடைக்கப் பெருத வருமான பணியாட்களுக்கு அளித்துவிடமுடிந்தது. நான் புரோபின் மூலமாக ஆஸ்பத்திரியில் பதிவாகியிருந்தால், என்னிடமிருந்து அநியாய விகிதத்தில் கட்டணம் வாங்கி என்னைப் பெரு நஷ்டத்திற்கு ஆளாக்கியிருப்பர். இந்த ஆஸ்பத்திரியில் அயலவர்கள் சேர்க்கப்படுவதில்லையாதலாலும் அவசர கேஸாகவே இங்கே கொண்டுவரப்பட்டதாலும், என்னை ஏனைய ருஷியர் போலவே நடத்தினர். ருஷியாவில் கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த சர்ஜனை ஆங்கிலம் பேசும் செர்ஜை யூதின் என்னைக் கவனித்தபோதிலும் நான் இந்த ஆஸ்பத்திரியில் ஒரு கோபெக் நாணயம் கூட செலுத்தவேண்டிய அவசிய மேற்படவில்லை. அவருடைய திறமை மிகுந்த உதவியாளரும் கவனம் மிகுந்த, பட்சமுடைய நர்ஸ்களும் கூப்பிட்ட குரலுக்குத் தயாராக இருந்தனர்.

நீலா எனக்கு இராச்சாப்பாடு போட்டபின், சற்றேறக் குறைய ஆறு மணிக்கு பாவல் நீலாவைக் கூப்பிடுவான். என் உடல்நிலை மோசமாகிவந்தாலோ, அல்லது ஏதேனுமொரு விஷயத்தை எழுதிக்கொள்ள என் காரியதரிசியிடம் சொல்லிக் கொண்டிருந்தாலோ, நீலா தாமதம் செய்வதுண்டு. முதலில், பாவல் தான் காத்திருக்கவேண்டியிருந்ததுபற்றி பொறுமை இழந்தான். நீலாவுக்கு இது ஒரு மாதிரியாக இருந்தது. இப்போதுள்ளதைப்போல அப்போது யுத்த பிற்காலத்தில் வாடகை வண்டிகள் இன்னும் கிடைப்பதில்லை. பஸ்களும் டிராலி கார்களும் எப்போதும் போல அளவு மீறிய கூட்டத்துடன் சென்றன. பலதடவை அவனை அனுப்பிவிட்டுத் தான் மாலையில் வீட்டுக்கு நாலு மைல் தூரம் நடந்தே செல்வாள் நீலா.

ஒருநாள் பாவல் தனக்குரிய பிற்பகல் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள மறுத்து விருப்புடன் காத்திருப்பதாக நீலாவிடம் உறுதிகூறினுன். அது நீலாவுக்கு ஆச்சரியமாகவே.

இருந்தது. அன்றியும் முன்போல அவன் பொறுமையிழப் பதுமில்லே. அதற்கு நேர்மாருக, சில சமயம் நீலாவே அவனுக்காகக் காத்திருக்கவேண்டியிருந்தது. மோட்டாருடன் வந்ததும் ஆஜர் கூறிவிட்டு, கீழே காரண்டை இருப்பதாகச் சொல்லி மறைந்துவிடுவான். அவள் கீழே சென்று பார்த் தால் பாவல் தென்படமாட்டான். கடைசியாக ஆஸ்பத்திரியி லிருந்து வெளியே வந்து குறுகுறுத்த அவசரத்துடன் காரின் கதவைத் திறப்பான்.

இப்புதிய பிரச்னையைப்பற்றி நாங்கள் விவாதித்தபோது, காரணம் பெண்தான் என்ருேம். உண்மையில் பெண்தான் காரணம். ஒருநாள் மாலே, நீலா நண்பர் சிலருடன் விருந் துண்ண வேண்டியிருந்தது. உடை மாற்றிக்கொண்டு நேரத் தில் செல்ல வீட்டுக்குப் போக விரைந்தாள். ஆஸ்பத்திரி கட்டிடத்தின் பிரதான வழியில் பாவலுக்காக நின்ருள். அவன் ரிஜிஸ்ட்ரார் ஜன்னலண்டை காத்திருந்தவர்களே கியு வரிசையில் நிற்குமாறு ஒழுங்கு செய்துகொண்டிருந்தான். ரிஜிஸ்ட்ரார் வசீகரம் வாய்ந்த ஒரு பெண். அவளுடைய கருவிழிகள் மங்கோலிய சரிவுடன் இலங்கின. அவள் பெயர் நீனு. அவளுக்கு வயது இருபத்திரண்டு.

பாவல் அவளுக்கு இருபது வயது மூத்தவன். அவன் சிவப்பான, பொம்மைபோன்ற அழகுடைய, லோராவை மணந் திருந்தான். அவள் அவனுடைய இரண்டாம் மனைவி. மணப் பிரிவினையான அவன் முதல் மனைவியும், அவர் களுடைய 15 வயது மகளும் கியூபிஷெவ் சென்றுவிட்டனர்.

காதலே விளையாட்டாகக் கருதி ஒழுகுவதில் பேர்போன பாவலின் மனத்தில் இடையே தோன்றிய ஓர் விருப்பமே நீனுவென நாங்கள் முதலில் எண்ணினேம். ஆனல் அவள் அப்படியல்லள். “நான் பெண்களுக்கு மரியாதை செய்வதில்லே, ஆனல், அவளேமட்டும் மதிக்கிறேன்” என்று அவன் அவள்பால் தனக்குள்ள அபிமானத்தை என்னிடம்

தெரிவித்திருக்கிறன். அவன் அவளைக் காதலிக்கவும் செய் தான். அது இரண்டாவது மணவிலக்கில் முடியவேண்டியதே.

சட்டப்படி மணப்பிரிவினைக்கு ஒரு மனு போட்டான். மக்க ளின் ஜில்லா கோர்ட் எனப் பொருத்தமில்லாமல் வழங்கும் கோர்ட் அவனையும் அவன் மனைவியையும் தன் முன் ஆஜ ராகும்படி அழைத்தது. இருதரப்பினரையும் சமரசப்படுத்தி வைப்பதே நீதிபதியின் வேலை. லோரா பெரிதும் இணங்கி னுள். ஆனுல், பாவல் பிடிவாதம் சாதித்தான். சோவியத் சட்டப்படி, மற்றெரு பெண்மீது ஏற்பட்டுள்ள காதல் மணப் பிரிவினைக்கு ஒரு காரணமாகாது. ஆகவே தன் மனுக்குரிய காரணத்தைக் கேட்டபோது, "அவள் மலடி, பிள்ளைப்பேறு அளிக்கமுடியாதவள்" என்றுன். பொம்மை முகமுடைய லோரா உணர்ச்சியுடன், "உன் முதல் மனைவிக்கு பெண் ணென்று உண்டு; அவள் இன்னும் அதிகமான குழந்தை களையும் பெறலாம்; ஆயினும் அவளை நீ விலக்கினுய்" என்று சூடாகப் பதிலளித்தாள். தான் வேறெருத்தியை நேசித்தான் என்றும் அவளை மணந்துகொள்ள விரும்புவதா யும் ஒப்புக்கொண்டான். இது அவளுடைய சந்தேகங்களை உறுதிப்படுத்தியது. தன் மனைவியை விலக்கக் கருதுவதை சட்டப்படிப் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தவேண்டுமென நீதிபதி பாவலுக்குக் கட்டளையிட்டார். அதுவரையில் அந்தப் பெண்ணை மறந்து இப்போதைய மனைவியுடன் இருக்கவேண்டு மென அவர் புத்திமதி சொன்னுர்.

மாஸ்கோவில் இரண்டு பத்திரிகைகள் மட்டுமே இத்தகைய விளம்பரங்களைப் பிரசுரம் செய்கின்றன. 60 லட்சம் ஜனத் தொகையுடைய அந்நகரில் அப்பத்திரிகைகளில் தினமொன்றுக்கு நான்கு முதல் எட்டு அறிக்கைகள் வீதமே பிரசுரமாகின்றன. செல்வாக்கு இருந்தாலொழிய அறிக்கை வெளியாக ஒருவருஷ காலம் காத்திருக்கவேண்டிவரும். அதன்பிறகே, மணப்பிரி வினையை அளிக்கவோ மறுக்கவோ அதிகாரமுள்ள சிட்டி கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வரும். மணப்பிரிவினை

விசாரணை நடந்து வருகையில், வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் பலவகையான கேலிகளுக்கும் தமாஷ்களுக்கும் உட்படநேரும். பாவலும் இவைகளுக்கு உட்படநேர்ந்தது.

நீனுவின் பெற்றோர்கள் கடவுள் பக்தியுள்ள, பழைய சம்பிரதாயங்களின்படி வாழ்க்கை நடத்தும் ருஷியர்கள். தங்கள் மகள் முகம் வெளிறியும், ஊண் ஒழித்தும், கனவு காண்பவள்போலும் தோன்றக்கண்டு, அவள் காதலிக்கும் மனிதன் யாரென வினவினர். நீனு பிரிவினை வழக்கு வரலாறு உள்பட உண்மை யாவற்றையும் அவர்களுக்குச் சொன்னாள். இருபத்தைந்து வருஷகாலமாக மணவாழ்க்கையில் ஈடுபட்டிருந்த அவளுடைய கவடில்லாத பெற்றோர்கள் பீதியுற்றனர். ஆனால், அவர்களுடைய ஒரே மகள் கண்ணீர்விட்டு, அவர்கள் பாவலைச் சந்தித்து ஏற்றுக்கொள்ளாவிடில் தற்கொலை செய்துகொள்வதாகப் பயமுறுத்தினாள். அவன் அவர்களுடன் ஒரு ஞாயிறன்று உண்ண அழைக்கப்பட்டான். அவன் கருநீல சூட்டும், எங்கள் விருந்தினரை உபசரிக்கும் போது அணிந்துகொள்வதற்காக நான் ஸ்டாக் ஹோமிலிருந்து இறக்குமதி செய்துதந்த கஞ்சிப்பசை போட்ட ஷர்ட்டும் அணிந்து வந்தான். அவனுடைய சொற்பொழிவும் பொலிவான தோற்றமும் நீனுவின் மதப்பற்றுள்ள பெற்றோர்களைக் கவர்ந்தன. நீனுவைத் தன் மணமகள் எனக்கூற ஆவலுள்ள அவன் புது யோசனை ஒன்று கூறினான்.

திருச்சபையும் சிவில் அரசாங்கமும் தனியாகப் பிரிக்கப் பட்டுள்ளன. அரசாங்கச் சட்டப்படி மட்டுமே தான் திருமணம் செய்துகொண்டான். இப்போது அவர்களுடைய மகளை ஆடம்பரமான திருச்சபை சடங்குகளுடன் மணக்கக்கூடும். இருதார மணக்குற்றம் ஏற்படாது. திருச்சபையின் ஆசீர்வாதத்துடன் அவன் நீனுவுடன் வாழலாம்—இங்ஙனமாக வாதித்தான் பாவல்! நீனு இந்த யோசனையை மகா அற்புதமெனக் கருதினாள். தன் பாவலுடன் இருக்கமுடியுமானால் எதுவும் அவளுக்கு அற்புதமாகத் தான் இருக்கும். ஆனால், தகப்பனார்

இந்த யோசனையில் தவறு ஏதோ உள்ளதெனக் கருதி, பிரி வினை வழக்கு முடியும்வரையில் காத்திருக்குமாறு புத்திமதி சொன்னர். ஆயினும், திருச்சபை சடங்குகளோடு மணந்து கொள்ள பாவல் காட்டின ஆவல் அவர் உணர்ச்சியைத் தொட்டது.

ஆனல், நாள் செல்லச்செல்ல, காதலர் மேன்மேலும் பொறுமையிழந்தனர். இறுதியில், குடும்ப ஜாகையைச்சார்ந்த இரண்டு சிறு அறைகளில் ஒன்றில் பாவல் நீனுவுடன் வசிக்க நீனுவின் பெற்றோர்கள் அனுமதியளிக்கத் தூண்டினர்.

ராணுவத்திடம் பதிவு செய்யாமல் எவராவது எந்த இடத்தி லாவது இரவில் தங்குவதை ருஷியாவெங்கும் அமுலிலுள்ள விதிகள் தடுக்கின்றன. பதிவு செய்துகொள்ள வேண்டு மானல், முன்பு குடியிருந்த இடத்தை விட்டுவிட்டதாகப் பதிவு செய்து, விலாசமாறுதலை பாஸ்போர்ட்டில் முறைப்படி பதிவு செய்து விடவேண்டும். ஆனல், பாவல் தன் மனைவி லோரா வுடன் வசித்துவந்த அறையை விட்டுவிடுவதாகப் பதிவு செய்ய இஷ்டப்படவில்லை. நீனு இடத்துக் கட்டிட சூபரின்டெண் டெண்டும் ஸ்தல ராணுவமும் அவனைப் பதிவு செய்ய மறுத் தால்? மறுக்க அவர்களுக்கு உரிமையுண்டு. ஏனெனில், அவன் சட்டப்படி நீனுவின் கணவனல்லன். மாஸ்கோவி லுள்ள ஏனைய கட்டிடங்களைப் போலவே இதுவும் கூட்டம் மிகுந்ததாக இருப்பதால், அவர்கள் இவ்வுரிமையைச் செலுத் தக்கூடும். அவ்விதம் செய்தால் பாவலுக்குத் தங்க யாதொரு இடமும் இல்லாமற் போய்விடும்.

அன்றியும், லோராவுடன் வசித்துவரும் அறையை விட்டு விடுவதாகப் பதிவு செய்வதாயின், நீதிபதி திருமணப் பிரிவினை அளிக்க மறுத்துவிட்டால், லோராவுடன் பாதி அறையில் தங்கி யிருக்கும் உரிமையும் போய்விடும். அதுமட்டுமல்ல, லோரா அறைக்குத் தன் உரிமையைப் பாதுகாக்க பாவல் ஒரு முறை யாவது அங்கே வந்து இரவைக் கழிக்கவேண்டும். ஓரிடத்தை தங்காது விட்டுவிட்டால், அந்த இடத்திற்குள்ள உரிமையைப்

போக்கிவிடும் சட்டமொன்று உண்டு. நிலைமை மோசமாக, லோரா பாவலின் புதுவீட்டு விலாசத்தை எப்படியோ கண்டு பிடித்து, ஒருநாள் மாலை அவர்கள் நால்வரும் இராச்சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது முகத்தைக் காட்டினாள். அவள் தன் அகன்ற நீல விழிகளால் நீனாவை விழுங்க ஆரம்பித்தாள். அவமதிப்பாகத் தன் அழகிய தலையை அசைத்து, கொல்லும் வெறுப்புடன், "ஆகவே, நீ இந்த லட்சணத்தில் இருக்கிறாயாக்கும். விழியும் எலும்புமாக இருக்கிறாய். என்னிடமில்லாதது உன்னிடம் என்ன இருக்கிறது என்றுதான் ஆச்சரியப்படுகிறேன்" என்றாள்.

பாவல் சினந்து அவளை வெளியே போக உத்தரவிட்டான். அதை அவள் சட்டைசெய்யாமல், அவன் இரவைக் கழிக்கப் பழைய இடத்திற்கு வரும்போது, அறையில் இருப்பது ஒரே ஒரு படுக்கையாதலால் அவன் தன்னுடனேயே படுத்துத் தூங்கவேண்டுமென்றும், மற்ற விஷயங்களை தோல் உரிந்த கோழிக்குஞ்சு போன்றிருந்த அந்த நீனா அறிந்துகொள்வாள் என்றும் உரத்த குரலில் விளக்கினாள் . . . . பாவல் அவளை அறையினின்று பிடித்துத்தள்ளி, அவள் திரும்பி வந்தால், கொன்றுவிடுவதாகச் சொன்னான்.

அடுத்த நாள் ஒரு படுக்கைக்காக மாஸ்கோ கமிஷன் சாமான்கள் ஸ்டோர்களிலெல்லாம் தேட ஆரம்பித்தான். மூன்று நாட்கள் தேடியும் பயனில்லை. கடைசியாக, என்னிடம் வந்து என்னிடம் அதிகப்படியாக இருந்த படுக்கையொன்றை இரவல் வாங்கி லோராவின் அறையில் போட்டான்.

ஆனால் புதுத் தொல்லைகள் தலைகாட்டவாரம்பித்தன. பாவல் கட்டிட சூபரின்டெண்டெண்டுக்கும் வாயில் காப்போனுக்கும் வொட்கா மதுவும் இரண்டொரு தடவை விருந்து சாப்பாடும் அளித்து நீனாவின் இடத்தில் தான் பதிவு செய்யாமல் இருந்ததைப்பற்றி அசட்டையாயிருக்குமாறு செய்தான். இந்த சிறிய சமர்ப்பணைகள் திருப்தியளிக்காததனாலோ, அல்லது புதிய

கடுமையான விதிகள் ஏற்பட்டதனுலோ, அவர்கள் வரவர தம் ஒத்துழைப்பை நிறுத்திக்கொண்டனர். ஒருநாள் .இரவு ராணுவத்தினன் ஒருவன் பாவல் தனக்கு உரியதல்லாத இடத்தில் படுத்துறங்கியதைக் கண்டுபிடித்தனர். அவன்மீது 150 ரூபில் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த ஜாகை நீனுவின் தகப்பனுரின் பெயரில் பதிவாகியிருந்ததால், அவர் அதட்டப் பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டார்.

ஏற்கெனவே நீனுவின் தகப்பனுர் பாவலிடம் சிறிது மனஸ் தாபமடைந்தார். பாவல் கொஞ்ச காலமாக சின்னஞ்சிறு ஹால் வழியில் மீன் பிடிப்பதற்கான ரப்பர் படகை வைத்து இடத்தை அடைத்தான். அதோடு நிற்காமல், கௌரவமான ஜனங்கள் தூங்கும் சமயத்தில் தன் கிராமபோனில் இசைத் தட்டுகள் வைத்து கச்சேரி நடத்தினுன். இப்போது ராணுவத்துடனும் தொல்லை ஏற்பட்டது. சுருங்கக் கூறின், பாவல் போகவேண்டியதே !

தொலை கிழக்கு சென்ற ருஷிய உபாத்யாயினியிடமிருந்து மூன்று வருஷ ஒப்பந்தத்திற்கு சட்டப்படி ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டாள் நீனு. நீனு அந்த இடத்தில் பதிவு செய்துகொண்டு பாவலுடன் அங்கே குடியிருக்கச் சென்ருள். வாரம் ஒரு தடவை இரவில் லோராவுடன் அவன் தங்குவதைப்பற்றி அலட்சியமாக இருந்தாள்.

தன் வாழ்க்கையை அடியோடு மாற்றின மற்ருெரு காரியத்தையும் நீனு செய்தாள். அவள் தன் ஆஸ்பத்திரி வேலையை விட்டுவிட்டு, மாஸ்கோவில் அமெரிக்க நிருபராக இருந்த என் நண்பன் ஒருவனிடம் கடிதம் எடுத்துச் செல்லும் வேலைப் பெண்ணுக அமர்ந்தாள். அவள் படிப்புக்கும் அந்தஸ்துக்கும் இந்த வேலை தகாதெனக் கருதிய பாவல் சாப்பாடு பரிமாறும் வேலையில் பயிற்சி யளித்தான்.

அவன் என் புது ஸ்டுடிபேக்கர் கார் விஷயமாகப் பெருமைப்பட்டானு, அல்லது உணவு பரிமாறும் வேலையில் தனக்

இருந்த அபாரமான திறமையைப்பற்றிப் பெருமைப்பட்டானா என்பதை நான் எப்போதுமே சொல்லமுடியவில்லை. புல் லிட்டிடம் இருந்தபோது அவன் திறமையும் தேர்ச்சியும் அடைந்து, தன் வேலையை பரிபக்குவமாகவும் கவியின் ஆவேச உணர்ச்சியுடனும் செய்தான். தன் நீலக் கோட்டோடும், கஞ்சிப்பசை ஏறிய குடுத்தாவிலும் அவன் பார்வைக்கு அழ காகவே காணப்பட்டான். அந்தக் கோலத்துடன் அவன் சமயச் சடங்கு ஒன்றைச் செய்வதைப்போல மேசையைச் சுற்றி வருவான். யார் கண்ணிலும் படாமலும், யார் செவியிலும் படாமலும் அறைக்குள்ளும் அறைக்கு வெளியிலும் மெல்ல நழுவி, வேறு தட்டுகளை வைப்பதிலோ, கிளாஸ்களை நிரப்பு வதிலோ, வணக்கமான கண்ணியத்துடன் தன் நள பாகங்களை அளிப்பதிலோ முனைவான். நான் 'இழிந்த' முதலாளித்துவ முறையில் வளர்ந்தவனாதலால், ரகசியப் போலீசாருக்குத் தெரி விக்கவே விருந்தினரின் பெயர், பதவி வரிசை இவற்றை யெல்லாம் அறிந்துகொள்வதில் அவன் மிகுந்த ஆவல் காட்டினான் என்று சந்தேகிப்பதுண்டு. தாழ்ந்த பதவியிலிருப் பவருக்குப் பரிமாறுமலிருப்பதற்காகவே இச்செய்திகளை அறிந்தான் என்பதே உண்மையாக இருக்கலாம்.

அவலச்சுவை காப்பியத்தின் அம்சங்களையுடைய காட்சி யொன்று என் நினைவுக்கு வருகிறது. எங்கள் அனுமதி யுடன் நீனா பாவலுக்குத் துணையாயிருந்து பரிமாறும் கலையைக் கற்றாள். எங்கள் விருந்தினரில் நியூஜிலாந்து மந்திரியே வயது மிகுந்தவரும் பதவியில் மிக உயர்ந்தவரும் ஆவர். மேசையைச்சுற்றி உட்கார்ந்தவர்களிடையே பேச்சில் சிறிதுநேரம் ஓய்வு ஏற்பட்டது. அது சமயம், மந்திரிக்கே முதலில் பரி மாறவேண்டுமெனப் பாவல் நீனாவிடம் பரபரப்புடன் காதோடு சொன்னான். சிமாட்டிகளை உபசரித்தபிறகு அவள் மந்திரி க்கு முதலில் சேவை செய்யவேண்டும் என்றே அவன் கருதினான். ஆனால் அவள் அறைக்குள் சென்றதும் உத்தரவுகளையெல்லாம் மறந்து ஒவ்வொருவரையும் பீதியுடன் பார்த்துவிட்டு, நம்

பிக்கையுடன் மந்திரியண்டை சென்றாள். பிறகே சீமாட்டி களுக்கு சேவை செய்தாள். பாவல் சினமடைந்து கேட்ட தற்கு தான் மந்திரிக்கே முதலில் சேவை செய்யவேண்டியிருந்த தெனப் பிடிவாதமாக வற்புறுத்தினாள். "அவர் மிகப் பட்சமானவராகத் தோன்றினார். நான் அவருக்கு ஏதேனு மொன்று செய்ய விரும்பினேன்" என்றாள்.

அத்தியாயம் 10

ஒல்கா

ருஷிய மனைவிகளிற் பலர் தம் வீட்டு வேலைக்காரர்களின் நிலையை அறிந்து அவர்களிடம் அன்பும் ஆதரவும் காட்டுவதில்லை. நீலாவிடம் அத்தகைய குணக்குறைவைக் காண முடியாது. பொதுவாக உள்ள இக்குறைவுக்குச் சோவியத் முறைதான் காரணம் என்று நான் சொல்லமாட்டேன். இது பண்ணையாட்களின் அடிமைத்தனம் ஓங்கியிருந்த காலத்திலிருந்து வந்ததோர் அடையாளமேயாகும். ஆனால், இத்தீமையைத் தீவிரமாகவும் பயனளிக்கும் முறையிலும் எதிர்த்துப் போராடாததற்காகச் சோவியத் முறையின்மீது நான் பழி சுமத்துவேன். நான் இருக்குமிடத்தில் எனக்கு எதிராகவுள்ள ஹாலுக்கு அப்பால் உப மந்திரியொருவர் வசித்தார். நாங்கள் ஒருவரையொருவர் நெருங்கித் தொடர்புகொண்டது கிடையாது. ஆயினும் அவருடைய பணிப்பெண் அடிக்கடி கண்ணீர்விட்டு அழுவதை நான் பார்த்திருக்கிறேன்.

இத்தகைய நடத்தை வீட்டு வேலைக்காரர்களுக்கு அப்பாலுள்ள உலகிலும் பரவியுள்ளது.

ஒரு தடவை நிலக்கரி காஸ் (வாயு) மீட்டரைப் பரிசோதிக்கக காஸ் கம்பனியிலிருந்து பெண்ணொருத்தி வந்தாள். எங்களிடம் வேலை முடிந்ததும் ஹாலின் குறுக்கே சென்று அவள் உப-மந்திரியிடம் சென்றாள். பத்து நிமிஷங்களுக்குப் பின், நாங்கள் அயல் நாட்டினர் என்பதை அறியாமல், பரபரப்புடன் எங்கள் கதவைத்தட்டினாள். கண்ணீர்விட்டு அழுததால் தொண்டை அடைத்தபடியே போனை உபயோகிக்க எங்கள் அனுமதி கேட்டாள். அவளுடைய மேலதிகாரியிடம் பேசிய

திலிருந்து, முந்திய மாதத்திற்குரிய பட்டியல் கட்டணத் தொகையைச் செலுத்துமாறு உப-மந்திரியைக் கேட்டதாகத் தெரிந்தது. பணம் கேட்பது அவள் வேலையல்லவென உப-மந்திரி சொன்னதும் காஸ்ஸை நிறுத்திவிடுவதாக அவள் பயமுறுத்தினுள். அதன்மேல் அவர் அவள் கழுத்தைப்பிடித்து தம் ஜாகைக்கு வெளியே தள்ளினுர். அவள் என்ன செய்வது? இவ்விஷயத்தைப்பற்றி ஓர் அறிக்கை எழுதுமாறு உத்தரவிடப்பட்டாள்.

நானே ஓர் அறிக்கை எழுதி தேசிய ஒலிபரப்புக் கம்பனிக்கு கேபில் செய்யலாமா என்று தோன்றியது. அதைத் தணிக்கையாளர் அனுமதிக்கமாட்டார் என்பதை அறிவேன். குறைந்தது சோவியத் அதிகார வர்க்கத்தினரின் திமிரை அடக்கக்கூடிய நிலையிலுள்ளவர்களின் கவனத்தையாவது இழுக்குமே என்று நினைத்தேன். அன்னியர் உதவியை நாடியதற்காக அப் பெண்ணே முதலில் தண்டிக்கப்படுவாள் என்றுணர்ந்து அவ் வெண்ணத்தைக் கைவிட்டேன்.

நாங்கள் எங்கள் பணிப்பெண்களை ஜனநாயக ரீதியில் நடத்திளேம். ஆனுல் அது சந்தேகத்திற்கே இடமளித்தது. சந்தேகம் விரைவில் ஏளனத்திற்கே இடமளித்தது. ஓல்கா ப்வயோதொரோவனு என்னும் பணிப்பெண் சோவியத் வீடுகளில் வேலை செய்து பல வருஷ அனுபவம் பெற்றவள். நீலா தன் பட்டுத் துணிமணிகளை இஸ்திரிப்போடப் பணிப்பெண்ணிடம் தந்தால், அதை முரட்டுத்தனமாகப் போட்டுத் துணிகளைப் பாழாக்குவாள் என்று அஞ்சி அவற்றைத் தானே இஸ்திரி போடுவதைக் கண்ட அவள், நேரடியாக, “மன்னியுங்கள், நீங்கள் எஜமானியம்மாவாக இல்லை. உண்மையான எஜமானி ஒரு கைக் குட்டையைக்கூடத் தானே சுத்தம் செய்து கொள்ள மாட்டாள்” என்று ஏளனமாகச் சொன்னுள்.

மாஸ்கோவில் சாமான்கள் அகப்படுவது சிரமம். விலையும் அதிகம். எங்களுக்கும் அதிகம் பிடிக்காது. ஆகவே எங்கள் ஜாகையில் சொற்ப சாமான்களே இருந்தன. இதைக் கண்ட

ஓல்கா, " ஏனம்மா, இதுவும் ஒரு ஜாகையா ? தானியக் களஞ்சியம் போலல்லவா இருக்கிறது. ஜாஸ் இசைக் கோஷ்டித் தலைவனுன உதகாவிடம் வேலை செய்திருக்கிறேன். அவருடைய ஜாகை அரண்மனையைப்போல சாமான்கள் நிரம்பியிருக்கும். சாமான்கள் பலவகையானவை. தட்டுகள் ஒவ்வொன்றிலும் வெவ்வேருன சித்திரச் செதுக்குகள் இருக்கும்" என்ருள்.

எங்கள் ஜாகை கடைசி வரையில் தானியக் களஞ்சியமாகவே இருந்தது. ஆனுல் ஓல்கா எங்களிடம் நீடித்து வேலை செய்யவில்லை. உண்மையான எஜமானன் எஜமானியைத் தேடிப் போய்விட்டான்.

ஓல்கா எங்களை விட்டுப்போனபின், புதுப் பணிப்பெண் ஒருத்தியைத் தேடிப் பிடிப்பதில் மிகவும் சிரமப்பட்டோம். உணவுக்கும் உறையுளுக்கும் பின் வேலைக்காரியைத் தேடுவதே மாஸ்கோ மனைவியின் மிகக் கவலைதரும் பிரச்னையாகும். பெண்களிற் பெரும்பாலோர் வேலை செய்கின்றனர். சோவியத் தலைநகரில் கியு வரிசையில் நிற்பது நிரந்தரமானதோர் அம்சமாகிவிட்டதல்லவா ? அங்ஙனம் நிற்க அவர்களுக்கு போது கிடையாது. பணிப்பெண்தான் அவ் வேலையைச் செய்ய வேண்டும். அவள்தான் வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும், சாப்பாடு சமைக்க வேண்டும், தட்டுக்களையும் கழுவவேண்டும். மாஸ்கோ வீடுகள் பலவற்றில் காஸ் கிடையாது, சுடுநீர் வராது. அமெரிக்காவில் எந்த மட்டமான பண்டசாலையிலும் கிடைக்கும் வீட்டு சாமான்கள் இங்கே கிடைக்கமாட்டா. சுத்தம் செய்யும் மெஷின்களோ, விலையுயர்ந்த மின்சார இயந்திர சாதனங்களோ இல்லை.

அஸ்ஸியா.

இது என்ன தொல்லையென நாங்கள் நிராசையுற்ருேம். அப்போதுதான் பதினெட்டு வயதான அஸ்ஸியா எங்கள் வாழ்க்கையில் நுழைந்தாள்.

அவள் சாதாரண பணிப்பெண்களைப்போல இல்லவே இல்லை. உல்லாசமாயும், தான் என்பதையே வலிய வற்புறுத்துபவளா யும், கல்விப் பயிற்சி பெற ஆவல் நிறைந்தவளாயும் இருந் தாள். உண்மையிலேயே பணிப்பெண்ணாக அவளுக்கு இஷ்ட மேயில்லை. பள்ளிக்கூடம் செல்லவே விரும்பினாள். ஆனால் சிறிது முன்பே அவள் பைலோருஷியன் கிராமத்திலிருந்து தலை நகருக்கு வந்தாள். தலை நகரில் யாரையும் அவளுக் குத் தெரியாது. வசிப்பதற்கும் இடம் கிடையாது. ஆகவே வேலை செய்ய இணங்கினாள். அதனால்தான் அவள் ராணுவத் தில் பதிவு செய்துகொள்ள முடிந்தது. சாதாரணமாக, அன் னிய நாட்டினருக்கு வேலை செய்யும் பணிப்பெண்களும் குசினிக்காரிகளும் தொழிற்சங்க முறைப்படி ஒப்பந்தம் செய்துகொள்வதில்லை. ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்திருப் பதைவிட அதிகமாகவே நாங்கள் அவர்களுக்குத் தருகிறோம். ஆனால் அஸ்ஸியா அப்படிப்பட்டவள் அல்ல. அவள் யாவற் றையும் விதிப்படியே செய்ய விரும்பினாள். அவள் சோவியத் பெண் அல்லவா ?

ஒப்பந்தப்படி நாங்கள் அவளுக்கு உணவளிக்க வேண்டும் ; தொழிற் சங்கத்துக்கு அவள் செலுத்த வேண்டியதைச் செலுத்தி விடவேண்டும் ; ஒவ்வொரு வருஷமும், ஒரு ஜோடி பாதரட்சை கள், இரண்டு ஆடைகள், இரண்டு வெளுத்த விரிப்புகளுடன் கூடிய ஒரு படுக்கை இவற்றை அளித்துவிட வேண்டும், வாரத் திற்கு ஒரு நாளும் இரண்டு அரை நாளும் லீவு. வருஷம் பூராவும் வேலை செய்தல், இரண்டு வாரம் விடுமுறையும் தர வேண்டும். புள்ளி போட்ட இடத்தில் கையெழுத்திட்டேன். அஸ்ஸியா எங்கள் பணிப்பெண் ஆனாள்.

புரோபின்னிடம் பதிவு செய்யும் விஷயம் என் மனத்தி னின்று நழுவிவிட்டது. அஸ்ஸியாவும் அதைப்பற்றி ஒன்றும் அறியாள். புரோபின்னும் அதிகாரிகளும் அன்னியரிடம் மற்று மொரு பெண் வேலை செய்யப்போயிருக்கிறாள் என்பதை அறிய வில்லை. பைலோருஷிய வயல்களிலிருந்து திடீரென்று வீசிய

குளிர்ந்த காற்றுபோல அஸ்லியா எங்கள் வீட்டிற்குள் வந்தாள். நாங்கள் தனித்தனி துவால்களை உபயோகிப்பதேன் என்பதையும், அவற்றையும் இதர துணிமணிகளையும் ஏன் அடிக்கடி மாற்றுகிறோம் என்பதையும் அவள் அறிந்துகொள்ளவே முடியவில்லை. ரொட்டிக்கும், புலாலுக்கும், சலாதுக்குமாக தனித் தனித் தட்டுக்களை உபயோகிப்பதேன்? ரொட்டி மேசை விரிப்பின் மீதே வைக்கப்படலாமே? சூப் தட்டிலேயே மற்றவற்றையும் வைத்துவிடலாமே? —என்றெல்லாம் எண்ணினாள். ஆரோக்கியமான பாட்டாளி இயல்பும், தான் பள்ளிக்கூடத்தில் கற்றதுபற்றிய நினைவுகளும் இதெல்லாம் முதலாளிகளின் சுரண்டலே என அவளைச் சந்தேகிக்கச் செய்தன.

நான் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோதோ, கவனமாக எழுதிக்கொண்டிருந்தபோதோ, வாழ்க்கை, வர்க்கப் போராட்டம், தான் இராப்பள்ளிக்கூடத்தில் படித்த ஜர்மன் மொழி இவற்றையெல்லாம் பற்றிப் பல்லாயிரம் கேள்விகள் கேட்பாள். அப்படியெல்லாம் கேட்கக் கூடாதென நான் வற்புறுத்தியது அவளுக்கு எரிச்சலாக இருந்தது.]

ருஷியர்கள் அயல்நாட்டு மொழிகள்மீது மிகுந்த கவர்ச்சி உடையவர்கள். சோவியத் யூனியனில்போல வேறெங்கும் பாஷைகள் அவ்வளவு ஆவலாகக் கற்கப்படுவதில்லை என்பதே என் அபிப்பிராயம். மொழியறிவு கல்விப் பயிற்சியாக இருப்பதுடன் மேலே படிப்பதற்கும் குறித்த வேலைகளில் சேர்வதற்கும் பயன்படுவதால், மொழிகள் கற்கப்படுகின்றன. சில விசித்திரமான காரணங்களுக்காக அன்னிய மொழிகளைக் கற்கத் தூண்டும் ஒருவித இயல்பும் ருஷியரிடம் உண்டு. புகழ் பெற்ற ருஷிய இஞ்சினியரான ஜார்ஜி மர்ஸகாவ், "ஆங்கில மொழியறிவில்தான் இன்பம் காண்கிறேன். ருஷிய மொழியில் சிந்திப்பதில் அலுப்படையும்போது ஆங்கிலத்தில்தான் கவனம் செலுத்துகிறேன்" என்று ஒரு தடவை என்னிடம் சொன்னார்.

மாஸ்கோவில் தூர விலகி நின்ற ஒட்டல் ஒன்றில் தட்டுக்கள் கழுவின ஒருவன், "நான் களைத்து வீட்டுக்கு வருகிறேன்.

படுத்துக்கொண்டே பிரெஞ்சு புத்தகமொன்றைத் திறந்து பார்க்கிறேன். எனக்குப் புரிவது சொற்பம். ஆயினும் சுய மரியாதை யுணர்ச்சி திரும்பிவருகிறது" என்று என்னிடம் சொன்னான். இஞ்சினியர் சொன்ன காரணத்தைவிட இன்னும் விசித்திரமாயிருக்கிறது இது.

அஸ்ஸியாவுக்கு இத்தகைய காரணம் ஒன்றுமில்லை. பள்ளிக்கூடத்தில் மொழியொன்று படிக்கவேண்டியிருந்தது. அது ஜெர்மனி மொழியாக நேரிட்டது. உண்மையில், ருஷியர் பலரைப்போல, அவள் ஆங்கில மொழிகளையே படிக்க விரும்பியிருப்பாள். சென்ற பதினைந்து வருஷ காலமாக சோவியத் மாணவர் ஜர்மன் பிரஞெ்சு மொழிகளுக்குப் பதிலாக ஆங்கிலத்தையே பெரிதும் விரும்பினர். அதிகாரிகள் போதிய ஆங்கில உபாத்தியாயர்களுக்கு இன்னும் பயிற்சி அளிக்கவில்லை. அஸ்ஸியா என்னை ஆங்கிலப் பாடங்கள் சொல்லித்தரக் கேட்டாள். ஜெர்மன் மொழியைப்பற்றி அவள் கேட்ட பல கேள்விகள் தான் என்னை மிகவும் அலுவலுடையவனுகச் செய்தன. நான் மறுத்தேன்.

அஸ்ஸியாவுக்கு ஒரு தோல் பையை வைத்திருக்க ஆசையாயிருந்தது. அதைப்பற்றியே அவள் கனவு கண்டாள். அதிகாரிகள் யாவரும் சிறு தோல் பைகளைக் கொண்டு சென்றதை அவள் அறிவாள். குழந்தையாயிருந்தபோது, அவளுடைய கூட்டுப்பண்ணையைப் பார்வையிட வந்த ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசியைப் பற்றி அவள் தகப்பனுர் மிகுந்த மரியாதையுடன் பேசியதைக் கேட்டிருந்தாள். "கெட்டிக்காரன், தான் பேசுவது இன்னது என்பதை நன்கறிவான். அவன் கைப் பையுடன் கூடிய (மந்திரி ஸ்தானத்திலுள்ள) சோவியத் அதிகாரி" இங்ஙனம் சொன்ன சிறிது காலத்திற்குள் அந்தக் கூட்டுப்பண்ணையின் தலைவன் தான் போயிருந்த அருகாமையிலிருந்த ஓர் ஊரிலிருந்து தன் சொந்த தோல்பை ஒன்றுடன் திரும்பிவந்தான்.

1939-ல் நான் பல்கேரியாவுக்குப் பறந்து செல்வதற்கு முந்திய நாள் அஸ்ஸியாவைப் பார்த்து, அங்கிருந்து உனக்காக ஏதாவது வாங்கிவர வேண்டுமா ? என்று கேட்டேன்.

“ஆமாம், ஒரு சிறு தோல் பையும் ஒரு ஜதை ரப்பரும் வேண்டும்” என்ருள் ஆவலுடன்.

“சரி, உனக்குத் தோல் பை வாங்கிக்கொண்டு வருகிறேன். ஆனல் ரப்பர்கள் எதற்காக? சிறிது முன்புதான் புத்தம் புதிய ரப்பர்கள் இரண்டு ஜதை வாங்கினுயே.”

“நாமும் யுத்தத்தில் சிக்கிக்கொண்டால் ?”

நல்லது, அஸ்ஸியாவுக்கு மூன்ருவது ஜதை ரப்பர்களும் சிறு தோல் பை ஒன்றும் வாங்கி வந்தேன். அதைப் பற்றி அவள் மிகவும் பெருமைப்பட்டுக்கொண்டாள். சாப்பாடு பரிமாறுகையிலும் ஒரு கையில் அந்தப் பையை எடுத்துக்கொண்டு வந்தாள். அவ்விதம் செய்வது சரியல்லவென்று சொன்னேன். “இந்த கைப் பையானது நான் கேவலம் ஒரு பணிப்பெண் மட்டுமல்ல என்று உணரும்படிச் செய்கிறது” என்று சமாதானம் சொன்னுள். சாப்பாடு பரிமாறும்போது அதை வைத்து விட்டு வரவேண்டுமெனக் கண்டிப்பாகக் கட்டளையிட்டேன். அவள் தலைவிதியேயென்று வருத்தத்துடன் கீழ்ப்படிந்தாள். அவள் முகத்தைப் பார்க்கவேண்டுமே !

ஒருநாள் மாலை ஆடையணிந்து விருந்து சாப்பாடு ஒன்றுக்குச் சென்ருேம். நீலாவுக்கு உடம்பு சரியாக இல்லை. ஆகவே வழக்கத்திற்கு முன்பாகவே திரும்பிவிட்டோம். காரிலிருந்து இறங்கியதும், தெருப்பக்கமாகப் பார்த்த எங்கள் ஜாகையின் மூன்று ஜன்னல்களிலும் விளக்கொளி கண்டோம். பத்திரிகை மகாநாட்டுக்குத்தான் அழைப்பு வந்திருக்கிறதோ என்று அஞ்சி, விரைந்து நேராக மாடிப் படிகள் ஏறிச்சென்ருேம். குரல் கேட்டதும் நேராகச் சாப்பாட்டு அறைக்குச் சென்ருேம். அங்கே, ஒருவருக்கொருவர் எதிராக அஸ்ஸியாவும் வாலிப

சோல்ஜர் ஒருவனும் தேநீரும் அப்பமும் சாப்பிடக் கண்டோம். சோல்ஜர் நல்ல முகவெட்டுடனும், புன்னகை பொலியவும் விளங்கினன். பளபளவென்று பாலிஷ் இட்ட அவன் பூட்ஸ் களிலிருந்து வெளி வந்த வாசனை அடுத்த சில நாட்கள்வரை எங்கள் ஜாகையை விட்டுப் போகவேயில்லை.

மாலை நேர உடைகளில் எங்களைப் பார்த்ததும், அந்த சோல்ஜர் குதித்தெழுந்தான். கிளிக் என்று குதிகள் ஓசை செய்ய ராணுவ முறையில் மூச்சு விடாமல் கவனமாக நின்றான். அஸ்ஸியாவும் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து எழுந்து எங்களை நோக்கி இரண்டடி எடுத்து வைத்து, நீலாவைக் கெஞ்சுவதைப் போலப் பார்த்துக்கொண்டே சோல்ஜரிடம், "சேனியா, என் சகோதரியையும் அவளுடைய கணவர் மகிதாப் பையும் சந்தித்துப் பேசுவாயாக. அவர்கள் மாஸ்கோ சர்க்கஸ் கலைஞர்கள்" என்றாள். நாங்கள் சேனியாவிடம் கைகுலுக்கி விட்டு அறையை விட்டு விலகினோம். சோல்ஜர் சென்றபின், அஸ்ஸியா நானும் நீலாவும் உட்கார்ந்திருந்த அறைக்கு வந்து சொன்னாள் :

"அவ்விதமாகவே நீங்கள் அணிந்திருந்த ஆடைகளை விளக்க முடிந்தது. நீங்கள் இப்போது என்மீது கோபித்துக் கொள்வீர்கள் என்பதை அறிவேன். ஆனால், நான் ஒரு பணிப் பெண்ணாக வேலை செய்தேனென அவனிடம் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை."

அவள் குழந்தையைப் போல அழுதுக்கொண்டே அறையை விட்டுச் சென்றாள்.

நாங்கள் அவள்மீது கோபித்துக்கொள்ளவில்லை. ஆயினும் அவள் எங்களை விட்டுச் சென்றாள். பிரோபின்னும் ரகசியப் போலீசாரும் கடைசியில் விழித்துக்கொண்டு தங்களிடம் பதிவு செய்து கொள்ள உத்தரவிட்டனர். அவளுக்கு வேறொரு வேலையும் குடியிருக்க அறையும் கிடைத்தனவோ என்னவோ நாங்கள் அறியோம். எங்கள் காரியங்கள் அலுவல்கள் பற்றி

குறிப்பெழுதி வைக்க மறுத்தாளோ என்னவோ எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. கீழ் நோக்கிய பார்வையுடன் எங்களை விட்டுப் போவதாக மட்டுமே அவள் சொன்னாள். பல்லாண்டுகளுக்குப் பின், அஸ்ஷியா தெருக்கார் மோட்டார் மென் பள்ளிக்கூடத்தைச் சேர்ந்திருக்கிறாள் என்பதையும், இப் போது மாஸ்கோ போக்குவரத்து ஏற்பாட்டில் சிறந்த ஸ்டாக்னோ விட்களில் ஒருத்தியாக இருக்கிறாள் என்பதையும், அவளை எங்களுக்கு முதலில் சிபார்சு செய்த மின்சார உயரத்தூக்கியில் வேலை செய்த பெண்ணிடமிருந்து அறிந்தோம்.

அஸ்ஷியாவைப்பற்றி முடிக்குமுன் மற்றொரு சிறு நிகழ்ச்சியைப்பற்றி நான் குறிப்பிடவேண்டும். ஒரு பழைய சரித்திர வரலாற்றிலிருந்து செஞ்சேனையைப் பற்றிய செய்தி யொன்றைத் தேடிப் பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு தடவை அவள் என் அறைக்கு வந்தாள். அந்தப் புத்தகத்தில் நாட் டுக்குத் துரோகம் செய்தவன் எனத் தூக்கிலிடப்பட்ட ஜெனரல் துக்கா ஷெவ்ஸ்கியின் முழுப்பக்க படமொன்று காணப்பட்டது. அந்தப் படத்தை அவளுக்குக் காட்டி, "அழகாக இருக்கிறார், இல்லையா?" என்றேன். அதற்கு அவள் ஒரு நிமிஷங்கூடத் தயங்காமல், "மக்களின் சத்ரு அழகாக இருக்கமுடியாது" எனப் பதிலளித்தாள்.

லயனு.

எங்களுடைய அடுத்த பணிப்பெண் லயனு. அஸ்ஷியாவுக் கும் அவளுக்கும் எவ்வளவோ தூரம். லயனு செந்தலைக்காரி. அஸ்ஷியாவின் இயற்கையான சுபாவமோ, உல்லாசமோ, இனிது நெருங்கிப் பழகும் இயல்போ, யாதொன்றும் லயனு விடம் இல்லை. சோவியத் தொழில் ஒன்றில் உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று அஸ்ஷியாவுக்கு இருந்த ஆர்வமும் அவளிடமில்லை. அவள் பிறவிக் குசினிக்காரி. குசினி வேலை அவள் தொழில். வாழ்க்கையில் ஒரே வெறியும் அதுவே. அமெரிக்கத் தூதுவராலயத்தில் காரியதரிசியொருவருக்கு பல் லாண்டுகள் சமைத்துப்போட்டு அனுபவமடைந்தவள். பாக

சாஸ்திரத்தில் அறியவேண்டிய யாவும் அவள் அறிவாள். நாங்களும் எங்கள் விருந்தினரும் அப்படித்தான் எண்ணினோம். அவள் ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய பட்சணங்களைச் செய்வ தற்கான முறைகளைக் கூறும் நூல்களைத் தருவித்துத் தர என்னைக் கேட்டுக்கொண்டே இருந்தாள்.

பாவல் உணவு படைக்கும்போது தன் முக்யத்தை உணர்ந்து எவ்வளவு கண்ணியமாகவும் கம்பீரமாகவும் நடந்துகொண் டானோ, அதே மாதிரியாக லயனு தன் பணியை ஆற்றினாள். அபூர்வமாகச் சில சமயங்களில் அவள் வாயாடுவதுண்டு. அத் தகைய சந்தர்ப்பங்கள் ஒன்றில் அவள் என்னிடமும் நீலா விடமும் பின்வருமாறு சொன்னாள் :

" நீங்கள்தான் வீட்டை நடத்துவதாக எண்ணுகிறீர்கள். அம்மாவே, புத்தகங்கள் படிப்பதும், வரவேற்பு விருந்து களுக்குச் செல்வதுமே நீங்கள் செய்வதெல்லாம். ஐயாவே, நீங்கள் எப்போது பார்த்தாலும் போனில் பேசிக்கொண்டும் டைப்ரைட்டரில் டட் டட் என்று அடித்துக்கொண்டும் இருக்கி றீர்கள், கவலைப்படுவதெல்லாம் நான்தான்."

எதையும் பரிபூரணமாகச் செய்யும் இயல்பினள் ஆதலால், அவள் கவலைப்பட்டதென்னவோ உண்மைதான். எங்கள் புலால் தட்டுக்களை அலங்கரிக்க பார்ஸ்லி வாசனை இலைகள் அகப் படாததால் அரை மணி நேரம் தாமதித்து எங்களுக்கு உணவு படைத்தாள். வழக்கமாகச் செல்லும் மார்க்கெட்டில் கிடைக் காமல் வேறு இரண்டு மார்க்கெட்டுகளில் தேடிப் பார்த்த பிறகே அந்த இலைகள் கிடைத்தன. தட்டுக்களில் அலங்காரங்களைவிட நேரமே எனக்கு அதிக மதிப்புடையதென அவளிடம் நான் சொன்னபோது அவள் ஏளனமாகத் தோள்களைக் குலுக்கினாள்.

அவளிடம் சாமானிய குடியானவரின் மனப்பான்மையே காணப்பட்டது. ஆனால் குணப்போக்கிலும் தொழில் விஷயத் திலும் அவளிடம் கலையுணர்ச்சி இருந்தது. அவள் மகா சிக்கனக்காரி ; ஆனால், நேர்மையானவள். மாதாமாதம்

வரவு செலவுத் திட்டமொன்று போடவேண்டுமென வற்புறுத்து வாள். அதன்படி அற்புதமான சிக்கனங்கள் செய்வாள். நான் ஆஸ்பத்திரியில் இருந்தபோது, டாக்டர் என்னைத் தினந் தோறும் ஒரு ராத்தல் ஆப்பில் பழம் சாப்பிடச் சொல்லினர். ஒரு ராத்தல் பழத்தின் விலை நாலரை அமெரிக்க டாலர். லயனு தன் பட்ஜட் திட்டத்தில் இதைச் சேர்க்க மறுத்தாள். நீலா அதிக பணம் தந்தும் அவள் ஒப்பவில்லை. "இந்த உபயோகமற்ற பொருளுக்காக அவ்வளவு செலவு செய்ய மாட்டேன்" என்றுள். நீலா அந்த கடைமையை பாவலிடம் விட்டாள்.

சாப்பாட்டுக்கு ருஷியர்களையோ நிருபர்களையோ அழைத்தால் லயனு வெறுப்படைவாள். அவர் அதிகம் சாப்பிட்டனர். நிருபர்களிற் பெரும்பாலோர் தலை நகரில் ஓட்டலில் சாப்பிட்டு அலுத்துப் போனவர் ருஷியர் சமீபத்தில் பட்டினியால் பீடிக்கப் பட்டிருந்தனர். அன்றியும் அவர்களுக்கு நடத்தையே தெரியா தென லயனு கருதினுள். பரிமாறினபோது தன்னை மெச்சின ஒரு ஆசாமியை அவள் வெறுத்தாள். லயனுவை திருப்தி செய்யவோ என்னவோ, சோவியத் அதிகாரிகள் அன்னியரை வெறுக்கும் பிரசாரத்தை ஆரம்பித்தனர். அதன் விளைவாக எங்கள் வீட்டிலிருந்து ருஷியர்கள் அனைவரும் விரட்டப்பட்டனர்.

அமெரிக்க ரிப்போர்ட்டர்களைப் போலவே அவளிடமும் போட்டியுணர்ச்சி பலமாயிருந்தது. அயல்நாட்டு ராஜதந்திரி யொருவரின் வீட்டில் சாப்பிட்டு வீடு திரும்பியபோதெல்லாம் மிகப் பொருமையுடன் உணவைப்பற்றி விசாரிப்பாள். சென்ற இரவு மெக்ஸிகோ தூதுவராலயத்தில் சாப்பாடு விரிவாயும் ருசி யாயும் இருந்ததென யோசிக்காமல் சொல்லிவிட்டோம். இரு பத்திநாலு மணி நேரம் அவள் வாயைத் திறக்கவேயில்லை. சாப்பாடு அஸ்ஸியா போட்டது போலவே சகிக்க முடியாததா யிருந்தது. கோபமடைந்ததால், குசினிப் பாத்திரங்களும் சட்டி பானைகளும் கடகடவென்று ஓசைப்பட்டன. அன்றைய தினம் மாலை அவள் பலதடவை டெலிபோன் செய்தாள். அடுத்த

நாள் மெக்ஸிகன் தூதுவராலயம் சென்று குசினிக்காரனைப் பேட்டி கண்டாள். பிறகு வெகு காலமாக நாங்கள் சாப்பாட்டுக்கு விருந்தினரையே அழைக்கவில்லை எனப் புகார் செய்தாள். விருந்தினர் எனில் ராஜதந்திரிகளையே மனத்தில் கொண்டிருந்தாள். கடைசியாக நான் விருந்து வைத்தபோது, உணவு ஜாப்தா மெக்ஸிக தூதுவராலய விருந்து சாப்பாட்டின் பிரதியாகவே இருந்தது. ஆனால் அதைவிட நன்றாக இருந்தது.

லயணு ஒன்றும் அறியாதவள்; மூட நம்பிக்கைகள் கொண்டவள். ருஷியாவில் போர் மூண்டதும், அவளைப் போய் விட அனுமதித்தேன். யுத்தம் முடிந்ததும் வேலைக்கு மீண்டும் எடுத்துக்கொள்வதாக வாக்களித்தேன். 1944 செப்டம்பரில் மிட்ராபோல் ஓட்டலுக்கு வந்து, நான் மீண்டும் அவளை வேலைக்கு வைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேனா என்று விசாரித்தாள்.

“ஆனால், இன்னும் யுத்தம் முடியவில்லையே.”

“யுத்தம் முடியவில்லைதான்; ஆனால், சீக்கிரம் முடிந்து விடும் என்பதற்கு அறிகுறிகள் காணுகின்றனவே.”

“என்ன அறிகுறிகள், லயணு?” என்று மிருதுவாகக் கேட்டேன்.

“நல்லது, இந்த வருஷம் காளான்களே காணோம். புதிதாகப் பிறந்த குழந்தைகள் பெரும்பாலும் பெண்களே.

எழுத்தறிவு வாசனையே அநேகமாக இல்லாதவளும், நாடகம், சினிமா, அரசியல் இவை எதிலும் சிறிதுகூட அக்கறையே இல்லாதவளும் ஆன லயணு, தான் கலைப்பண்பாடுகள் உடைய ஒரு பெண்ணே எனக் கருதிக்கொண்டாள். சமயலைப் போலவே அவள் ஆடைகளும் மிகத் தூய்தாக இருக்கும். அந்நியருக்கு வேலை செய்ததனால் தன் நற்சுவைகளைப் பயில வாய்ப்பு ஏற்பட்டது. ஆயினும், மனிதருடன் அவளுக்குத் தொல்லைகள் ஏற்பட்டன. அல்லது மனிதருடன் தொல்லையே

யில்லாமலிருந்தன என்றும் சொல்லலாம். சண்டை செய்வன போன்ற அவளுடைய செம்மயிர் கண்டு சிலர் வெருண்டனர். மற்றும் சிலர் அவள் குள்ளமாயும் பருமனுயும் இருந்ததனுல் பீதியுற்றனர். ஆனுல் அவள் தொல்லேயின் உண்மையான காரணம் அதைவிட ஆழமானது.

ஒரு சமயம் அவள் கணக்கு வைப்பவன் ஒருவனுடன் அறிமுகமானுள். அவனேப் பற்றி வெகு தூரம் அறிந்து கொண்டாள். விசேஷமாக மாலே நேரங்களில் அவன் வீட்டுக்குப்போய் இராச்சாப்பாடு தயாரிப்பாள். அது வெகு காலம் நடக்கவில்லே. கண்ணீர் விட்டுக்கொண்டே அவள் நீலாவிடம் சொன்னதாவது : " நான் அவனுடன் வெகு தூரம் சென்றிருக்கிறேன். நான் எல்லோருடனும் நன்கு பழகியிருக்கிறேன். அவர்களுடைய அக்கறை யாவும் வயிற்றில்தான். இவ்வுலகில் காதல் வாழ்வே கிடையாது."

ஆனுல் உண்மையில் மனிதருடன் அவள் வெகு தூரம் செல்லவில்லே. அவள் மீண்டும் முயன்ருள்.

அவளுடைய நண்பன் ஒருவன் கலியாணத்தின்பாலும், சாமானிய குடும்ப வாழ்க்கையிலும் அவள் ஆவலாயிருந்ததை அறிந்து தகுதிவாய்ந்த பிரம்மசாரி ஒருவனே அவள் சந்திக்க ஏற்பாடு செய்தான். லயனு ஒரு ஜதை வெண்மையான கையுறைகளேயும், முத்துக்களேயும் நீலாவிடமிருந்து கடன் வாங்கினுள். நீலா பரபரப்படைந்தாள். உள்ளுக்குள்ளே அந்த மனிதன் லயனுவை எங்களிடமிருந்து பற்றிக்கொண்டு போய்விடாமலிருக்க வேண்டுமே என்று நம்பியிருந்தாள். நீல மலர்களால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு சீப்புக்களே நீலா அவளுக்குப் பரிசாக அளித்து, மணப்பெண்ணுகப்போகிறவள் மீது மதிப்பு மிகுந்த சானல் நம்பர் ஐந்திலிருந்து சிறு துளிகள் பூசினுள்.

அன்று இரவு நாங்கள் படுக்கச் சென்றபோது லயனு திரும்பிவரவில்லே. ஆனுல், அடுத்த நாள் காலே ஆகாரத்தின்போது காப்பியை ஒரு சிறிது உறிஞ்சிவிட்டு " கலியாணம்

நடக்கவில்லை" என்றேன். நான் ஆபீசுக்குச் சென்ற பின் அவள் என் மனைவியிடம் கலியாணம் நடைபெருததற்குரிய காரணத்தைச் சொன்னுள். அவன் ஒரு சாமான் வண்டியோட்டி. அவன் தன் உறுதியான இரவல்-குத்தகை ஸ்டுடிபேக்கர் சாமான் வண்டியையும் போக்குவரத்து விதிகளை மீறுவதனுல் மாஸ்கோ போலீசுடன் தன் அடி பிடிகளையும் தவிர வேறென்றைப் பற்றியும் பேசமாட்டான். தான் அது சமயம் நண்பன் வீட்டில் சமைத்த உணவின் சுவையை அவன் அறிந்து பாராட்டவுமில்லை. தான் செய்த உயர்தர ரொட்டிகளைத் தொடாமல் கருத்த ரொட்டிகளையே உண்டான். தட்டிலிருந்து ஒரு துண்டு அசரை மீனை எடுக்கத் தன் கரத்தையே உபயோகித்தான். சுருங்கக் கூறின், "அவன் என்னை ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும்; ஆனுல் இவ்வளவு தூரம் நன்னடத்தை அறியாத ஒருவனுடன் நான் என் வாழ்க்கையை நடத்தமாட்டேன்," என்றுள்.

நாங்கள் ருஷியாவில் தங்கியிருந்த கடைசி நாள் காலை வரையிலும் லயனு எங்களுடனேயே தங்கியிருந்தாள். அதே நாள் என் நண்பரான வால்டர் குரோன்க்கட் அவளை வேலைக்கு வைத்துக்கொண்டார். மாஸ்கோவில் தனி ஜாகை கிடைக்கப் பெற்றிருந்த வெகு சில நிருபர்களில் அவரும் ஒருவர்.

பகுதி நான்கு

எமிலி போஸ்ட் படையெழுச்சி

அத்தியாயம் 11

நவீன ஆசார ஒழுக்கங்கள்

அணுக்குண்டு சமாதானத்தின் நிச்சயமற்ற நிலைமைகளின் இடையே, சோவியத் யூனியனில், அநேகமாக கண்ணுக்குப் புலப்படாமல், மிக நுட்பமாக, தனித்தன்மை வாய்ந்ததும் வசீகரமானதுமான ஒரு போக்கு உருவெடுத்துவருகின்றது. ஸ்டாலினின் யுத்த பிற்கால ஐந்து வருஷத் திட்டத்தினுல் குரூரமாக உந்தப்பட்டும், துணிந்து வியாபித்து வரும் சோவியத் அயல்நாட்டுக் கொள்கை பற்றி சஞ்சலமடைந்தும் வரும் ருஷிய மக்கள் சூக்ஷ்மமாக ஒரு புதிய வாழ்க்கை ரீதியைத் தடவித் தேடிவருகின்றனர்.

ருஷியாவைப் பற்றிய மற்றெல்லா விஷயங்களையும் போலவே இத் தடுமாற்றம் திருகல்முறுகலாயும் சிக்கல்களும் முரண் பாடுகளும் மிக உடையதாயும் உள்ளது. ஒரு பக்கம் ஆங்கிலோ-சாக்ஸன் பண்பாடுகள் சாதித்துள்ள பிரதான விஷயங்களைத் தூற்றிக்கொண்டும், மற்றொரு பக்கம் எமிலி போஸ்டின் நூல் களை வெளியிட்டுக்கொண்டும் வரும் சோவியத்கள் தர்ம சங்கடமான நிலைமையில் உள்ளனர். ஆயிரத்துத் தொளாயி ரத்து இருபதுகளிலும் முப்பதுகளிலும் அமெரிக்காவில் வேத நூல் போல விளங்கிய எமிலி போஸ்டின் பிரதான நூல்கள் சோவியத் அயல்நாட்டு விவகார மந்திரி காரியாலயம் நடத்தும் எதிர்கால ராஜ தந்திரிகள் பள்ளிக்கூடத்திலும், செஞ்சேனை அகாடமிகளிலும், சிறப்பாக ராணுவ பரிவாரங்களுக்கான பள்ளிக்கூடங்களிலும் உபயோகிக்கப்படுகின்றன. ஆனுல் எமிலி போஸ்டின் புத்தகங்கள் பொது ஜனங்களுக்கு விற்பனை செய்யப் படுவதில்லை.

மாஸ்கோ அயல்நாடுகளுக்கு அதிகாரதோரணையில் செல்லும் தன் பிரதிநிதிகளுக்கு 'இழிவுற்ற' மேலை நாட்டு ஜன

நாயகங்களின் சமூக நாகரிக நடையுடை பாவனை, ஒழுக்கம் ஆகியவற்றில் பயிற்சியளிப்பது ஏன் என்று கேட்டால், கள்ள னைப் பிடிக்க கள்ளனையே ஏவுவதுபோன்ற வெகு காலத்திய கொள்கையின்படி என்று அது வாதிக்கக்கூடும். ஆனால், கோடிக்கணக்கான ருஷியர், சிறப்பாகப் பெண்கள், நவீன வழக்கங்கள், நடையுடை பாவனங்கள் ஆகியவற்றில் முழுக் கவனம் செலுத்துவதையும், மேலை நாட்டின், சிறப்பாக அமெ ரிக்காவின், தரங்களின் பரவிய செல்வாக்கையும் இது போதிய அளவு விளக்கக்கூடியதாக இல்லை.

அயல் நாட்டினைக் குறிக்கும் **இனேஸ்டிரானெட்ஸ்** என்ற சொல் ருஷியாவில் இன்னும், தலைமயிர், மீசை, தாடி முதலிய வைகளை வயணமாகத் திருத்திக்கொண்டு, சுறுசுறுப்பாயும், நன்னடத்தை ஆசாரங்கள் உடையவனாகவும் இருப்பவனைக் குறிக் கின்றது. வெளி நாடுகளில் செய்யப்படுவது என்பதைக் குறிக் கும் **ஐக்ரானிச்னி** என்ற சொல் உயர்குணத்துக்கும் சுறு சுறுப்புக்கும் உரிய மற்றொரு சொல்லாகும். அழகு செய்யும் கடைகள், தையல் கடைகள் ஆகியன பல சோவியத் நகரங்களில் அமெரிகங்க என்ற பெயரால் வழங்குகின்றன.

ருஷியப் போக்குகள் எளியனவாக உள்ளன. ஆனால், நன் னடத்தைகளை ஒரு தடவை உணர்ந்த பின், ருஷியர் உலகிலேயே ஒழுங்கு முறைகளில் மிகக் கருத்துடையவராக விளங்குவர். ஒழுங்கு முறைப்படி நடக்காத அயல் நாட்டினர் தங்கள் தேசிய சௌரவத்தை வேண்டுமென்றே அவமதிக்கின்றனர் என்று அடிக்கடி தவறாகக் கொள்வர்.

யுத்தத்தின்போது, பண்டங்களை வாங்கும் கமிஷனின் ஓர் அங்கத்தினராக அமெரிக்கா சென்று சமீபத்திலேயே மாஸ்கோ திரும்பிய சோவியத் இஞ்சினியர் ஒருவரை நான் சந்தித்தேன. அமெரிக்காவைப் பற்றித் தன் மனத்தில் பட்டதைக கூறுமாறு நான் கேட்டபோது அவர் பின்கண்ட கதை சொன்னார் :

"நான் பெரிய அமெரிக்க தொழில் பிரமுகர் ஒருவரைக் காணச் சென்றேன். நான் நேரத்திலேயே போனேன். சந்தர்ப்பத்திற்குத் தக்கபடியாக ஆடை அணிந்தும் இருந்தேன். ஆனால் அந்த அமெரிக்கர் கைவைத்த உட்சட்டை அணிந்தும் ரப்பர் மிட்டாய் மென்றுகொண்டும் இருக்கக் காணப்பட்டார். முதல் உபசார வார்த்தைகள் ஆனபின், சுழல் நாற்காலியில் உட்கார்ந்து மேசைமீது கால் வைத்துக்கொண்டே என்னுடன் வியாபார விஷயமாகப் பேசினர்.

"சோவியத் யூனியன் பிரதிநிதியொருவருக்கு இது வேண்டுமென்றே செய்யப்பட்ட அவமரியாதை என்றே நான் கருதினேன். ஆயினும், எங்களுக்கு அவர் உற்பத்திப்பொருள் வேண்டியிருந்ததால் அவருடன் தொடர்ந்து பேசினேன். சிறிது நேரத்திற்குப் பின் வேருெரு பெரிய நிர்வாகியைக் காண நேர்ந்தது. அவரிடமும் மேலே சொன்ன நடத்தையையே கண்டேன். அவரும் ரப்பர் மிட்டாய் மென்றுகொண்டும் மேசை மீது கால் வைத்தும் இருந்தார். எனக்கு வந்த கோபத்தில், நானும் உட்கார்ந்து எதிர்க்கும் நோக்குடன் மேசைமீது கால் வைத்தேன். அவர் அதைப் பற்றிக் கவலைப் படாமல் வழக்கப் படியும் சிநேகபாவமாகவும் அலுவல் குறித்துப் பேசினர். அப்போதே அமெரிக்காவைப் பற்றி இதற்கு முன் அறிந்தே யிராத சில விஷயங்களை அறிந்துகொண்டேன்."

இதற்கு நேர் எதிராக, சமூக சம்பிரதாயங்கள் விதிமுறை களின்படி வாழ்க்கை நடத்தும் ஒருத்தியை பிராங்ஸ்வீலில் தேநீர் அருந்தியபோது எதிர்ப்பட்டேன். தூய கவுன் தரித்தும், பயித்தியக்காரத்தனமாக தொப்பி அணிந்தும் இருந்த அவள் கவலையுடன் என்னைக் கேட்டாள் :

"நான் என்ன எதிர்பார்ப்பது? என் மகன் மாஸ்கோ வில் தூதுவராலயத்தில் சிறிது காலம் இருந்தானல்லவா? அவன் சீக்கிரத்தில் இங்கே தன் ருஷிய மனைவியை அழைத்து வரப் போகிறன். அவர்கள் இரானில் எங்கேயோ இரண்டு

வருஷ காலம் இருந்தார்களாம். அதனால் அபிவிருத்தி ஏதேனும் ஏற்பட்டிருக்கப் போகிறதா, என்ன ? அவளிடம் மட்டுமரியாதை, நன்னடத்தை ஏதேனும் இருக்குமா ?"

லேடி பிக்மாலியான் தெருவில் சுற்றின விஷமப் பெண் ஒருத்தியைச் சமாளிக்கவேண்டியிருந்த மாதிரி தனக்கும் நேரிடுமோ என்று அச்சத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் அவள் என்பது வெளிப்படை. டஜன் கணக்கான மற்றும் பல கேள்விகள் அவள் மனத்தில் வட்டமிட்டிருக்க வேண்டும்.

"அந்தப் பெண் தன்னுடன் தன் பணிப்பெண்ணும் சாப்பாட்டுக்கு உட்காரவேண்டுமென வற்புறுத்துவாளா ? இங்குமங்கும் சுற்றிக் கண்டவர் முதுகில் தட்டி "தோழரே" என்றழைப்பாளா ? தரையில் குந்திக் கால்களை விட்டெறிந்து பயங்கரமாக ஆடுவார்களே அவைகளைத் தவிர வேறு எந்த நடனங்களையாவது ஆடுவாளா ? அவளுடைய கைப்பையானது தன் பாதரட்சைகள் கையுறைகளுக்கு ஒத்திருக்க வேண்டும் என்பதை அறிவாளா ? எட்டாவது ஹென்றியைப் போல கோழிக்குஞ்சு எலும்புகளை தோளுக்கு மேலாக வீசி எறிந்து தன் ஆடையின் கீழ் விளிம்பிலேயே கையைத் துடைத்துக்கொள்வாளா ?"

இன்று தன்னை வதை செய்யும் கேள்விகள் லட்சக்கணக்கான ருஷியர் மனத்திலும் உள்ளன என்பதை அவள் அறியாள் என்பது தெளிவு. நடையுடைபாவனை விஷயத்திலும் சரி, ஆடைகள் விஷயத்திலும் சரி, எவை நன்னடைத்தைக்கும் நற்சுவைக்கும் உரியன என்னும் பிரச்னைகள் முன்னையிட அவசரமாகத் தீர்க்கப்படவேண்டியனவாக உள்ளன. மேலை நாட்டுப் பிரமாணங்களின்படி நடந்தால், அது அயல் நாட்டினரின் ஆதரவைப் பெற அவர்கள்முன் மண்டியிட்டுக் கெஞ்சுவதைப் போலாகுமெனக் கம்யூனிஸ்ட் கட்சி பிரசாரம் செய்து இப்பிரச்னைகளைச் சிக்கலாக்கிவிடுகிறது. ஒன்றையொன்று எதிர்த்துநிற்கும் வெவ்வேறு பிரமாணங்களும் சம்பிரதாயங்களும் வேறு இவற்றைச் சிக்கலாக்கிவிடுகின்றன.

ருஷியரிற் பலர் சாப்பிட்டபின் ஏப்பம் விடுவதை மரியாதையற்ற நடத்தையென இன்னுங்கூடக் கருதுவதில்லை. ருசியான உணவைச் சுவைத்து உண்டதற்கோர் அறிகுறியாகவே அது கருதப்படுகின்றது.

ஓரிடத்திற்கு விஜயம் செய்யும்போது அங்கே முதல் தடவையாக அளிக்கப்படும் உணவை நீ ஏற்க மறுப்பாய் என்றே எதிர்பார்க்கப்படும். விருந்தளிப்பவன் மீண்டுமொரு தடவை அழைத்தால், அந்தத் தடவை நீ ஏற்றுக்கொள்வதுதான் முறை.

உடல் நலமில்லாமல் படுக்கையில் படுத்திருக்கையில் அதிகம் உண்பது நன்னடத்தையாகாது. என் மாமியார் ஒரு நாள் உடல் நலமில்லாதிருந்தாள். அவளுக்கு உணவு படைக்கப்பட்ட சமயம் நான் தற்செயலாக அவளுடைய அறைக்குள் வந்தேன். கஞ்சியைச் சாப்பிடாமல் அப்படியே வைத்திருந்ததற்காக நீலா தன் தாயாரைக் கடிந்தாள். அப்போது அவள், “நோயாயிருக்கையில் சாப்பிடுவது மாயாதை கெட்ட செயலாகும். அதுவும் ராபர்ட் அறையில் இருக்கையில் நான் எப்படி சாப்பிடுவேன் ?” என்றாள்.

மோலடாவுக்கு வரவேற்பு உபசாரம் நடந்தபோது, பூதம் போலிருந்த செஞ்சேனைத் தளகர்த்தன் ஒருவன் ஆலிப்பழமொன்றைக் கத்தியால் கம்பீரமாக நறுக்கியதை ஒரு சமயம் கண்டேன். அதே இடத்தில், சோவியத் ராஜதந்திரி ஒருவனின் மனைவி சாக்லேட் துண்டொன்றை போர்க் முள்ளினால் குத்தி வாயில்போட முயன்று கடைசியில் வெற்றியடைந்ததைக் கவனித்து ஆச்சரியத்தினால் கட்டுண்டேன்.

கத்யா.

ஆனால் எக்கதெரினா பரிஷ்னிகோவாவின் கதைதான் இப் பிரச்னையின் மையத்தைத் தொடுகிறது. மாஸ்கோ பால் பேரிங் ஒர்க்ஸில் சமீபகாலம் வரையில் ஒரு சாமானிய தொழிலாளியாக இருந்த இவள், இயந்திர உற்பத்தியைத் தீவிரமாக

அதிகரித்த புதுமுறையொன்றைக் கண்டுபிடித்ததற்காக ஸ்டாலின் பரிசு பெற்றபோது பிரசித்தியடைந்தாள். அவள் தன் பகுதியில் மேஸ்திரியானுள். தொழிலாளர் கூட்டமொன்றில் தொழிற்சங்க ஆலோசனை சபை அவளை முக்கியமானதொரு கமிட்டிக்கு அங்கத்தினராக நியமித்தது.

ஆனால், அவளுடைய வெற்றி நீண்ட நாள் நீடித்திருக்கவில்லை. அவளுடன் வேலைசெய்த முதியபெண் ஒருத்தி கூட்டத்தில் எழுந்து சொன்னதாவது : " கத்யா நல்ல வேலைக்காரி என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இங்கேயுள்ள மற்ற இளைஞர்க்கு, சிறப்பாக, பெண்களுக்கு, அவள் நல்ல உதாரணமாக விளங்கமாட்டாள். அவள் பெரிய பகட்டுக்காரி ; சாமான்வண்டி டிரைவரைப்போல பேசுகிருள் ; எல்லோரும் அறிய சிகரெட் பிடிக்கிருள் ; பொதுவாக அவள் நடத்தை கெட்டவள்."

அவளை நியமித்த தொழிற்சங்கத் தலைவர்கள் அவள் பட்சமாகப் பேசினர். அவள் உற்பத்தி அளவை மெச்சினர். மரியாதையுள்ள உழைப்பாளி மரபில் பிறந்தவள் எனக் கூட்டத்தினருக்கு நினைவுபடுத்தினர். ஆனால், அதிகம் பேசுபவளும் சிகரெட் பிடிப்பவளுமான கத்யாவுக்கு விரோதமாகவே வோட் சென்றது. பெருந்தொகையினராயிருந்த இளைஞரும் அவளுக்கு எதிராகத்திரும்பினர்.

சோவியத்கள் தங்கள் குற்றங்களைத் தாங்களே கண்டித்துக் கொள்கின்றனர் என்பதற்கு இது ஓர் உதாரணமென பிரமாதப்படுத்தப்படுகிறது. சோவியத் ருஷியாவில் எவருக்கு விரோதமாகவும் (கட்சித்தலைவர்கள் தவிர்த்து) தம் கருத்தை வெளியிட அனுமதியுண்டு என்று பறைசாற்றப்படுகிறது. பொலித் பீரோவிலுள்ளவரையோ கம்யூனிஸ்ட் மத்தியக்கமிட்டியில் உள்ளவரையோ மட்டும் தாக்கிவிட்டால், அவன் உடனே " டிராட்ஸ்கியைப் பின்பற்றுகிறவன் " என்றே " மேலைநாட்டு

ஏகாதிபத்தியக் கொள்கைக்கு ஓர் அடிமை" யென்றே அவமானப்படுத்தப்படுகிறுன்.

சத்யாவின்மீது குற்றங்கண்டவர்களைத் தொந்தரவு செய்த இதே பிரச்னையின் மற்றோர் அம்சமானது, கோம்சோமோல்ஸ்காயா பிரவ்தா என்ற கம்யூனிஸ்ட் இளைஞர் பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையின் மூலம் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

அது காதலுணர்ச்சி மிகுந்த ஒரு பெண், அவளுடைய நாகரிகம் தெரியாத காதலன் இவர்களுடைய சோகக்கதையை விரிவாக்கக்கூறுகிறது. நடனமாட அந்த இளைஞன் அழைத்ததை விளக்கும்போது எழுத்தாளன் அவலச்சுவையின் உச்சநிலையை இங்ஙனமாக எட்டுகிறுன் : "கலகக்காரன் ஒருவனையோ அல்லது குற்றவாளி ஒருவனையோ தேர்ச்சியற்ற போலீஸ்காரன் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் செல்வதைப்போல, அவன் அவள் காத்தைப் பிடித்து இசைக்கோஷ்டியார் இருந்த இடத்திற்கு இழுத்துச் சென்றான். அப்பெண்ணுக்கு நடனம் என்றால் வெகு பிரியம். ஆனால், இது சமயம் அவள் அழைப்பை மறுத்தாள். இதற்குப்பின் அவர்கள் சந்திக்கவேயில்லை. அவள் உள்ளத்தில் ஒளிர்ந்த காதல் என்றென்றும் மங்கி அணைந்தது."

ஆசிரியன் நாட்டின் இளைஞருக்கென நன்னடத்தைபற்றிய நூல்களை வெளியிடவேண்டுமென்றும் அந்நூல்களில் ஒன்றுக்கு "பெண்ணினத்தவர் கால்விரலை மிதிக்காதிருக்கும் கலை" என்று பரிகாசார்த்தமாகப் பெயரிடலாம் என்றும் ஆலோசனை கூறினான். "பெரியவர்களும் சிறிய பிள்ளைகளும் தினசரி வாழ்க்கையில் பெண்கள்பால் தம் மரியாதையை வெளிப்படையாகக் காட்டுவதே உண்மையான பண்பாடு" என்பதை அனைவரும் உணரச் செய்வதே சரியான வழி என்பது அவன் அபிப்பிராயம்.

"பண்பாடு" என்ற சொல்லைவிட "உண்மையான பண்பாடு" என்பதே இன்று ருஷியாவில் மிக அர்த்தபுஷ்டியுள்ள சொல்லாகும். தெரு வண்டியிலோ, தரைக்கீழ் செல்லும் ரயில் வண்டியிலோ முதியவன் ஒருவனுக்கு உன் இடத்தைத் தராமலிருப்பது பண்பாடற்றதொரு செயலாகும். பெண்ணொருத்தி உன்னிடம் பேசுகையில் உட்கார்ந்திருப்பதோ, பொது இடத்தில் துப்புவதோ, சாப்பிடும்போது சத்தமாக சப்புக் கொட்டுவதோ இவையும் மற்றும் இவைபோன்ற சிறு விஷயங்களும் பண்பாடற்றவையெனவே நிந்திக்கப்படுகின்றன.

புரட்சியும் பண்பாடும்.

சோவியத் ருஷியாவில் எப்போதுமே இவ்விதமாக இருந்ததில்லை. ருஷிய மக்கள் சொத்துடையவர் ஆதிக்கம் பெற்றிருந்த பழைய உலகுடன் போராடி வென்றபோது, ஒழுங்கு மரியாதை விதிகள், நன்னடத்தை விதிகள் இவற்றின் சிக்குகளை நீக்கி எளிதாக்குவதோ அல்லது அடியோடு ஒழிப்பதோ தான் சோவியத்களின் சட்டமாக இலங்கியது. 1917 புரட்சிக் குப்பின் பிரபுபாவனையும், பணம், பதவி, உயர்பிறப்பு முதலியவற்றையே உயர்வாக மதித்து நடந்துகொள்ளும் போக்கும் ஒழிந்தன. அறிவாளிகளும் தனி உரிமைகள் படைத்த உயர்வகுப்பினரும் சீரிய நன்னடத்தை, ஒழுங்கு, மரியாதை ஆகியவற்றின் ஒவ்வொரு அடையாளத்தையும் கைவிட மற்றவரையும்விட மிகுந்த ஆவலுடையவராக விளங்கினர்.

மாஸ்கோ, லெனின்கிராட் நகரங்களின் தெருக்களில், நடையிலிருந்தே ஜாரிஸ்ட் ஆபீசர்கள் என்று தெரியக்கூடியவர்கள் குடியானவர் அணியும் ஆடைகள் அணிந்து உல்லாசமாக நடந்தனர். மேன்மையான தோற்றமுடைய உயர்குலப் பெண்கள் ஆட்டுத்தோல்களையும் நாட்டுக் கம்பளங்களையும் போர்த்துச் சென்றனர். செய்ண்ட் பீட்டர்ஸ்பர்க்கின் மாளிகைகளில் விருந்தினரை உபசரிக்கும் அறைகளில் அலங்காரமாக வீற்றிருந்த சீமாட்டிகள் முரட்டுத்தனமான நடையுடையபாவனைகளைக் கற்க பல நாட்களும் வாரங்களும் கழித்தனர். அவர்கள் புகை

குடித்தனர்; மது அருந்தினர்; ஆண்களின் அபிநயங்களை நகல் செய்தனர். காலமாறுதலையொட்டி இங்ஙனம் பரிதாபமாக நடந்துகொண்டனர். மாறும் உலகில் பாதுகாப்புடன் வாழ அதுவும் ஒரு வழியெனக் கருதினர். ஆனால், ஐயோ பாவம்! அவர்கள் தங்களையே ஏமாற்றிக்கொண்டனர்.

1930-க்குப் பின்.

1930-ம் ஆண்டிலிருந்தே சோவியத் ராஜ்யம் வலுவும் திடமும் அடையவாரம்பித்தது. மகாயுத்தம் இதற்கு அதிசயத்தக்க வேகம் அளித்தது. இங்ஙனம் ஒன்றிப் பலப்பட்ட ருஷியாவில் பல விஷயங்கள் புதிய மதிப்புக்கள் பெற்றன. நன்னடத்தை இவற்றிலொன்று. ஆனால் இதில் அபிவிருத்தி நிதானமாகவே இருந்தது. ஒரு சர்வாதிகாரம் ஒரே நாளில் அரசியலைத் தலைகீழாக மாற்றமுடியும்; அது பேனாவின் ஒரு வீச்சினால் தோழர் தலைவர்களை ஜெனரல்களாகவும் கர்னல்களாகவும் லெப்டினெண்ட்களாகவும் ஆக்கமுடியும்; எச்சரிக்கையின்றி அன்பார்ந்த மார்ஷல் டிட்டோவைப் போன்ற ஒருவரை தேசத்துரோகியாக அறிவிக்கமுடியும். ஆனால், அது அதே விரைவுடன் இருபது கோடி மக்களின் நடத்தையையும் சுவைகளையும் மாற்றிவிடமுடியாது. "நன்னடத்தைக்குக் காலமும் இடமும் வேண்டும்" என்று யாரோ ஒருவர் சொன்னார்.

லஜார் ககனோவிச் என்பவர் தொழில் சச்சரவு விஷயங்களில் ஸ்டாலினின் பிரதான அதிகாரியாக இருந்தார். பிறகு ரயில்வே விஷயங்களில் ஜார் போன்று சர்வாதிகாரம் செலுத்தினார். நான் 1935-ல் முதன் முதலாக மாஸ்கோ சென்றபோது அவரைப்பற்றிய கதையொன்று நிலவிவந்தது. அவர் ஒரு சமயம் ஊரால்லிலிருந்து ரயில்வே ஆபீசர் ஒருவரைத் தம்மைப் பார்க்குமாறு அழைத்திருந்தார். அந்த ஆபீசர் முகச்சவரம் செய்துகொள்ளாமலும் உள்சட்டையை மாற்றாமலும் நேராக ஸ்டேஷனிலிருந்து தம் ஆபீசுக்கு வந்ததற்காக

டஜ்ஜார் ககனேவிச் அவரைக் கண்டித்து அனுப்பிவிட்டார். அவர் தம் உடம்புக்குச் சோப்புபோட்டு குளித்துவிட்டு தலை வாரிக்கொண்டு முகச்சவரம் செய்துவந்தபிறகே பார்த்தார். சோவியத்களின் தீர புது உலகில் இத்தகையதொரு புது விஷயமும் தலைகாட்டியது.

1930-வது வருஷங்களின் மத்தியில் நாடெங்கும் நடனப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. நகரங்களில் அநேகமாக ஒவ்வொரு ஆபீசிலும், ஒவ்வொரு ஆலையிலும், கூட்டுப்பண்ணை கிளப் ஹவுஸ் ஒவ்வொன்றிலும் நடனக்கழகங்கள் ஏற்பட்டன. தலைவர்கள் இதற்கு ஊக்கமளித்தனர். எல்லா வயதைச் சேர்ந்தவரும் இராச்சாப்பாட்டிற்குப்பின் வந்து நடனமாடினர். பெரிய கிளப்புகளும் இசை அரங்குகளும் ஊரிலுள்ள சிறந்த ஜாஸ் வாத்யக்கோஷ்டிகளின் சேவையைப் பெற ஒன்றோ டொன்று போட்டியிட்டன. சினிமாக்கொட்டகைகளில் ஆட்டம் ஆரம்பிக்கும் அரைமணி நேரத்திற்குமுன் இக்கால மேலை நாட்டு நடனங்கள்பற்றிய விசேஷ படங்களைக் காட்டினர்.

சிறைக் காம்புகளிலும் சிப்பந்திகளுக்காகவும் அலுவல் மிகுந்த ஆபீசர்களின் போதுபோகாமல் சலிப்படைந்த மனைவிமார் களுக்காகவும் நடனக்கழகங்கள் நடந்தன. நடன உபாத்தி யாயர்கள் அமர்த்துவதற்குப் பதிலாக இந்த காம்ப் அதிகாரி கள் வாலிப ஆண் கைதிகளை விடுதலை செய்து அவர்களுடைய சேவையைப் பெறுவதுண்டு.

"பருத்தவர்களுக்குரிய பாமரத்தன்மையான இசையே ஜாஸ்" என்றார் மாக்ஸிம் கோர்க்கி. மக்கள் அவர் மொழியை மறந்தனர். உத்சாகத்துடன் பொங்கிய லியோனித் உதசாவ் தம் தலைமுறையில் மக்களால் பெரிதும் விரும்பப்படும் மனிதர் ஆனார். வடதுருவப் புகழுடைய இவான் பப்பானின் உத சாவின் இசைத்தட்டுக்களைப் பாடினார். அவர்தம் நாட்குறிப் புப் புத்தகத்தில், "வந்தனம் உதசாவ். உங்கள் இசைத் தட்டுகள் எங்களுக்கு இன்பமளித்து எங்கள் கடுகடுப்பான வாழ்க்கைக்குச் சுவையும் அழகும் தந்தன" என எழுதி

யிருந்தார். யுத்தத்தின்போது செஞ்சேனையினர் லியோனித் உதசாவே நாட்டின் உயர்தர சங்கீத வித்வான் என வோட் செய்தனர்.

இப்போதெல்லாம் ஜாஸ் இசையானது, "இழிந்து மடிந்து வரும் முதலாளித்வ நாகரீக"த்தின் வெளிப்பாடேயென நிந் திக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளது. நாடோடி இசைக்கும் நாடோடி நடனத்திற்கும் மட்டுமே அதிகாரிகள் அனுமதியுண்டு.

ஹிட்லர் ஜாஸ் இசையை ஜர்மனியில் தடுத்த அதே சமயத் தில் அதிசயமாக ருஷியாவில் அது செழித்தது.

அழகிய வாழ்க்கை வெறி.

நடையுடைபாவனை, மகிழ்ச்சிகரமான பொழுதுபோக்குகள் இவற்றிலெல்லாம் புதிய பிரமாணங்கள் ஆவலுடன் ஏற்கப் பட்டன. சோவியத் மக்கள் இவற்றிற்காக ஏங்கினர். நாட்டில் ருஷியர் கூறும் 'அழகிய வாழ்க்கை' காணமல் எங்கும் வறண்டிருந்தது. 1935-ல் ஸ்டாலினே இவ்விதமாக அறி வித்தார்: "வாழ்க்கை செம்மைப்பட்டுவருகிறது. தோழர் களே, அது உல்லாசமாகிவருகிறது". அழகிய வாழ்க்கையை அடைவதற்கான முயற்சிகள் உச்சநிலை அடைந்தன. ஸ்டா லினின் மொழிகள் அதிகார பூர்வமான அங்கிகாரமாகும். சர்வாதிகார ஆட்சியில் இது குறிப்பிடத்தக்கதொரு விஷயமாகும்.

அழகிய வாழ்க்கையின்மீதுள்ள நாட்டம் தினசரி வாழ்க் கையின் அம்சங்களை ஒன்றனபின் ஒன்ருகத் தழுவ ஆரம் பித்தது. சிற்றுண்டி விடுதிகளிலும், ஆலைகளில் உள்ள காண்டீன்களிலும். போர்க் முள்கள், கரண்டிகள், கத்திகள் போதிய அளவு சப்ளையாவதில்லையென்றும், பரிமாறுவோரிடத் திலும் சாப்பிடவருவோரிடத்திலும் திடுக்கிடும்படியான அளவு நாகரீகப்பண்பேயில்லை என்றும் பத்திரிகைகள் கண்டித்து எழு தின. 1935 வாக்கில் அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்து திரும்பின ஜனரஞ்சிதமான சோவியத் நகைச்சுவை

யாளர்களான இல்பும் பிட்ரோவும் அமெரிக்க சர்விஸ் முறைகளை வரம்பின்றிப் புகழ்ந்து ஒருவிதப் பரபரப்பை உண்டாக்கினர்.

அழகிய வாழ்க்கை இன்னதென்பதை உணரும் வாய்ப்பே பெறாத லட்சக்கணக்கான மக்களிடையேயும் அழகிய வாழ்க்கை பற்றிய கனவு பரவியது. அவர்களுடைய சுவைகள் எப்போதும் மேலானவையாக இல்லையென்பது வருந்தத்தக்கது. யுத்த முற்கால, யுத்தகால, யுத்த பிற்கால சோவியத் நகரங்களில் பல பெண்கள் தம் கூந்தல் மயிருக்கு வெட்கக்கேடான மஞ்சள் வர்ணம் பூசிக் காட்சியளித்தனர். நலைநகர் ஓட்டல் அழகு ஷாப்புகளில் குறைந்தது அரை டஜன் பதக்கம் தரித்த செஞ்சேனை ஆபீசர்கள் இயந்திர சாதனங்களைக் கொண்டு தலை மயிரை அலைகள்போல சுருள்சுருளாகப் பதியுமாறு ஒழுங்கு செய்துகொண்டனர்.

உக்ரேனிய நகரமான காரகோவ் விடுதலையடைந்து இரண்டு நாட்களே இருக்கும். அது இன்னும் கனிந்து எரிந்துகொண்டிருந்தது. அப்போது செஞ்சேனை சோல்ஜர்கள் வரிசையாக ஒரு நிலவறைமுன் நிற்கக் கண்டேன். நடுவில் பலகையொன்றில் சாக்குக்கட்டியால் "கைவிரல் நகங்கள் அழகுபடுத்தப்படும்" என்று அவசரமாக எழுதப்பட்டிருந்தது.

கணக்கற்ற குடியானப் பெண்கள், பட்டு காலுறைகள், உள் உடுப்புக்கள், ஆடைகள் இவற்றிற்காகக் கடைகளில் வேகமாகத் தள்ளி ஓடினர். இதனால் இப்பண்டங்களில் குறைவு ஏற்பட்டது.

பொதுவாக, வாழ்க்கைச் சௌகரியங்களை அடையவேண்டும் என்ற இப்புதிய விருப்பத்தின் பயனாக, சோவியத் இலகுத் தொழில்களில் உற்பத்தி முன்னேறாத நிலையொன்று ஏற்பட்டுள்ளது. ஏனெனில் நாட்டின் மூலப்பொருள் வசதிகளும் மனித சக்தியும் பெரும்பாலும் யுத்தத்திற்குத் தேவையான தொழில்களிலேயே பிரயோகிக்கப்படுகின்றன. மக்களின் தின

சரி வாழ்க்கைத் தேவையான பண்டங்கள் சோவியத் யூனியனில் போதிய அளவு உற்பத்தியாகாமலிருப்பதுடன் மட்டரகமாகவும் உள்ளன. இதனால், வெளிநாடுகளிலிருந்து எப்படியோ சோவியத் மார்க்கெட்டுக்கு வரும் சொற்ப பொருள்களின் உயர்வும் மதிப்பும் அதிகரிக்கின்றன.

ஹிட்லரின் படையெடுப்பினால், தினசரி வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களின் உற்பத்தி ஏறக்குறைய முற்றும் நின்றுவிட்டது. ஆனால், அவற்றின்பால் மக்களின் ஆவல் மட்டும் குறையவில்லை. நான் யுத்தகாலம் முழுதும் ருஷியாவிலேயே இருந்திருக்கிறேன். அதனால் முன்பு இருந்ததைவிட அக்காலத்தில்தான் மக்கள் நன்றாக உடுத்தியிருந்தது போலக் காணப்பட்டனர் என்று நான் உறுதியாகச் சொல்வேன். ஞாயிற்றுக்கிழமைக்கென ஒதுக்கிவைத்திருந்த சிறந்த ஆடைகளையெல்லாம் பெரும்பாலோர் சாதாரண காலங்களிலும் உடுக்க நேர்ந்ததே இதற்குக் காரணம்.

நேர்த்தியான உடைகள், பலவகையான, சுவையுடன் பரிமாறப்பட்ட உண்டிகள், வாழ்வதற்குரிய ஜாகை, நன்னடத்தை-இவையாவும் அழகிய வாழ்க்கைக்கு உரியன. இவற்றின்பால் உள்ள ஆர்வம் முன்னையைவிட இப்போதே அதிகமாக இருக்கிறது. யுத்தகால பயங்கரங்களையும் துன்பங்களையும் தியாகங்களையும் அனுபவித்த மக்களின் மனம் இப்போது இவற்றின்மீது திரும்பியிருக்கிறது. யுத்தகால அனுபவங்கள் மட்டுமன்றி இவற்றினும் முக்கியமான இதர அம்சங்களும் வேலைசெய்துள்ளன.

யுத்தத்திற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பும், சண்டை நடந்து கொண்டிருந்த நீண்ட வருஷங்களின்போதும், சோவியத் தலைவர்களும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் அறுபது லட்சம் அங்கத்தினர்களும், பாஸிஸ்ட்களுடன் நடந்த போரில் வெற்றியடைந்ததும் வாய்க்கப்போகும் அழகிய வாழ்க்கையின் பெயரால் மக்கள் தம் உழைப்பையும் வியர்வையையும், உதிரத்தை

யும் அளிக்கவேண்டுமென ஊக்கமளித்தனர். சோவியத்களே மூட்டின இந்த ஆவல் இப்போது பேரார்வமாகப் பரிணமித்துள்ளது.

இந்த அழகிய வாழ்க்கையானது ருஷியரின் கற்பனையில் மட்டுமே இனியும் இருந்துவரவில்லை. லட்சக்கணக்கான சோவியத் ஆபீசர்களும் சோல்ஜர்களும், சோவியத் படைகளில் ஊழியம் செய்த பல்லாயிரக்கணக்கான பெண்களும், சோவியத் ருஷியாவுக்கு மேற்கேயுள்ள நாடுகளிலிருந்து பல அதிசயக் கதைகளுடனும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைச் சுமந்தும் திரும்பிவந்துள்ளனர். அவர்கள் தேவதூதர்களின் பிரகாசமான இறக்கைகளுடன் ஜொலித்த சமையல் அறைகளையும் ஸ்நான அறைகளையும் பற்றித் தம் நண்பர்களிடம் கூறினர். பார்வைக்கு இன்பமளிக்கும் அற்புத அழகுக்குரிய சாதனங்களையும் கருவிகளையும் பற்றிய விவரங்களைக் கொண்டுவந்தனர். பாரிஸின் மத்தியிலும் தூய்மையையும் மரியாதையையும் பற்றிய நீண்டகதைகளைச் சொல்லினர். ருஷியரிற் பெரும்பாலோர் புத்தகங்களிலிருந்தும் அயல்நாடுகளிலிருந்துவந்த எதிரொலிகள் மூலமாகவும் மட்டுமே அறிந்துகொண்ட நாகரிக இன்ப வாழ்க்கையின் உண்மையை இம் மனிதரும் இப்பெண்களும் நேரில் நிருபித்தனர். இந்த எதிரொலிகளிற் சில ருஷியாவுக்குத் திரும்பிவந்த சோவியத் ஜுதந்திரிகளின் உஷாரான உதடுகளினின்று வந்தன.

அமெரிக்காவில் பலர், பிரயாணம் செய்த இச் செஞ்சேனையினரும் பெண்களும் சோவியத் ஆட்சிக்கு விரோதமாயிருக்க வல்ல ராஜீய சக்திகள் என்று எளிதில் எண்ணிவிடுகின்றனர். அவர்கள் அங்ஙனமாக இருக்கலாம். ஆனால், தொலைவிலும் மறைமுகமாகவுமே இருப்பர். அவர்களிற் பலர் சேனையிலிருந்து கலைக்கப்பட்டு பரந்த நாட்டில் இங்குமங்குமாகப் பரவியுள்ளனர். அவர்கள் தம் தொழிற்சாலைகளிலும், கூட்டுப் பண்ணைகளிலும், மற்றும் இதர சோவியத் ஸ்தாபனங்களிலும் சொற்ப தொகையினராகவே இருப்பர்.

ஆயினும், வாழ்க்கைச் சௌகரியங்களின் பால் ஆவல் மிகுந்தவராயுள்ள மக்களைப் பலப்படுத்துபவர் ஆதலால், அவர்களும் முக்கியமானவர்களே. அவர்கள் கூறும் கதைகள் மனத்தில் பதிகின்றன. அவர்களின் உதாரணம் (கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் உள்பட) தம் மிகப்பரந்த தாய்நாட்டின் மூலைமுடுக்குகளில் வாழ்க்கையைப் பாதிக்கின்றன.

கிரெம்லின் மாளிகையில் வதியும் புத்திகூர்மையான அரசினர், நல்வாழ்க்கையின்பால் உள்ள மக்களின் இவ்விருப்பத்தைச் சட்டென்று உணர்ந்து விரைவில் இதை வழிப்படுத்தவும் கட்டுப்படுத்தவும் ஆரம்பித்தனர். தங்கள் புனரமைப்புத் திட்டத்தையும் தொழில் திட்டத்தையும் நிறைவேற்றிவைப்பதில் முனைந்துள்ள அவர்கள், அழகிய வாழ்க்கைக்கு இன்றியமையாத ஏராளமான பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான இலகுத் தொழில்களையும் குடியிருப்பு வசதிகளையும் பற்றிய ஐந்து வருஷத் திட்டமொன்றை ஆரம்பிக்கக் கருதவேயில்லை. அதற்குப் பதிலாக, கோடிக்கணக்கான ருஷிய மக்களின் தேவையைத் தீர்ப்பதற்கான பண்டங்களின் இறக்குமதியை ஓரளவு அதிகரித்தனர். அதோடு பிரசார வெள்ளத்தையும் தளர்த்தினர்.

" தினசரி வாழ்க்கையில் சோவியத் ருஷியாவில் சாதிக்கப்பட்டுள்ள கலாசார அபிவிருத்தியின் உயர்நிலைக்கு ஒப்ப வாழ வேண்டும் " என்பதே அக்காலத்தின் மூல வாக்கியமாக இருந்தது. அவ்வப்போது **கோம்சோமோல்ஸ்காயா பிரவ்தா** என்ற பத்திரிகையில் ஒரு முழு பக்கத்திலும் நாட்டின் ஒரே ஹாஸ்யப்பத்திரிகையான **குரோகொடைல்** என்பதன் முழு இதழிலும் கெட்ட நடத்தையுடையவரை வெட்கப்படுத்துவதும் 'குகைக்கால காட்டுமிராண்டி மனித'ரை எச்சரிக்கை செய்வதுமான கட்டுரைகள் வெளிவரும். பள்ளிக்கூடங்களில் கட்டுப்பாடு இறுக்கப்பட்டது. பள்ளிக்கூடக் குழந்தைகள் வெளுப்பான கழுத்துப்பட்டைகள் அணியுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். அங்ஙனம் அணிகின்றனராவென்பதும் தினந்தோறும் பரிசோதிக்கப்படுகிறது.

ராஜதந்திரிகளும் எமிலி போஸ்டும்.

தங்கள் உத்தியோகப் பதவிகள் காரணமாக பொதுவாழ்வின் நோக்குக்கும் ஆராய்ச்சிக்கும் உட்படுபவர்களின் விஷயத்தில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது .

இங்ஙனமாக, சோவியத் யூனியனில் வேலை செய்யும் சற்றேறக்குறைய இருபது லட்சம் ஆபீசர்களையும் நிர்வாகஸ்தர்களையும் தொந்தரை செய்யும் தீவிர நன்னடத்தை நடவடிக்கைகள் நடந்தவண்ணமாக உள்ளன. அரசாங்க மாளிகையில் நடக்கும் கூட்டங்களுக்கும் வரவேற்பு விழாக்களுக்கும் அழைக்கப்படும் ஆண்பெண்கள் அயல்நாட்டு ராஜதந்திரிகளுடன் நெருங்கிப் பழகுகிறார்கள் அல்லவா ? அப்படிப்பட்டவர்களுக்கு நடை உடை பாவனை விஷயங்களில் கட்டாயச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. கடைசியாக, ராணுவப் பள்ளிக்கூடங்கள், ராணுவப் பயிற்சிக் கழகங்கள், ராஜதந்திரிகளுக்காக உள்ள அயல்நாட்டுக்காரியாலய இன்ஸ்டிடியூட்கள் ஆகியவற்றில் நன்னடத்தைமுறை சம்பந்தமான பாடங்கள் போதனுமுறையில் இடம் பெற்றுள்ளன.

ராஜதந்திரிகளுக்கான இந்த இன்ஸ்டிடியூட்களில் பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இவற்றில் வெளிநாடுகளில் ராஜதந்திர வேலைக்காகப் பயிற்சி பெறும் இளைஞர்களுக்கு அளிக்கப்படும் நன்னடத்தைமுறை பாடங்களில் எமிலி போஸ்ட் ஆராய்ச்சியும் அடங்கியுள்ளது. மிஸ் போஸ்டின் புகழ்பெற்ற ஜோடிகளான ஒல்ட்நேம் தம்பதிகளின் நன்னடத்தைக்கு ஒப்ப ஒழுக வேண்டுமென ருஷியர் உத்சாகப்படுத்தப்படுகின்றனர். பகட்டில்லாத, குற்றங்காணமுடியாத நடத்தையே குறி. சுருங்கக் கூறின், அதுவே ஆங்கிலோ-அமெரிக்க பிரபுபாவனையின் இறுதியான லட்சியம்.

இங்கே ஒரு விஷயத்தைக் குறிப்பிடலாம். புரட்சிக்கு முந்திய காலத்து ருஷிய நன்னடத்தைமுறை நூல்கள் சிற்சில சமயங்களில் பழைய புத்தகக்கடைகளுக்குப் போய்

விடுகின்றன. இன்று உயிரோடுள்ள அன்னிய ஆசிரியருள் மிகச் சிறந்தவர் என ருஷியர் மதிக்கும் ஹெமிங்வேயின் நூல்களின் மொழி பெயர்ப்புக்களுக்குக் கொடுக்கும் விலையை விட அதிக விலைகொடுத்து இப்பழைய புத்தகங்களை வாங்கு கின்றனர்.

ஒரு காலத்தில் சிறப்புடன் வாழ்ந்த, ஆனால் இப்போது செல்லரித்து ஒதுங்கிக்கிடக்கும் ஜார் பிரபுக்களின் விதவைகளை யும் அவர்களுடைய மாடி அறைகளிலிருந்து பிடித்து இழுத்துக் கொண்டுவந்து நன்னடத்தை ஒழுக்கமுறைக்குரிய சரியான பழைய காலத்து விதிகளை இளைஞர்களுக்குப் போதிக்குமாறு செய்கின்றனர்.

இதன் பயன் என்னவெனில் நன்னடத்தை விஷயங்களில் முன்போல பரிகாசத்திற்குரிய பிழைகள் ஏற்படுவதில்லை. கப்பல் தளத்தின்மீதுள்ள ருஷியர் கைதுடைக்கும் துண்டுகளை சரி யாகவே உபயோகிக்கின்றனர். வெளியே பிரயாணம் செய்யும் சோவியத் பெண்கள் நன்னடத்தைக்குரிய சரியான ஆடை களையே வாங்குகின்றனர்.

ஆனால், செஞ்சேனை ஆபீசர்கள் விஷயத்தில்தான் அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

ருஷிய - ஜர்மன் யுத்தம் மூண்டவுடனேயே வந்த நேசநேச ராணுவ மிஷன்களுக்கு வரவேற்புகளுக்கு மேல் வரவேற்பு களாக அளிக்கப்பட்டன. அப்போதுதான், சோவியத் ஆபீசர் களுக்குச் சமூக வாழ்வுக்கு ஆயத்தம் செய்யும் பயிற்சிமுறை களில் விரைவில் மாறுதல்கள் செய்யப்பட்டன. அரசினர் நடத்தும் பொதுக் காரியங்கள் அல்லது கொண்டாட்டங்களில் செஞ்சேனை ஆபீசர்களில் சிறந்தவரும் சமூகத்தில் நடந்து கொள்ளவேண்டிய முறை அறியாமல் பரிதாபகரமான காட்சி அளித்தனர். வியப்படைந்த நிருபர்கள் சோவியத் ஜனரல் களையும் ஆபீசர்களையும் 'காகிதப் பூக்கள்' எனக் கேலி செய் தனர். அவர்கள் அபூர்வமாகவே நடனமாடினர். சம்

பாஷையில் இரண்டு சொற்களுக்கு மேல் பேசமாட்டார்கள். எப்போது போய்விடலாமென அருகிலுள்ள வெளியே செல்லும் வழிகளைப் பார்த்துக்கொண்டிருப்பர். இதைக்கண்ட மோலடாவ் புருவங்களை நெறித்தார். இதைக் கேள்விப்பட்ட ஸ்டாலினும் வெறுப்பைக் காட்டினர். பழைய ஜார் காலத்து ஆபீசரும் இது சமயம் ராணுவ ஸ்டாப்வ் ஆபீசர்களின் தலைவருமான காலஞ்சென்ற மார்ஷல் ஷப்போஷ்னிகோவ்விடம் இது அறிவிக்கப்பட்டது.

இதன் பயனாக, அந்தஸ்து, வகுப்பு வேற்றுமை அடிப்படையில் செஞ்சேனை கிளப்புகள், ஆபீசர் கிளப்புகள் என்றும், கமிஷன் பெறாத ஆபீசர் கிளப்புகள் என்றும், சாதாரண சோல்ஜர் கிளப்புகள் என்றும் தனித்தனியாக அமைக்கப்பட்டன. ஆபீசர் கிளப்புகளின் முக்கியமான காரியம், கரங்களை முத்தமிடுதல், குதிகால் 'கிளிக்' செய்தல், நடனம், சிற்றுண்டி சாலையில் இராச் சாப்பாட்டை முறைப்படி சமாளித்தல் முதலிய கலைகளை வளர்ப்பதேயாகும்.

செஞ்சேனையின் எமிலி போஸ்ட்.

இவ்விதமாக இருந்தபோதே லெப்டினண்ட் ஜனரல் அலக்சி இக்னாத்யேவ், முன்னணிக்கு வந்தார். அது முதல் அதே இடத்தில் நிலைத்திருக்கிறார். முன்பு ஜாரின் மெய்க்காப்பாளரின் கவுண்டாகவும் ஆபீசராகவும் இருந்தார். புரட்சிக்கு முன், ஜப்பான், சுவிடன், பின்லாந்து, பிரான்ஸ், ஆகிய இடங்களில் ருஷிய ராணுவ பரிவாரத்தில் இருந்தார். இப்போது எழுபது வயதுக்குமேல் இருக்கும் அவர் ருஷியாவிலேயே சுந்தர புருஷருள் ஒருவராக விளங்குகிறார். ஆறு அடி இரண்டங்குலம் உயரம். துணிபுவுள்ளவர், ஆயினும் அடக்கமாயிருப்பர். பேச்சில் சாதுரியம் ஒளிவீசும். தயக்கமின்றி சம்பாஷணையில் கலந்துகொள்வார். ஆயினும், வாயைத் திறவாத தம் தோழர்களின் மரியாதையையும் பெறுவார். வரவேற்பு வைபவங்களில் வழக்கமாகத் தம் மனைவியுடன் வருவார். அவள் முன்பெல்லாம் நல்ல நாட்டியக்காரியாக

விளங்கியவள். அவளுடைய பழைய வசீகரங்களும் உத்சாக மும் இன்னும் அற்புதமாக அப்படியே உள்ளன.

நன்னடத்தை, வசீகரம் இவையே உருவெடுத்த அவர் செஞ்சேனையின் எமிலி போஸ்ட் ஆவது இயற்கையேயாகும். **ஐம்பது வருஷம் ஒரு சோல்ஜர்** என்று அவர் மிக நன்ருக எழுதியுள்ள அதிசய நினைவுக்குறிப்புக்கள் அவர் காலத்தில் ஆஸ்தான வாழ்க்கை, நடையுடையாவனை ஆசாரங்கள் ஆகிய வற்றைப்பற்றி அரிய செய்திகள் பல தெரிவிக்கின்றன. சோவி யத் யூனியனில் அவை மிக ஆவலுடன் படிக்கப்படுகின்றன.

செஞ்சேனையில் நன்னடத்தை விஷயங்களில் சர்வாதிகாரியாக விளங்கும் வரையில் நாட்டின் படைகளில் அயல்மொழிகள் பயிற்சிக்கு மேலதிகாரியாக இருந்தார். சோவியத் ஆபீசர் களுக்குக் குறைந்தது அன்னியமொழி ஒன்ருவது தெரிய வேண்டும். எத்தனை மொழி தெரியும் என்பது ஓரளவு அவர்களின் சம்பளவிகிதத்தை நிர்ணயிக்கிறது. அயல்நாட் டினருக்கு விரோதமான நடவடிக்கைகள் எவ்வளவு பலமாக இருந்தாலும், அவற்ருேடு இதுவும் நடக்கிறது என்பது ருஷிய தேசியவாதம் தற்கொலை செய்துகொள்ளும் அளவுக்குச் செல் லக்கூடாது என்பதை போல்ஷிவிக்கர் ஒப்புக்கொள்வதைக் காட்டு கிறது.

ராணுவ நன்னடத்தை ஆசார ஒழுக்கங்களுக்கு மெருகிடும் விஷயத்தில் ஜனரல் இக்னுத்யேவ் இட்டது சட்டம். மார்ஷல் கள் முதல் ஜாரிஸ்ட் ஜனரல்களில் மிகப் பெயர்பெற்ற அலக் சாந்தர் சுவோரோவ்வின் பெயர் கொண்ட ராணுவப்பள்ளிக் கூட மாணவர் வரையிலும் அவர் அதிகாரம் பரவியுள்ளது.

சுவோரோவ் மாணவர்.

சோவியத் ருஷியாவின் பத்து சுவோரோவ் பள்ளிக்கூடங் களும் ஜார் காலத்து ஆபீசர்களின் புகழ்பெற்ற வீரதீரங்கள், மாதரிடம் அவர்கள் காட்டிய மரியாதை முதலிய நன்னடத்தை

ஒழுக்கங்களை அறிந்து அப்படியே அவற்றின்படி நடக்க முயற்சி செய்கின்றன. இத்தகைய வீரதீரங்களும் மரியாதை ஒழுக்கங்களும் யுத்தத்தில் மட்டுமன்றி, தெருவில் நடமாடும்போதும், நடனமாடும் மன்றங்களிலும் காட்டப்படவேண்டும் என்பதே அவற்றின் லட்சியம்.

இவ்விஷயத்தில் உபாத்திமார்கள் மட்டுமன்றி மாணவரும் வெற்றியடைந்துள்ளனர் என்பதற்கு அத்தாட்சியாக மாஸ்கோ தெரு ஒன்றில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நான் கண்டிருக்கிறேன்.

பத்து அல்லது பதினேரு வயதுள்ள சுவோரோவ் மாணவன் ஒருவன் சுறுசுறுப்பாக கறுப்பு யூனிபாரம் உடையும் சிவப்புத் தோள்பட்டையும், பனி போன்ற வெண்மையான கையுறையும் அணிந்து தெருவில் நடந்துகொண்டிருந்தான். வழியில் எதிர்பட்ட ஒவ்வொரு ஆபீசரையும் ராணுவமுறைப்படிக் கவனமாக வணங்கினான். தெருவில் சுற்றும் துஷ்டத்தனம் மிகுந்த சிறுவன் ஒருவனுக்கு இக்காட்சி பிடிக்கவில்லை. ருஷியப் பையன்கள் பலரைப்போல இல்லாதவன் அவன். ஆகவே, அவன், வழிநெடுக, பிற்காலத்தில் மார்ஷலாக வரக்கூடிய அம்மாணவனைப் பரிகசித்துக்கொண்டே பின்சென்றான். இளமாணவன் இந்நிந்தைகளை அசட்டை செய்ய தன்னால் இயன்றவரை முயன்றான். கடைசியாக, பின்னால் திரும்பி ராணுவமுறையில் குதிகால் 'கிளிக்' சப்தம் செய்ய, "பிரஜையே, இந்த அர்த்தமற்ற செயலை நிறுத்தி கொள்; இல்லையேல் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வேன்" என்று கம்பீரமாகச் சொன்னான். அந்தப் 'பிரஜை' நாக்கைப் பிதுக்கி அழகு காட்டினான். சுவோரோவ் மாணவன் தன் வெண்மையான கையுறைகள் அழுக்கடையாதிருக்கும் பொருட்டு அவற்றை விலக்கி அந்தப் பையனைக் கீழே பிடித்துத்தள்ளினான் பிறகு, மீண்டும் கையுறை அணிந்து ஒன்றுமே நடவாதது போல நடந்து வழியில் எதிர்பட்ட ஒவ்வொரு ஆபீசரையும் முறைப்படி வணங்கிச் சென்றான்.

சுவோரோவ் பள்ளிக்கூடத்தில் சீமாட்டியொருத்தியின் கரத்தை எங்ஙனம் முத்தமிடுவது என்பதுபற்றிப் பாடம் கற்ற சற்றேறக்குறைய முப்பது பையன்களை நான் கவனித்தேன். நான் அறிந்தவரையில் இந்தப் பையனும் அவர்களுள் ஒருவன். அம்மாணவர்கள் நூறுந்தடவையாக ராணுவ நடைபோட்டுமுகச் சுருங்கிய கிழஞ் சீமாட்டியொருத்தியிடம் சென்று குதிகால் 'கிளிக்' செய்ய, குனிந்து அவள் கரத்தில் முத்தமிட்டபோது அவர்களுடைய விழிகளில் நீர் துளித்தது.

எதிர்கால ஆபீசர்கள் கனவான்களிற் பலர், யுத்தத்தில் மாண்ட செஞ்சேனை வீரர்களாகவோ, ஜர்மானியருடன் சண்டை செய்த கொரில்லா சாரணர் சிறுவராகவோ இருந்தவரின் புதல்வரேயாவர். சுவோரோவ் பள்ளிக்கூடங்களில், மேசை யைச்சுற்றி உணவருந்த உட்காரும்போது நடந்துகொள்ளவேண் டிய முறைகளை முதன்முதலாகக் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. மனிதனுக்கும் மிருகத்துக்கும் உள்ள வித்தியாசம் என்ன வெனில், மனிதன் தன் உணவை வாயண்டை கொண்டு செல்கிறான்; மிருகமோ, உணவண்டை தன் வாயைக் கொண்டு செல்கிறது—என்று அவர்களுக்குச் சொல்லித்தரப்படுகிறது. கைதுடைக்கும் சிறு துவால், போர்க் முள், கத்தி, கரண்டி, சிறு தட்டின்மீது வைக்கப்படும் தேநீர் கோப்பை இவற்றை யெல்லாம் எவ்விதம் கையாளவேண்டும் என்பது பிள்ளை களுக்குக் காட்டப்படுகிறது. தேநீரைச் சிறு தட்டில் ஊற்றிச் சாப்பிடுவது தடுக்கப்படுகிறது. இவையாவும் பழைய ருஷிய சம்பிரதாயங்களுக்கு நேர் எதிரானவையாகும்.

ஆபீசர்களின் பிரச்னைகள்.

தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உயர்தரக்கல்லூரி படிப்பு படித்திருந்தாலன்றி எந்த சோவியத் ஆபீசரும் இன்று மணந்துகொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், ஆபீசர் களில் பெரும்பாலோர் சாமானிய சோல்ஜர் பதவியினின்றே ஏறியவர்களாவர். ஆதலால், இவ்வித அமுலுக்கு வருமுன் மணந்தவர்கள் தம்மைப் போன்ற பெண்களையே கொண்டனர்.

அப்பெண்கள் பெரும்பாலும் சாமானிய குடியானப் பெண்களாகவோ, ஆலையில் வேலை செய்த பெண்களாகவோ தான் இருந்தனர். நெப்போலியன் சமஸ்தானத்தில் நடந்ததைப் போன்றே இங்கும் இது உண்மையானதொரு பிரச்னையைச் சிருஷ்டித்துவிட்டது.

பிற நாடுகளில் வாழ்க்கையில் வெற்றியடைந்தவர்களைப் போலவே இந்த ஆபீசர்களில் சிலர் தம் மனைவியரை விலக்கி நடிகைகளையோ, நாட்டியக்காரிகளையோ, கல்வியும் வசீகரமும் வாய்ந்த தம் காரியதரிசிகளையோ மணப்பதன் மூலம் பிரச்னையைச் சமாளித்தனர். ஆனால் போல்ஷிவிக் தலைவர்கள் இப் பழக்கத்தை வெறுக்கின்றனர். பொதுஜன அபிப்பிராயமும், மணப்பிரிவினையைக் கடினமாக்கும் சோவியத் சட்டங்கள் இடைவிடாமல் இயற்றப்பட்டுவருவதை அங்கீகரிக்காவிடினும், இப் பழக்கத்தை மட்டும் அழுத்தமாகக் கண்டிக்கிறது. இச்சட்டங்கள் ஆபீசர்கள் விஷயத்தில் மிகக் கடுமையாக உள்ளன. தம்முடைய உயர்தர கமாண்டர்களின் அங்கீகாரமின்றி மணப் பிரிவினைக்கு மனுபோடக்கூட அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

கதைகளுக்கு இலக்கு ஆன மனைவியர்.

சோவியத் கணவனுடைய வாழ்க்கை அந்தஸ்த்திற்கும் மனைவியின் பண்பாட்டுக்கும் இடையே பலபேரிடத்தில் காணப்படும் பொருந்தாமை பல உதாரணங்களில் இன்னும் சமாளிக்கப்படாத பிரச்னையாகவே இருந்துவருகிறது. இப்பிரச்னை சோவியத் இலக்கியத்தினுள்ளும் இடம்பெற்று பல சிறு கதைகளுக்குரிய விஷயமாகியுள்ளது. இப்போது அவமானத்திற்கு ஆளாகியுள்ள ஆசிரியர் மிக்காய் ஜே.ஷெங்கோவின் சிறு கதையொன்று உயர்தர சோவியத் நிர்வாகியொருவனுக்கும் அவனுடைய கல்வியறிவற்ற மனைவிக்கும் இடையே ஏற்பட்ட கஷ்டங்களைப்பற்றி கூறுகிறது. ஒருநாள் எழுத்தறிவற்ற அம் மனைவி தன் கணவனுடைய சட்டை ஜேபியில் கடிதமொன்று காண்கிறாள். அது நேர்த்தியான நீல நிறக் காகிதமொன்றில்

மிக அழகான கையெழுத்தில் எழுதப்பட்டுள்ளது. பொறுமை யுற்ற மனைவி கோயமுற்ற பெண் புலியைப்போலச் சீறி ருஷிய எழுத்துக்களைக் கற்று எழுத்தறிவு பெறுகிறாள். ஆனால், சந்தேகப்பட்ட அந்தக் கடிதம் தன் கணவனின் பெண் காரிய தரிசி எழுதிய தோஷமற்ற ஒரு குறிப்பே என்று கண்டுபிடித் தாள். மனைவி படிக்கக் கற்றதும் தான் வாங்க விரும்பிய பல புத்தகங்களுக்கு அக்காரியதரிசி ஆர்டர் கொடுத்திருப்பதாக அறிவித்திருந்த குறிப்பே அது.

ஜனரலினுடைய மனைவியும் அவள் பியானோவும் என்னும் ஜனரஞ்சிதமான சோவியத் கதையும் இதே கருத்தைத் தாங்கி நிற்கின்றது. புதுவீடு ஒன்றில் குடிபுகுந்த ஜனரலினுடைய மனைவி தன் பியானோவை விசாலமாயிருந்த வசிக்கும் அறை யில் வைப்பதற்குப் பதிலாகத் தன் படுக்கையறையிலேயே வைக்க முடிவுசெய்தாள். "படுக்கையறையில் எதிரொலி இருக்காதே" என்று ஆட்சேபித்தான் கட்டிடச்சிற்பி. "பரவா யில்லை, பர்லினிலுள்ள என் கணவருக்கு எழுதி எதிரொலியை வாங்கியனுப்பச் சொன்னால் போகிறது" என்றாள் அமைதியாக அவள்.

ஒவ்வொரு நாட்டிலும் திடுமெனச் செல்வம், பதவி முதலி யன பெற்று உயர்ந்தவர்களைப் போலவே, சமீபத்தில் சமூக அந்தஸ்திலும் வாழ்க்கை ரீதியிலும் உயர்ந்த ஜனரல்கள், விஞ்ஞானிகள் இவர்களின் மனைவியர் சோவியத் கதைகள் பலவற்றிற்கு இலக்கு ஆனார்கள்.

அவற்றில் ஒன்று, வெள்ளியினால் செய்யப்பட்ட மென்மை யான ரோமத்தோடு கூடிய தோல்மீது இம்மனைவியருக்கு ஏற்பட்ட மோகம் பற்றியது. இம்மோகமானது அமெரிக்காவில் ஓரி இனத்தைச் சேர்ந்த மிங்க் என்றதொரு பிராணியின் தோல்மீது ஏற்பட்டிருந்த வெறியைப்போன்றது. இசை நாடக நாட்டிய போல்ஷாய் தியேட்டரில் ஓர் ஆட்டத்தைப் பார்க்கக் கூட்டமாகச் சென்ற சில ஜனரல்களையும் அவர்கள் மனைவி யரையும் பற்றி இக்கதை கூறுகிறது. பாரிஸ் சீமாட்டிகள்

கோடையில் பந்தயங்களுக்காகவும் குளிர்காலத்தில் இசைநாடகக் கச்சேரிகளுக்காகவும் பொருத்தமாக அமைந்த நல்ல ஆடைகளை அணிவதுபோலவே; இந்நாடகத்தில் சோவியத் சமூகத்தில் சிறந்து விளங்குபவர்களாகக் காட்சியளிக்கும் பாத்திரங்களும் அவ்வப்போது மாறிக் கடைசியாக நிலவிவரும் நூதன நாகரீக பாணிகளில் தம்மைக் காட்டிக்கொள்ளுகின்றனர். அன்றிரவு, ஜனரல்களின் மனைவிமார் ஒவ்வொருத்தியும் இரண்டு அல்லது மூன்று வெள்ளி நரிகள் அணிந்தனர். எவ்வளவு அதிகமாக அணிகின்றனரோ அவ்வளவு சிறப்பு அதிகம் என்பது அவர்கள் கருத்து. ஆனால், சுயதிருப்திக்குப் பதிலாக, மனக் குழப்பமே இப்பெண்களின் முகத்தில் வெளிப்பட்டது. அவர்களுக்கு இரண்டு வரிசை முன்னால் மார்ஷல் ஒருவரும் அவருடைய மனைவியும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் வெள்ளி நரி அணிந்ததாகத் தெரியவில்லை. ஒரு நாள் இரவுக்குள் ஆடையில் பாஷன்கள் மாறிவிட்டனவா ? கடைசியாக இடை நேரம் வந்தது. ஒவ்வொருவரும் எழுந்து வெளியேபோகும் வழியை நோக்கிச் சென்றனர். அப்போது, ஐயோ பாவம் ! அந்த ஜனரல்களின் மனைவியர் ஸ்ரீமதி மார்ஷலின் கவுனிலிருந்து ஏழு வெள்ளி நரிகள் தொங்கினதைக் கண்டனர்.

நியு லுக் பாஷன்.

சோவியத் யூனியனில் நடையுடைபாவனைகளில் ரீதிகள், பாணிகள், பாஷன்கள் விஷயத்தில் சர்வாதிகாரம் செலுத்துவது அத்லியே மோத் என்னும் அரசாங்க ஸ்தாபனம். அதைச் சார்ந்து பின்பற்றுவோரைச் சமாளிப்பது கடினமானதொரு வேலையாகும். சோவியத் பெண்கள் ஒத்துழையாதிருப்பதனால் இது ஏற்படுவதன்று. அவர்களின் உத்சாக மிகுதியே பிரச்னை. இந்த நிலையில் சோவியத் அரசாங்கம் இப்புது பாஷன்கள் விஷயத்தில் வெறுப்பு காட்டுவது இயற்கையே.

சென்ற வேனிலில், இயற்கையைக் கைவிட்டுச் செயற்கையான நடத்தையில் உழன்ற சோவியத் இளம்பெண்கள் சிலர்,

வோக், ஹார்பர்ஸ் பஜார் என்ற பத்திரிகையிதழ்களைப் பார்த்து விட்டு மாஸ்கோவில் ' நியு லுக் ' பாஷனை நுழைக்கத் தீரமாக முயன்றனர். ஆனால் அது உடனே நிறுத்தப்பட்டது. " நியு லுக் " இழிவுற்ற முதலாளித்துவ உலகின் சரியான வெளிப்பாடே யாகும். " என்றாள் அத்லியே மோத்தின் பிரதம டிசைனர்.

பெர்லினில் உள்ளதைப்போல, கணுக்கால் வரையில் செல் லும் பாவாடைகளுக்கு எதிராகச் சட்டமோ அல்லது மந்திரியின் உத்தரவோ மாஸ்கோவில் இல்லை. ஜர்மன் தலை நகரிலுள்ள சோவியத் பெண்கள் அனைவரும் ' நியு லுக் 'கின் பிற்போக்கான தற்பெருமைகளுக்கு இடங்கொடுக்கக்கூடாதெனத் தடுக்கப் பட்டனர்.

நான் அறிந்தவரையில் ' நியு லுக் ' விஷயமாக மார்க்ஸிய நோக்கில் அதிகாரபூர்வமாக, ஒரே ஒரு குறிப்புரை ருமேனி யாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான ஸ்காண்டியாவில் வெளிவந்தது. சென்ற கோடையில் அப்பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் ஒன்று, " பெண்களின் மனத்தை அடிமைப்படுத்தி முதலாளித்துவத்தின் நுகத்தடி யிலிருந்து விடுதலையடைந்து சமாதானத்திற்கு அவர்கள் போராடுவதிலிருந்து மனத்தை திருப்புவதற்காக சூறையாடும் அமெரிக்காவின் ஏகாதிபத்யச் சதியே ' நியு லுக் ' என அறிவித்தது. கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகை, ருமேனியப் பெண்களில் மிகச் சொற்பமானவரே இப்புதிய பாஷன் பொறி யில் அகப்பட்டுக்கொண்டனர் எனத் திருப்திப்பட்டு, " ஏகாதி பத்திய பூர்ஷுவா செல்வாக்கு துரோகமாக ஊடுருவிப் பரவு வதைத் தீவிரமாகத் தடுக்க " விழிப்புடன் இருக்க வேண்டு மெனக் கூறியது.

அத்லியே மோத்தின் தலைமை டிசைனர் அந்த ஆசிரியரின் உரையை அங்கீகரித்திருப்பார் என்பதில் ஐயமே இல்லை. ருஷி யன் டிசைனர்கள் ' நியு லுக் ' குக்கு எவ்வளவு தூரம் இணங்கி வருகின்றனர் என்று நான் கேட்டபோது அவள் அலட்சியமாக, " ஊக்கமும் எழுச்சியும் பெறும் பொருட்டு நாங்கள் மக்களின் கலை

களிடம் செல்கிறோம்" என்று சொல்லி, ருஷிய, உக்ரேனிய, உஜ்பெக் தேசிய டிசைன்களுடன் அலங்கரிக்கப்பட்ட நன்கமைந்த அழகிய ஆடைகளையும் மார்புச்சட்டைகளையும் காட்டினாள். அவளுடைய சிருஷ்டிகளைப்பற்றி மெச்சினபோது, திருப்தியுடன் முகம் சிவந்தாள். ஆனால், பெருமூச்சு விட்டுக்கொண்டே, தாய் நாட்டில் தினசரி வாழ்க்கைக்குரிய பண்டங்கள் இன்னும் குறைவாக இருப்பதால் இன்னும் சில வருஷங்கள் வரையில் சோவியத் பெண்களில் வெகு சிலரே அவ் வழகிய பொருள்களை அணிவர் என ஒப்புக்கொண்டாள்.

அமெரிக்கர் வீண்செலவு செய்து பண்டங்களை எவ்வளவு பாழாக்குகிறார்கள் என்பதை சினிமாக்களில் காணும் ருஷியர்கள் திடுக்கிடுகின்றனர். நீலா படக்காட்சியொன்றில் மிக ஆடம்பரமான ஆடைகள் அணிந்த பெண்கள் கோஷ்டியினர் தரையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டபோது அவள் தன் கண்களையும் நம்பமுடியவில்லை. அமெரிக்காவில் அந்தமாதிரி அடிக்கடி நடக்கிறது என்று நான் சொன்னதையும் அவள் நம்பவில்லை. அமெரிக்காவில் பிரயாணம்செய்து நேரில் பார்த்தபோதே திருப்தியடைந்தாள்.

1937-ல் ஒரு நாள் நீலா ஒரு சிலரே அழைக்கப்பட்டிருந்த பிரத்யேக ருஷிய தேநீர் விருந்தொன்றுக்குச் சென்றிருந்தாள். அதற்கு மாக்ஸிம் லிட்வினோவின் பிரிட்டிஷ் மனைவியும் வந்திருந்தாள். உணர்ச்சியைத் தூண்டின ஒரு கதையுடன் நீலா வீடு திரும்பினாள். இவ்வி லிட்வினோவ் சுத்தம் செய்து கொள்ளும் அறையில் கழுவிக்கொண்டபின் துவாலை ஒரே தடவை உபயோகித்து அதைக் குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டாள். விருந்துக்கு வந்திருந்தவர்களில் ஒருவர் விடாமல் இதைப் பற்றியே பேசினார். "இவள் தன்னை ஒரு டாக்டர் என்று எண்ணிக்கொண்டுவிட்டாளா என்ன?" என்று பெரும்பாலோர் குறைவாகப் பேசினார்.

ருஷியாவில் இத்தகைய பண்டங்களும் சிறப்பாக உணவும் மிகக் குறைவு. யுத்தம் முடிந்ததிலிருந்து வாழ்க்கைத்

தரம்உயர்ந்துகொண்டே வந்தும் நிலைமை இப்படித்தான் இருந்தது.

அமெரிக்கப் பாகசாஸ்திரப் புத்தகமொன்று ருஷிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புப் புத்தகத்தில் "வேண்டாத விருந்தினர்" என்ற அத்தியாயம் ருஷிய வீடுகளில் மகிழ்ச்சியூட்டிக்கொண்டிருந்தது.

"வீட்டிலே ஒன்றுமேயில்லாதிருக்கையில் கொஞ்சங்கூட எதிர்பாராமல் அரை டஜன் விருந்தினர் வந்துவிட்டால் என்ன செய்வது ?" என்று அந்த அத்தியாயம் உல்லாசமாக ஆரம்பிக்கிறது. "விருந்தளிக்க நேர்கிறவர்க்கு இது எப்போதும் ஒரு பயங்கரக் கனவுபோலிருக்கும். நல்லது, இது உங்களைப் பயப்படுத்தவேண்டியதில்லை. உண்மையில் பிரச்னை எதுவும் எழவில்லை. பண்டங்கள் கெடாமலிருப்பதற்கான குளிர்ச்சிப் பெட்டியைச் சும்மா திறந்து, பாதி விட்டுவைக்கப்பட்ட கோழிக் குஞ்சு, பன்றித்தொடையின் உப்பிட்ட இறைச்சித்துண்டு ஒன்று, வேகவைக்கப்பட்ட உருளைக்கிழங்குகள், லெட்டியூஸ் கீரை, ஸெலரி கீரை, தக்காளி இவற்றையெல்லாம் எடுத்துக் கொள். கண்ணை மூடிக் கண்ணைத்திறப்பதற்குள் நேர்த்தியான சலாது காய்கறிக்கலவையைச் செய்து விடலாம் !"

ஆகவே, வீட்டிலே ஒன்றுமேயில்லாதிருக்கையில் திடுமென அரைடஜன் பேர் வந்துவிட்டால் அமெரிக்க மனைவி இவ்விதமாகத்தான் சமாளிக்கிறாள். இந்த வாக்கியங்கள் ருஷியர்களிடையே சிரிப்பு மூட்டாமலிருப்பதில்லை. ஆனால், சிரிப்போடு கண்ணீரும் கலந்திருக்கும்.

பகுதி ஐந்து

நான் அறிந்த ருஷியர் சிலர்

என் ருஷிய நண்பர்களுக்குத் திங்கு ஏற்படலாம் என்று அஞ்சி, எனக்கு நெருங்கிய பழக்கமுள்ள பல பேர்களின் வரலாறுகளை நான் இங்கே சேர்க்கவில்லை.

அத்தியாயம் 12

ருஸ்கிகள்

சோவியத் யூனியனிலுள்ள மற்ற அன்னியர்களைப்போலவே, “ருஸ்கிகள்” எனப்படுவோரிடம்தான் நான் மிகவும் பழகினேன். “ருஸ்கி” என்ற சொல்லுக்கு “ருஷியன்” என்றுதான் அர்த்தம். ஆனால், மாஸ்கோவில் ஆங்கில மொழி பேசும் அன்னியர் குடியேற்றத்தில் பேசப்படும் தனி பாஷையில் அது அன்னியர்களிடம் வேலை செய்யும் ருஷியரையே குறிக்கலாயிற்று.

ருஸ்கிகள், மயக்குகள், பரிசுகள், அபாயங்கள் ஆகியவற்றுடன் கூடிய தமக்கேயுரியதோர் உலகில் வசிக்கின்றனர். சராசரி சோவியத் பிரஜைகளுடன் ஒப்பிடும்போது ருஸ்கி ஆண்களும் பெண்களும் ஊதாரிகளாக வாழ்கின்றனர் என்றே சொல்ல வேண்டும். இயற்கையினின்று வேருடன் பிடுங்கப்பட்ட ஒரு செயற்கை உலகமே அவர்களுடையது. அன்னியர் குடியேற்ற வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கோணலான கண்ணாடி அது.

ருஸ்கிகள் இதர ருஷியரைவிட உயரிய ஊதியம் பெறுகின்றனர். உதாரணமாக, சோவியத் மோட்டார் ஓட்டியொருவன் மாதம் ஒன்றுக்கு எழுநூறு முதல் எண்ணூறு ரூபில் வரை பெறுகிறான். என்னுடைய மோட்டார் ஓட்டிக்கு மாதம் 1600 ரூபிலுக்கு அதிகமாகவும் குறித்த சேவைகளுக்கென வேறு சில ஊதியங்களும் நான் தரவேண்டியிருந்தது.

தூதுவராலயங்களிற் சில தம் சோவியத் சிப்பந்திகளுக்கு பாதி பணமாகவும், பாதி இறக்குமதி செய்யப்பட்ட உணவாகவும் அல்லது துணி மணிகளாகவும் ஊதியம் தருகின்றன. இவை விற்கப்படுகின்றன. விற்பவர்களுக்குக் கைது செய்யப்படும் ஆபத்து உண்டு. அவர்கள் சொத்தும் பறிமுதலாகலாம்.

எங்கள் அனுமதியுடனே அனுமதியின்றியோ எங்கள் காகிதத்திலேயே கடிதமெழுதி நாடக அரங்குகளுக்கும் சினிமாக் கொட்டகைக்கும் டிக்கட்டு வாங்குகின்றனர். இதன் அனுகூலம் என்னவெனில் இவர்கள் டிக்கட் வாங்க க்யுவரிசையில் நிற்க வேண்டியதில்லை. அதே மாதிரி மருந்து குறித்துள்ள சீட்டுக் களையும் பெறலாம். எங்கள் அனுமதியுடனே, அனுமதியில் லாமலேயோ எங்கள் காரை உபயோகித்து நண்பர்களை ஏற்றிச் செல்லவோ அல்லது உல்லாசவிருந்துகளுக்குப் போகவோ கூடும்.

ஒரு நாள் மாஸ்கோ நகரின் எல்லைப்புறத்தில் நடை பெற்ற உல்லாசவிருந்து ஒன்றிலிருந்து திரும்பிவருகையில் வழியிலே என் கூட்டாளி ஒருவனைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். ஏனெனில் உல்லாசவிருந்து நடந்த இடத்தில் அவனுடைய மோட்டார்கார் என் மோட்டாரிலிருந்து சிறிது தூரத்திலேயே நிறுத்தப்பட்டிருந்தது. அவன் அங்கே நான் கண நேரம் மட்டுமே பார்த்த பெண் ஒருத்தியுடன் இருந்தானெனப் பாவனை செய்துகொண்டேன். என் கூட்டாளி மிகக் கோபமடைந்தான். அவனுடைய கார் ஒட்டி ரகசியப் போலீஸிடம் அவனைப்பற்றி நீண்ட அறிக்கையொன்று செய்வதன் பொருட்டுப் பிற்பகல் வேலையினின்று ஓய்வு கேட்டான். அவ்விதம் செய்வதற்குப் பதிலாகவோ, அல்லது அறிக்கை விடுத்த பின்னரோ அவன் ஒரு பெண்ணுடன் சவாரி விட்டான். என் கூட்டாளி அவனை வேலையினின்று நீக்கினன். அவன் சீக்கிரத்தில் மற்றொரு வேலையைத் தேடிக்கொண்டான்.

ருஷ்யர்கள் அனைவருமே தாங்கள் யாரிடம் வேலை செய்கின் றனரோ, அவர்களைப் பற்றி ரகசிய போலீஸாரிடம் ரிபோர்ட் செய்யவேண்டும். இங்ஙனமாக, ஒரு பக்கம் உறுதியான அரசாங்கத்துக்கும் மற்றொரு பக்கம் சோறு போடும் எஜமான னுக்குமாக பிளவுபட்ட விசுவாசம் காட்டவேண்டியிருக்கிறது. நேர்மையற்ற வாழ்க்கைக்கு இது ஒரு தூண்டுகோலாகும்.

சோவியத் சிப்பந்திகளிற் பலர், பெரும்பாலும் ருஷிய மொழி பேசாத அன்னியரை ஏமாற்றும் துர்க்கிரியைக்கு உட்படுகின்றனர். திடுமென லண்டனுக்குத் திரும்பியழைக்கப்பட்ட ஒரு ஆங்கிலேயனிடமிருந்து புத்தம்புதிய வாக்ஸ்ஹால் கார் ஒன்றை ஒருசமயம் வாங்கினேன். வண்டியோட்டியினுல் பழுதாக்கப்பட்ட ஸ்பீடாமீட்டர் தவிர கார் உருப்படியாக நன்ருக இருந்தது. வண்டியோட்டி காரைத் தங்குமிடத்திற்கு எடுத்துச் செல்லும்போதும், பிறகு அடுத்த தடவை கரை உபயோகத்துக்கு எடுத்துவரும்போதும் மைலேஜ் கணக்கைக் கட்டாயமாகக் குறித்து வைப்பது அந்த பிரிட்டிஷ்காரனின் வழக்கம். ஒரு நாள் கார் வீட்டுக்குக் கொண்டுவரப்படும்போது 2 மைல் வித்தியாசமிருக்கக் கண்டார். மெல்லமெல்ல இது பத்து மைலாகவும், பதினைந்து மைலாகவும், சில சமயம் இருபத்தைந்து மைலாகவும் வித்தியாசமேற்பட்டது. வண்டியோட்டி தங்குமிடத்திற்கு எடுத்துச்சென்றபின் எஜமானன் அறியாமல் காரை வாடகை வண்டியாக உபயோகித்து மேல்வரும்படிக்கு ஏற்பாடு செய்துகொண்டான்.

அன்னியரிடம் காரியதரிசியாகவோ, பணிப்பெண்ணுகவோ, வண்டியோட்டியாகவோ, கல்விப்பயிற்சி அளிப்பவனுகவோ அல்லது உபாத்தினியாகவோ அமர்ந்து ஒரு தடவை சௌகரியமான சுக ஜீவனத்தைச் சுவைத்தபின், ருஸ்கிகளுக்கு அதை விட்டுவிட மனம் வருவதில்லை. ஆனல், சோவியத் யூனியனில் அன்னியரைப் பகைக்கும் பிரசாரம் காரணமாக சென்ற வருஷம் நிலைமை பயமுறுத்தும் நிலைமைக்கு வந்துவிட்டதால், ருஸ்கிகளில் பலர் அந்த வசிகர வாழ்க்கையினின்று விலகிவிடக் கவலைப்படுகின்றனர். சிலருக்கு இந்த கடைசி நேரத்தில் விலகுவது முடியாத காரியமாகும். பலர் சிறைப்படுவதோடு நின்றுவிடுகின்றனர். சென்ற மூன்றுமாத காலத்தில், நான் வெளியேற்றப்படுமுன் அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த ஏழு சிப்பந்திகள் கைது ஆகி நாடு கடத்தப்பட்டனர்.

ருஸ்கிகளின் ஆபத்தான நிலே.

ருஸ்கிகள் தம்மை ஒரு சிக்கலான நிலேயில் இருக்கக் காண்கின்றனர். அன்னியரோடு சம்பந்தப்பட்டிருந்தால் நண்பர்களே யும் வேறு வேலே தேடுவதற்கு உபயோகமான தொடர்புகளேயும் இழப்பர். அன்னியரால் அமர்த்தப்படுமுன் ருஸ்கிகள் போலீசாரின் ஆசி பெறுதல் அவசியம். அவ்விதம் பெற்ருலும் நண்பர்களேயும் தொடர்புகளேயும் இழப்பது என்னவோ நிச்சயம். தம் வேலேயை ராஜிநாமா செய்து சோவியத் ஸ்தாபனமொன்றில் வேலே கிடைக்கப் பெற்ருலும், முன்னுல் செய்த வேலேப் பற்றிய விவரங்களே ஒரு நமூனுவில் எழுதித் தரவேண்டும். "அன்னிய நாட்டுத் தூதராலயம்" அல்லது "அன்னியநாட்டு நிருபன்" என்று அதில் எழுதிவிட்டால் போதும். உடனே அரசாங்கத்துக்கு ஆகாத தப்பிலிப் பட்டியில் குறித்துக்கொள்ளப்படுவர்.

இம்முறை, சிறப்பாக, நம் காரியதரிசிகளேப் பெரிதும் பாதிக்கின்றது. ருஸ்கிகளுக்கு இப்போது ஆபத்தாயுள்ள இவ்வுலகை விட்டால், அவர்களுக்கு தேக உழைப்புடைய ஏதேனுமொரு வேலே கிடைக்கலாம். ஆனுல் இப்பெண்கள் பல பாஷைகளே அறியும் சாமர்த்தியசாலிகள். மொழிபெயர்ப்பு, ஆராய்ச்சி இத்தகைய வேலேகளேயே அவர்கள் இயல்பாக விரும்புவர். ஆனுல் கம்யூனிஸ்ட் கட்சி இவற்றின்மீது மிக உஷாராகக் கவனஞ் செலுத்துகிறது. சோவியத் ஸ்தாபனங்களில் தகுந்த உத்தியோகம் கிடைக்கும் என்ற நம்பிக்கையே போய் அபாயமும் நெருங்கிவிட்டால் இந்த ருஸ்கி காரியதரிசிகள் நம்பிக்கையிழந்து நிராசை அடைகின்றனர். வேவு வேலே பார்ப்பதாக என்மீது குற்றஞ்சாட்டப்பட்ட நான், என் ஆபீசில் யாரும் தெரியாமல் நுழைந்த காரியதரிசியொருத்தியிடம் விடைபெருகையில், அவள் கண்ணீர் விட்டுக் கதறி அழுதாள்: "நான் எங்கே போவேன்? நான் என்ன செய்வது? ருஷியா பிரமாண்டமான நாடுதான்; ஆனுல் ஒளிந்துகொள்ள ஓரிடமுமில்லேயே." என்ருள். தன் தோழி ஒருத்திக்கு ஏற்பட்ட

கதியை அவள் நன்கறிவாள். அவளால் பொறுக்க முடிய வில்லை. முடிவைத் துரிதப்படுத்தினாள்.

வெண்கலத் தொனி போன்ற குரலுடைய இவ்வழகிய பெண்ணிடம் உயர்ப்பதவி வகிக்கும் அமெரிக்க ராணுவ அதிகாரியொருவன் அக்கறை கொண்டான். இவள் என் நண்பன் ஒருவனின் காரியதரிசியாக வேலை பார்த்தாள். அவன் இவள்பால் காதல் கொண்டான். இவளோ புன்னகை செய்து கொண்டே அவனைப் புறக்கணித்தாள். ஆனால் இப்போது நண் பர்கள் இன்றியும், சோவியத் வேலையொன்றும் கிடைக்காமலும் வருந்திக் கடைசியில் இந்த ராணுவ அதிகாரியை அடைந்தாள். உயர்ந்தரக ஓட்டல்களுக்கும் நாடகக் கொட்டகைகளுக்கும் அமெ ரிக்கருக்கு மட்டுமே காட்டப்படும் வாரந்திர சினிமாப்படங்க ளுக்கும் அழைத்துச்செல்லச்செய்தாள். தன்னைப்பற்றி ரிப்போர்ட் செய்யுமாறு தன்னுடன் வேலை செய்த இதர காரிய தரிசிகளையும், மோட்டார் வண்டியோட்டிகளையும் பணிப்பெண் களையும் கேட்டுக்கொண்டாள். சீக்கிரத்திலேயே ரகசியப் போலீ சாரிடம் அழைத்துச்செல்லப்பட்டாள். அவள் தன் வேலையை ராஜிநாமா செய்துவிடவேண்டுமெனக் கட்டளை பிறந்தது. இருபத்திநான்கு மணி நேர நோட்டீஸ் தந்து தன் அயல் நாட்டு எஜமானனை விட்டாள். மூன்று நாட்களுக்குப்பின் அவள் மறைந்துவிட்டாள். சிறைக்கூட்டத்தினுள்தான்.

ருஷ்கியர்களைக் கைதுசெய்வதில் இது ஒரு புது முறையாகும். சிப்பந்தி முதலில் தன் வேலையை ராஜிநாமா செய்துவிட வேண்டுமெனக் கட்டளையிடப்படுகிறான். கீழ்ப்படிவதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லை. தூதுவராலயத்திலேயோ அல் லது பத்திரிகை நிருபர் காரியாலயத்திலேயோ அவன் பெயர் சிப்பந்திகளின் ஜாப்தாவிலிருந்து அடித்துவிடப்படுகிறது. ஆகவே அவன் கைதுசெய்யப்படும்போது, அன்னிய எஜமானன் அவன் பொருட்டுக் குறுக்கிட அசக்தனாகிவிடுகிறான். அன்னிய னின் வேலையன்றோ அது!

என்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டில் பங்குகொள்ள நேர்ந்ததுபற்றி என் மாஜி காரியதரிசி செசீலியா நெல்சன் ஒரு வகையில் திருப்தியடைந்திருக்கவேண்டும். அவ் விஷயத்தில் அவள் கொண்ட பங்குக்காக சர்வவல்லமை வாய்ந்த உள்நாட்டு விவகார இலாகா அவளுக்குச் சோவியத் ஸ்தானமொன்றில் வேலை பெற உதவியளித்திருக்கவேண்டும். அவ்விதமாகவே கைதாவதிலிருந்தும் நாடு கடத்தப்படுவதிலிருந்தும் தப்பியிருக்கவேண்டும்.

சோவியத்தின் செல்வாக்குக்கு உட்படாத மேலைநாட்டு தூதுவராலயங்களிலிருந்து ருஸ்கிகள் ஒருவர்பின் ஒருவராக ஓடிவிடுகின்றனர்.

மஜ்ஞே பெண்கள்.

மாஸ்கோவிலுள்ள அமெரிக்க சோல்ஜர்களால் "மஜ்ஞே பெண்கள்" என்றழைக்கப்படும் இளஞ் சோவியத் பெண்கள் ஒரு தனி ரகத்தினர். ருஷிய மொழியில் "மஜ்ஞே" எனில் "நீங்கள் விரும்பினுல்" என்று அர்த்தம். இப் பெண்களிற் பெரும்பாலோர் திருப்தி செய்ய ஆவலாயிருப்பவர்கள். பல் வேறு தூதுவராலயங்களிலும் ராணுவ மிஷன்களிலும் உள்ள கலியாணமாகாத இளைஞர்களை அறிந்துகொள்வதில் இவர்களே முந்திக்கொள்கின்றனர். இவர்களிற் சிலர் நற்செயலாகவே இந்த மஜ்ஞே உத்தியோகத்தில் வந்துசேர்ந்திருக்கலாம். ஆனால், பெரும்பாலோர் வெளிநாடுகளிலிருந்து வந்து தனியாக வாழும் இளைஞருடன் தொடர்பு வைத்துக்கொள்ளவும் கூடுமான நேரம் அவர்களுடன் கழிக்கவும், பின்னர் ரிபோர்ட் செய்யவும் ரகசியப் போலீசால் போதிக்கப்பட்டவர்கள். இந்த சேவைக்குப் பிரதிஉபகாரமாக உள்நாட்டு விவகார இலாகா இப் பெண்கள் தம் ஆடை அலங்காரங்களைப் பெருக்கிக்கொள்வதையும் ஜாஸ் சங்கீதத்தில் அதிக பற்று காட்டுவதையும், அமெரிக்க சினிமாப்படங்களில் கருத்து செலுத்துவதையும் பற்றிப் பார்த்தும் பார்க்காததுமாக இருந்துவிடுகின்றனர்.

இப் பெண்கள் இளைஞருடன் அதீதமாகப் பற்றுகொள்வதன் காரணமாகவோ அல்லது ஆடம்பர வாழ்க்கையில் இறங்கிவிடுவ தன் காரணமாகவோ சீக்கிரத்திலோ அல்லது சிறிது தாமத மாகவோ கைதாகி மறைந்துவிடுகின்றனர். இப் பெண்களில் ஒருத்தியான வெரா ராணுவத்துடன் பழகுவதில் மிகத் தேர்ச்சி யடைந்தாள். ஆனால், கடைசியாக ஒரு அமெரிக்கக் காப்டனுடன் அதிக பற்றுகொண்டாள். இதனால் அவள் மறைய நேரிட்டது. ருஷிய அரசாங்கம் அவளைச் சும்மா விட்டுவிடுமா ?

இப் பெண்கள் பெரும்பாலும் பெண்களுக்கென அமைக்கப் பட்டுள்ள சிறைக்கூடாரங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். விலக் கப்பட்ட ஒழிக்கப்பட்ட சோவியத் அதிகாரிகளின் மனைவியர் ஏற்கனவே அங்கே சிறைப்பட்டிருப்பர். அவர்களும் ஆண் பெண் சிறைப் பாதுகாவலரும் சேர்ந்து இந்த மஜ்னோ பெண் களை வெறுப்புடன் ' அன்னியப் பெண்கள் ' எனக் குறிப் பிடுவர்.

இந்த மஜ்னோ பெண்கள் பெரும்பாலும் அன்னியருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருப்பவராயினும் வெளி உலகைப்பற்றி இவர்கள் அறிவது மிகச் சொற்பம். இவர்கள் பார்க்கும் அல்லது பழகும் அன்னியர் யாவரும் ராஜ தந்திரிகளாகவோ, ராணுவத்தினராகவோ அல்லது அயல்நாட்டு நிருபராகவோதான் இருப்பர். அவர்கள் அநேகமாக உலகை நன்கு அனுபவித்தவர் ; சுக வாழ்வுக்குரிய வசதிகளை உடைய வர் ; சமயம் நேரிட்டபோது நன்றாக உழைக்கக் கூடியவர் ; ஆயினும், மணிக் கணக்காக ஒய்வாகக் காலங் கழிக்கக்கூடிய நிலையில் இருப்பவர். அவர்கள் இப் பெண்களின்மீது நேரமும் பணமும் முயற்சியும் விரயம் செய்தபோதிலும், அவை புதிர் போலுள்ள அதிசய ருஷியாவை நன்கறிவதற்கு உதவிசெய் கின்றன எனத் தம்மைத் திருப்திசெய்துகொள்வர். அன்றி யும், தம் மேலதிகாரிகளையும அவ்விதமாகவே நம்பும்படிச் செய்வதிலும் வெற்றியடைவர்.

ஆகவே, தம் பணத்தையும் பரிசுகளையும் தாராளமாக வழங்கக்கூடிய நாகரிக மெருகேறிய இவர்கள் மூலமாகவே, இந்த மஜ்னோ பெண்களும், அன்னியர்களைக் கண்டதுமே காதல் கொள்ளும் பெண்களும் சோவியத் எல்லைகளுக்கு அப்பாலுள்ள நாடுகளுடன் முதல் தடவையாகத் தொடர்புகொள்கின்றனர். அவர்களில் பலருக்கு அயல் நாடு எனில், கேட்டதும் கிடைக்கும் பரந்த கற்பனுலோகமாகவே இருக்கும். அங்குள்ள மக்கள் புலாலும் ஐஸ்கிரீமும் சாப்பிடுவதும், ஷாப்புகளுக்குச் செல்லுவதும், சுறுசுறுப்பான உடையணிந்து மோட்டாரில் செல்வதும் நடனமாடுவதும், சினிமாப்படத்திற்குச் செல்லுவதும் தவிர வேறொன்றும் செய்வதில்லை என்பது அவர்கள் எண்ணம்.

ருஷியாவில் நான் வாழ்ந்த பன்னிரண்டு வருஷ காலத்தில், அமெரிக்க வாழ்க்கையைப்பற்றி பலவகையான யோசனையுள்ள கேள்விகளைத் தொடர்ந்து கேட்ட ஒரே ஒரு மஜ்னோ பெண்ணைத் தான் அறிவேன். தான் காதலித்தவனுடன் இருக்கவும், நாட்டைப் பார்க்கவும், ஆங்கில மொழி கற்கவும், அமெரிக்கா செல்ல விரும்புவதாக அவள் என்னிடம் சொன்னாள்.

மஜ்னோ பெண்களாயினும் சரி, கண்டதும் காதலிக்கும் பெண்களாயினும் சரி, அன்னியருடன் பழகும் அநேகமாக எல்லா சோவியத் பெண்களுடையவும் ரகசியமான, மிகப்பெரிய ஆசையானது, தான் பழகும் மனிதன் தன்னிடம் "என்னைக் கல்யாணம் செய்து கொள்ளுகிறாயா?" என்ற மிக அற்புதமான கேள்வியைக் கேட்கும் அளவுக்கு அவனை வசியப்படுத்துவதே யாகும். 1947 மார்ச் மாதம், சோவியத் பிரஜைகள் அயலவர்களை மணஞ் செய்துகொள்வதைத் தடுக்கும் சட்டம் ஒன்று வெளிப்படுத்தப்பட்டபோது, அந்த அற்புத மொழிகளின் இசையில் திளைத்த மஜ்னோ பெண்களுக்கு அது ஒரு பேரிடியா யிருந்தது. அச்சட்டம் ஏனைய பெண்களும் சோவியத்தைச் சேராதவர்களுடன் தொடர்புகொள்வதைத் தடுத்தது.

அச் சட்டத்திற்கு முன், அன்னியனை மணந்த ருஷியப் பெண்ணுக்கு அற்புதமான அனுகூலங்கள் ஏற்பட்டன. மாஸ்கோவில் தன் கணவனுடன் இருந்தபோது அவளைக் கைது செய்யமுடியாது. அவளுடைய சமூக அந்தஸ்தும் பொருளாதார நிலைமையும் உயர்ந்தது. உதாரணமாக, ஹெலன் என்ற அழகிய, நீல விழிகளுடைய ருஷியப்பெண் கிரேக்க ராஜீயத்தூதுவரான ஸ்ரீ பாலிடிஸ் என்பவரின் மனைவியானாள். அவள் பன்னிரண்டு பணியாட்கள் வேலைசெய்த ஒரு மாளிகையின் எஜமானியானாள்; மாலடோவுடனும் விஷின்ஸ்கியுடனும் கைகுலுக்கினாள்; பெரிய ராஜ்யங்களின் உயர்தர அதிகாரிகளை வரவேற்றாள்; ஆடைகள் வாங்கப் பாரிஸுக்குப் பிரயாணஞ் செய்தாள். ஆனால் அத்தூதுவர் தம் நாட்டுக்குத் திரும்ப அழைக்கப்பட்டபோது, ஹெலனைத் தம்முடன் அழைத்துச் செல்ல அவருக்கு அனுமதியளிக்கவில்லை. கடைசியில் அவர் மணவிலக்கு செய்துகொண்டார். உடனே அவள் கைதாகி நாடுகடத்தப்பட்டாள்.

திருமணம் இப் பெண்களுக்குப் பல வாய்ப்புகள் அளிக்கின்றன. இவர்கள் அயல்நாடுகளில் பிரயாணம் செய்யவும், அங்கேயே தங்கிவிடவும் அல்லது சோவியத் யூனியனுக்குத் திரும்பிவந்துவிடவும் கூடும். நாட்டைவிட்டுச் செல்ல அனுமதி பெற்ற அயலவர் மனைவிகள் அனைவரும் 1942-ம் ஆண்டு வரையில், சோவியத் பிரஜா உரிமையைத் தியாகம் செய்யவேண்டியிருந்தது. 1942 முதல், இவர்கள் அனுமதிச்சீட்டு பெற்று அயல்நாடுகளுக்குச் செல்லலாமாயினும் திரும்பிவந்துவிடுவரென உறுதியளிக்கவேண்டும். இல்லாவிடின் இவர்கள் நாட்டைக் கைவிட்டு ஓடியவர்களின் ஜாப்தாவில் சேர்க்கப்படுவர். ருஷியாவிலுள்ள இவர்களின் குடும்பத்தின்மீதும் பழிவாங்கப் படும்.

திருமணம் எனில் இப் பெண்களுக்கு மாதாகோயிலில் அழகானதொரு வைபவம், பளப்பளப்பான பட்டு கௌன், ராஜதந்திரர் பரிவாரம், அயல்நாட்டுப் பத்திரிகைகளின் பேட்டி,

போட்டோக்கள், வரவேற்பு, விருந்து, எத்தனையோ வெகுமதிகள் இவையாவும் கிடைக்கும்.

இறுதியாக, திருமணம் இவர்களுக்குப் பாதுகாப்பும் ஆரோக்கியமான குடும்ப வாழ்க்கையும் அளிக்கின்றது.

கஷ்டகாலத்தில் கணவரைக் கைவிடும் மஞ்ஞேக்கள்.

இந்தப் புறப்புலனை வைத்துக்கொண்டுதான், அரசாங்க அனுமதிபெற்றுக் கணவர்களுடன் இங்கிலாந்து சென்ற சோவியத் பெண்கள் இருவர் இப்போது அவர்களை அங்கேயே விட்டுவிட்டுச் சோவியத் யூனியனுக்குத் திரும்பிவந்துவிட்டனர் என்று சமீபத்தில் கிடைத்துள்ள செய்தியைச் சரியானபடி மதிப்பிடவேண்டும். மாஸ்கோவை அடைந்ததும், இவ்விரு பெண்களும், பிரிட்டிஷ் பிரஜைகளின் ஐந்து ருஷிய மனைவிகள் வேறு, தம் உதாரணத்தைப் பின்பற்ற விருப்பதாகக் கூறினர். அதன் காரணத்தைப் பற்றி கூறுகையில், இங்கிலாந்தில் “ வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் பசியும் கோரத் தாண்டவம் புரிகின்றன ” என்றனர். இந்தக் கதை, இயற்கையாக, இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பொது மக்களிடையே திகைப்பையும் கலவரத்தையும் உண்டுபண்ணின.

ஆனல் இந்தக் கதையை நாம் அப்படியே நம்பிவிடுவதற்கில்லை.

விஷயம் இது. இந்தப் பெண்கள் தம் எதிர்காலக் கணவர்களை யுத்த காலத்தில் சந்தித்தனர். அப்போது சோவியத் மக்கள் வயிற்றுக்குப் போதிய உணவு கிடைக்காமல் திண்டாடினர். யுத்தகால மாஸ்கோவின் கடுமையான வாழ்க்கையினின்று தப்ப பிரிட்டிஷ் மிலிட்டரி மிஷனிடம் ஓடினர். இதர மாஸ்கோ பெண்கள் பொறுமையால் துடிக்க, இவர்களுக்கு டெஹ்ரானிலிருந்தும் கெய்ரோவிலிருந்தும் விமான மூலமாக ஆடைகள் தருவிக்கப்பட்டன. அயல் நாட்டினரை மணக்கும் சோவியத் பெண்களிற் பெரும்பாலோரைப் போலவே, இவர்கள் அயல்நாடுகளிலேயே அற்புத வாழ்க்கை நடத்தலாமெனக் கருதினர்.

இங்கிலாந்தில் இவர்களுக்கு எல்லாவற்றிலும் அரிதான சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரத்தை வைத்துக்கொண்டு இன்ன செய்வதென இவர்களுக்குத் தெரியவில்லை. மாஸ்கோவில் பிரிட்டிஷாரின் யுத்தகால மனைவிமார்களாக இருந்த போது அனுபவித்த செழுமையான வாழ்வு போய் யுத்தபிற் கால பிரிட்டனில் கடின வாழ்க்கையொன்றையே கண்டனர். கட்டிய கணவர்களைக் கஷ்டகாலத்தில் துறந்தனர். வறுமைப் பட்டிருப்பினும் சுதந்திரமாயிருந்த இங்கிலாந்திலிருந்து ஓடி அதே வறுமைநிலையில் கட்டுப்பட்டுக்கிடந்த ருஷியாவை அடைந் தனர். சுதந்திர வாழ்க்கைக்குத் தகுதியற்றவர்கள் என அவர் கள் காட்டிவிட்டனர். மாஸ்கோவில் இன்பவாழ்க்கை நடத்த அவர்களுக்கு இருந்த ஒரேவழி மீண்டும் அன்னியர்களை மயக்குவதேயாகும்.

அன்னியநாட்டுக் கணவர் சோவியத் தலைநகரிலிருந்து மாற்றலாகித் தாம் ருஷியாவிலேயே பின்தங்க நேரிட்டபோதி லும் திருமண நிலையிலிருந்து விலகாமல் தைரியமாக நின்ற ருஷியப் பெண்கள் வெகு சிலரே. பெரும்பாலோர் தம் "சோவி யத் தேசாபிமானத்தை"க் காட்டி அதிகாரிகளின் இம்சைகளி லிருந்தும் பட்டினி வாழ்க்கையினின்றும் தப்பினர். சிலர் புது மனிதர்களைப் பற்றிக்கொண்டு சமாளித்துவிட்டனர். இவர் களில் மிக அழகு வாய்ந்தவள் கலினு துனயேவா என்பவள். அமெரிக்க ராணுவத்தைச் சார்ந்த சார்ஜண்ட் ஜா.ஸ். பிகோ னிஸ்ஸை மணந்த இவள், அவர் அமெரிக்காவுக்குத் திரும்ப அழைக்கப்பட்டதும், உடனேயே இவள் மாஸ்கோவில் ராணுவ பரிவார ஆபீசில் கோட் குமாஸ்தாவாக இருந்த 21 வயதான சார்ஜண்ட் ஜேம்ஸ் மக்மில்லின்பால் தன் கவனத்தைத் திருப்பினாள்.

இவளோ வசீகரம் வாய்ந்த மஜ்னோ பெண்; அவனோ தனிமையில் வாடிய ஓர் இளைஞன். அவன் குடியிருந்த வீட்டுக் கெதிரில் போலீசார் இரவும்பகலுமாகப் பாராபோட்டனர். ரகசிய ஒற்றர்கள் வேறு, மப்டி உடையில் அவ்விடத்தில் வசித்த

அமெரிக்க இளைஞர்களைக் கண்காணித்துவந்தனர். இந்த நிலையில், எந்த சோவியத் பிரஜையும் எந்த ஆணும் அவ் வீட்டின் பக்கம் போவதில்லை. சமூகத் தொடர்புகள் ஏற்பட வழியேது ? ஆனால், ரகசியப் போலீசார் அனுமதித்த பெண்கள் மட்டும் சென்றனர். சிறையிலில்லாவிடினும் சிறையில் இருந்தது போலவே வாழ்க்கை நடத்திய இவ் இளைஞரின் சலிப்பைப் போக்க இப் பெண்களும் மதுவுமே உற்ற வழிகளாக இருந்தன.

தனியாகக் காலங் கழித்த மக்மில்லினுக்கு என்ன நடந்தது என்பதை இங்கே எவரும் அறியார். அந்த சார்ஜண்டுக்கு கலினுமீது அடங்காக் காதலேற்பட்டது. கலினு அவனைக் கை விடுவதாகப் பயமுறுத்தியிருக்கலாம். அல்லது அவள் தனக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறதெனக் கூறித் தன்னைக் காப்பாற்றும்படிக் கேட்டிருக்கலாம். ஒன்று மட்டும் நிச்சய மாகத் தெரிகிறது. சார்ஜண்ட் மக்மில்லின் அமெரிக்க சேனையைக் கைவிட்டோடினான். அமெரிக்கப் பிரஜா உரிமை யையே துறந்தான். தான் அறிந்த கோட் அல்லது சங்கேத பரிபாஷையை ருஷியரிடம் வெளியிட்டும் மாஸ்கோவிலுள்ள நம் தூதுவராலயம் வேலை செய்வதுபற்றிய தகவல்களைத் தெரி வித்தும் நாட்டுக்கே துரோகம் செய்திருக்கலாம்.

கற்புடைய ஒரு சிலர்.

நீடித்து விசுவாசம் காட்டிவரும் ஒரு சில சோவியத் பெண் களின் கணவர்கள், நேரத்தையும் பணத்தையும் பொருட் படுத்தாமல் அவர்களுக்குப் பணம், பார்சல்கள் அனுப்பியும், அவர்களை வெளியே அழைத்துச்செல்ல முயற்சிகள் செய்தும் வருகின்றனர்.

சென்ற இரண்டு வருஷங்களாக தன் வாழ்க்கை இழிநிலை யடைந்து வரும் அமெரிக்க ராணுவ வாலிபன் ஒருவனை நான் அறிவேன். அவனுக்குக் கலைத்திறனும் ஸ்தாபனத்தை அமைத்து ஒழுங்குப்படுத்தும் திறனும் மிகவும் உண்டு. ஆனால், நேரம், இடம் என்பதின்றி காதல்வெறி அவன்

மனத்தில் நிறைந்து பீடித்து அவனது திறமையையெல்லாம் வியர்த்தமாக்கிவருகிறது. அவனுக்கு அமெரிக்காவில் வாஷிங் டனில் நன்கு ஜோடிக்கப்பெற்ற அழகிய ஜாகை உண்டு. அவன் எவரையும் பேசுவதற்கோ, விருந்துக்கோ அழைப்பதில்லை "என் மனைவியே என் முதல் விருந்தாளி" என்பான். செய்ய வேண்டியிருக்கும் வேலைக்கெனவே காரில் செல்வான். அவன் உல்லாசமாக எங்கும் செல்வதில்லை.

அவனுடைய மனைவி நான் அறிந்தவருள் மிகத் தங்கமான பெண். அவள் ருஷியாவில் துர்ப்பாக்ய வாழ்க்கை நடத்தி வருகிறாள். வெளியுலகை மறந்துவிட்டாள். ஒவ்வொரு அடியிலும் அச்சுறுத்தும் மயக்குகளையோ, விண்ணப்பங்களையோ, பயமுறுத்துதல்களையோ அவள் அசட்டையே செய்கிறாள். அவளுக்கேனும் சரி, அவனுக்கேனும் சரி, ஒரே வழிதான் உண்டு—தம்பதிகள் மீண்டும் ஒன்று சேருவது. ருஷிய அரசாங்கம் அவர்கள் ஒன்று சேருவதை முடியாத காரியமாக்கி விட்டது. இதற்கு மன்னிப்பே கிடையாது.

அத்தியாயம் 13

ஷெர்பகாவ்

உயர்பதவி வகிக்கும் சோவியத் அதிகாரவர்க்கத்தினர் தமக்குக் கீழே வேலை பார்க்கும் சிப்பந்திகளை எவ்விதம் நடத்துகின்றனர் என்பதைக் கவனிக்கும் வாய்ப்பு வெகு சில அன்னியருக்கே கிடைத்திருக்கிறது. மாஜி பொலித் பீரோ அங்கத்தினரான அலக்சாந்தர் ஷெர்பகாவ் என்பவரும், சோவியத் ஆசியாவில் நவோசிபிர்ஸ்க் மாகாணத்தின் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியதரிசியான மிக்கெய்ல் குலாகின் என்பவரும் ஆற்றல் வாய்ந்த அதிகாரிகள். இவர்களைப் போன்றவர்கள் வேலை செய்யும் ரீதியை இரண்டு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நான் கவனித்திருக்கிறேன்.

1936-ல் எழுத்தாளர் சங்கத்தின் பொதுக்காரியதரிசியாக அவர் வேலைபார்த்தது முதல் ஷெர்பகாவை எனக்கு நன்முகத் தெரியும். அது சமயம், 1917-ல் நடந்த புரட்சியைச் சார்ந்த இக்குணிக்கதைகளைச் சேகரித்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் நான் ஈடுபட்டிருந்தேன். நான் ஆராய்ச்சி செய்து வந்த போது, சோவியத் நாடோடிக் கதை ஆராய்ச்சியாளரின் தலைவரான யூரி மத்வெய்விச் சொகொலோவின் பரிச்சயமும் நட்பும் எனக்குக் கிடைத்தன. அவர் சோவியத் விஞ்ஞான அகாடெமியின் ஓர் அங்கத்தினராகவும் சர்வகலாசாலைப் பேராசிரியராகவும் எழுத்தாளர் சங்கத்தின் நாடோடிக்கலைப் பகுதியின் தலைவராகவும் இருந்தார். செஞ்சதுக்கத்தின் நுழைவிலுள்ள சரித்திர மியூசியம் கட்டிடத்தில் புத்தகங்கள் நிறைந்த சின்னஞ் சிறு அறையொன்றை வைத்திருக்க அனுமதிக்கப்பட்டிருந்ததால், அவர் சோவியத்களின் முழு நம்பிக்கையையும் பெற்றிருந்தவர் என்றே தோன்றியது.

அவருடைய ஆராய்ச்சிக்கூடத்தில் பல மணி நேரம் அவருடன் கழித்து நாடோடிக்கலையின் பிரச்னைகள் பற்றியும்,

இலக்கியத்திற்கும் நாடோடிக்கலைக்குமுள்ள தொடர்பு பற்றி சிறப்பாகவும் விவாதித்தேன். அதுசமயம் அவர் புத்தக மொன்று எழுதிக்கொண்டிருந்தார். வாஷிங்டன் இர்விங் எழுதிய அல்ஹம்ப்ராவில் குறிக்கப்பட்டுள்ள ஸ்பானிஷ் கதை யொன்றே புஷ்கினுக்குத் தம் "தங்க இளஞ்சேவல் கதை" யை எழுத ஊக்கமளித்தது என்பதை அவரிடமிருந்தே தெரிந்து கொண்டேன். இந்த புஷ்கின்--இர்விங் விஷயத்தைத் தம் புத்தகத்தில் குறிப்பிட்டிருந்ததற்காக முன்பு தம் மாணவரா யிருந்த விக்டர் சிதல்நிகாவ் பதினேரு வருஷங்களுக்குப் பின் தம்மைத் தாக்குவார் என்று அவர் கனவிலும் கருதவில்லை. சொகொலோவின் அபிப்பிராயங்கள், உலக இலக்கியத்திற்கு ருஷியா அளித்துள்ளதை அற்பமாகக் கருதுவதற்கும் அன்னிய ரின் ஆதரவைப் பெற அவர்களின் விஷயங்களை அளவுகடந்து புகழ்வதற்கும் ஓர் எடுத்துக்காட்டாகும் எனச் சிதல் நிகாவ் அவரைக் கண்டித்தார்.

1936-ல் ஒருநாள், எழுத்தாளர் சங்க நாடோடிக்கலைப் பகுதியின் கூட்டமொன்றில் கலந்துகொள்ள சொகொலோவ் என்னை அழைத்தார். அக்கூட்டத்தில் சங்கப் பொதுக் காரிய தரிசியான அலக்சாந்தர் ஷெர்பகாவ் கலந்துகொள்ளவிருந்தார். சில வருஷங்களுக்குப்பின் ஷெர்பகாவ் பொலித் பீரோவில் மாறிமாறி வரும் ஓர் அங்கத்தினராகவும், சோவியத் செய்தி இலாகாவின் யுத்தகாலத்தலைவராகவும், செஞ்சேனையின் பிர சாரப்பகுதிக்குத் தலைவராகவும் ஆனர்.

ஷெர்பகாவ் செழுமையாகவும் உயரமாகவும் இருப்பார். அவர் கறுவிழிகளில் இரக்கமற்ற புத்திசூர்மை ஒளிவீசும். தங்குதடைகளை லட்சியம் செய்யாமல் செல்லும் ஒரு ஊக்கமும், உக்கிரமாக வேலைசெய்யும் ஒரு திறனும் அவரிடம் உண்டு. இவ் இயல்புகள் அவர் கீழ் வேலைசெய்த பலரை அழுத்தி மடியச் செய்தன. எழுத்தாளர் சங்க வேலையிலிருந்து உக் ரேனிலும் சைபீரியாவிலுமுள்ள எஃகு, சுரங்க பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டார். அங்கே அவர் உற்பத்தி வேலையில் அற்

புதங்கள் செய்தார். ஆனால், எழுத்தாளரிடையே வேலை செய்தபோது தோல்வியடைந்தவராகவே கருதப்பட்டார். நாடோடிப்பகுதி கூட்டத்தில் அவரைக் கவனித்தபோது இத்தோல்வியின் காரணத்தை அறிந்துகொண்டேன்.

சோவியத் ருஷியாவும், சிறப்பாக, ஸ்டாலினும் சாதித்திருப்பவற்றைப் பெருமைப்படுத்தும் சோவியத் நாடோடிக் கதைகளின் பிரசுரமொன்றை "பிரவ்தா" ஆசிரியர்கள் அதுசமயம் தயாரித்துவந்தனர். கஜக்ஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஜார்ஜியா, உக்ரேன், மற்றும் இதர சோவியத் குடியரசுகள் ஆகியவற்றின் புலவர்கள் பாடின பாட்டுக்களையும் கதைகளையும் பதிவு செய்து மேலே சொன்ன புத்தகத்திற்கு விஷயம் சேகரிக்கும்பொருட்டு நாடோடிக்கலைப்பகுதி சோவியத் யூனியனின் தொலையிலுள்ள மூலைமுடுக்குகளிலெல்லாம் கோஷ்டிகளை அனுப்பியது. விஷயங்கள் மெல்லமெல்லவே வந்தன. அவை அசலானவையா என்று சோதித்துப்பார்க்கவேண்டியிருந்ததால், வேலை மேலும் தாமதப்பட்டது. சொகொலோவின் அறிக்கையிலிருந்து இவை யாவும் தெரிகிறது. சுமாராகவிருந்த பாட்டுக்களின் பெரும் பகுதி லெனினைப்பற்றியதென்றும், ஸ்டாலினைப் பற்றியவற்றில் அவ்வளவு எழுச்சியும், சுயேச்சையும், அழகும் காணவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இந்த அறிக்கையையும் அதன்பின் எழுந்த விவாதத்தையும் கேட்டபின், ஷெர்பகாவ் எழுந்துநின்று சொகொலோவையும் அவருடைய சகாக்களையும் அழுத்தமாகக் கண்டித்தார்.

"பிரவ்தா" தொகுதியைப்போன்றதொரு முக்யமான வெளியீட்டிற்காக அவர்களிடமிருந்து எதிர்பார்த்ததை அவர்கள் செய்யவில்லையாதலால், அவர்கள் நாடோடிக்கலையில் தேர்ந்தவர்கள் அல்லர் என்றும், அவர்கள் நல்ல தேசபக்தர்களும் அல்லர் என்றும் அவர் வாதித்தார். பண்ணைகளிலும் ஆலைகளிலும் வேலைசெய்யும் ஸ்டக்கநோவிட்ஸ்களிடமிருந்து அவர்கள் கற்கவேண்டும் என்றார். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் நவம்பர் 7-ந் தேதியன்று சமூகப்புரட்சி விழா

விற்குள் ஒரு வருஷ கோட்டாவுக்குமேல் உற்பத்தி செய்திருக்க, இந்த நாடோடி ஆராய்ச்சியாளர் பெருந்தலைவர் விஷயமான எழுச்சிதரும் பாடல்கள், கதைகளைப் போதிய அளவு திரட்டித் தரத் தவறியது நாட்டபிமானக் குறைவையே காட்டுகிறது என்றார்.

“நல்லது, தோழர் ஷெர்பகாவ், தானிய உற்பத்தி செய்வது போலவும், டிராக்டர்களைச் செய்வது போலவும் நாடோடிப் பாட்டுக்களையும் கதைகளையும் உற்பத்தி செய்ய முடியாதே” என்று குறுக்கிட்டார் சொகொலோவ்.

இதுவரையில் எவரொருவரையும் குறிப்பிட்டுப் பேசாத ஷெர் பகாவ், இப்போது சொகொலோவையே நேராகத் தாக்கவாரம் பித்தார். “நாடோடிப்பகுதிக்குக் காரியதரிசியாகவுள்ள நீங்களே, மற்றெவரையும்விட அதிகப் பொறுப்பு ஏற்க வேண்டும்” என்றார்.

சொகொலோவின் முகம் சிவந்தது. “தோழர் ஷெர்பகாவ், நான் காரியதரிசி அல்லேன் என்பதை மறந்துவிடுகிறீர்கள். அப்பகுதியின் வேலைகளுக்கு வழிகாட்டுவோனே நான்” என் றார்.

“அப்படியானால், அவ் வேலையை நீங்கள் சரியாகச் செய்ய வில்லை. போல்ஷிவிக்கருக்கு உரிய உறுதியுடனும் நோக் கத்தைப்பற்றிய தெளிவான அறிவுடனும் வேலைசெய்யவில்லை. இரண்டு வாரங்களுள் உம்மிடமிருந்து ஓர் அறிக்கை வர வேண்டும். நான் வேண்டுவது பலன்.”

“நான் ராஜிநாமா செய்கிறேன், தோழர் ஷெர்பகாவ்.”

“நான் சொல்லும்போதே நீங்கள் ராஜிநாமா செய்ய வேண்டும். இப்போது கூட்டம் முடிந்துவிட்டது.”

புத்தகம் வெளிவந்தது. அது அழகாகப் பிரசுரம் செய் யப்பட்டிருந்தது. ஸ்டாலின் பகுதி லெனின் பகுதியைவிட சிறப்பில் குறைவாக இருந்தும், அதுவே அதிகமாயிருந்தது.

புத்தகத்தில் சொகொலோவ் பதிப்பாசிரியருள் ஒருவரெனக் குறிப்பிடப்படக்கூட இல்லை. எழுத்தாளர் யூனியனின் நாடோடிக் கலைப்பகுதிக்கு அதன்பின் அவர் தலைமைப்பதவியினின்று நீக்கப்பட்டார்.

மிக்கெய்ல் குலாகின்

மிக்கெய்ல் குலாகின் சைபீரியாவின் பிரதான மனிதராகவும் மாஸ்கோவுக்கு வெளியே ருஷிய அரசாங்கத்தைப் பலமாக ஆதரிப்பவரில் ஒருவராகவும் விளங்குபவர். ஜமீன் பிரபுவின் வரம்பற்ற அதிகாரமும் கம்யூனிஸ்ட் சொல்லாட்சியும் தம்மிடம் கலக்கப்பெற்றிருந்த அவர் நவோசிபிர்ஸ்கை வலுவானதொரு தொழில்ஸ்தலமாகவும் ரயிலின் மத்யஸ் தலமாகவும் ஆக்கினார். யுத்த காலத்தில் அதன் ஜனத் தொகை இரட்டித்தது.

யுத்தகாலத்தில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்த உதவி ஜனாதிபதி ஹென்ரி வாலஸ், அமெரிக்க வியாபார சபையின் மாஜி தலைவரான எரிக் ஜான்ஸ்டன் முதலியோரையும், நான் உள்பட அயல்நாட்டு நிருபர் நால்வரையும் நவோசிபிர்ஸ்க் வசீகரித்தது.

நாங்கள் பிரயாணம் செய்தபோது சோவியத் மக்களின் அமானுஷ்ய பொறுமை, முயற்சி, தியாகம் ஆகிய யாவும் எங்கள் மனத்தில் அழுத்தமாகப் பதிந்தன. கண்யமாக உழைத்து வெற்றிபெற்ற ருஷிய ஆண்பெண்களுக்கு எங்கள் புகழ்மொழியைக் காணிக்கையாகச் செலுத்தினோம். வறுமையில் உழன்றும் விடாது உழைத்த இம் மக்களின்முன் தலைவணங்கினோம். ஆனால் இத்தகைய மக்களில் முக்கியமான ஒருவரை மிக்கெய்ல் தாழ்மைப்படுத்தியதுதான் என்னால் சகிக்கமுடியவில்லை.

அலக்சாந்தர் கோட்லியார் உயரமாயும் அழகாயும் இருப்பார். வயது முப்பத்தாறுதான். 1941-ல் மாஸ்கோவிலிருந்து

நவோசிபிர்ஸ்க்குக்கு அனுப்பபட்ட ருஷியாவின் மகத்தான கண் பார்வைக்கான சாமான்கள் உற்பத்திசெய்யும் ஆலேயின் டைரக்டர். இயந்திரசாதனங்கள் நவோசிபிர்ஸ்கை அடைந்த இருபத்திரண்டே நாட்களில் செஞ்சேனைக்குத் தேவையாயிருந்த பைனுகுலர்கள், டெலிஸ்கோப்புகள், லென்ஸ்களை அனுப்ப ஆரம்பித்தார். இயந்திரங்களுடன் மாஸ்கோவிலிருந்து வெளியேற்றப்பட்ட 4,000 தொழிலாளர்கள் உள்பட மொத்தம் 15,000 பேர் அதில் வேலைசெய்தனர். தொழிலாளர்களில் 75 சதம் வீதம் பெண்களே.

பேட்டிக்காக மிக்கெய்லும் நானும் கோட்லியார் ஆபீசினுள் நுழைந்தோம். பன்னிரண்டு பெண்கள் தம் ஓய்வு நேரத்தில் ஒரு வருஷ முழுமையும் வேலைசெய்து தயாரித்துப் பரிசாக அளித்த மிக நேர்த்தியான மைக்கூடு ஒன்றை அங்கே கண்டோம். நாங்கள் எல்லோரும் அதை மெச்சினோம். எரிக் ஜான்ஸ்டனும் பாராட்டினார். உடனே மிக்கெய்ல் அந்த மைக்கூட்டைத் தம் சிறப்புவாய்ந்த விருந்தாளியான எரிக் ஜான்ஸ்டனுக்கு அன்புடன் அளிப்பதாக அறிவித்தார். அதை ஜான்ஸ்டன் தங்குமிடத்தில் கொண்டுபோய் சேர்த்துவிடவேண்டுமெனக் கோட்லியாரிடம் உத்தரவிட்டார். மைக்கூடின் சொந்தக்காரர் அதிர்ச்சியடைந்தார். அவர் முகம் வெளுத்தது. தலை அசைத்துவிட்டு பேசாமல் இருந்தார். மைக்கூடு குறித்த நேரம் போகவேண்டிய இடத்தில் போய்ச்சேரவில்லை.

அடுத்த நாள் விடைபெற்றுச் செல்லவேண்டிய எங்களுக்கு விருந்து பலமாக நடந்தது. சொற்பொழிவுகள், தமாஷ்கள், ஆடல்பாடல் யாவும் உல்லாசமாக நடந்தன.

ஒளிக்கருவிகள் உற்பத்திச்சாலை டைரெக்டரை அடுத்து நான் உட்கார்ந்திருந்தேன். அவர் தலைநகரின் கலாசார வாழ்க்கையில் ஈடுபடமுடியாமலிருப்பது பற்றி முறையிட்டார். 1932-லிருந்து ஆரம்பிக்கப்பட்டு இப்போதுதான் முடியுந்தருவாயிலுள்ள 4 கோடி ரூபில் ஆபெரா கொட்டகை எப்போது

முடியுமென ஆவலுடன் பொறுத்துக்கொண்டிருந்தார். அறையில் அப்படியும் இப்படியுமாகத் துள்ளிக் குதூகலத்தை பரப்பிய மிக்கெய்ல் திடுமென டைரெக்டரிடம் சென்று மைக்கூடு ஜான்ஸ்டனிடம் அனுப்பப்பட்டதாவென விசாரித்தார்.

"இன்னும் இல்லை. அதைப்பற்றி மறந்தேவிட்டேன்" என்ருர் கோட்லியார். மிக்கெய்ல் வசைமொழிகள் பொழிந்து உடனே சென்று மைக்கூட்டைக் கொண்டு வருமாறு உத்தரவிட்டார். யாரை ? தம் கார் ஓட்டியை அல்ல. அந்த டைரெக்டரை ; அந்த "பன்றியை" ; "கற்பழிந்த தாயின் வயிற்றில் முறைகேடாகப் பிறந்த" அந்த கோட்லியாரைத்தான் !

டைரெக்டர் குதித்தெழுந்தார். ஒரு நிமிஷம் அவர் மிக்கெய்ல்மீது பாய்ந்துவிடுவார் போலிருந்தது. அதற்குப் பதிலாக அறையினின்று வெளியே ஓடினர்.

அந்தக்காட்சி என்னை நிலைகுலையச் செய்தது. மைக்கூடு உண்மையாக அவரிடம் வந்துசேர்ந்ததா இல்லையா என்பதைப் பற்றி ஜான்ஸ்டனிடம் நான் விசாரிக்கவேயில்லை. இவ்விஷயத்தைப் பற்றியும் நான் அவரிடம் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் அந்த அன்பளிப்பை அவர் மறுத்திருப்பார். அதனால் டைரெக்டரின் நிலை மேலும் கேடடையும். இவற்றையெல்லாம் நான் நன்கறிந்திருந்தேன். அன்றியும், மிக்கெய்ல் அளித்த மற்றொரு நன்கொடையையும் அவர் பெற்றுக் கொள்ளத் தயங்கினர். உயர்ந்த வைரங்களும் மாணிக்கங்களும் அடங்கிய ஐம்பதுக்கு மேலான அணிகலன்கள் கொண்டது அந்த நன்கொடை. அணிகலன்களை ஏற்கக்கூடாதென்றே ஜான்ஸ்டன் கருதினர். அவர் என்ன சொன்னலும் அது மிதமிஞ்சியது என்று மிக்கெய்ல் மனத்தில் பட்டால்தானே.

கடைசி நிமிஷத்தில் தப்பித்துக்கொள்ள ஒரு யோசனை சொன்னர். விமானத்துறைக்குச் செல்வதற்குச் சில நிமிஷங்கள் முன்னல், ஜான்ஸ்டன் மிக்கெய்லைத் தம் அறையில் அழைத்துக் கட்சிக் கட்டுப்பாட்டில் அவருக்கு நம்பிக்கையுண்

டாவெனக் கேட்டார். மிக்கெய்ல் ஸ்டாலின், லெனின் இவர்களுக்கு உள்ளதைப்போலவே தனக்கும் உண்டென்ருர்.

அதைப்போலவே தனக்கும் உண்டென்றும், தான் சேர்ந்துள்ள குடியரசுக் கட்சிக்கும் உண்டென்றும் குடியரசுக் கட்சிக் கட்டுப்பாடு அந்நியநாட்டுப் பிரஜைகளிடமிருந்து பெரிய நன்கொடைகள் வாங்குவதைத் தடைசெய்கிறதென்றும் எரிக் ஜான்ஸ்டன் சொன்னுர். "ஆகவே, மிக்கெய்ல் இந்த அழகிய அணிகலன்களை வருத்தத்துடன், ஆனுல், நன்றியுடன் நான் திரும்பித்தந்துவிட வேண்டியவனுக இருக்கிறேன்" என்ருர்.

மிக்கெய்ல் தம் தோல்வியை உணர்ந்தார். மத்திய காலப் பிரபுவின் பெருந்தன்மையுடன் அதை ஏற்ருர். அணிகலன்களைத் திரும்பப்பெற்றுக்கொள்கையில், குடியரசுக் கட்சியின் கட்டுப்பாடு தளர்த்தப்படும்போது எரிக் அவற்றை மீண்டும் உரிமையுடன் பெறத் தொலைவிலுள்ள நவோஸிபிர்ஸ்கில் அவை காத்திருக்கும் என்றும் கூறினுர். அதற்குள் அவற்றின் அளவும் தொகையும் பெருகும்.

நாங்கள் புறப்படுமுன் அளிக்கப்பட்ட அதே விருந்தில் மிக்கெய்ல் என்னை ஒரு மூலைக்கு அழைத்துச்சென்று சொன்னதாவது :

" தாய்நாடு அழைக்கிறது! தாய்நாடு அழைக்கிறது, நான் சொல்கிறேன். உன்னைப்பற்றி எனக்கு எல்லாம் தெரியும். முதல் மகாயுத்தத்தில் நீ ஜாரிஸ்ட் ஆபீசராக இருந்தது, எங்களுக்கு எதிராகச் சண்டையிட்டது—எல்லாம் தெரியும். நீ கொடியவனுயும் முரடனுயும் இருந்தாய். நாங்கள் உன்னைப் பகைத்தோம். ஆனுல் இப்போது மன்னித்து மறந்துவிட வேண்டும். தாய்நாடு அழைக்கிறது! மூன்று நட்சத்திரங்களுடன் கூடிய செஞ்சேனை யூனிபாரம் உடையில் நீ சிறப்பாகத் தோன்றுவாய். மூன்று நட்சத்திரங்கள் தந்து உன்னைக் கர்னல் ஆக்குவேன்."

"நீங்கள் சொல்வதில் ஏதோ தவறு இருக்கவேண்டும். நான் எந்தச் சேனையிலும் இருக்கவில்லை. அந்த யுத்தத்தில் சாதாரண சோல்ஜராக இருப்பதற்குக் கூட நான் உரிய வய துள்ளவனாக இல்லையே."

"நீ ஜாரிஸ்ட் ஆபீசரைப்போல ருஷியமொழியை நன் ருகப் பேசுகிருய். ஒருவனைப் பார்த்ததும் அவன் ஜாரிஸ்ட் ஆபீசரே என்று நான் சட்டென்று சொல்லிவிடுவேன். உன் நாட்டுச் சண்டையின்போது நான் தவருமல் உன் இனத்தவரில் ஓரிருவரைக் கொன்றிருக்கிறேன். திரும்பிவருவதற்கு இதுவே தருணம். கடைசி வாய்ப்பு."

"மிக்கெய்ல், நீ குடிவெறியில் பேசுகிருய்."

"இருக்கலாம். ஆனுல், தாய்நாட்டின் அழைப்பைக் கேட்கி றேன்!"

காற்றிலடித்துச் சென்ற சருகுபோல அசைந்தாடி அவர் என் னிடமிருந்து விலகி நடந்தார்.

அடுத்த நாள் காலை, பல்லாயிரம் கைகுலுக்கல்களுக்குப்பின் விமானத்துறைக்கு நாங்கள் புறப்படுகையில் மிக்கெய்ல் நான் உட் கார்ந்திருந்த காரண்டை வந்து கடுமையாகப் பார்த்து "முறை கேடாகப் பிறந்த ஜாரிஸ்ட் ஆபீச்ரே! தாய்நாடு அழைக்கிறது!" என்ருர்.

அத்தியாயம் 14

தனிலாவ் குடும்பம்

தனிலாவ்வினுடையவும் அவருடைய மகளினுடையவும் நட்பை இழந்தது இப்பிரசாரயுத்தத்தில் நீலாவுக்கும் எனக்கும் ஏற்பட்ட மிகப்பெரிய விபத்தாகும்.

நாங்கள் தனிலாவ் குடும்பத்தை முதல்தடவையாகப் பத்து வருஷங்களுக்கு முன் சந்தித்தோம். அரசாங்கம் விரும்பத் தகாதவர்களைப் பலவந்தமாக விலக்கிவந்த காலத்திலும், அதற்குப் பின்னால் 1947 வரையிலும் அக்குடும்பத்தினரை நாங்கள் அடிக்கடி பார்த்துவந்தோம்.

அருசமயம் தனிலாவ் குடும்பத்தில் நால்வரில், இலக்கிய விமர்சகரும் நாடகாசிரியருமான தந்தையும், மாஸ்கோ அன்னியமொழிகள் கழகத்தின் மாணவியான 23 வயதே ஆன மாசாவும் ஆகிய இருவரே மிகுந்திருந்தனர். இசை-நகைச் சுவை நாடக உலகில் சிறிது புகழ்பெற்றிருந்த பாடகியான அவர் மனைவி ஒல்கா, போர்முனையில் செஞ்சேனைக்காக இசைக் கச்சேரி நடத்தியபோது 1943-ல் ஜர்மன் வெடிகுண்டு விழுந்து இறந்தாள். அவர்களுடைய ஒரே மகன் விளாடிமீர் ரேடியோ டெக்னிஷியனாக இருந்து பகைவர் லயன்களுக்குப் பின்புறமாக தொண்டனாக வேலைசெய்ய முன்வந்தார். மோசமான உடல் நிலை காரணமாக ஓசிப் தனிலாவ் தாம் விரும்பியபடி சேனைப் பத்திரிகையில் வேலைசெய்ய அனுமதிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, டியுபிஷெவ்வுக்கு அனுப்பிக்கப்பட்டார். அங்கே அவரையும் அவர் மகளையும் அடிக்கடி பார்த்துவந்தேன்.

அமெரிக்காவில் நான்கு வருஷங்கள் தங்கியபின் நீலா திரும்பிவந்த அதே சமயத்தில் அவர்களும் மாஸ்கோவுக்குத்

திரும்பிவந்தனர். ஓல்கா, விளாடிமீர் இவர்களின் மரணத்தினால் பெரிதும் வருந்திய தனிலாவ் குடும்பத்தினருடன் நான் மீண்டும் பழகலானேன்.

1946-ம் வருஷமுடிவில் அமெரிக்காவைப் பகைக்கும் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, தனிலாவை சென்று பார்ப்பதை நிறுத்திவிடலாமென அவரிடமே யோசனை கூறினேன். நாங்கள் நண்பராக இருந்தபோதிலும் அவரோ, மாசாவோ எங்களிடம் வந்து பார்த்துவிட்டுப்போகத் துணியவில்லை.

அமெரிக்காவைப் பகைக்கும் போர் அதிக காலம் நீடித்து நடக்காதென்றும், எங்கள் நட்பினால், ஏதேனுமொரு விபரீதம் நடக்குமெனத் தாம் எதிர்பார்க்கவில்லையென்றும் அவர் கூறினார்.

ஆகவே, நாங்கள் அவர்களை அபூர்வமாகவேனும் தொடர்ந்து பார்த்துவந்தோம்.

1947 கோடைப்பருவ ஆரம்பத்தில்தான் ஒசிப் மன வியாகூலத்தில் ஆழ்ந்திருந்தது எனக்கு முதல் தடவையாகத் தெரிய வந்தது. ஒரு பிரதான மாஸ்கோ நாடகக்கழகத்திற்கு நாடகமொன்று எழுதித்தர உத்தரவிடப்பட்டதுபற்றி அவர் கவலையடைந்தார். முன்பெல்லாம் இதைப்போன்ற விஷயங்களைப்பற்றி என்னிடம் விவாதித்துவந்தவர், இந்நாடகத்தைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

நீண்ட காலத்திற்குப்பின் ஒருநாள் மாலை அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். மாசாமட்டுமே இருந்தாள். என்னைப் பார்த்ததும் கலவரமடைந்தது போலத் தெரிந்தது. நான் விடைபெறமுயன்று, பின்னொரு தடவை தகப்பனார் இருந்த சமயம் வருவதாகச் சொன்னேன். ஆனால், அவள் திடுமெனச் சொன்னதாவது :

" தயவுசெய்து போகவேண்டாம்; நான் உங்களிடம் பேசவேண்டும். என் தகப்பனார் நாடகத்தை எழுதிவிட்டார். அது அமெரிக்காபற்றியது. சற்றுமுன்பே அதைப் படித்து முடித்தேன். என் வாழ்க்கையில் முதல் தடவையாக என் தகப்பனாரைப்பற்றி நான் வெட்கமடைகிறேன்."

" அது 'ருஷியப் பிரச்னே' போன்ற ஏதேனுமொன்ரு ?"

கோன்ஸ்டாண்டின் சிமோநாவ் என்பவர் அமெரிக்கப் பத்திரிகைக்காரர்கள் பணத்திற்காகத் தம் ஆத்மாவை விற்கும் இழிஜனங்கள் என்றும் அவர்களிடையே நேர்மையானவர்கள் வெகு சிலரே என்றும் எழுதியிருக்கும் நாடகத்தைப்பற்றி குறிப்பிட்டேன்.

" மாசா, உன் தகப்பனார் எழுதியுள்ள நாடகம் 'ருஷியப் பிரச்னே' போன்றதா ? "

" அதைவிடக் கேவலம். ஒருகால் சிமோநாவ் தாம் எழுதியதை நம்பியிருக்கலாம். ஆனால், என் தகப்பனார் தாம் எழுதியிருப்பதை நம்பவில்லை என்பது எனக்குத் தெரியும். அவர் மார்க் ட்வெயன், ஜாக் லண்டன், எர்னெஸ்ட் ஹெமிங்வே போன்ற பிரபல அமெரிக்க ஆசிரியர்களை நான் படிக்கும்படிச் செய்தவர். அவர்கள்தாம் அமெரிக்கப் பிரதிநிதிகள் என்று நம்பச்செய்தவர். அமெரிக்காவிடம் என் அன்பு வளர்ந்தது. ஆங்கில மொழியையும் அமெரிக்க இலக்கத்தையும் ஆழ்ந்து படிக்கவேண்டுமென என்னிடம் சொன்னவர் அவரே. அதைப் பற்றி நான் வருந்தவேயில்லை. இப்போதோ அவர் அந்த அருவருப்பான நாடகத்தை எழுதியிருக்கிருர். பயத்தின் காரணமாகவே எழுதியிருக்கிருர். அவர் பயப்படுவதை நான் அறிவேன். அமெரிக்காவிடமும் அதன் பண்பாடு விஷயமாகவும் அடிமை மனப்பான்மை கொண்டிருப்பதாக எழுத்தாளர் சங்கம் அவர்மீது குறைகூறியது. கூட்டத்தில் அப்படித்தான் சொன்னுர்கள். இப்போது, அமெரிக்கர் ஜீவனற்ற இயந்திரங்கள் என்றும், வேலே போய்விடுமே என்ற பயம் ஒன்றே

அவர்களிடம் காணும் மனித உணர்ச்சி என்றும் காட்டும் நாடகம் ஒன்றை எழுதியிருக்கிறார். அவர் அவ்விதமாக நம்பவில்லை என்பதை நான் அறிவேன்.

அவள் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்தாள். பிறகு கண்ணீர்விட்டுக்கொண்டே "இங்கேயிருந்து வெளியேற, எனக்கு எங்கேயாகிலும் ஓர் அறை கிடைக்குமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்" என்றாள்.

எனக்குக் கோபம்வந்தது. ஆனால், நான் என்ன செய்ய முடியும்? அப்படியே சிறிது நின்றேன். இறுதியாக, "மாசா, விடைபெற்று உன்னை முத்தமிட்டுப் போய்வரட்டுமா" என்று கேட்டேன்.

அவள் என்னை நிமிர்ந்து பார்த்தாள். விஷயம் அறிந்து கொண்டாள். முத்தமிட்டுவிட்டு விலகினேன். பொறுப்பைத் தட்டிக்கழித்து ஓடிவிடுவதாகவே கருதினேன். ஆனால் நான் மிகவும் அன்புசெலுத்திய இவர்களுக்குத் துன்பமேற்படுவது என் விருப்பமாயிருந்தாலொழிய, வேறு என்னதான் நான் செய்யமுடியும்?

அவர்களை மீண்டும் பார்க்க நான் ஒரு தடவையும் போகவே இல்லை. மாசாவுடன் நான் பேசியதைத் தெரிவித்தபின் நீலாவும் போகவில்லை.

மாஸ்கோவில் தங்கியிருந்த கடைசி இரவன்று, ஸ்பாஸ் ஸோ மாளிகையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிவருகையில், எங்கள் சிந்தனை தனிலாவ் குடும்பத்தினர்மீது சென்றது. "இப்போது எங்களைப்பற்றி அவர்கள் எண்ணுவதென்ன? நான் ஒற்றன் என அவர்கள் கருதுகின்றனரா? அவர்கள் கருத்தில் நான் அவர்கள் மக்களின் பகைவனா?"

நாங்கள் அவர்களைப் பார்த்தபின் கடந்த பலமாதங்களில் அமெரிக்காவைப் பகைக்கும் பிரசாரம் கலையின் ஒவ்வொரு துறையிலும் ஊடுருவிப் பரவியது. எங்கும், அமெரிக்கர் தம்

நலத்தின்பொருட்டு யுத்தத்தைத் தூண்டுகிறவர்கள் என்றும், ருஷியரிடமிருந்து கருத்துக்களையும் பேடண்ட் உரிமைகளையும் திருடுகிறவர்கள் என்றும் கூறப்பட்டனர். இப்பிரசாரத்தின் பயனாகத் தனிலாவ் குடும்பத்தினரிடம் மாறுதல் ஏதேனும் ஏற்பட்டதா ?

அவர்களுக்கு டெலிபோன் செய்ய முடிவுசெய்தோம். எங்களை எவரும் பின்தொடரவில்லை என்று தெரிந்தும், வீட்டிலிருந்து அரைமணி நேரம் வெளியே நடந்து ஒரு பொது டெலிபோனை நோக்கிச்சென்றோம். கல்ச்சர் அண்டு ரெஸ்ட் நந்தவனத்தின் சப்-வே ஸ்டேஷனை அடைந்து அங்கிருந்து போன் செய்தோம். அப்போது நள்ளிரவாயினும், ஓசிப்பும் மாசாவும் விழித்துக்கொண்டிருந்தனர். ஓசிப் டெலிபோன் ரிசீவரை எடுத்தார். நீலா பேசினாள் :

" மாலை வந்தனம், ஓசிப் விட்ரோவிச்."

" எப்போதும்போலவே உன் குரல் ஆர்கன் இசைக்கருவியின் கீதத்தைப்போல் ஒலிக்கிறது. எப்போதும்போலவே அதைக் கேட்பதில் ஆனந்தம் அடைகிறேன் " என்றார் அவர்.

" நாங்கள் நாளை அமெரிக்காவுக்குப் பிரயாணம் செய்கிறோம். இருவரும் உங்களிடம் விடைபெற விரும்பினோம். ராபர்ட் என்னுடன் இங்கே இருக்கிறார்."

" உங்கள் இருவரையுமே நேசிப்பதாக தயவுசெய்து ராபர்ட்டிடம் சொல்."

அவர் அத்துடன் ரிசிவரை எடுத்துத் தொங்கவிட்டார்.

அத்தியாயம் 15

இசைப்புலவன் வெர்ட்டின்ஸ்கி

அலக்சாந்தர் வெர்ட்டின்ஸ்கி கச்சேரிகளில் பாடும் தொழிலை முதல் மகாயுத்தத்திற்குச் சிறிது முன்பாகத் தொடங்கினர். அவர் பாட்டுக்களுக்கு அவரே சாகித்யகர்த்தா. அவர் தொலைவிலிருந்த நாடுகள்பற்றியும், நீல மேகங்கள்பற்றியும் வெளிநாட்டுக் கிளிகள்பற்றியும் பாடினர். அவரது குரல் சன்னமான, உள்ளம் நிறைந்த குரல்.

புரட்சி ஏற்பட்டதும் வெர்ட்டின்ஸ்கி அதன் மிருகத்தன்மையினின்று விலகி உலகெங்கும் சுற்றியலைந்தார். ருஷியாவை விட்டு வெளியேறினவர்கள் தாய்நாட்டின்மீது ஏக்கங்கொண்டும் செயற்கை வாழ்வு நடத்தியும் இருந்துவந்த இடங்களில் எல்லாம் பாடினர்.

அவர் சோவியத் ஆதிக்கம் பெற்ற நாட்டை வெறுத்தாராயினும், தாய்நாட்டை மீண்டும் பார்க்கத் தம் உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தார். அந்நாட்டில் மக்கள் அவர் பெயரையும் பாட்டையும் புகழ்ந்தனர். ஏக்கம் மிகுந்த அவர் பாட்டு ரிக்கார்டுகளின் மதிப்பு மேன்மேலும் உயர்ந்தது. நவ ருஷியாவில் ரிக்கார்டுகள் ஜனரஞ்சிதமானவையாயின. சோவியத் ராஜதந்திரிகளும் ராணுவ, வியாபார மிஷனைச் சேர்ந்தவரும் அவர் பாடின ஊர்களில் குழுமிக்கேட்டனர்.

யுத்தமேற்பட்டபோது வெர்ட்டின்ஸ்கி ருஷிய யுத்த நிவாரண நிதிக்கு தாராளமாகக் கொடுத்தார். அவர் சோவியத் தலைநகரை அடைந்து ரயில் ஸ்டேஷனைவிட்டு இறங்கினதும் அவ்வழகிய நகரைப்பார்த்து, “ருஷிய அன்னாய்! உன்னை நான் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லையே!” என்ருர். பிறகு தாம் எடுத்துவந்த இரண்டு உடுப்புப்பெட்டிகளையும் தரையில்

வைத்து முழந்தாளிட்டு தம் தாய்நாட்டின் புனித மண்ணை முத்தமிட்டார். அவர் எழுந்தபோது இரண்டு உடுப்புப்பெட்டிகளும் காணவில்லை. அவை களவுபோயின. " ருஷிய அன்னாய், நான் உன்னை அடையாளம் கண்டுபிடித்துவிட்டேன்!" என்றார்.

மாஸ்கோவில் அவருக்குப் பெருவெற்றி ஏற்பட்டது. கச்சேரிக்குப் பெருந்தொகையினர் வந்தனர். நஷ்டங்களை விரைவில் ஈடுசெய்தார். ஆனால் அவ்வெற்றிதான் விளங்கவில்லை. முன்பு அப்படியிருந்தவரா இப்போது இப்படி இருக்கிறார் என்று சொல்லும்படியாக இருந்தார். இப்போது அவருடைய பற்கள் பொய்ப்பற்கள். முகத்தில் தென்பு இல்லை. கண்கள் குழிந்திருந்தன. குரலில் நடுக்கம் காணப்பட்டது. ஆயினும் வெர்ட்டின்ஸ்கி கச்சேரிகளுக்கு டிக்கட் வாங்குவது மாஸ்கோ ஆர்ட் தியேட்டரில் ஆண்டன் செக்காவ் எழுதிய 'செர்ரி ஆர்ச்சர்டு' நாடகத்துக்கோ போல்ஷாய் தியேட்டரில் 'ஸ்வான் லேக்' குக்கோ வாங்குவதைவிடச் சிரமமாயிருந்தது.

அவருடைய கச்சேரியைக் கேட்கவந்தவர்கள் சோவியத் தலைநகரில் தலைசிறந்தவர்கள். அவர்களுள் ராணுவத்தினர் அதிகாரவர்க்கத்தினர் முதல் அக்காலப்பாஷன்களுக்குப் பொருந்தாத ஆடைகளையும் பழையகால வெல்வட் காலர்களையும் அணிந்த முதிய பெண்கள் வரையில் இருந்தனர். பல இளம்பெண்களும், இளமாணவரும், சில தொழிலாளரும் இருந்தனர்.

வெர்ட்டின்ஸ்கி அரங்கில் தோன்றியதும் அவரைக் கண்டு யதார்த்தவாதிகளான வாலிபர் சிலர் சிலசமயம் நகைப்பதுண்டு. ஆனால், " தொலைவிலுள்ள நீலவண்ண சிங்கபுரியில் அது நிகழ்ந்தது " என்று வெர்ட்டின்ஸ்கி புலம்புவதைக் கேட்டதும் மற்றவரைப்போலவே அவர்களும் விரைவில் கனவு காண்பவர்போல் அதில் அமிழ்ந்துவிடுவர்.

வெர்ட்டின்ஸ்கியின் வெற்றியினுல் தூண்டப்பட்ட கலைக் கமிட்டி அங்கத்தினர் ஒருவர் இளம்பாடகர்கள் வெர்ட்டின்ஸ்கி ரீதியில் பழக்கப்படவேண்டுமென ஆலோசனை கூறினுர். ஆனுல், ஸ்டாலின், "ஒரு வெர்ட்டின்ஸ்கியே எதேஷ்டம்" என்று சாரமின்றிச் சொன்னபின், மேலே ஒன்றும் நடக்கவில்லை.

அத்தியாயம் 16

கோலோவங்கோ

நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட சமயத்தில் எங்கள் ருஷிய நண்பர்கள் அனைவரையுமே இழந்திருந்தோம். சிலர் தம் பதவியினின்று அரசாங்கத்தாரால் பலவந்தமாக விலக்கப்பட்டனர். சிலர் எங்களைக் கைவிட்டனர். மற்றவரை நாங்களே அவர்கள் பொருட்டே கைவிட்டோம். சற்றேறக்குறைய பதினெட்டு மாதங்களுக்கு முன்பே எங்கள் நண்பர்களின் வீடு சென்று விடைபெற்றுக்கொண்டோம். அப்போதே ருஷியர் அமெரிக்கருடன் பழகுவது அவர்களுக்கு ஆபத்தாக இருந்தது. நாங்கள் மாஸ்கோவில்தான் இருந்தோம். எங்கும் போகவில்லை. ஆனால் இரண்டு தனியுலகம்போல, பக்கத்திலேயிருந்தும் ஒருவரிடமிருந்து ஒருவர் பிரிந்து தனித்து வாழ்ந்தோம். அவ்விதம் விடைபெறுகையில் பிரிவு உபசாரங்களோ, பூமாலைகளோ, தேநீர் மதுபானவிருந்தோ கிடையாது. நம்பிக்கையில்லாமல் ஒருவரை யொருவர் தழுவினோம்! அழாமல் அழுதோம்.

1935 வாக்கில் யாவும் வேறுவிதமாக இருந்தன. மனிதரிடையே தொடர்புகள், பரஸ்பர விருப்பம், பரஸ்பர பொது நலன்கள், மனம், ஆத்மா இவற்றின் பரஸ்பர கொடுக்கல் வாங்கல் இத்தத்வங்களின் அடிப்படையில் அமைந்திருந்தன. ருஷியக் குடும்பம் ஒன்றின் நட்பு பெறுவதோ, ஒரு பெண்ணை நாடகத்திற்குப் பிறகு மாஸ்கோ நகரின் மத்தியில் உள்ள கபே நாஷனல் போன்ற பிரதான இடத்திற்கும் அழைத்துச் செல்வதோ மிகவும் சகஜம்.

அரசாங்கத்தாரால் பலவந்தமாக விலக்கப்பட்டவர்களில் செமியோன் யகோவ்லவிச் கோலோவங்கோ என்பவர் ஒருவர்.

1935 டிசம்பரில் ஓரிரவு அவரை நாடகக்கொட்டகை ஒன்றில் சந்தித்தேன். "மச் அடோ அபவுட் நதிங்" என்ற நாடகம் நடந்தது. நடிப்பில் உணர்ச்சியும் ஜீவனும் இருந்தது. பார்த்தவர்கள் கைதட்டி ஊக்கமளித்தனர்.

என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவர் திரைவிழுந்த ஒவ்வொரு தடவையும், "சபாஷ்! சபாஷ்!" என்று கூச்சலிட்டார். அவர் 40 வயதிற்கு மேலானவர். பார்வைக்குப் பூதாகாரமாயிருப்பார். நரைத்துவந்த கருமயிர்; புன்னகை மிளிரும் கருவிழிகள்; அடர்ந்த புருவங்கள்.

எத்தகைய இயந்திர சாதனங்கள் விஷயத்திலும் அவருக்குக் குழந்தைபோன்ற ஆராய்வும் ஆச்சரியமும் உண்டு. ஆட்டத்தில் கவனஞ்செலுத்தி அவ்வப்போது "சபாஷ்" ஆரவாரங்கள் செய்துவநதபோதும் நாடகம்பற்றி குறிப்பெடுத்துக் கொண்டிருந்த என்னை விடாது கவனித்துவந்தார். பௌண்டன் பேனாவும் பென்சிலும் இணைக்கப்பட்ட எழுதுகோல் ஒன்று என்னிடம் இருந்தது. பென்சிலால் எழுதியதைத் தேவையானபோது பேனாவினால் கோடிட்டேன். இந்த பென்சில்-பேனாவினால்தான் நான் கோலோவங்கோவையும் அவர் குடும்பத்தினரையும் சந்திக்கநேரிட்டது.

முதல் இடைவேளையிலேயே இந்தப் பேனாவைப்பற்றி என்னிடம் கேட்கவிருந்தார். ஆனால், அவருடன் இருந்த கறுத்த மாது, கேட்பது மரியாதையற்றது என்று வெளியே இழுத்துச் சென்றாள். இரண்டாவது இடைவேளைக்குப்பின், ஆரவாரம் அடங்கியதும், என் பேனாவைக் காட்டி, "இது அமெரிக்கான்ஸ்கியா?" என்று கேட்டார். "ஆம்" என்று சொல்லி பேனா வேலை செய்த விதத்தைக் காட்டினேன். பென்சில் பகுதிகளைப் புதிதாகப் போட்டுக்கொள்வதற்கான இடம் எவ்வளவு திறமையுடன் கண்ணுக்குப் புலனாகாமல் மறைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டினேன். இவ்விதமாக ஆட்டம் முடிந்ததும், தம்முடனும், தம்மனைவி நினய்தா மீரோநேவானுவுடனும்

தம் வீட்டுக்கு வந்து சிற்றுண்டியும் தேநீரும் அருந்த கோலோவங்கோ என்னை அழைத்தார். அது பக்கா இராச்சாப்பாடாகவே இருந்தது. தேநீரில் வோட்கா மதுவும் கலக்கப்பட்டிருந்தது.

அன்றிரவு முதல் நான் அடிக்கடி அவர் வீட்டுக்குப் போனேன். 1938-ல் அவர் கைது செய்யப்பட்டுப் பதவியிலிருந்து விலக்கப்படும்வரை அது எனக்கு இரண்டாவது வீடு போலவே இருந்தது.

கோலோவங்கோ உக்ரேனில் பிரதான கப்பல்கட்டும் ஸ்தலமாகிய நிக்கோலயேவ் என்னும் ஊரில் பிறந்து வளர்ந்தார். அவர் பத்துவயதிலேயே தச்சுவேலையில் தம் தகப்பனுருக்கு உதவியாக இருந்ததுடன், தொழிலாளர்களிடையே புரட்சியைத் தூண்டின துண்டு பிரசுரங்களை விநியோகிக்கும் அபாய வேலையிலும் ஈடுபட ஆரம்பித்தார். அவர் தகப்பனுர் கையும் பிடியுமாகப் பிடிக்கப்பட்டு சைபீரியாவுக்குப் பிரஷ்டம் செய்யப்பட்டார். அங்கேயே அவர் இறந்தார். மகனே குடும்பத்தைப் பாதுகாக்கவும் ஜார் ஆட்சிக்கு விரோதமான போராட்டத்தை நடத்தவும் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. இளவயதினராயும் கல்விப்பயிற்சி இல்லாதவராயும் இருந்தும், கோலோவங்கோ பலியாத 1905 புரட்சிக்கு இரண்டு ஆண்டுகளுக்குப்பின் லெனினின் போல்ஷிவிக் கட்சியில் சேர்ந்தார். 1917-ல் செரென்ஸ்கிக்கு எதிராகச் சண்டைபோட்டார். நிக்கோலயேவ் கப்பல்கட்டும் தொழிலுக்கு அவரே முதல் டைரெக்டராக நியமிக்கப்பட்டார். இரண்டு வருஷங்களுக்குப்பிறகு மாஸ்கோவில் படிப்பதற்காகச் சென்றுர்.

விவசாயம் பொதுச் சொத்தாக்கப்பட்ட காலத்தில், கிராமங்களில் கூட்டுப்பண்ணைகள் அமைக்க உதவுவதன் பொருட்டு அனுப்பப்பட்ட 25,000 நகர போல்ஷிவிக்கர்களில் அவரும் ஒருவராக இருந்தார். அவர்களிற் சிலர் புது முறைக்கு இணங்க மறுத்த குடியானவரால் கொல்லப்பட்டனர்; சிலர் பண்ணைகளின் தலைவர்களாகவும் இயந்திர டிராக்டர் ஸ்டேஷன்

களின் டைரெக்டர்களாகவும் நிலத்திலேயே தங்கினர். கோலோ வங்கோ உட்பட பெரும்பாலோர், நாட்டு விவசாயத்தில் பெரும் புரட்சி செய்து சற்றேறக்குறைய 10 லட்சம் குடியானவர்களையும் ருஷியாவின் கால்நடைகளில் பெரும்பகுதியையும் பலியிட்ட பின் நகர வாழ்க்கைக்குத் திரும்பினர்.

கோலோவங்கோ தடைபட்ட கல்விப்பயிற்சியை மீண்டும் நடத்த விரும்பினர். ஆனல், கட்சியானது அவரை மாஸ்கோ விலுள்ள மிகப்பெரிய டிரக், ஆட்டோ ரிப்பேர் இயந்திர சாலை யின் டைரெக்டராக நியமித்தபோது, அதை அவர் மறுக்க முடியவில்லை. "நம் குழந்தைகள் படித்து ஆராய்ச்சிகள் செய்யட்டும். அவர்கள் வாழ்வதற்குரிய சமதர்ம உலகை நாம் சமைப்போம்" என்றனர் கட்சியினர்.

ஆயினும் கோலோவங்கோ கல்வியை அடியோடு நிறுத்தி விடவில்லை. அவருடைய அபாரமான செயலாற்றலும் விஷ யங்களை அறியவேண்டும் என்ற தீவிரமான அவாவும் அவரைப் பல புத்தகங்களைப் படிக்கத்தூண்டின. அவர் எப்போதும் புதுப்புது சுவைகளைக் கண்டுபிடித்தவண்ணமாக இருந்தார். பிறப்பிலேயே தலைமை வகித்து நடத்தும் திறனைப்பெற்ற அவர், தாம் மேற்கொண்ட யாவற்றிலும் வெற்றிகண்டார். எத் துறையில் வேலைசெய்தாலும், நிபுணர்கள் சொன்னதைக் கூர்ந்து கேட்டார். பிறர் தோல்வியடைந்த விஷயங்களில் தாம் வெற்றியடைந்தார்.

ஒவ்வொரு நாள் காலையும் கார் 7–30 மணிக்கு வீட்டு வாயிலில் வந்துநிற்கும். அதில் ஏறி வேலைக்குச் செல்வார். 8 முதல் 9 வரையில் மேஸ்திரிகள், இஞ்சினியர்கள், சப்ளை தலைவர்கள், சிப்பந்திகள் ஆகியோருக்குப் பேட்டியளிப்பார். 9 முதல் 10 வரையில் கணிதத்தில் பாடம் கேட்பார். பிறகு ஒரு மணி நேரம் ஆங்கிலம் பயில்வார். ஆங்கிலத்தில் ஆச் சரியப்படும் அளவு அபிவிருத்தியடைந்தார். மூலத்திலேயே ஜாக் லண்டன் நூல்களைப்படிக்கப் பெரிதும் விரும்பினர்.

ஸ்தாபனங்களை அமைப்பதில் அனுபவம் வாய்ந்தவரும் சின்னஞ்சிறு தவறுதல்களிலும் பொறுமைகாட்டாதவருமான அவர் தமக்குக் கீழே இருந்த 2,000 தொழிலாட்களையும் எட்ராய்ட் முதலாளிக்கே உரிய சாமர்த்தியத்துடனும் புத்தி நுட்பத்துடனும் நடத்திவந்தார். சோவியத் தொழிலில் வழங்கிவருவதும் பொதுவுடைமை வவசாயத்தில் பெரிய அளவில் மேற்கொள்ளப்போவதுமான வேலைசெய்த அளவு கூலி என்ற "பீஸ் ஒர்க்" முறையை அமெரிக்கத் தொழிற்சங்கங்கள் எதிர்த்துப் போராடிவருகின்றன என நான் அவரிடம் குறிப்பிட்டபோது அவர் சொன்னதாவது: "அமெரிக்கத் தொழிலாளர் விஷயத்தில் அது சரிதான். பீஸ் ஒர்க் முறையை அவர்கள் எதிர்க்கட்டும். அது தொழிலாளரை நன்ருக உழைக்கும்படிச்செய்கிறது. ஆனால் நாங்கள் முதலாளிகளுக்காக அடிமைபோல உழைக்கவில்லை. நாங்கள் சமதர்ம சமுதாயத்தை அமைத்துவருகிறேம். நாங்கள் அமெரிக்காவை எட்டிப்பிடித்து அதைத் தாண்டிச்செல்லவேண்டும். அப்போதே எங்கள குழந்தைகளுக்கு செழிப்பான வாழ்க்கை நிலையை உண்டாக்கித்தருவோம். அப்போதே அவர்களுடைய குழந்தைகள் கதைகளில் எங்களைப் பாராட்டிப் புகழ்ந்து அமரர்களாக்கிவிடுவர்."

ஒவ்வொரு சோவியத் தொழிலிலும் தொழிலிலிருந்து கிடைக்கும் லாபத்தில் ஒரு குறித்த சதவிகிதம் அதன் தலைவரிடம் அவரிஷ்டப்படி நிர்வகிக்க அளிக்கப்படும். பரிசுகள் அளித்தல், கல்வி சம்பந்தமான முயற்சிகள் செய்தல், திட்ட நிறைவேற்றத்தைக் கொண்டாட விழா நடத்துதல், வேறேதேனும் ஒரு சோவியத் விழாவைக் கொண்டாடுதல் முதலிய விஷயங்களுக்காக அது செலவு செய்யப்படும். அந்த நிதி டைரக்டர் நிதி எனப்படும். கோலோவங்கோ அந்நிதியைப் பயன்படுத்துவதில் மிகச் சாமர்த்தியமாகவும் முதலாளியின் போக்கிலும் நடந்துகொள்வார். இவர் விழாக்களில் சொற்பமாகவே செலவழிப்பார். ஆனல், இதர சோவியத் அதிகார வர்க்கத்தினரைப் போலன்றி, பிரதான ஊழியருடையவும்,

மந்தமாக வேலை செய்வோருடையவும் பழக்க வழக்கங்கள், தேவைகள், நலன்கள் ஆகியவற்றைக் கவனிப்பார். ஆட்களுடன் வேலையிலேயே பழகி அவர்களுடைய விருப்பங்களை அறிவார். ஒரு சமயம் சில ஆட்கள் வோல்காவில் உல்லாச படகுப்பிரயாணம் செய்ய விரும்பியதை அறிந்தார். அங்ஙனம் செல்வதற்குரிய விஷயங்களையெல்லாம் அவர்களுடன் தாமும் கலந்தாலோசித்தார். படகுக்கும் மோட்டாருக்கும் ஏற்பாடு செய்தார். ஒவ்வொருவருக்கும் அதிகநாள் லீவு தந்தார். ஆனால் தொழிலுற்பத்திமட்டும் இத்தனை சதம் வீதம் அதிகரிக்கவேண்டுமென ஒரு நிபந்தனை போட்டார். தொழிலாளிகள் அங்ஙனமே உத்சாகத்துடன் உழைத்து உற்பத்தியைப் பெருக்கினர். குறைந்த செலவில் உற்பத்தி அதிகரித்தது.

கோலோவங்கோ தம் ஆலையில் வேலை செய்யும் பெண் தொழிலாளிகளுக்குக் குழந்தைகளைத் தாதிகளிடம் விட்டுச் செல்ல 'கிரெஷ்' விடுதி கட்டித்தந்தார். ஒரு கிரெஷ் பராமரிக்கக் கூடியதற்கும் மேலாகக் குழந்தைகள் வந்தன. கோலோவங்கோ அதிகமாக உற்பத்தி செய்யும் தொழிலாளரின் குழந்தைகளுக்கே சலுகை அளித்தார்.

அவரை அறிய அறிய, அவருடைய கவர்ச்சிகரமான தோற்றமும் குணமும் என்னை ஆகர்ஷித்தன. அதே போல அவரும் என்னிடமுள்ள விசேஷ குணங்களால் கவரப்பட்டார். அவருடைய நாட்டில் நான் அன்னியனாக இருப்பினும், என்னிடம் நம்பிக்கைவைத்தார். உண்மையில், நான் சோவியத் யூனியனுக்கு வந்த சில வருஷங்களுக்குப் பின், என்பால் நம்பிக்கைவைத்து என்னுடன் பழகின ருஷியர், நான் அன்னியனாக இருப்பதால் அதிகாரிகளிடம் ரகசிய அறிக்கைகள் செய்ய மாட்டேன் என்ற நம்பிக்கையின் காரணமாகவே அங்ஙனம் செய்தனர் என்ற முடிவுக்கு வந்தேன்.

கோலோவங்கோ என்னை எப்போதுமே அவருடைய ஆலைக்கு அழைத்ததில்லை. ஆயினும், அங்கே வேலை செய்தவர்களிட

மிருந்து அதைப்பற்றி அறிந்தேன். அது ருஷியாவிலேயே மிகத் திறமையாக நடக்கும் ஆட்டோ ரிப்பேர் ஆலையென அரசாங்கச் சிறப்புச்சின்னம் பெற்றதை அறிந்தேன்.

கோலோவங்கோவுக்குச் சில தொல்லைகளும் ஏற்பட்டன. அவை குழந்தைகளின் ' கிரெஷ் ' சம்பந்தமாக ஆரம்பித்தன. டைரெக்டர் கிரெஷ்களில் குழந்தைகளைச் சேர்ப்பதில் ஸ்டகநோவிட்ஸ்களுக்கே சலுகை அதிகம் காட்டுகிறார் என்றும், கம்யூனிஸ்ட்களைக் கவனிப்பதில்லையென்றும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினனொருவன் ஒரு தொழிலாளி ஆலையின் கட்சிக்கமிட்டிக்குக் கடிதமொன்று எழுதினான்.

ஒவ்வொரு சோவியத் தொழிலிலும் கட்சிக்கமிட்டி முக்கியமானதோர் அம்சமாகும். அதற்கு நிர்வாக அதிகாரம் கிடையாது. உற்பத்தித் திட்டம் நிறைவேற உதவுவதும், லட்சியத்தை அடைய டைரக்டருக்கு உதவியளிப்பதும், கலாசாரபிரசார வேலையை நடத்துவதும், தொல்லை ஏற்படும்போதெல்லாம் குறுக்கிடுவதுமே அதன் வேலைகள். டைரக்டருக்குத்தான் இறுதியான நிர்வாக அதிகாரம் உண்டு. ஆனால், அவர் கட்சிக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர். ஜில்லா கம்யூனிஸ்ட் கமிட்டி கட்சி அவர் காரியங்களை அங்கீகரிக்கவேண்டும். இந்த ஜில்லாக் கமிட்டிக்கு முழுநேர சிப்பந்தியான கட்சிக்கமிட்டிக் காரியதரிசி நேராக ரிப்போர்ட் செய்வான்.

இக் கட்சிக்கமிட்டிக் காரியதரிசி தன் ரிப்போர்ட்டில் கம்யூனிஸ்ட்களின் கூற்றை ஆதரிக்காவிடினும் கோலோவங்கோ கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரான உழைப்பாளிகளை அலட்சியம் செய்வதைக் கண்டிப்பதாக ஒரு வாக்கியம் சேர்த்திருந்தான். அன்றியும் கோலோவங்கோ ஆலையை நடத்துவதில் அமெரிக்க முறைகளையே அதீதமாகக் கையாளுகிறார் என்றும் குறிப்பிட்டிருந்தான். இந்தத் தீர்மானம் கோலோவங்கோ பற்றிய தஸ்தாவேஜ்களில் வைக்கப்பட்டது.

அது சமயம் கோலோவங்கோவை மோட்டார் தொழில் நிர்வாகஸ்தர்கள் இஞ்ஜினியர்களுடன் டெட்ராய்ட் அனுப்புவதாக

ஏற்பாடாயிருந்தது. இந்த ரிப்போர்ட் காரணமாக கோலோ வங்கோவை அமெரிக்காவுக்கு அனுப்பவில்லை.

ஜினைய்தா.

கோலோவங்கோவுக்கு வேறு சில பிரச்னைகளும் இருந்தன. அவருடைய மனைவி ஜினைய்தா மிரோநோவனு, தம்மைப் போலவே கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்ட குடும்பம் ஒன்றிலிருந்து வந்தவள். தன் கணவனைப்போலன்றி, அவள் உயர்தரப்பள்ளியில் படித்தவள். அவள் கலைப்பண்பாட்டில் தோய்ந்த ஒரு பெண்ணுகவே தன்னைப் பாவித்துக் கொண்டாள். ஜினைய்தா தன் கணவனைவிட உயர்ந்தவளெனத் தன்னைக் கருதினுள். உண்மையில் அனுபவத்திலும், விஷயஞானத் திலும் அவர் அவளைவிட உயர்ந்தவர். புரட்சி வட்டாரத்தில் சந்தித்து ஒருவரையொருவர் காதலித்த அவர்களுக்கு ஒரு பையனும் ஒரு பெண்ணுமாக இருவர் இருந்தனர். பிள்ளை சர்யோஜா (சர்ஜை) கலைஞனுனன். இள வயதிலேயே மணந்து குடும்பத்திலிருந்து விலகி வாழ்கிறுன். பெண்ணின் வயது 15. உயர்தரப் பள்ளியில் படித்த அவள் தொலை தெற்கில் ரேடியோ ஆப்பரேட்டர் வேலை செய்வதுபற்றிக் கனவு கண்ட வண்ணமாக இருந்தாள். ஜினைய்தா, புரட்சிக்குமுன்பும், உள் நாட்டுக் கலகத்தின்போதும், புனரமைப்புக் காலத்திலும் தன் கணவனுக்கு நேர்ந்த துன்பங்கள் அபாயங்களில் தானும் பங்கு கொண்டாள். ஆனல் அவர் கிராமத்திற்கு மாற்றப்பட்ட காலத் தில் அவளிடம் ஒரு மாறுதலேற்பட்டது. நாடகங்கள், நல்ல ஆடை அணிந்தவரின் உறவு, வீட்டில் பகட்டான கம்பளங்கள், கட்டுகள், வெந்நீர் வசதியுள்ள நவீன ஸ்நான அறைகள் இவை கிராமத்தில் கிடைக்காதது பற்றிக் குறைப்பட்டாள். எதிர் காலத்தின் பொருட்டு உழைப்பது பற்றிச் சலிப்படைந்தாள்.

நல்ல காலமாக அவள் பிரார்த்தனைகளை ஆண்டவன் கேட் டான். கோலோவங்கோவுக்கு டைரக்டர் வேலை கிடைத்தது. புதுக் கட்டிடம் ஒன்றில் 4 அறைகள் கொண்ட ஒரு ஜாகை, இரவும் பகலும் அவரிஷ்டப்படி உபயோகிக்க ஒரு மோட்டார்

காரும் மோட்டார் வண்டியோட்டியும், இவையாவும் வேலையுடன் வந்தன. சாமானிய தொழிலாளனின் ஊதியம் 500 ரூபிலுக்கும் குறைவாக இருக்க, இவர் மாதம் ஒன்றுக்கு 3000 ரூபில் பெற்றார். ஆடை அணிகலன்களில் மிகுந்த ஆசை கொண்ட ஜினய்தா பிரபல தையல் நிலையமான செண்ட்ரல் 'அத்லியேமோத்' தில் நுழையும் உரிமை பெற்றாள்.

செண்ட்ரல் அத்லியே மோத் என்ற தையல் தொழில் ஸ்தாபனம் அரசாங்க தொழிற்சாலைகள் பெருவாரியாக உற்பத்தி செய்வதற்குரிய மாடல்களைச் சிருஷ்டிக்கிறது. அது பொறுப் புள்ள தோழர்களின் மனைவிகளையும், பெயர்பெற்ற நடிகளையும் ஓராண்டுக்குமுன் வரையில் அயல் நாட்டு ராஜதந்திரிகளின் மனைவிமாரையும் மட்டுமே தன் வாடிக்கைக்காரர்களாக ஏற்றுக் கொண்டிருந்தது.

அத்லியே மோத்தில் வேலை செய்யும் பெண்கள் அயல் நாட்டு மாதர்களுக்குத் தைத்துக் கொடுப்பதையே பெரிதும் விரும்பினர் என்று ஜினய்தா மிரோநோவனுவிடமிருந்து அறிந் தேன். இதன் காரணம் மூன்று: ஒன்று, அவர்கள் நல்ல ரகமான துணிகளைத் தருகின்றனர். இரண்டாவதாக, அவர்கள் சமீபத்தில் ஐரோப்பிய-அமெரிக்க பாஷன் சம்பந்தமான சஞ்சி கைகளின் பிரதிகளை அன்பளிப்பாகத் தருகின்றனர். கடைசி யாக அவர்கள் பார்ப்பதற்கு நன்றாக இருப்பார்கள்.

மொத்தத்தில் ருஷியப்பெண்களைவிட உக்ரேனியப்பெண்கள் வசீகரம் மிகுந்தவராயும் நல்ல உடற்கட்டு உடையவராகவும் இருப்பர். ஜினய்தா தன் வாலிப வயதில் உக்ரேனியப்பெண்க ளிடையேயும் சிறந்து விளங்கினாள். முதல் தடவையாக அவளைப் பார்த்தது போலவே இன்றும் அவள் பார்வைக்கு நன்றாக இருக்கிறாள். ஆனால், ஒரு சமயம் மிக வசீகரமா யிருந்த அவள் உருவம் இன்று தன் வீட்டில் கிடைக்கும் நல்ல உணவின் காரணமாக அழகு குறைந்துவருகிறது.

அத்லியே மோத் உலகைக் கண்டுபிடித்த ஜினைய்தா, சாமான் வண்டிகள் ஆட்டோமொபைல்கள் உலகைத் தன் கணவர் எவ்வளவு வெறியுடன் ஏற்றுக்கொண்டாரோ அதே வெறியுடன் அதை ஏற்றுக்கொண்டிருக்கிருள். ஜினைய்தாவை இன்னும் காதலிக்கும் அவள் கணவர் துணிமணிகள் விஷயத்தில் அவள் காட்டும் வெறியைச் சகிக்கிருர். அந்த பித்து வரவர போய்விடுமெனக் கருதிக் கூடுமானபோதெல்லாம் அவளை அத்லியேவுக்குக் காரிலேயே அனுப்பி பிட்டிங் ஆகி வருகிறவரையில் கார் ஓட்டி காத்திருக்குமாறு உத்தரவிட்டார். ஒரு நாள் கட்சிக்கமிட்டியின் காரியதரிசி கார் கேட்டார். அது ஜினைய்தாவுக்காகக் காத்திருந்தது. மௌனமாயிருந்த, ஆனல் கோபமுற்ற காரியதரிசி, தெருக்காரை எடுத்துச் செல்லவேண்டியிருந்தது. அந்நாள் முதல், அத்லியேவுக்குக் காரில் சென்ருலும், டிராலி பஸ்ஸிலேயே வீட்டுக்குத் திரும்பிவந்துவிடுவாள்.

இம்மாறுதலுக்கு ஜினைய்தா ஒப்பினதற்குக் காரணம், பொலித் பீரோ அங்கத்தினர் மிக்கோயனின் மனைவியும் தனக்காக கார் காத்திருக்குமாறு செய்வதில்லை. அழகிய அர்மீனியப் பெண்ணுகிய அவள் பிட்டிங் ஆனதும் வீட்டுக்கு நடந்தே செல்வாள்.

அத்லியே கதைகள்.

அத்லியேவில் நடக்கும் விஷயங்களைப் பற்றி ஜினைய்தா பல கதைகள் சொல்வாள். ஒரு நாள், மாஸ்கோவில் தான்தான் மிகச் சிறப்புடன் உடுப்பு அணிபவள் என்று எண்ணிக்கொண்ட சினிமா நடிகை லையுபாவ் ஓர்லோவா பற்றிச் சொன்னுள். தத்யானு டைபயோதோரோவா தனக்கு அபாயகரமானதொரு போட்டியாகக் கிளம்பிவிட்டதுபற்றிப் பெரும்பீதி அடைந்தாள். தத்யானு முன்பு மன்னதோன்டியாக இருந்தவள். அவள் தன் ஷவலுடன் அற்புதங்கள் செய்தாள். மாஸ்கோவில் தரைக்கீழ் இருப்புப்பாதைக்காகத் தோண்டும் மற்ற பெண்களின் வேலையை ஒழுங்குசெய்தாள். பிறகு பள்ளிக்கூடம்

சேர்ந்து இஞ்சினியராகச் சோவியத் ருஷியப் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

மற்றொரு நாள் மார்ஷல் வோரோஷிலாவின் மனைவி பற்றிக் கதையொன்று சொன்னாள். அத்லியேவில் ஆடைகள் பிட்டிங் அறையொன்று உண்டு. அவ்வறையிலிருந்து ராஜதந்திரி யொருவரின் மனைவி அழகிய ஆடையுடன் வெளியேவந்தாள். அதைக் கண்ட வோரோஷிலாவின் மனைவி தனக்கும் அதே மாதிரியான ஆடையொன்று தயாராக வேண்டுமென வற்புறுத்தினாள். துரதிருஷ்டவசமாக மதாம் வோரோஷிலாவ் பருஉடல் பெற்றவள் ; ராஜதந்திரியின் மனைவியோ ஒல்லியானவள். மதாம் வோரோஷிலாவ் உடைக்கு ஆர்டர் கொடுக்காமல் இருக்கும் பொருட்டு அத்லியேவில் உடைகள் தைப்பவள் ராஜதந்திரியின் மனைவிக்காகத் தைக்கப்பட்ட உடையானது உடம்பு வற்றிப்போய் எலும்பாயிருந்த அவள் உடலை மறைக்கவே செய்யப்பட்டதெனச் சமாதானம் சொல்லப்பட்டது.

இப்போது அயல்நாட்டு வியாபார மந்திரியாயும் முன்பு ருஷியாவின் உணவு மந்திரியாயும் இருந்த மிக்கோயன் தம் அரசாங்க மாளிகை அறையில் குளிர்ச்சிப்பெட்டி வைத்திருக்கவில்லை என்பதை எப்படி ஜினய்தா தெரிந்துகொண்டாள் என்பதைக் கூறினாள். திருமதி விக்கோயன் அத்லியேவிலிருந்து மத்தியானச் சாப்பாட்டுக்குத் தான் வீட்டுக்கு வரமுடியாது என்றும் "சாப்பாடு ஜன்னலுக்கு வெளியே வைக்கப்பட்டுள்ளது" என்றும் போன் செய்ததை ஜினய்தா கேட்டுக்கொண்டிருந்தாள். அநேகமாக ருஷியர் அனைவருமே தம் உணவை ஜன்னலுக்கு வெளியே வைக்கப்பட்டுள்ள பெட்டியில் வைப்பர். யுத்தத்திற்கு பின் ரேஷன் கட்டுப்பாடின்றி விற்கப்பட்ட முதல் பொருள்களில் ஒன்று குளிர்ச்சிப் பெட்டி. அது 350 டாலர்களுக்குப் விற்கப்பட்டது.

கொலோஸங்கோ என்னுடன் நெருங்கிய நட்பு கொண்டு என் மீது நம்பிக்கை வைத்திருந்தாராயினும், "பர்ஜ்" விஷயமாக,

அதாவது, அரசாங்கம் வேண்டாதவரைப் பலவந்தமாக விலக்கி வந்த விஷயமாக மட்டுமே என்னுடன் விவாதிக்கத் தயங்கினார். விசாரணையின்போது நான் குறிப்பெடுத்துச் செய்திகள் அனுப்பித்துவந்ததால், அது சமயம் நண்பர்களுடன் பழக சொற்ப நேரமே கிடைத்தது. அவர்கள் வீட்டுக்குச் சென்றபோதெல்லாம் குடும்பத்தினர், பிரதிவாதிகள் எவ்விதமாக உடுத்தியிருந்தனர்? அவர்கள் எப்படி நடந்துகொண்டனர்? பார்க்க வந்தவர்கள் எப்படி நடந்துகொண்டனர்? என்றெல்லாம் சரமாரியாகக் கேட்பார். சோவியத் பத்திரிகைகள் எவையும் வாசகர்களுக்கு இச் செய்தியைத் தருவதில்லை. விசாரணையின்போது குறிப்பெடுக்க நிருபன் ஒருவனுக்கு கோலோவங்கோ டிக்கட் வாங்கித் தந்திருக்கக்கூடும். ஆனால் தான் அதை விரும்பவில்லை. மற்றவர்கள் கேள்விகேட்க விட்டார். முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு அவற்றைக் கருத்துடன் கேட்பார்.

அவர் மௌனமாக இருந்தாலும் "பர்ஜ்" விசாரணைகள் பற்றி நான் எழுதும் ரிபோர்ட்களில் அவர் அக்கறை கொண்டிருந்தார் என்பதை நான் சீக்கிரத்தில் கண்டுகொண்டேன். அச்சமயம் நிருபர் மாஸ்கோவுக்கு வெளியேயிருந்து வரும் பத்திரிகைகளை தருவித்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொரு நாளும் சோவியத் ருஷியாவின் முக்கியமான பட்டணங்களிலிருந்து எல்லாம் முப்பது பத்திரிகைகளுக்கு மேல் வரும். இப்பத்திரிகைகள் உள்ளூர் சம்பந்தமான சில செய்திகளைத் தவிர படிப்பதற்கு அதிகமிராது. 1936-ம் வருஷ இறுதி முதல் 1938-மத்தி வரையில், பர்ஜ் விசாரணைகள் குற்றங்கள் ஒப்புக்கொள்ளுதல், தீர்ப்புக்கள், இவை உள்ளூர் செய்திகளில் அடங்கியிருந்தன. இந்த விசாரணை ரிபோர்ட்கள் பர்ஜ்கள் நாடு முழுவதும் எவ்வளவு விரிவாக நடந்தன என்பதைப் பற்றி பொதுவாக அறிய உதவுகின்றன. ஒவ்வொரு தண்டனைக்குப் பின்னாலும் ஒரு குலைந்த குடும்பம் புலப்படும். கைதானவர்களின் மனைவிமார்கள் தொலைவிலுள்ள வடக்கிலேயோ தொலைவிலுள்ள கிழக்கிலேயோ கடத்தப்படுவர்; அல்லது பெண்களுக்குரிய பெரிய காம்ப்களில் சிறைப்படுவர். அரசாங்கக் கவ்

லூரிகளில் கல்விக்காகச் சேர்க்கப்படும் அவர்களின் குழந்தை களுக்கு அவர்களின் தகப்பன்மார்கள் மக்களின் பகைவர் என்றும் அவர்களை மறந்துவிட வேண்டும் என்றும் போதனை அளிக்கப்படும். குடும்ப நண்பர்கள் விரும்பினாலும் இக் குழந்தைகளை அவர்கள் தம் வீட்டில் வைத்துக்கொள்வ தில்லை. ஏனெனில் அது பகைவரைக் கண்டிக்காத குற்றத் திற்கு உட்படும்.

மாஸ்கோவுக்கு வெளியே நடக்கும் ‘ பர்ஜ்கள் ’ விஷயமாக என் ரிப்போர்ட்களைச் செவியால் கேட்பார். அப்போது, ஒன்றோ டொன்று தொடர்பல்லாதனபோலத் தோன்றும் விஷயங்களைப் பற்றி என்னை அவ்வப்போது கேட்பார். குற்றத்தை ஒப்புக் கொள்கின்றனரே, அதன் புதிர்தான் என்னை வாட்டியது. ஆனால், அப்பிரச்னையைப் பற்றி அவர் அலட்சியமாகவே இருந் தார். ஒரு சமயம், பிச்சோரா பேசினில் கிடைக்கும் நிலக்கரி டிபாஸிட்களை அபிவிருத்தி செய்வதற்கான பிளான் அல்லது திட்டம் ஒன்றைச் சுருக்கமாகத் தந்த சயன்ஸஸ் அகாடமி பத்திரி கையில் வெளிவந்துள்ள அறிக்கையைப்பற்றி அவரிடம் சொன் னேன். அப்போது அவர் சொன்னதாவது :

“ என் எலும்புகள் பேசின் சுரங்கங்களில் புதைக்கப்படாம லிருக்கலாம். ஆயினும், நான் கம்யூனிஸ்டாகவே இறப்பேன். நம் நாட்டின் செல்வங்கள் யாவற்றையும் உயிர்ப்பிக்க வேண்டும். அப்போதே நமக்கு அதிகமான செழிப்பு உண்டாகும், அதிகார வர்க்கத்தினரின் தொல்லையும் குறையும்.”

ஒவ்வொரு நாளும் அவருடனும் இதர சோவியத் கம்யூனி ஸ்ட்களுடனும் பேசியபோது கோலோவன்கோவின் மனப்போக்கு களைக் கவனித்தேன். ஒருகால் கம்யூனிஸ்ட் ஒருவனே அவர் களின் மனோநிலையை அறியலாம். என்னைப் பொறுத்த வரையில் அவர்களுடைய தர்க்கவாதத்தை நான் முற்றிலும் அறியமுடியாது.

நான் அவருடன் சம்பாஷணை செய்த சிறிதுகாலத்திற்குள் அவர் கைதுசெய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டார். கைது எனில் மறைவு என்றுதான் அர்த்தம். காலையில் ஆலையை விட்டவர் பிறகு திரும்பவேயில்லை. அவர் குடும்பத்தினர் அவரைப்பற்றி கேட்ட கேள்விகளுக்கெல்லாம், அவர் தண்டிக்கப்பட்டு நாடுகடத் தப்பட்டார் என்றும், கடிதம் எழுதவோ, பிறரிடமிருந்து கடிதம் பெறவோ உரிமையற்றவர் என்றும் பதிலளிக்கப்பட்டனர். உள் நாட்டு விவகார இலாகா அவர் மனைவி ஜினய்தாவையும் கைது செய்தனர். ஒரு நாள் நள்ளிரவு வந்து வீட்டை நன்குகச் சோதனை போட்டு அவளைத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். ஜாகையும் அதிலிருந்த யாவும் பறிமுதலாயின. மகள் மரியா தன் சகோதரனுடன் வந்தாள். சீக்கிரத்திலேயே ஒயர்லஸ் ஆப்பரேட்டர் ஒருவனைக் காதலித்து அவனுடன் வடக்கே சென்ருள். மர்மான்ஸ்கில் ஜர்மன் வெடிகுண்டு ஒன்றுக்குப் பலி யானுள்.

சாதாரணமாக, கைதாகி 'மக்களின் பகைவர்' எனக் கண்டிக்கப்பட்டவரின் மனைவிமார்களும் சிறைப்படுவர். ரக சியப் போலீசார் அரஸ்ட் வாரண்டுடன் வருவர். சிறையில் ஒரு நாள் உள்நாட்டு இலாகா அதிகாரியொருவன் வந்து மக்களின் துரோகியான இன்னின்ன பிரஜையின் மனைவி, மூன்று, ஐந்து அல்லது பத்து வருஷச் சிறைத் தண்டனை பெறுவதாக அறிவிப்பான். பெண்கள் தம் சார்பாகச் சொல் லக்கூடியதை எவரும் கேட்பதில்லை. தீர்ப்பிலிருந்து அப்பீல் செய்யவும் அவர்களுக்கு வாய்ப்பளிப்பதில்லை.

கோலோவங்கோவுக்குப் பின், அவருடைய மகனேடும் அவன் மணந்த தனியாவோடும் நட்புக்கொண்டேன். 1946 வரையில் அவர்களுடன் தொடர்பு நீடித்தது. பிறகு அவருக் குத் தீங்கு ஏற்படுமோ என்று அஞ்சி நீலாவும் நானும் அவர்க ளிடமிருந்து விடைபெற்றேம்.

கோலோவங்கோவின் மகன் சர்யோஜாவிடமிருந்து அவனு டைய தாயாரைப்பற்றியும் சிறைக்கூடத்தில் அவள் வாழ்ச்

கைப் பற்றியும் சிறு செய்திகள் அறியவந்தேன். அவள் பத்து வருஷ சிறைத் தண்டனை பெற்ருள். தணிக்கையாள ரால் தணிக்கை செய்யப்பட்டு கடிதம் பெறவும் எழுதவும் உரிமைபெற்றிருந்தாள், அவள் உயிருடனிருந்து 1948-ல் விடுதலையடைந்தால், மாஸ்கோவிலிருந்து குறைந்தது 50 மைல் தூரத்தில் குடியிருக்க அனுமதிக்கப்படுவாள். தலை நகரைச் சுற்றியுள்ள இடங்களில் இப்படிப் பல்லாயிரக்கணக் கான பெண்கள் வசிக்கின்றனர். தம் கணவன்மார்கள், குழந்தைகள், நண்பர்களைப் பற்றி ஏதேனும் அறிந்துகொள் ளும் பொருட்டு அனுமதியுடனே, அனுமதியில்லாமலோ இவர் கள் அவ்வப்போது தலைநகரம் சென்று ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தங்குவர்.

'கான்செண்ட்ரேஷன் காம்ப்ஸ்' எனப்படும் இந்த சிறைக் கூடங்களில் தங்கியிருந்தவர்கள் தங்கள் தண்டனையை முற் றும் அனுபவித்து விட்டனர் என்றும் இனி சோவியத் யூனிய னில் எங்கேயாகிலும் வசிக்க அனுமதிக்கப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டுள்ள பத்திரங்களைப் பெறுகின்றனர். ஆயினும், பெரிய ருஷிய நகரங்களில் அவர்கள் வசிக்கவிடப்படுவதில்லை. எந் தெந்த நகரங்களில் வசிக்கக்கூடாது என்பதுபற்றி ஜாப்தா ஒன்றும் உண்டு.

.காம்பிலிருந்து வந்ததும் அவர்கள் ஸ்தல 'எம்.வி.டி.'யுடன் பதிவு செய்துகொள்ளவேண்டும். பிறகு மிலிஷியா அல்லது போலீசாருடன் பதிவு செய்துகொள்ளவேண்டும். அதன் பிறகே சமூகத்தின் சரிசமமான அந்தஸ்தினர் ஆவர். இவர் கள் தம் முந்திய உத்தியோகங்களுக்கும் திரும்பிச்செல்லலாம். கட்சியில் மட்டும் அவர்களுக்கு முக்கியமான நிர்வாக வேலை கிடைக்காது. மற்றபடி ஸ்தல சமூகத்தினர் தயக்கமின்றி அவர்களைச் சரிசமமாக வரவேற்கின்றனர்.

1943-ல் இப் பெண்களில் ஒருத்தி சர்யோஜாவை வந்து பார்த்தாள். அவன் சேனையில் இருந்தான். எக் காரணத்தி ஞலோ யுத்த முனைக்கு அனுப்பப்படவில்லை. அதற்குப்

பதிலாக, சோவியத் தலைநகரின் முக்கியமான தொழில் ஜில்லாவாகிய கிரஸ்நாயா பிரஸ்னியாவை எதிரிகளிடமிருந்து மறைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தான். இந்தப் பெண் எச்சரிக்கையாயிருந்தாள். ஆயினும், சர்யோஜா தன் தாயாரின் கடிதங்களிலிருந்து அறிந்துகொண்டிருந்ததற்கு அதிகமாகவே அறிந்துகொண்டான்.

கரகாண்டா சிறைக்கூடம்.

கரகாண்டா என்பது மத்திய ஆசியாவிலுள்ள ஒரு ஸ்டெப்பி (சமவெளி). அந்த கன்னி நிலத்தில் அவள் தாயார் தள்ளப்பட்டாள். அங்ஙனம் தள்ளப்பட்ட பத்தாயிரம் பேர்களில் அவளும் ஒருத்தி. முட்கம்பிகள் இல்லை. ஆனால் பரந்த தூரங்களும் சகிக்கமுடியாத வெப்பமும் தப்பியோடுவதை முடியாத காரியமாக்கிவிடுகின்றன. சொற்ப சாமான்களுடனும் கருவிகளுடனும் அவர்கள் தமக்கென ராணுவ விடுதிபோன்ற கட்டிடங்களை அமைத்துக்கொண்டனர். பிறகு பிரமாண்டமானதொரு கால்நடைப்பண்ணையொன்றையும் தானியப்பண்ணையொன்றையும் கட்ட முனைந்தனர்.

முதல் வாரம் மிகக் கேவலமாயிருந்தது. தண்ணீரில்லை. கொளுத்தும் வெயிலில், கிணறுகள் தோண்டவேண்டியிருந்தன. சுகாதாரம் கடினமானதொரு பிரச்னை. முதுகை உடைக்கும் உழைப்புக்கு முடிவே இல்லை. கிழவிகளும் பலவீனப் பெண்களும் நம்மைத் தயங்கச்செய்யும் விகிதத்தில் இறக்கவாரம்பித்தனர். முழு காம்ப்புக்கும் இரண்டே டாக்டர் இருந்தனர். கைதுசெய்யப்பட்ட டாக்டர்கள் கான்சென்டிரேஷன் காம்ப்புக்கு அனுப்பப்பட்டனர்.

ஜினய்தாவின் எஃகு உள்ளம் வெளிப்பட்டது. மனமுடைந்து ஓய்ந்திருக்கும் தருணத்தில் இருந்தார். முதல் வாரத்திலேயே யமனிடம் போயிருப்பாள். தன்னைவிட பலவீனரும் வயதில் முதிர்ந்தவரும் இருந்த பரிதாபநிலையைக் கண்டு அவர்கள் துன்பங்களை மீதப்படுத்த முயன்றாள். சிறைத் தலைவரிடம் இரண்டு

யோசனைகள் சொன்னாள். ஒவ்வொரு விடுதியிலிருந்தும் பெண்ணொருத்தியை விடுதலைசெய்து, பிற்பகலில் இரண்டு மணி நேரம் நர்ஸிங், முதல் உதவி, ஆகியவற்றை அறிந்துகொள்ளச்செய்வது—இது முதல் யோசனை.

பலவீனமான பெண்கள் வீட்டுக்குள்ளேயே செஞ்சேனைக்குரிய உள்-உடுப்புக்களைத் தைத்துத் தருவது. இது இரண்டாவது யோசனை இது தேசபக்தி காட்டும் செயலாகும். இந்த வேலையினால்தான் பலர் உயிர் பிழைத்தனர்.

தலைவன் ஒரு உக்ரேனியன். உக்ரேனிய அபிமானத்தினாலோ என்னவோ ஜினய்தாவை அவன் அந்த ஷாப்பின் மேஸ்திரியாக்கினான். வெயிலில் வேலைசெய்வது நிறுத்தப்பட்டது. ஷாப்புக்குள்ளே முன்பு நடிகையாயிருந்த மூவர் ருஷிய தொல்லியக்கியத்திலிருந்தும் சோவியத் எழுத்தாளரின் நூல்களிலிருந்தும் உரக்கப் படிக்கச்செய்தான். இது ஷாப்பில் வேலை செய்தவர்களுக்கு இன்பமூட்டியது. இரவில் விடுதி வாசிகளுக்கு கதைகள் சொல்லப்பட்டன. அன்னகரீனா வாசிக்கப்பட்டபோது உருக்கமான பகுதிகள் மனத்தை இளகச் செய்தது. மனப்புண்கள் ஆறின. பெண்கள் வேலைசெய்வதை விட்டு அழுதனர்.

திடுமென அப்பகுதிகளை வாசித்த நடி தாலாட்டுப்பாட்டு ஒன்று பாடினாள். கண்களைப் பாதி மூடிக்கொண்டே முகத்தில் புன்னகை மிளிர, கரங்கள் குழந்தையைப் பிடித்திருப்பது போலிருக்கப் பாட்டில் தன்மயமாகிப் பாடினாள். அனைவரும் கேட்டனர். ஜினய்தா அவர்களை வேலையை ஆரம்பிக்கத் தூண்டினாள். நடி மட்டும் மெய்மறந்து பாடிக்கொண்டே இருந்தாள். பிறகு அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதெனத் தெரிந்தது. சிறைக்காவலர் அவளை எடுத்துச்சென்றனர். பிறகு அவளுக்கு என்ன ஆயிற்றோ தெரியாது.

இந்த நிகழ்ச்சிகளை அறிந்த தலைவர் இனி வாசிப்பதை நிறுத்திவிட ஜினய்தாவுக்கு உத்தரவிட்டார். அவள் எவ்

வளவோ சொல்லிப்பார்த்தாள். கடைசியில் குழந்தைகள் பற்றிய காட்சிகள் விலக்கப்படவேண்டுமென்ற நிபந்தனைமீது இணங்கினார். ஐந்து வாரங்கள் கழித்து இத்தலைவர் இழி வுறும் மனப்பான்மை காட்டியதற்காகவும் போல்ஷிவிக்காக இருக்கத் தகுதியற்றவராக இருந்ததற்காகவும் நீக்கப்பட்டார். புதிய தலைவர் வாசிப்பதை அடியோடு நிறுத்தினார். ஜினய் தாவைப் பண்ணைக்கு மாற்றினார்.

இம்மாறுதலைப்பற்றி அவள் கவலைப்படவில்லை. அவள் உடல் செழித்தது.

கைதிகள் வயதானவர்கள். வயது, வெப்பம், தண்ணீர் இன்மை, உழைப்பு, இவற்றுடன் போராடினர். உள்ள இள மையைப் பாதுகாக்கவிரும்பினர். தமக்குள் பரஸ்பரம் அறிவைப் பரிமாறிக்கொண்டனர். டாக்டர்களையும் புதிதாக வந்தவர் ஒவ்வொருவரையும், நரை, மூப்பு, சுருக்கங்கள் இவற்றுடன் போராடுவதற்கான வழிகளைக் கேட்டனர்.

ஒரு நாள் புதிதாக வந்தவர் ஒருவர் உயர்ந்த தலையணியின் மீது படுத்தால் வயது மந்தமாகவே செல்லும் என்றார். டாக்டர்கள் இதைக் கேலிசெய்தனர். ஆனால், பலபெண்கள் எதை எதையெல்லாமோ தலையின்கீழ் வைத்து உயர்த்தினர். இரவை அமைதியற்று கழித்தனர்.

படுக்கச்செல்லுமுன் முகத்தின் தசைகளைத் தேய்த்துப் பிடித்தால் சுருக்கம் போய்விடும் என்பது அவர்கள் அறிந்தது. இதற்கென கொழுப்புக்கள் வேண்டும். இதன்பொருட்டு பண் ணையிலிருந்து சிறிது வெண்ணை திருடுவர். சிலர் சூப்பில் மிதக்கும் எண்ணெய்க் கொழுப்புக்களையெல்லாம் திரட்டுவர்.

கோன்ஸ்டாண்டின் சிமோனேவின் " எனக்காகக் காத்திரு " என்ற கவிதையின் ஆரம்ப வரிகள் வருமாறு :—

எனக்காகக் காத்திருப்பாய், நான் மீண்டும் வருவேன்.
சும்மா காத்துக்கொண்டே இரு.
மஞ்சள் மழை கேட்டைத் தட்டினாலும் காத்திரு.

ஆதியில் போர்முனையில் செஞ்சேனையினருக்காகவும் பின்னேயுள்ள அவர்கள் மனைவியர் காதலர்களுக்காகவும் இக்கவிதை எழுதப்பட்டது. இது சோவியத் யூனியன் எங்கும் காட்டுத்தீபோலப் பரவியது. உறுதிக்கும் தியாகத்திற்கும் திட்டத்திற்கும் ஒரு குறியாயிற்று. லட்சக்கணக்கான பிரதிகள் வெளியிடப்பட்டன. தபால்கள் "எனக்காகக் காத்திரு" என்ற மொழிகள் தாங்கிச் சென்றன. சிறை காம்ப்புகளில் இருக்கும் பெண்களுக்கே இதன் செய்தி தீவிர அழைப்பாக இருந்தது.

ஜினைய்.நாவுடன் மூன்று ஆண்டுகள் சிறையில் கழித்த பெண் சர்யோஜாவைக் கண்டு இக்கவிதையின் பிரதியொன்றை தன் தகப்பனருக்கு அனுப்பக்கேட்டாள்.

சர்யோஜா அனுப்பவேயில்லை. ஏனெனில் தன் தகப்பனாரின் கதியைப்பற்றி அவள் ஒன்றும் அறியமுடியவில்லை. உள்நாட்டு இலாகாவுக்கும் மத்தியக்கமிட்டிக்கும், ஸ்டாலினுக்குங்கூடப் பல கடிதங்கள் எழுதிப்பார்த்தும் அவரைப்பற்றி ஒன்றுமே அறியமுடியவில்லை.

பகுதி ஆறு

சோவியத் கலையுலகம்

அத்தியாயம் 17

ஓவியர் செர்ஜை கோலோவங்கோ

சோவியத் கலையுலகுடன் என் முதல் தொடர்பானது, சற் றேறக்குறைய 1935-ம் வருஷவாக்கில், என் நண்பர் ஓவியர் செர்ஜை கோலோவங்கோவின் மூலம் ஏற்பட்டது.

கலைகள்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், நாம் இன்று அறியும் விதத்தில், அப்போதுதான் மெல்லமெல்ல ஏற்பட ஆரம்பித்து இன்றைய பூதாகாரமான, எல்லாவற்றையும் தழு வும்படியான அளவுக்கு வந்துவிட்டன. இன்று ருஷிய அரசாங்கம் போலீஸ் போலக் கலைகளைக் கண்காணித்துவருவ தால், விவாதமும், விமர்சனமும் ஏளனமும் சுதந்திரமாக நடக்கமுடியவில்லை.

எனக்கு செர்ஜையுடனும் தனியாவுடனும் பரிச்சயம் முதன் முதலாக ஏற்பட்டபோது, அவர் தம் ஒற்றையறை ஜாகை யில் விருந்தினரை வரவேற்பதுண்டு. சிற்றுண்டி, மதுபானம், கீதம், கவிதை ஒப்பித்தல், விவாதம், இவையெல்லாம் அங்கே நடக்கும். செர்ஜை சம்பாஷணையில் வழக்கமாகப் பிரதான பங்கு எடுத்துக்கொள்வார்; இளைஞராக இருந்தும், கலை, இலக் கியம் இவற்றில் பாண்டித்யம் மிகப்பெற்றவர்; புரூஸ்ட், ஸ்தாந்தால் ஸேஸான், ரென்வார் இவர்கள் போன்ற பிரெஞ்சு கலைஞரைப்பற்றி அவர் பேசும்போது கேட்பவர் சலிப்பு அடைவதே இல்லை. உலகிலேயே மிகச் சிறந்த கலைச்சின்னங் களின் சேர்கைகளைக் கொண்ட "இக்கால மேனாட்டுக்கலை மியூசிய"த்திற்கு அவர் அடிக்கடி செல்வதுண்டு. இரண்டு ஆண்டுகளுக்குமுன், கலையுலகின் சர்வாதிகாரியான அலக்ஸாந் தர் ஜராசிமாவ் அந்த மியூசியத்தை மூடிவிட்டபோது. "நான் அதை மூடியாகவேண்டும். மக்கள் அந்த இழிவான கலையை

விரும்பலாம். வளர்ச்சியடைந்துவரும் வாலிப ஓவியர்கள் அதனால் களங்கமடையலாம்." என்றார்.

கலை உறவுகளை வளர்பதற்கான அகில - யூனியன் சங்கம் யுத்தகாலத்தில் சிலசமயம் பல்வேறு நாடுகளின் கலைப் பொருள்களைத் திரட்டிக் கண்காட்சிகள் வைத்தது. யுத்தம் முடிந்ததும், 1945-ல் அமெரிக்கக் கலைக் கண்காட்சி வைக்கப் பட்டது. ஜ்ராசிமாவ் காட்சியைத் திறந்துவைக்கையில் சிறிது தயக்கத்துடன், அமெரிக்க ஓவியரிடம் சிறிது கற்பனையும் அதிக சிந்தனையும் காண்கின்றன என்றார். அவ்விதம் சொல்லி சிறிது நின்றபோது, இலியா எரன்பர்க் என்னும் அறிஞர், "அது இயற்கைதானே, உங்களைப்பற்றியோ, உங்கள் இனத் தவரைப் பற்றியோ அவர்களுக்கு என்ன கவலை?" என்று முணுமுணுத்தது கேட்டது.

மாஸ்கோவில் யூதநாடகக் கொட்டகையில் யூத ஓவியங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டபோது, மார்க் சகல் என்னும் பிரபல ஓவியர் வரைந்த ஓவியங்களை "அழிந்துவரும் மேலை நாட்டு பூர்ஷுவாக்களின் இழிந்த கலையின் பிரதிநிதி" எனக் கூறி ஜ்ராசிமாவ் அவற்றைக் காட்சியிலிருந்து அகற்றிவிடுமாறு உத்தரவிட்டார். அவ்வுத்தரவைப்பெற்ற நாடக டைரக்டர் காலஞ் சென்ற மிக்கோயெல்ஸ் மனமுடைந்து வருந்தினார்.

ஜ்ராசிமாவ் எதிர்காலத்தில் மேலும் செய்யவிருக்கும் காரியங்களை எதிர்பார்த்தவர்போல செர்ஜை தம் கூட்டங்களில் உணர்ச்சியுடன் இவ்விதமாகக் கூறுவதுண்டு. "பொருளின் தன்மையை உள்ளது உள்ளபடியாக வரையாமல், பொருளைப் பற்றித் தம் மனத்தில் பட்டதையே வரைந்த 'இம்ப்ரெஷ னிஸ்ட்' கோஷ்டியாரும், பிரெஞ்சுக் கலையில் தலைசிறந்து விளங் கிய பிறரும், ஐரோப்பாவின் மிகச் சிறந்த ஓவியர்கள் உண் டாக்கிய கலைச் சம்பிரதாயங்களிலிருந்து மலர்ந்த மேதைகளே யாவர். அவர்களை நாம் புறக்கணிக்கக்கூடாது; அது முடியவும் முடியாது. ருஷியர், உண்மையில், எப்போதுமே பெரிய ஓவியர்

களாக விளங்கியதில்லை. நம்மிடம் உயரிய சம்பிரதாயங்களும் ஏற்படவில்லை. நாம் பிறரிடமிருந்து கற்றதும் மிகச் சொற்பம். மேலைநாட்டுக் கலைஞரின் கருத்துக்களை நாம் ஏற்றுக்கொள்ளா விடினும், அவர்களையும், அவர்கள் அளித்துள்ள சிருஷ்டி களையும் அறிந்துகொண்டு, பின்னர், டால்ஸ்டாய் இலக்கியத் தில் செய்ததைப்போல, அவைகளுக்கு அப்பாலும் செல்ல வேண்டும்."

அலக்சாந்தர் ஜாரசிமாவ் கலைஞரால் அஞ்சப்பட்டவர் ; வெறுக்கப்பட்டவர் ; 'சமஸ்தான' ஓவியரென அற்பமாகக் கருதப்பட்டவர். அவர் சீக்கிரத்திலேயே அமைக்கப்படப் போகும் கலைகள் அகாடெமியின் தலைவரும் கலைஞர் யூனியனின் பொறுக்காரியதரிசியும் ஆவர். "ப்வார்மாலிஸம்" எனப் படும் சம்பிரதாய முறையின் கடும்பகைவர் அவர்.

அற்பகுணமும் அற்பபுத்தியும் வாய்ந்த அவர் சோவியத் கலைத் துறைகளின் இன்னும் அசைக்கமுடியாத ஸ்தானத்தில் அமர்ந்து வேலைசெய்துவருகிருர். ருஷிய அரசாங்கம் கட்டுப்படுத்தப்பட்ட கலையை இந்தப் 'பிரசார யுத்த'த்தில் ஒரு சக்திவாய்ந்த கருவியாக ஆக்க நடவடிக்கைகள் ஆரம்பித்த போது, அவர்மீதும் குற்றங்கூறப்பட்டது. அவரது கடைசி ஓவியமான "மகனின் விடுவருகை"யில் குற்றங் கண்டு விக்டர் சாஜின் என்ற ஒருவன் இக் கோடையில் பத்திரிகைக் கட்டுரையொன்றில் ஜராசிமாவைத் தாக்கி எழுதினர். அந்த ஓவியம் வாலிப ருஷ்ய சோல்ஜர் ஒருவன் யுத்தத்திலிருந்து திரும்பிவருவதைக் காட்டியது. அந்த சோல்ஜர் வெடி மருந்தைக் கண்ணுற்கண்டவன் போலவோ, யுத்த பயங் கரங்களையும் கடுஞ்சோதனைகளையும் அனுபவித்தவன் போலவோ தோற்றவில்லை என சாஜின் எடுத்துக் காட்டினன். இத்தகைய விமர்சனம் உண்மையில் நியாயமானதே. ஆனல் சென்ற 15 வருஷகாலமாக ஜராசிமாவைக் குறித்து அதை எழுதி யிருக்கலாம்.

சோவியத் தலைவர்களை, சிறப்பாக, ஸ்டாலினை அருள் பெற்றவர்கள் எனச் சித்திரித்து உயர்த்தியிருப்பதனாலேயே ஜராசிமாவ் கலையுலகில் தம் உயரியபதவியைப் பெற்றார். உயர்பதவியிலுள்ள சோவியத் அதிகாரவர்க்கத்தினரின் குழந்தைகளை இறக்கையற்ற தேவதூதர்போல வரைந்து காட்டி அவர்களுடையவும் அவர்களுடைய மனைவிமார்களுடையவும் தயவைப் பெற்றார்.

கலையில் அவருடைய பிற்போக்கான காரியத்திற்காக மட்டுமன்றி மற்றொரு காரணத்திற்காகவும் சோவியத் கலைஞர்கள் அவரை வெறுத்தனர். மாஸ்கோவில் வளைந்து வளைந்து சென்ற சிறு தெருக்கள் ஒன்றில் இக்கலைஞர்கள் இரவு கிளப் ஒன்று நடத்தினர். கலைஞர் யூனியன் அங்கத்தினரும் அவர்கள் விருந்தினரும் மட்டுமே அதில் அனுமதிக்கப்பட்டனர்.

அதை அறியாமல், செர்ஜை கோலோவங்கோ என்னை அங்கே அழைத்துச் சென்றார். அங்கே கம்யூனிஸ்ட் கட்சி கலையைக் கட்டுப்படுத்தவும் வளர்க்கவும் செய்யும் முயற்சிகளைப் பரிகசிக்கும் நாடகமொன்று நடிக்கப்பட்டது. சினமடைந்த ஜராசிமாவின் உத்தரவின்மீது கிளப் மூடப்பட்டது.

ஜராசிமாவ்மீது அடிக்கடி கோபம் எழுந்தாலும், செர்ஜியும் அவருடைய விருந்தினரும் கவிதையின்மீதுள்ள தம் பற்றை விடவில்லை. எந்நாட்டிலுமே ஓவியர் கலைக்கும் கவிதைக்கும் உள்ள நெருங்கிய உறவை உணர்வர். வேறெவ்விடத்திலும்விட ருஷியாவில்தான் இப்போக்கு வெளிப்படையாக இருக்கும். செர்ஜையுன் விருந்தினரில் பலர் கவிகள். அவர்கள் தம் கவிதைகளை ஒப்பிப்பார்கள். ஆயினும், ஓவியர்கள் தொல்லியக்கங்களிலிருந்து சிறந்த கவிதைகளைப் பொறுக்கி மணிக்கணக்காக ஒப்பிப்பதில் கவிகளினும் சிறந்து விளங்குவர். அன்றியும், அவ்வோவியர்கள் பைரன், போ, விட்மான், புஷ்கின், மாயாகோவ்ஸ்கி போன்ற கவிகளைப்பற்றி மிகுந்த உணர்ச்சியுடன் சிறப்பாக விவாதிப்பர்.

இக்கூட்டங்களுக்கு விளாடிமிர் யகோந்தாவ் எப்போதாகிலும் வருவார். யகோந்தாவ் ஒப்பிக்கும் கலையில் மிகச்சிறந்து விளங்குவார். அவர் குரல் அற்புதமாக இருக்கும். ருஷிய மொழியின் இசை இனிப்புக்களையெல்லாம் அதில் காணலாம்.

ருஷியப் புரட்சியின் கவி மாயாகோவ்ஸ்கியின் பாடல்களை அவர் அடிக்கடி மாஸ்கோ இசை மன்றங்களில் ஒப்பிப்பார். என வேண்டுகோளுக்கு இணங்கி அலக்சாந்தர் பிளோக், யெஸ்ஸெனின் ஆகிய கவிகளின் பாடல்களையும் தனியாகப் பாடிக்காட்டுவார். டி.எஸ். எலியட்டுக்கு இணையாகச் சொல்லக்கூடிய இக்காலக் கவி போரிஸ் பேஸ்டர்நாக்கின் கவிதைகளையும் பாடுவார்.

சோவியத் இலக்கிய விமர்சகர்கள் பேஸ்டர்நாக் இழிந்த மேனுட்டினரைப் பின்பற்றுவதாகத் தூற்றவே, அவர் கவிதைகள் எழுதுவதை நிறுத்திக்கொண்டு ஷேக்ஸ்பியர் நாடகங்களை மொழிபெயர்ப்பதில் ஈடுபட்டார்.

இதே மாதிரியானதொரு கதி செர்ஜை கோலோவங்கோவுக்கும் ஏற்பட்டது. "ப்வார்மலிஸம்" எனப்படும் பழைய சம்பிரதாய கொள்கைக்காக அவர் 18 மாதங்களுக்கு முன் சோவியத் ஓவியர் யூனியனினின்று வெளியேற்றப்பட்டார். இப்போது அவர் தம் இஷ்டப்படி வரைந்துவருகிருர். ஆனல், இஷ்டப்படி வரைந்தால் பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாற்ற முடியுமா ? குடும்பம் பிழைக்க மனைவி பிரதிகள் எழுதும் வேலை செய்கிருர்.

1944-ம் ஆண்டு ஒருநாள் விளாடிமிர் யகோன்தாவ், தமக்கு முன் யெஸ்ஸெனினும், மாயாகோவ்ஸ்கியும் செய்தது போலவே தற்கொலைசெய்துகொண்டார். "நான் போய் வருகிறேன், வாயுமண்டலத்தில் எழு மைலுக்கு மேலே பறந்து செல்கிறேன்" என்று குறிப்பொன்று எழுதிவைத்துவிட்டுச் சென்ருர்.

அத்தியாயம் 18

பிரசுரத்தின்மீது கட்டுப்பாடுகள்

கலை, நாடகம், சினிமா இவற்றைப்போலவே சோவியத் இலக்கியமும் வருத்தமளிக்கும் நிலையில்தான் உள்ளது. சோவியத் வாசகர்கள் அநேகமாக உலகிலேயே மிகப் பெருந்தொகையினர். உண்மையில் அவர்கள் வாசிப்பதில் மிக ஆவலுள்ளவர். இவ்விதமாக இருந்தும் நிலைமை மேலே சொன்னபடித்தான் உள்ளது.

போல்ஷிவிக்கர் இலக்கியச் சுவைகளை ஈவு இரக்கமின்றி குழப்பி முடமாக்குகின்றனர் என்று குறைகூறும்போது, பின்தங்கிப் பெரும்பாலும் எழுத்தறிவற்றிருந்த பழைய ருஷியரை ஆவலுடன் நூல்களை வாசிக்கும் ஒரு ஜாதியினராக மாற்றினதற்காக அவர்களை நாம் பாராட்டவும்வேண்டும். போல்ஷிவிக்கர் அதிகாரத்திற்கு வந்தபோது ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரே எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்களாக இருந்தனர். ருஷியாவில் 1897-ல் எழுத்தறிவுள்ளவர்கள் எத்தனை பேர் இருந்தனரோ அதைவிட இரட்டத்தனை பேர் 1927-ல் இருந்தனர். ஆயினும் பெண்களைவிட ஆண்களே எழுத்தறிவு மிகுந்தவர்களாக இருந்தனர். 1939-ல் ஆண்பெண் பாலர் இருவரிடையேயும் 81.2 சதம் விகிதம் எழுத்தறிவு இருந்தது. இப்போது விகிதம் இன்னும் அதிகம்.

1939-ல் மொத்தம் 77,590 புத்தகாலயங்கள் இருந்தன. கிராமாந்திரங்களில் மட்டும் 61,700.

இப்புள்ளிவிவரங்கள் ஒரு உண்மையான கலாசாரப் புரட்சிக்குச் சான்றாக உள்ளன. அது புத்தகங்களுக்கான ஆவலைத் திருப்தி செய்வதற்கு அரிதானதொரு மார்க்கெட்டைச் சிருஷ்டித்

துள்ளது. புத்தகங்களின் பெருக்குக்கு அதிகமான அளவில் புத்தகங்களுக்கான தேவை மேன்மேலும் பெருகிவருகிறது. அத்தேவையைத் திருப்தி செய்யவும், அறிவையும் சிந்தனையையும் சுவையையும் வளர்த்துக் கட்டுப்படுத்தவும் அரசாங்கம் பிரசுராலயங்களைப் பலவிடங்களில் அமைத்துள்ளது. டைப்புக்குரிய உலோகம், அச்சிடுவதற்குறிய முஸ்தீப்புகள் இவையும் தேர்ச்சிபெற்ற தொழிலாளரும் குறைவாக இருப்பதால் இவ் வேலையை நிர்வகிப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது.

"அச்செழுத்தே கம்யூனிஸ்ட் கட்சியின் மிகக் கூரானதும் சக்திவாய்ந்ததுமான ஆயுதமாகும்" என்ருர் ஸ்டாலின். இந்த உறுதிமொழிக்கு அனுசரணையாகக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் பிரசுரவேலையைத் தன் கண்டிப்பான கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்கிறது. கம்யூனிஸ்ட்கட்சி மத்தியக் கமிட்டியின் பிரசார இலாகா, பிரசுரத்திற்கான எதையும் தணிக்கை செய்ய ஸ்தாபனம் ஒன்று அமைத்துள்ளது. ஒவ்வொரு பிரசுராலயத்தின் டைரக்டரையும் பிரதான பதிப்பாசிரியரையும் பிரசார இலாகா நியமிக்கிறது. இவர்கள் ஒவ்வொரு பிரசுராலயத்தின் திட்டத்தையும் நிறைவேற்றும் பொறுப்புள்ளவர்கள். பிரசுரமாகும் புத்தகங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கொள்கைகளுக்கும் அவர்களே பொறுப்பேற்க வேண்டியவர்கள். இவர்களைப் போலவே தணிக்கை ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் கொள்கைகளினின்று பிறழ்தல், அவற்றிற்குப் பொருத்தமில்லாமல் இருப்பவை, மேலே நாட்டைப் புகழ்தல் போன்ற குற்றங்களுக்கு ஜவாப்தாரியாவர். இவர்கள் தம் தற்காப்புக்காகப் பிரயோகிக்கும் பிரதான ஆயுதம் காலம் தாழ்த்துதல். பயத்தினின்று பிறப்பதும் இது ஒவ்வொரு முயற்சியையும் தடங்கல் செய்கிறது.

ஒருசமயம் அயல்நாட்டுக் காரியாலய தணிக்கையாளரிடம் இது விஷயமாக முறையிட்டேன். பத்திரிகை இலாகா செய்யும் தாமதம் எனக்கு எரிச்சலை உண்டாக்கியது. சலிப்படைந்த தருணத்தில் அந்த தணிக்கையதிகாரி விஷயத்தை

ஒளிக்காமல் என்னிடம் சொன்னதாவது: "எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள்? நாங்கள் முடிவு செய்வதற்கில்லை என்பதை நீங்கள் அறியமாட்டீரா? தவறு செய்துவிடு வோமோ என்று பயந்து நீங்கள் கேட்கும் விஷயத்தை எங்களுக்கு மேலே இருப்பவரிடம் அனுப்புகிறோம். அவர் விஷின்ஸ்கியிடமோ, சில சமயம் மோலோடாவிடமே பேசவேண் டியிருக்கிறது. அவர்களோ அலுவல் மிகுந்தவர்கள்."

பிரசுராலயத்திற்கு எழுத்துப் பிரதியை அனுப்பினால், பிர சுராலயத்தில் வாசிப்பவர் தாமதம் செய்கிறார். பிறகு அவர் எவ்வளவோ தயக்கத்துடன் தம்மைவிட அனுபவம்வாய்ந்த வரிடம் அதை அனுப்புகிறார். அநேகமாக கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் ஒருவருக்கு அனுப்புவார். அவரும், பொறுப் பேற்க விரும்பாவிடில், பிரதான பதிப்பாசிரியர், டைரெக்டரிடம் அனுப்பிவிடுகிறார். இவர்கள் இருவரும் கட்சி அங்கத்தின ராக இருக்கவேண்டியவர்கள். புத்தகத்தை ஏற்று அச்சுக்குக் கொடுத்து புரூப் திருத்தமானபின் அது தணிக்கை ஸ்தாபனத் துக்கு அனுப்பப்படுகிறது. தணிக்கையாளரின் அனுமதியைப் பெற தாமதமேற்படுகிறது. அச்சிடும் மானேஜர் அவசரப் படுத்துவார். கடைசியில் தணிக்கையாளரின் அனுமதியைக் காட்டும் எண்ணுடன் அது அச்சிடுவோரிடம் செல்கிறது.

உலகம் அறிந்த தொல்லிலக்கியங்கள் ருஷியத் தொல் லிலக்கியங்கள் இவற்றின் விஷயத்தில்மட்டும் தாமதமேற்படு வதில்லை அரசாங்கத்தின் அன்புக்குரியவர்கள் விஷயத்திலும் தாமதமேற்படுவதில்லை. ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பத் திரிகைகளான பிரவ்தாவும், கல்ச்சர் அண்டு லைப்வும், எழுத் தாளர் சங்கத்தின் பத்திரிகையான லிட்டரரி கஜட்டும் ஒரு நூலைப் புகழ்ந்துவிட்டால் யாதொரு தாமதமும் ஏற்படுவதில்லை. அது உடனே அச்சிடப்படுகின்றது. லட்சக்கணக்கான பிரதிகள் குறித்த காலத்தில் வெளியிடப்படுகின்றன. ஸ்டாலின் பரிசு பெறும் நாலும் அவ்விதமாகவே துரிதமாக வெளிவருகின்றது. ஸ்டாலின் பரிசு பெறுவது ஒவ்வொரு ஆசிரியருடையவும்

அந்தரங்க அபிலாஷையும் கனவும் ஆகும். ஸ்டாலின் பரிசு பெறும் ஆசிரியர் ஸ்டாலினின் பாராட்டுதலை நேரில் டெலிபோன்மூலம் பெறுகிருன்.

ஸ்டாலின் பரிசு.

ஜோசப் ஸ்டாலின் தம் கூரிய விழிகளால் இலக்கியத்தை விடாமல் கண்காணித்துவருகிருர். சோவியத் இலக்கியகர்த்தர்களின் பிரதான நூல்களைப் படிக்க எப்படியோ நேரம் கண்டுபிடிக்கிருர். ஆசிரியர்களைக் கூட்டங்கூட்டமாக அழைத்து அவர்களுடன் நீண்ட விவாதம் நடத்துகிருர். தனி நபர்களுடனும் நெருங்கிய தொடர்பு கொள்கிருர். புது நூல் எழுதிய ஆசிரியரைப் பாராட்டவோ, அல்லது ஊக்கமளித்து விரிவான புத்திமதிகள் கூறவோ, நள்ளிரவிலும் போன்செய்து பேசுவதுமுண்டு. நாவலாசிரியரும் பத்திரிகையாளருமான இலியா எரன்பர்க்; கதை நாடகங்களின் ஆசிரியரான லியோனித் லினுவ்; "மார்ச்-ஏப்ரல்" என்ற பெயரில் ஜாக் லண்டன் பாணியில் யுத்தத்தைப்பற்றிய நீண்ட சிறுகதை எழுதிய வாதிம் கோஜவ்நிகாவ்—ஆகியோர் இத்தகைய டெலிபோன் அழைப்புகள் பெற்றவரிற் சிலர். இந்த அழைப்புகளில் ஹாஸ்யமும் பரிதாபமும் இல்லாமல் இரா. அந்தோனேவ்ஸ்காயா என்ற ஆசிரியை ஸ்டாலினின் பிறப்பிடமாகிய ஜார்ஜியாவைப்பற்றிய சரித்திர நாவலொன்று எழுதியிருந்தார். கையெழுத்துப் பிரதியைப் படித்துப்பார்த்த ஸ்டாலின் அவளைப் பாராட்டுவதற்காக அவளை நள்ளிரவில் எழுந்திருக்கச்செய்தார். அவளுடைய அறையில் டெலிபோன் கிடையாது. வீட்டிலுள்ள குடும்பத்தினர் அனைவருக்கும் பொதுவாக ஹாலில் ஒரு டெலிபோன் இருந்தது. டெலிபோனில் அடித்த மணி வீட்டிலிருந்த அனைவரையும் எழுப்பிவிட்டது. ஆசிரியையுடன் ஸ்டாலின் ஜார்ஜியாவின் வரலாறுபற்றி நீண்டநேரம் பேசினுர். ஆசிரியையும் தணிக்கை காரியாலயத்திலுள்ள அதிகாரிகள் தம் புத்தகம் வெளிவராதபடி தடுத்துவருவதாகப் புகார் செய்தாள். தூங்கிக்கொண்டிருந்தவர்கள் அனைவரும்

எழுந்து கோபத்துடன் "இதென்ன இப்படிச் சத்தம் போடு கிருயே?" என்றனர். "யார் தெரியுமா? ஸ்டாலின் ஆக்கும் என்னுடன் பேசுவது!" என்று உரக்கச் சொன்னுள். டெலிபோனில் சத்தத்தைக் கேட்ட ஸ்டாலின் விசாரித்தார். ஆசிரியை விஷயத்தைச் சொன்னுள். அடுத்த நாள் அவளுடைய சொந்த அறையிலேயே டெலிபோன் ஒன்று' தனியாக அமைக்கப்பட்டது. ருஷிய அரசாங்கமாளிகையினின்று மேலும் அழைப்பு வரவில்லை. ஆனல், அவளுடைய புத்தகம் ஏராளமாக அச்சிடப்பட்டது. புத்தக விமர்சகர் அனைவரும் அதை வானளாவப் புகழ்ந்தனர்.

ஸ்டாலினின் சுவைகள்தான் சோவியத் கலையின் எல்லாத் துறைகளிலும், சிறப்பாக இலக்கியத்திலும் நாம் காணும் பரிதாப நிலைமைக்குக் காரணமாகும். சோவியத்தின் நோக்கங்கள், தேசாபிமானம், கௌரவம் இவை கலந்தனவே அவருடைய சுவைகள். விபசாரம், கன்னித்தாய்மை, குடி, ஒழுக்கமின்மை இவையாவும் சோவியத் மனிதனுக்குத் தகாத பூர்ஷுவா பாவாத்தன்மை எனக் கண்டிக்கப்படுகின்றன.

சிமோனேவ் என்னும் கவி தம் சிநேகிதப் பெண்ணும் வருங்காலத்தில் மனைவியாகப் போகிறவளுமான நடிகை வாலந்தினு சரோவாவுக்கு எழுதிய தனிப்பாடல்களின் தொகுதி ஒன்றை வெளியிட்டார். அத் தொகுதி ஸ்டாலினிடம் சென்றது. கவிதைக் கற்பனைகள் அதிகமில்லாமல் வம்பளப்பிற்கே அதிகம் உரிய பாடல்களைப் படித்துவிட்டு, "இத்தொகுதியின் பிரதிகள் இரண்டே வெளிப்படவேண்டும். ஒன்று எழுதியவருக்கு, மற்றொன்று அவளுக்கு." என்று சொன்னாராம்.

வெற்றிகரமாக எழுதப்பட்ட நூலின் ஆசிரியர் பலரும் சினிமா டைரெக்டர்கள் பலரும் ஸ்டாலினிடமிருந்து அழைப்பு வருமென எதிர்பார்த்துநிற்பர். ஒருநாள், ஜார்ஜிய நாட்டு நடிகரான கெலோவானி, ஸ்டாலின் தம்முடன் தொடர்பு கொள்ள விரும்புகிருர் என்று குறிப்பாகக் கேள்விப்பட்டார்.

அவர் நாடக அரங்கிலும் சரி, வெள்ளித்திரையிலும் சரி ஸ்டாலினைச் சித்திரிப்பதிலேயே பெரிதும் பற்றுடையவர். ஐயோ பாவம்! அவர், திடுமென ஸ்டாலின் கூப்பிட்டால் என்ன செய்வதென அறையை விட்டுப்போகாமல் பலவாரங்கள் உள்ளே யே இருந்தார். நாவிதன் ஷாப்புக்குக்கூட செல்லாமலிருந்த தால் அவருக்கு தாடி வளர்ந்துவிட்டதென வம்புக்காரர் சிலர் கூறினர்.

இன்றைய நிலைமையில் ருஷிய அரசாங்கத்தின் தயவு ஒன்றே பிரசுரகர்த்தன் ஒருவனுக்கு உத்தரவாதம் ஆகாது. அன்பைப் பெற்றவர் அருளினின்று வீழ்ச்சியடையலாம். புத்த கம் வெளியாகி நல்ல மதிப்புரைகள் பெற்று நன்றாக விற்ரு லும், மத்தியக் கமிட்டியிலுள்ள எவரேனும் அல்லது பொலித் பீரோ அங்கத்தினர் எவரேனும் அதில் கொள்கை விஷய மாகத் தீமை அல்லது குற்றம் ஏதேனும் காணலாம். பிறகு ஆசிரியரின் கதி அதோகதிதான்.

எழுத்தாளர் சங்கப் பொதுக்காரியதரிசியான அலக்சாந் தர் ப்வதியேவ் என்பவரும், சங்கத்தின் வல்துகை போன்ற வரும் ' புது உலகம் ' என்ற பிரதான சோவியத் இலக்கியப் பத்திரிகையின் பிரதான ஆசிரியருமான கோன்ஸ்தான்தின் சிமோனேவ் என்பவரும் இவ்விதமாகச் சிக்கிக்கொண்டவர் களில் பிரசித்திபெற்ற இரண்டு உதாரணங்கள்.

ப்வதியேவ் எழுதிய "யங் கார்ட்" என்ற நாவல் சோவியத் ருஷியாவில் அனைவராலும் யுத்தத்தைப் பற்றிய மிகச் சிறந்த நாவலெனக் கொண்டாடப்பட்டது. உண்மையிலேயே அது சிறந்த நாவல்தான். லட்சம் பிரதிகளுக்குமேல் விற்பனையாகி விட்டது. லட்சக்கணக்கான மக்கள் அது நாடகமாக்கப்பட்ட போது அதைப் பார்த்து களித்தனர். அதன் அடிப்படையில் சினிமாப்படம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு அநேகமாக முடிந்தது. இவ்வளவும் ஆனபின்பு, ஸ்டாலினிடமிருந்து உத்தரவுகள் வந்தன. அவ்வுத்தரவுகளைப் பின்பற்றி, டோன்பாஸின் ஒரு பிரிவில் செஞ்சேனை பின்வாங்கினதையும், கலவரத்திலும்

பதியினுலும், சிவிலியன்களும் கால்நடைகளும், இயந்திர சாதனங்களும் காலி செய்யப்பட்டதையும் சித்திரித்ததற்காக, விமர்ச்சகர் ப்வதியேவைத் தாக்கினர். நிற்க, இந்தக் காட்சி சோவியத் இலக்கியம் யாவற்றிலும் மிகச் சிறந்த வாசகங்க ளாகும். மேலும், ஜர்மானியருக்கு எதிராக இளம் கோம் சோமோல்கள் போராடியதை கம்யூனிஸ்ட் திட்டப்படி ஏற்பாடாக நடந்த ஓர் எதிர்ப்பாகக் காட்டாமல் இளம் பிள்ளைகள் பெண் கள் தவருகக் காட்டின தேசாபிமானத்தின் விளைவெனச் சித்திரத்ததைக் குறித்தும் ப்வதியேவ் தாக்கப்பட்டார்.

விமர்சனம் எவ்வளவு காரசாரமாக இருந்தாலும், சிருஷ்டி சக்தியுள்ள எழுத்து தோன்றுவதற்கு ஆரோக்கியமானதும் இன்றியமையாததுமானதொரு உதவி அது என்பதில் ஐயமில்லை. ஆனால், கட்சியின் போக்கே எதன்மீதும் ஆதிக்கம் செலுத்தும் சோவியத் யூனியனில், விமர்சனம் மிருகப்பிராயமாயும், தீங்கு செய்வதாயும், அரசாங்கத்தின் நிர்வாகக் குறுக்கீட்டுக்கு ஒரு முன்னறிவிப்பாயுமே உள்ளது. அதிருஷ்டவசமாக, ப்வதி யேவின் நாவல் முழுவதுமே கண்டனம் செய்யப்படவில்லை. ப்வதியேவ் தம் பிழைகளை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, தம்மீது ராஜீய நோக்குடன் செய்யப்பட்ட விமர்சனத்தின்படி "யங் கார்ட்"டைத் திருத்தி எழுதுவதாகத் தெரிவித்தார்.

சிமோனேவ், "ஸ்மோக் ஆப் தி ஹோம் லாண்ட்" (தாய் நாட்டின் புகை) என்ற ஒரு நாவல் எழுதினர். யுத்தத்தின் போது போர்புரிந்தவரும், பின்னர், ஐரோப்பாவிலும் அமெரிக் காவிலும் பல காரியங்களுக்காகப் பிரயாணம் செய்தவருமான சோவியத் இஞ்சினியர் ஒருவரின் மனோநிலையை அது வர்ணிக் கிறது. விமர்சகா அப்புத்தகத்தை மெச்சி எழுதினர். மத்திய கமிட்டியின் ரகசிய உத்தரவு பெற்றபின், அதை அவசரமாக எழுதப்பட்ட, உறுதியான கட்டுக்கோப்பு இல்லாத தொரு நாவல் என்றும், கதாநாயகன் சிந்தனுலோகத்தில் சஞ்சரிப்ப வனுகக் காண்கிருனே யொழிய தீவிர சோவியத் தேசபக்தனைப் போலவே இல்லையென்றும், ஒரு லட்சிய சோவியத் தேச

பக்தன் எவ்விதமாக இருக்கவேண்டுமென ருஷிய அரசாங்கம் கருதுகிறதோ அதைத் தவருகவே சிமோனேவ் புரிந்துகொண்டிருக்கிருர் என்றும் தாக்கினர். ஆனல், அமெரிக்காவைப் பற்றிக் கடுமையாக எழுதியிருப்பதாலும், கதாநாயகன் முதலாளித்துவ நாகரிகத்தைப்பற்றிச் சரியான சவுக்கடி கொடுப்பதாலும், ப்வுதியேவ் போலவே இவரும் அவமானத்தினின்று தப்பினுர்.

இலக்கிய ஆசிரியருள், விமர்சகரே மிகவும் பரிதாபமான நிலையில் இருப்பவர். புதுச்சிருஷ்டிகளை மதிப்பிட்டு விளக்குவதே அவர்கள் கடமை. ஆனுல் தம் அபிப்பிராயத்தை வெளியிடவோ தம் கருத்தின்படி தீர்ப்புகூறவோ அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. மக்கள், நாடு, கட்சி இவர்களுக்குச் செலுத்தவேண்டிய பொறுப்பை உணர்ந்து நடக்கவேண்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். இந்த நிலையில் ஏன் நமக்குத் தொல்லை என்று ருஷிய அரசாங்கத்தின் ஆதரவு பெற்றவர்களின் நூல்களைப் புகழ்ந்தும், நிச்சயமற்ற நாவல்கள் நாடகங்களைப்பற்றி உபாயமாக எழுதியும் தம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றனர்.

வெரா பனேவா என்பவர் இன்றைய சோவியத் ஆசிரியருள் மிகத் துணிச்சலுடையவர். அவர் இவ்வாண்டின் தொடக்கத்தில் ' குருஜிலிகா ' (யூரலிலுள்ள ஓரிடம்) என்ெருரு நாவல் எழுதினுர். யுத்த பிற்கால சோவியத் தொழில் சமூக வாழ்க்கையைச் சித்தரிக்கும் முதல் முக்யமான நூல் அது. ஆசிரியை வாழ்கையைக் கூர்ந்து நோக்கி உள்ளது உள்ளபடியாகவும் நேர்மையாகவும் எழுதினுர். " லிட்டரரி கெஜட் " பத்திரிகை இப்புத்தக விஷயமாக ஜீவனுள்ள ஒரு விவாதத்தைக் கிளப்பியது. விமர்சகர் இருவரைத் தவிர மற்றெல்லோரும் பொருளின் வேறுபாடுகளை உணராமல் ஆசிரியை எழுதினுள் எனத்தாக்கியது. பத்திரிகாசிரியரும் அவள் மீது குற்றஞ்சாட்டினர். ஆனுல், ஸ்டாலின் பரிசுக் கமிட்டியோ சோவியத் யூனியனில் வதியும் மக்களை உள்ளது உள்ளபடி

அப்பட்டமாகச் சித்தரிக்கிறது அந்த நாவல் என அதற்கு ஸ்டாலின் பரிசு அளித்தது. விமர்சகர் எல்லோரும் திடுக்கிட்டனர்.

டாஸ்தாய்வ்ஸ்கியும் தாக்கப்படுகிறுர்.

கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தையும் அதன் அனுஷ்டானத்தையும் பொலித் பீரோ வியாக்கியானம் செய்யும் வழியாகவே எல்லா பிரச்னைகளையும் கருதவேண்டும் என்பதுதான் ருஷிய அரசாங்கத்தின் கொள்கை. இக்கொள்கையானது இவ்வளவு அவசரமாகவும் கண்டிப்பாகவும் வலியுறுத்தப்படுவதைப்போல சோவியத் யூனியனுடையவும் கம்யூனிஸ்ட் கட்சியினுடையவும் வரலாற்றில் வேறெந்த காலத்திலும் வலியுறுத்தப்பட்டது கிடையாது. பிரசார யுத்தம் மேன்மேலும் பயங்கரமாக நடந்து வரும் இச்சமயத்தில் இந்த வலியுறுத்தலும் தீவிரமாகிக் கொண்டுவருகின்றது.

டாஸ்தாய்வ்ஸ்கி என்னும் பிரபல ருஷிய ஆசிரியரின் விஷயத்தில் இக்கொள்கை பிரயோகிக்கப்படுகிற விதத்தைப் பார்ப்போம். டாஸ்தாய்வ்ஸ்கி சோவியத் விமர்சகர்களுக்கு உண்மையில் ஒரு பயங்கர சொப்பனமாகவே இருக்கிறுர். ருஷிய சிந்தனைக்கும் இலக்கியத்திற்கும் அவர் செலுத்தியுள்ள பங்கு அபாரமானது. ஆனால், அது முன்னுக்குப் பின் முரணுனதாயும் கோபமூட்டுவதாயும் உள்ளது. இவ்வருஷத்தின் ஆரம்பத்தில் டாஸ்தாய்வ்ஸ்கியைப்பற்றி மூன்று புத்தகங்கள் வெளியாகியுள்ளன. பிரபல சோவியத் விமர்சகரான விளாடிமீர் இர்ப்போடின், "வாலிப டாஸ்தாய்வ்ஸ்கி", "எப். எம். டாஸ்தாய்வ்ஸ்கி" என்ற நூல்கள் இரண்டையும், டோலினின் என்பவர் "டாஸ்தாய்வ்ஸ்கியின் சிருஷ்டி சோதனைசாலை என்றெரு நூலையும் எழுதியுள்ளனர். இந்நூல்கள் யாவும் ருஷிய அரசாங்கத்தின் தீவிரமான கொள்கைக்கு முன்னுல் வெளியாயின.

"லிட்டரரி கெஜட்" டின் தலைமையாசிரியரான விளாடிமீர் எர்மிலாவ் என்பவர் அப்பத்திரிகையில் எழுதுகையில், ருஷிய

அரசாங்கத்தின் கொள்கை எவ்விதமாகப் பிரயோகிக்கப்படு கிறது என்பதை வெளிப்படையாகக் கூறுகிறார் இங்ஙனமாக:

நம் காலத்திய பூர்ஷுவா இலக்கியம் மானிட இயல்பின் சிறுமை, பலவீனம், அற்பத்தனம் ஆகிய வற்றையே சித்திரிக்கிறது. மக்கட்குலம் குரூரமானது, அருவருப்பானது. அதற்குக் கடிவாளம் போடவேண்டும். மனிதனைப்பற்றிய இந்த அவதூறையே இக்கால வெளி நாட்டு இலக்கியத்தின் பிரதான அம்சமாகக் காண் கிறோம்.

இந்த இலக்கியம் மக்களின் ஆத்மாவையே சிரழிக் கவும் போராடும் விருப்பத்தையே ஒடுக்கவும், பூர்ஷுவா உலகை ஆள்வோர் மக்களை அடிமைப்படுத்த இழைக்கும் அநீதங்கள் கொடுமைகளுக்கு நியாயம் காட்டவும் நாடு கின்றது. முற்போக்கு இலக்கியத்திற்கும் பிற்போக்கு இலக்கியத்திற்கும் கடுமையான மானிடப் போராட்ட மொன்று நடந்துவருகின்றது.

இப்போராட்டத்தில் டாஸ்தாய்வ்ஸ்கியின் சிருஷ்டி வேலை எவ்விதமாகத் தன் பங்கைச் செலுத்துகின்றது ? அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் ?

இக் கேள்விகளுக்கு நம் விமர்சனம் ஒரு தெளி வான, சந்தேகத்திற்கு இடமில்லாத பதில்தரவேண்டும். நம் வாழ்நாளில் போலவே, இப்போதும், டாஸ் தாய்வ்ஸ்கி பிற்போக்கின் முன்னணியில் நிற்கிறார். அமெரிக்க இலக்கியக் கையாள்கள் மேற்கொண்டுள்ள மனிதனுக்கு விரோதமான போரில் அவருடைய எழுத் துக்களைத் தம் நலனுக்காகச் சுரண்டிவருகின்றனர். மானிட இயல்பின் பலவினத்தையும், அற்பத்தனத் தையும், பாமரத்தன்மையையும் நசுப்படுத்த தம் முழுவதையும் டாஸ்தாய்வ்ஸ்கி விரயம் செய் ல் இவ்விதமாக இருப்பது இயற்கையேயாம்.

அத்தியாயம் 19

சோவியத் இசைவாணர்.

கட்டுப்பாடுகள் இருந்தனவாயினும், சோவியத் மக்கள் அபூர்வமாகச் சில கலைப்பொருள்களைச் சிருஷ்டித்துத்தான் உள்ளனர். ருஷிய சாஹித்யகர்த்தர்களே பெரும்பாலும் இச் சிருஷ்டிக்குக் காரணமாயிருப்பவர்கள். ஓவியம், இலக்கியம் இவற்றைப்போல, சங்கீதத்தை அவ்வளவு எளிதில் புரிந்து கொள்ளமுடியாது. சிறப்பாக ருஷிய அரசாங்கத்தைச் சார்ந்தவர்களுக்கு அது விளங்குவது கடினம். அதை அவர்கள் விளக்கவோ அதில் தலையிடவோ அவ்வளவு இலேசாக முடியாது.

சோவியத் ருஷியாவில் இசைவாணர் பண விஷயத்தில் பாதுகாப்பான நிலையில் உள்ளனர் என்றும், அந்நாட்டில் இசை அரங்குகள் வெகுவாகப் பரவியுள்ளன என்றும் சோவியத் அதிகாரிகளும் சரி, அமெரிக்காவில் அவர்கள் சார்பில் பேசுவோரும் சரி பெருமையடித்துக் கொள்கின்றனர். ருஷியாவில் இசையை வளர்க்கும் கழகங்கள் இருபத்திரண்டு உள்ளன. தன்மானமுள்ள ஒவ்வொரு நகரிலும், இன்னிசைக்கோஷ்டியொன்றும், இசை நாடக நடனக் கச்சேரிகளுக்கென நாடக அரங்கு ஒன்றும் உண்டு. குழந்தைகளின் இசைப்பள்ளிக் கூடங்கள். பலவும் எண்ணற்ற இசையரங்குகளும் இருக்கின்றன. உலகிலுள்ள எந்த ரேடியோவையும் விட ருஷிய ரேடியோ நல்லிசைக்காக அதிக நேரம் செலவழிக்கிறது.

மாஸ்கோவில் சாகித்யகர்த்தர்களின் சங்கம் சாகித்ய தர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஜாகை வ அளிக்கப் பெரிய மாளிகையொன்று கட்டியுள்ள நெருக்கமுள்ள தலைநகரில் இது உண்மையாகவே படுவதற்குரிய காரியமாகும். மாஸ்கோ

இவானே என்னும் ஊருக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள ஓய்வுக்கும் சிருஷ்டி வேலைக்காகவும் ஆன விடுதியில் பைன் மரங்களுக்கு இடையே தனித்தனியாக இனிய குடிசைகள் உள்ளன. ஒவ்வொரு குடிசையிலும் பியானோ வாத்யம் ஒன்றுண்டு. ஷொஸ்தாகோவிச், கச்சாதூரியன் போன்ற பிரபல கலைவாணர்கள் தனித்திருக்க, வனத்தில் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ள வேறு குடிசையொன்றையும் பெறலாம். ஒரு பியானோவும் சோபாவும் மட்டுமே அங்கே இருக்கும்.

அரசாங்கக் குறுக்கீடு.

இவையெல்லாம் உண்மைதான். எழுத்தறியாமைமீது வெற்றிகரமாகப் போர் தொடங்கி உலகத் தொல்லிலக்கியங்களை அச்சிட்டு வழங்கிய மகத்தான சாதனைகள்போல இவையும் உண்மைதான். இசையிலும் இலக்கியத்திலும் பிரமாதமான செயல்கள் நடந்துள்ளன. ஆனால் இவை பரவலாக உள்ளனவேயொழிய ஆழமாக இல்லை. இடைவிடாமல் அரசியல் நோக்குடன் குறுக்கிடுவதும், முள்ளால் குத்துவதுபோல விமர்சனம் என்ற பெயரில் குற்றமே காண்பதும், நேரிடையாகவோ மறைமுகமாகவோ வருமான நஷ்டம் ஏற்படச்செய்வதாகப் பயமுறுத்துவதும்—இவையெல்லாம் சோவியத் இசைவாணர்களின் சிருஷ்டி முயற்சியை உலைத்தன.

1948 ஜனவரியில் மத்தியக்கமிட்டி கூட்டின இசை மகாநாட்டைத் தொடங்கிவைத்த ஜதனோவ் தம் சொற்பொழிவில் ஷொஸ்தாகோவிச், ப்ரோகோப்வியவ், கச்சாதூரியன் முதலியவர்களின் இசைகளைக் கடுமையாகத் தாக்கினார். பேச்சு முடிந்தவுடனேயே மேலே சொன்னவர்களின் சாஹித்யங்கள் இசைக் கச்சேரியின் நிகழ்ச்சிமுறையிலிருந்து விலக்கப்பட்டன. சாஹித்ய கர்த்தர்கள் இவ்விதமாக வயிற்றில் அடிக்கப்படுவதன்மூலமாக எச்சரிக்கப்பட்டனர். மாஸ்கோ அருகாமையிலுள்ள ஒரு சிற்றூரில், இசைவாத்தியக் கோஷ்டியார் ப்ரோகோப்வியவ்வின் ஒரு சாஹித்யத்தைப் பாட அனுமதித்ததற்காக அந்த சினிமா மானேஜர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ருஷிய சங்கீதத்தில் ஜதாஞேவ் குறைகள் காணுவது நியாய மாக இருக்கலாம். ஆயினும் சாஹித்யகர்த்தர்களைப் பணிய வைத்து பொது மக்களின் முன்னிலையில் இழிமைப்படுத்துவது தகாது. ருஷிய அரசாங்கம் உண்மையில் சங்கீதத்தையும் சினிமாவையும் நாடகத்தையும் இப்போது நடக்கும் பிரசார யுத்தத்திற்குரிய கருவிகளாகவே பயன்படுத்தக் கருதுகிறது.

சாஹித்யகர்த்தர்கள் தம் சாஹித்யங்கள்மீது காட்டப்படும் குற்றங்களை ஏற்றுக்கொள்ளும்படிக் கட்டாயப்படுத்தப்படுகின்றனரா என்றொரு கேள்வி கேட்கப்பட்டது. சங்கீத விஷயங்களில் அரசாங்க அதிகாரியான யூரி ஷப்போரின் இவ்விதமாகப் பதிலளித்தார்.

“ கட்சி மத்தியக்கமிட்டியின் உத்தரவுகள் நியாயமானவை எனச் சாஹித்யகர்த்தர்களே ஏற்றுக்கொண்டால், கட்டாயப்படுத்தப் படுகின்றனர் என்று எப்படிச் சொல்வது ? கட்சி உத்தரவு கள் சரியானவை என்று உள்ளத்தில் உணர்ந்து, மக்களின் குரலைக்கேட்டால், அவர்கள் கட்டாயமின்றி சுயேச்சையாக உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிபவர்.”

ஆனல் ‘ மக்களின் குரலை ’க் கேட்கவில்லை என்றும், கட்சி உத்தரவுகளைச் சரியாக அறிந்துகொள்ளவில்லை என்றும் அதனல் சுயேச்சையாக அவற்றின்படி நடக்கவில்லை என்றும் வைத்துக்கொள்ளுங்கள். அப்போது ?

1948 ஏப்ரலில் நடந்த சோவியத் சாஹித்யகர்த்தர்கள் காங்கிரஸில் இதற்குப் பதிலளிக்கப்பட்டது. ஷொஸ்தாகோவிச், ப்ரோகோப்வியவ், மியாஸ்கோவ்ஸ்கி, போப்போவ், முரதலி ஆகியோர் அடங்கிய பல சாஹித்யகர்த்தர்கள் தம் மீது சாட்டப்பட்ட குற்றங்கள் விஷயத்தில் சிலர் மௌனமாக இருந்தனர் ; சிலர் அதிருப்திகரமான முறையில் மன்னிப்பு கேட்டனர். கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக்கமிட்டி, இம் மௌனமும் மன்னிப்புக்களும் தனித்தன்மையின் நீடித்த போக்கு களை என்றும், பொது மக்களின் பொது விருப்பத்தை எதிர்ப்

பதுபோலவேயாகும் என்றும், அடிப்படையான ஜனநாயக, எதார்த்த, சோவியத் கலையின் தலையூற்றில் நுழைய விருப்ப மில்லாமையைக் காட்டுகின்றன என்றும் கண்டனம் செய்தது.

தம் பிழைகளை மீண்டும் ஒப்புக்கொண்டு, இனி சரியாக நடப்பதாக வாக்குறுதி செய்யவேண்டுமென அவர்களைக் கேட்ட சமயம் என்னை ஏற்கெனவே சோவியத் யூனியனிலிருந்து வெளி யேற்றிவிட்டனர். ஆகவே, அக் "குற்றவாளிகள்" அனை வரும் அவ்விதமே செய்தனரா என்பதை நான் அறியேன். ஆனால், பத்திரிகைச் செய்திகளிலிருந்து டிமிட்ரி ஷொஸ்தா கோவிச் மீண்டும் மன்னிப்பு கேட்டுக்கொண்டார் என்பதை மட்டும் அறிவேன்.

இன்று நம்மிடையே வாழும் மூன்று மிகப்பெரிய சோவியத் சாகித்யகர்த்தர்களில் இருவரான ப்ரோகோப்வியவ்வும் மியாஸ் கோவ்ஸ்கியும், காங்கிரஸை அலட்சியம்செய்தனர். முதுமை எய்தி, நோயுற்று உள்ளம் உடைந்த மியாஸ்கோவ்ஸ்கி உலகி னின்று விலகினர். ப்ரோகோப்வியவ் காங்கிரஸில் கலந்து கொள்ளாவிடினும் இசை விஷயமாக மத்தியக்கமிட்டி செய்த உத்தரவைப் பாராட்டினர். அவர் இசை ஒன்றின் மீதே கருத்து செலுத்தினர். சிருஷ்டிப்பதன் அவசியத்தை உணர்ந்த அவர், யார் என்னவேண்டுமானலும் செய்துகொண்டு போகட்டுமென்று தான் பாட்டுக்கும் சாகித்யம் செய்துவந்தார். அதிகாரிகள் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும், வருவாய் பாதிக் கப்படாவிடின், அவற்றைப் பொருட்படுத்தவில்லை. மோஸ்க்வா நதிக்கரையில் இயற்கையின் அழகு சூழ அமைந்த தம் நாட்டுப் புற விட்டில் அமைதியாக எழுதிவந்தார்.

ப்ரோகோப்வியவ் எதிலும் குற்றம்பிடிக்கும் சுபாவம் உடையவர்; அசட்டையாயிருப்பவர்; ஆனல் நன்னம்பிக்கை யுடையவர். துரதிருஷ்டவசமாக ஷொஸ்தாகோவிச்சுக்கு இக்குணங்கள் எவையுமில்லை. ஆயினும், ப்ரோகோப்வியவ் வைப்போல இவருக்கு இசையின் மீது பேரார்வமும் வெறியும் உண்டு. சாகித்யம் செய்வது இன்றியமையாத தொரு காரிய

மாகும் இவருக்கு. ப்ரோகோப்வியவ் எப்போதும் பென் சிலும் பேப்பருமாக இருப்பார்; தமக்குத் தோன்றிய ராகத் தையும் வசனத்தையும் உடனே குறித்துக்கொள்வார். ஷொஸ் தாகோவிச்சோ சாகித்யம் முழுதும் மனத்தில் அமைந்தால் தான் குறித்துக்கொள்வார். மனத்திலே வளர்ந்துவரும் சாகித்யத்தைபற்றி சதாகாலமும் எண்ணிக்கொண்டே இருப் பார். அது சமயம், பிறருடன் பேசுகையிலும் மனம் சாகித்யத் திலேயே கவனமாயிருக்கும்.

ஷொஸ்தாகோவிச்.

ஷொஸ்தாகோவிச் பெரிய இசைப்புலவர். 39 வயதா கியும் பள்ளிக்கூடப்பிள்ளைபோலிருப்பார். அவர் உண்மை யான தேசபக்தர். கட்சியில் சேராத போல்ஷிவிக் எனத் தம்மைக் கருதிக்கொள்வார். ருஷ்ய அரசாங்கம் குறைகூறித் தாக்கிஞல் சோவியத் பிரஜை என்ற தன்மையிலும், சாகித்ய கர்த்தா என்ற உரிமையிலும் தமக்கு வீழ்ச்சியே என அஞ்சு பவர். சாகித்யகர்த்தர்கள் காங்கிரஸில் அவர் சொன்னதாவது:

" கட்சி செய்வது சரி என்பதை அறிவேன். கட்சி என்பால் நல்லெண்ணமே உடையது என்பதையும், சோவியத் மக்களின் எதார்த்த கலையை நோக்கி என்னை வழி நடத்தவல்ல உருப் படியான, சிருஷ்டிக்கும் ஆற்றலுடைய, வழிகளை நாடிக் கண்டு பிடிக்கவேண்டியவன் நான் என்பதையும் அறிவேன். சோவி யத் மக்களின் உள்ளத்தில் நுழையும் வழியைக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். நான் அதைக் கண்டுபிடித்தாகவேண்டும்."

1936-ல் பிரவ்தா பத்திரிகை அவரைத் தாக்கியது. பதி னெட்டு மாதங்களுக்குப் பிறகு தமது சிறப்புற்ற ஐந்தாவது சிம்பொனியை எழுதிஞர். அவர் எழுதியவற்றுள் அதுவே மிக உயர்ந்த சாகித்யம். போல்ஷிவிக்கர் அதன் வெற் றிக்குத் தாமே காரணமெனக் கூறவிரும்பினர். " எங்கள் விமர்சனமே அவர் உண்மையொளியை நோக்க உதவியது"

என்றனர். ஆனால், அந்த விமர்சனத்தைச் சட்டைபண்ணு மலேயே ஒளி பெற்றார் என்பது என் நம்பிக்கை. அவரது இளமையும் மேதையும் உலகத் தொல்லிசையிலும் இக்கால இசையிலும் அவருக்கிருந்த ஆழ்ந்த பரிச்சயமும் உண்மை யைக்காண உதவின.

1947-ல் பிரேக்கில் நடந்த இசை விழாவில் இன்று உயி ருடனிருக்கும் சாகித்யகர்த்தர்களுள் அவரே முதன்மை பெற்ற வர் என அங்கே குழுமியிருந்த ஆயிரக்கணக்கான இசையன்பர் அவரைப் பாராட்டினர்.

அவர் தம் பொது அறிக்கைகளில் வெளியிட்டுள்ள அரசியல் கருத்துக்களை நான் ஏற்கவில்லை. ருஷிய அரசாங்கம் கலைத் துறையில் எவ்வளவு பிற்போக்காக நடந்துகொள்கிறது என்பதை அவர் உணராதிருப்பதுதான் எனக்கு அதிசயமாக இருக்கிறது.

இனிய மணவாழ்க்கையில் ஈடுபட்டும், இரண்டு அழகிய குழந்தைகளின் தகப்பனாராக இருந்தும் வரும் ஷொஸ்தா கோவிச், இவ்வளவு இருந்தும் உலகிலேயே மிகத் தனிமையில் வாழும் பெரியோர்களில் ஒருவராகவே இருக்கிறார். அவர் பலவகையான கடமைகளைக் கவனித்து வருகிறார். ஸ்டாலின் பரிசுக்கமிட்டியிலும், கலைக்கமிட்டியின் ஆலோசனை சபை யிலும் சாகித்யகர்த்தர் சங்க போர்டிலும் அவர் அங்கம் வகிக்கிறார். மாஸ்கோவிலும் லெனின்கிராடிலும் உள்ள இசைவளர்ப்புக்கழகங்களில் அவர் பேராசிரியர். சிருஷ்டி வேலை செய்ய நேரம் அளிக்காமலிருக்கவே இக்கடமைகள் வேண்டுமென்றே தரப்பட்டுள்ளனவோ என்ற சந்தேகம் ஏற்படு கிறது. ப்ரோகோப்வியவ், மியாஸ்கோவ்ஸ்கி இவர்களைப் போன்று நாட்டுப்புறத்தில் வீடொன்று அமைத்துக்கொள் வதற்கான வசதி இவருக்கில்லை. ஆகவே, கோடைக்காலத்தில் சாகித்யகர்த்தர்களின் விடுதியில் தங்கி சாகித்யம் செய்வார். அச்சமயங்களில்தான் சிருஷ்டிவேலை செய்வதாக என்னிடம் பலதடவை சொல்லியிருக்கிறார்.

இவருடைய சாகித்யங்களில் இனிய ராகமும் தெளிந்த மொழியும் கலந்து நிற்கும். ருஷிய அரசாங்கத்தால் போஷிக்கப் படும் சாமானியர்களின் சாகித்யங்களில் இவற்றைக் காணமுடி யாது. உலக முழுவதும் கெடுதிக்கு அனுகூலமாக இருக்கிறதென்னும் மனப்போக்குடைய இவருடைய சங்கீதத்தில் அவலச்சுவையே மிகுந்திருக்கும். நாட்டில் காணாத சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் அதிகாரிகள் புகழும் இச்சமயத்தில் சாமானிய கலைஞர்கள் இவரது போக்கைக் கண்டு அச்சமே அடைவர்.

ஷொஸ்தாகோவிச் தேசபக்தராயினும் தாம் தமக்கு உண் மையாக நிற்கக்கூடியவர். ஆதலால், எதிர்காலம் இவருக்கு கடினமாகவே இருக்கும். உண்மையில், இரண்டு வருஷங் களுக்கு முன்னாலேயே சிருஷ்டிகர்த்தர்கள் அனைவருக்குமே சோவியத்தில் கஷ்டமான நாட்கள் ஆரம்பமாகிவிட்டன.

பகுதி ஏழு

நான்குகோடி அமெரிக்க நூல்கள்

அத்தியாயம் 20

நான்குகோடி அமெரிக்க நூல்கள்

அமெரிக்காவையும் ருஷியாவையும் தொலைதூரங்கள் பிரிப்பதாலும், ருஷியாவில் பலவகையான நாணயச் செலாவணித் தடைகளும் ராஜீயத் தடைகளும் இருப்பதாலும், அமெரிக்காவின் வாழ்க்கையையும் போக்குகளையும் பற்றிய செய்திகள் யாவும் பிரதானமாக அமெரிக்க நூல்களினின்றே ருஷியருக்குக் கிடைக்கின்றன. ஆகவே, பழைய ருஷியாவிலும் இன்றைய சோவியத் யூனியனிலும் அமெரிக்க நூல்கள் ஊடுருவிப் பரவிய வரலாறு முக்கியமானதொரு விஷயமாகும். நிற்க, ருஷிய அரசாங்கத்தின் "அமெரிக்காவைப் பகை" பிரசாரத்திற்கு எதிரிடையாகக் கிளம்பியுள்ள சாத்வீக எதிர்ப்பு பெரும்பாலும் அமெரிக்க நூல்களின் பயனேயாகும்.

1917-லிருந்து சோவியத் ருஷியாவில் 201 அமெரிக்க எழுத்தாளரும் கவிகளும் எழுதிய ஆயிரம் நூல்களின் நாலு கோடி பிரதிகள் விநியோகமாகி உள்ளன. ஜார் ஆண்ட ருஷியாவில் வெளியான அமெரிக்க நூல்களின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை.

இந்த ஜாப்தாவின் உச்சியில் விளங்குபவர் ஜாக் லண்டன் ஆவர். அவருடைய நூல்கள் 567 பதிப்புக்களில் மொத்தம் 10,367,000 பிரதிகள் வெளியாகியுள்ளன. இரண்டாவதாக, 3,000,000 பிரதிகள் கொண்ட மார்க் ட்வெயனின் நூல்கள். மூன்றாவதாக வருபவர் அப்டன் சிங்கிளேர். அவர் நூல்களில் வெளியாகியிருப்பன 2,889,000 பிரதிகள். எர்னஸ்ட் தாம்சன் சீட்டனின் நூல்களில் 2,011,000 பிரதிகளும், ஓ. ஹென்றியின் நூல்களில் 1,403,000 பிரதிகளும், பிரெட் ஹார்ட் நூல்களில் 969,000 பிரதிகளும் வெளியாகியுள்ளன.

1917 முதல் ருஷியாவில் வெளியான அமெரிக்க நூல்களின் ஆசிரியர் வருமாறு: தியோடோர் ட்ரெஸ்லர், எர்னெஸ்ட் ஹெமிங்வே, ஜான் ஸ்டெய்ன்பாக், ஜேம்ஸ் பென்னிமூர் கூப்பர், வாஷிங்டன் இர்விங், சிங்கிளேர் லூயிஸ், எட்வர்ட் பெலாமி, லாங்பெல்லோ, பெர்ல் பெக், எர்ஸ்கின் காலட்வெல், ஹாரியட் பீச்சர் ஸ்டௌவ், கோன்ராட், எட்வர்ட் அல்லன் போ, வால்ட் விட்மன், ஜான் டாஸ் பாஸ்ஸோஸ், மைக்கேல் கோல்ட், யூஜின் ஓநீல், லூயி புரும்பீல்ட், முதலியோர்.

அமெரிக்க இலக்கியம் சற்றேறக்குறைய 125 வருஷங்களுக்கு முன்னால் ருஷியாவுக்கு வந்து, விரைவில் ருஷியச் சிந்தனையை உருப்படுத்துவதில் ஒரு முக்கியமான அம்சமாயிற்று. இலக்கியத்துறையிலும் ராஜ்யத் துறையிலும் அதன் செல்வாக்கு பரவி அமெரிக்க ஜன நாயகத்தின் புரட்சி நோக்கைப் பரப்பியது. ஜாரை எதிர்த்துப் போராடினவர்களின்மீது அதன் ராஜீய செல்வாக்கு அதிகமாயிருந்தது. 1917 புரட்சிக்குப்பின் அது மிகவும் குறையலாயிற்று.

1820-ம் வருஷ வாக்கில் மொழிபெயர்ப்பு இளமைப் பருவத்தில் இருந்தது. அச்சமயம் அயல்நாட்டு ஆசிரியர் எழுதிய நூல்களின் மொழிபெயர்ப்பு பொது மக்களுக்குக் கிடைப்பதில்லை. கவியும் இரண்டாவது அலக்சாந்தரின் ஆசானுமாகிய வஸிலி ஜுகோவ்ஸ்கிதான் முதன்முதலாக மொழி பெயர்ப்புக்கலைக்கு வழிகாட்டினார். அயல்நாட்டுக் கவிதைகளை ருஷிய மொழிப்படுத்தி புதுமைக் கவிதைக்கு அடிகோலினார்.

அலக்சாந்தர் புஷ்கின், மிக்காய்ல் லெர்மான்டோவ், அபான்ஸி ப்வெட், கோந்தான்டின் பல்மோன்ட் இவான் புனின் முதலிய சிறந்த ருஷிய கவிகள் மொழிபெயர்த்தனர்.

ருஷியாவில் மொழிபெயர்க்கப்பட்ட முதல் அமெரிக்க ஆசிரியர், பெஞ்சாமின் பிராங்க்ளின். 1784-ல் பீட்டர்ஸ்பர்க்கில் பூர் ரிச்சர்ட்ஸ் ஆல்மனக் தோன்றியது. பத்து வருஷங்கள் கழித்து மாஸ்கோவில் "பிராங்க்ளின் வாழ்க்கை வரலாறும்

அவர் நூல்களும் பற்றிய விவரங்கள்" என்ற நூல் வெளியிடப்பட்டது. 1789-ல், பிராங்க்ளின், இம்பீரியல் ஆகாடெமி ஆப் சயன்ஸெஸ் என்ற ருஷிய விஞ்ஞானக்கழகத்திற்கு ஓர் அங்கத்தினராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், உண்மையில், அமெரிக்கப் புரட்சி, அதன் லட்சியங்கள் ஆகிய விஷயங்களில் ஏற்பட்ட ஓர் அக்கறையே ருஷிய அறிவாளிகள் அமெரிக்க இலக்கியத்தில் காட்டிய மிகுந்த அக்கறைக்குக் காரணமாக இருந்தது. பிரசுர விஷயத்திலும் கல்வி விஷயத்திலும் முன்னோடியாக விளங்கிய நிக்கோலே நோவிகோவ் என்பவர் 1784-ல் எழுதி வெளியிட்ட ஜார்ஜ் வாஷிங்டன் வாழ்க்கை வரலாற்றின் இறுதி வரிகளில் இவ்விதமாக எழுதியிருக்கிறார்:

"ரோமாபுரிக்கு ஒரு காமில்லா இருந்தார்; கிரீஸ்ஸுக்கு ஒரு லியோனிதாஸ் இருந்தார்; சுவீடனுக்கு ஒரு குஸ்தாவ் இருந்தார்; இங்கிலாந்துக்கு ஒரு ரஸ்ஸலும் ஒரு ஸிட்னியும் இருந்தனர். ஆயினும், சிறப்புவாய்ந்த இவ்வீரர்களை வாஷிங்டனுடன் ஒப்பிடமுடியாது. சுக போகங்களும் ஒழுக்கச்சீர்கேடுகளும் சுதந்திரத்தை ஐரோப்பாவினின்று துரத்தியடித்தன வல்லவா? அச்சுதந்திரத்திற்குப் பாதுகாப்பான ஓர் இடமாக இருக்கக்கூடிய குடியரசு ஒன்றை வாஷிங்டன் ஸ்தாபித்தார்.

ருஷியர்கள் அமெரிக்க ஜனநாயகத்தைப் புகழ்ந்து பாராட்டினர். அமெரிக்காவும் ருஷியாவும் சிறப்புவாய்ந்ததோர் எதிர் காலத்தை நோக்கிச் செல்கின்றன என்ற எண்ணம் அமெரிக்கரிற் பலருக்கு இருந்துவந்தது.

1825-ல் கிளர்ந்தெழுந்த ஜார் ஆபீசர்கள் அமெரிக்காவிடமிருந்தும் பிரான்சிடமிருந்தும் எழுச்சிபெற்றவர்களே. அவர்கள் அமெரிக்க அரசியலமைப்பின் ரீதியிலேயே ருஷிய அரசியலமைப்புக்கும் ஒரு திட்டம் போட்டனர். அவர்கள் அமெரிக்க வரலாற்றையும் அமெரிக்க வீரரின் வாழ்க்கை வர

லாற்றையும் அமெரிக்க ஜனநாயக ரீதியையும் எதிர்கால ருஷியப் புரட்சிக்காரர்களின் ஆராய்ச்சிக்கு உரிய விஷயமாக்கிக் கொண்டனர்.

கூப்பரின் செல்வாக்கு

வாஷிங்டன் இர்விங் எழுதிய நூல்களில் 'ஸ்கெச் புக்' என்பதே முதன்முதலாக ருஷிய மொழியில் பெயர்க்கப்பட்டு வெளிவந்தது. ப்வென்னிமோர் கூப்பரின் 'தி ஸ்பை' என்ற நூல் மாஸ்கோவில் 1825-ல் வெளிவந்தது. பிறகு மெல்லமெல்ல அவருடைய இதர நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டன. இக்கால ருஷிய இலக்கிய விமர்சனத்தின் தந்தையெனப் பாராட்டப்படும் விஸ்ஸாரியோன் பெலின்ஸ்கி, ப்வென்னிமோர் கூப்பர் எழுதிய 'பாத் ப்வைண்டர்' என்னும் நூலில் ஷேக்ஸ்பியர் டிராமாவிலுள்ள ஆற்றலும் உள்விழியும் காண்கின்றன என்றார். "ருஷிய இலக்கிய வரலாற்றில் புஷ்கினுக்கு அடுத்தபடியான முக்கியஸ்தானத்திலுள்ள லெர்மோண்தோவ், கூப்பர் வால்டர் ஸ்காட்டைவிடச் சிறந்தவரென்றும், அவருடைய நூல்களில் அதிக ஆழமும் சிருஷ்டி ஒற்றுமையும் உள்ளன என்றும் என்னிடம் சொன்னபோது நான் ஆனந்தப் பரவசமடைந்தேன்" என்றும் சொன்னார்.

கூப்பரைப்பற்றி ஒருதடவை மாக்ஸிம் கோர்க்கி இவ்விதமாகச் சொன்னார்: "ருஷியப் புரட்சிக்காரர்களின் வாழ்க்கை அனுபவக் குறிப்புக்களைப் படிக்கையில், கூப்பரின் எழுத்துக்கள் கல்விப் பயிற்சி அளிப்பதில் முதல் தரமானவை என்றும், அவையே தம்மிடத்தில் கௌரவம், தீரம், செயல், என்னும் உணர்ச்சிகளை வளர்த்தன என்றும் அவர்கள் அடிக்கடி பாராட்டியிருப்பதைக் காண்போம்."

ருஷியரிடையே கூப்பர் பெற்றிருந்த செல்வாக்கு புரட்சிக் காலத்திலிருந்து அதிகரித்துக்கொண்டேவந்தது. சோவியத் பிரசுராலயங்கள் அவர் நூல்களையெல்லாம் திரட்டி இரண்டு பதிப்புக்கள் வெளியிட்டனர். அன்றியும், ஜனரஞ்சிதமான அவர் நாவல்களில் 330,000 பிரதிகள் வெளியிட்டனர்.

பிறநாடுகளில்போலவே ருஷியாவிலும் ஹாரியட் பீச்சர் ஸ்டௌ எழுதிய " டாம் மாமாவின் குடிசை " மக்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. பழைய ருஷியாவிலும் சரி நவீன ருஷியாவிலும் சரி லட்சக் கணக்கான குழந்தைகள், பிறநாட்டுக் குழந்தைகளைப் போலவே அந்நூலைப் படிக்கையில் கண்ணீர்விட்டு அழுதனர். தலைமுறை தலைமுறையாக ருஷியர்கள் அந்நூலைத் தம் போராட்டங்களில், சிறப்பாக, விவசாய அடிமைகளின் விடுதலைப்போர்களில், தம் சிறந்த ராஜீயக் கருவியாகப் பயன்படுத்தினர். லியோ டால்ஸ்டாய் கூட தாமும் ஒரு ருஷிய டாம் மாமாவின் குடிசைபற்றி எழுத விரும்புவதாகச் சொன்னார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தையும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தையும் சார்ந்த ருஷியக் கவிதை மீது எட்கார் அல்லன் போவின் கவிகள் பதித்த செல்வாக்கை மிகைப்படுத்திக் கூறமுடியாது. கோன்ஸ்டாண்டின் பல்மோண்ட், போவின் எழுத்துக்களையெல்லாம் மொழிபெயர்த்தார். போவின் கவிதையைப் போலவே அவரது வசனமும் ருஷியாவில் வேர் ஊன்றியது. ருஷிய ஆசிரியர் பலரின் எழுத்துக்களில் அதன் செல்வாக்கு பதிந்திருக்கக் காண்போம். டாஸ்தோய்வ்ஸ்கியின் எழுத்துக்களில் அதைச் சிறப்பாகப் பார்க்கிறோம். நுட்பமான மன நூல் துறையில் டாஸ்தோய்வ்ஸ்கியின் முன் சூசகமாயும் ஆசானாயும் இருப்பவர் போதான் என ருஷியக் கவி வலேரி பிரியுசோவ் ஒருதடவை சொன்னார்.

ருஷியாவில் போவுடன் போட்டிபோடும் ஒரே அமெரிக்கக் கவி வால்ட் விட்மன். ஆனால், மெல்லமெல்லத்தான் ருஷியர் அவரை அறியலாயினர். வாலிப இலக்கிய விமர்சகரும் குழந்தைக்கவியுமான கோர்னே இவானோவிச் சுகோவ்ஸ்கி, விட்மன் கவிதைகளை ஆர்வமுடன் படித்துப் பரவசமடைந்தார். முதிய பருவத்திலும் அவர் இப்போது விட்மனின் நன்மொழிகளைப் பரப்பி வருகிறார்.

ஆனால், ஆரம்பத்தில் விட்மனை ருஷிய வாசகர்களுக்கு அறி முகப்படுத்துவது அபாயகரமானதொரு காரியமாக இருந்தது. 1905-ல் " பயனீர்ஸ் " என்ற கவிதை சம்பந்தமாக சுகோவ்ஸ்கி கைது செய்யப்பட்டார். அரசாங்கத்தின் அஸ்திவாரத்தையே குலைப்பதாக அவர்மீது குற்றம் சாட்டப்பட்டது. 1911-ல் மாஸ்கோ நியாயஸ்தலத்தின் உத்தரவின்மீது விட்மன் எழுதிய " புல்லிதழ் " என்ற கவிதைத் தொகுதியின் முழு பதிப்பு அழிக்கப்பட்டது. 1913-ல், கர்வோவ், ஒதெஸ்ஸா ரீகா வில்னு இவற்றின் போலீஸ் அதிகாரிகள் சொற்பொழிவுகள் ஆற்றி வந்த சுகோவ்ஸ்கியை அமெரிக்கக் கவி விட்மனைப் பற்றி யாதொன்றும் பேசலாகாதெனப் பணித்தனர்.

புரட்சிக்குப்பின் வெற்றிகொண்ட சோவியத்கள் ஜாக் லண்டனைப் போலவே வால்ட் விட்மனையும் தழுவினர். விட்மன் எழுதிய ' பயனீர் ' பாடல்கள் பல்லாயிரக்கணக்கில் அச்சிடப் பட்டு செஞ்சேனைக்காரர்களிடையேயும் சிவிலியன்களிடையேயும் வழங்கப்பட்டன. 1918-ல் பிட்ரோகிராட் சோவியத் விட்மன் பாடலை " எதிர்கால ஜனநாயகத்தின் கவிதை " என்ற தலைப் பில் வெளியிட்டது.

ருஷிய வாசகர்கள் மார்க் ட்வெய்ன், ஜாக் லண்டன் என்ற அமெரிக்க எழுத்தாளர் இருவரையும் பெரிதும் விரும்புகின் றனர். ருஷிய அரசியலில் பெருந்தலைவர்கள், கலைஞர், விஞ்ஞானிகள் ஆகியோரின் புத்தகாலயங்களிலும், குடியானவர் வசிக்கும் குடிசைகளிலும், ஒவ்வொரு கிராம அலமாரியிலும், ருஷிய தொழிற்சாலை புத்தகாலயங்கள் ஒவ்வொன்றிலும் அவர்களுடைய புத்தகங்கள் காண்கின்றன. சோவியத் ஆட்சி யின் முதல் 26 வருஷங்களில் மார்க் ட்வெய்னின் நூல்கள் அனைத்திற்கும் சிறந்த பதிப்பொன்றும், அவருடைய ஜன ரஞ்சிதமான நூல்களில் 30 லட்சம் பிரதிகளும் வெளியிடப் பட்டன. மகா யுத்தத்தின்போதும், சோவியத் பிரசுராலயங் கள் மார்க் ட்வெய்ன் நூல்களை வெளியிட்டுக்கொண்டே வந்தன.

செஞ்சேனே, செங்கப்பற் படைகளைச் சார்ந்த பிரசுர இலைகளும் பல பதிப்புகள் வெளியிட்டன.

மார்க் ட்வெய்னின் "கலவரஸ் கவுண்டியின் குதிக்கும் தவளை" என்ற கதையே முதன்முதலாக ருஷிய மொழி பெயர்ப்பில் "ஸ்டாக் எக்சேஞ்சு" என்ற பீட்டர்ஸ்பர்க் பத்திரிகையில் வெளிவந்தது. அக் கதையுடன் வெளி வந்த கட்டுரை யொன்று மார்க் ட்வெய்னின் குறைவற்ற ஹாஸ்யச் சுவையையும், உயிர்ததும்பும் கற்பனையையும், இயற்கையான உல்லாசத்தையும் பாராட்டியது. அது முதற்கொண்டு மார்க் ட்வெய்னின் கதைகள் ருஷியப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஒழுங்காக வெளிவந்தன.

ஜாக் லண்டன் ஒருவரே ருஷியாவில் மார்க் ட்வெய்னையும் மிஞ்சினார். ருஷியரிடையே வேறெந்த ஆசிரியரும் அவ்வளவு கொண்டாடப்படவில்லை. அவர் நூல்கள் யாவுமே ருஷிய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. நான் அவற்றை எல்லா இடங்களிலும் கண்டேன். ஆபீசர்கள் ஒருவர் பின் ஒருவராக அவற்றைப் படித்தனர். சோல்ஜர்கள் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து அந் நூல்களை வாசிக்கக் கேட்டனர். சோல்ஜர்கள் காட்டின இந்த ஆவல் லெனினிடமும் வெளிப்பட்டது. மரணப் படுக்கையில் கிடந்தபோது, அவர் மனைவி நதெஜ்தா குருப்ஸ்காயா அவருக்கு ஜாக் லண்டன் கதைகளைப் படித்தார். மனைவி படித்த மற்றவைகளில் சுவை காணாதவர் லண்டன் கதைகளைச் சுவாரசியமாகக் கேட்டார்.

யுத்த காலத்தில் ஜாக் லண்டன் முன்னையைவிட ஜனரஞ்சிதமானவர் ஆனார். ருஷிய கதாசிரியர்கள் அவர் நடையைப் பின்பற்றினர். உதாரணமாக, வாதிம் கோஜவ்நிகாவ் எழுதிய "மார்ச்-ஏப்ரல்" என்ற கதை ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் ஜாக் லண்டன் ரீதியிலேயே இருந்தது. அது, சோவியத் ஆபீசர் ஒருவனும் ரேடியோ ஆபரேட்டர் பெண் ஒருத்தியும் பின்புறமாகத் தாக்கி வந்த பகைவரிடையே பாரச்சூட்டில் இறங்கி வேவு பார்த்தும், நாசங்கள் விளைவித்தும் செய்த வீர

திரச் செயல்களைக் கூறுகிறது. ஸ்டாலினுக்கு இக்கதை மிகவும் பிடித்தது. அவர் உடனே அரசாங்க மாளிகையிலிருந்து போன் பண்ணி அந்த வாலிப ஆசிரியரைப் பாராட்டினார்.

அமெரிக்கா, ருஷியா ஆகிய இரண்டு நாடுகளுக்குமிடையே பழங்காலத்திலிருந்து பரஸ்பர அனுதாபம் மெல்லமெல்ல வளர்ந்துவந்திருக்கிறது. அமெரிக்க இலக்கியத்தில் ருஷியர் கொண்ட அக்கறை மேன்மேலும் பெருகிவந்துள்ளது. ஆனால், முதல் மகா யுத்தத்திற்குப் பின், பரஸ்பர பீதியும், சந்தேகமும், கண்டனமும் தோன்றலாயின.

ருஷியர்கள் ஆர்க்கேஞ்சலிலும் சைபீரியாவிலும் அமெரிக்கா குறுக்கிட்டதுபற்றி மிகவும் வருத்தமடைந்தனர். 1933 வரையில் அமெரிக்க அரசாங்கம் சோவியத்தை அங்கிகரிக்காம லிருந்ததுபற்றி ருஷியர் மனக்கசப்படைந்தனர். போல்ஷி விக்கர் ஜர்மனியுடன் தனியாகச் சமாதானம் செய்துகொண்டது, அயல்நாட்டுக் கடன்களைத் திருப்பித்தர சோவியத் மறுத்தது, அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் முதலாளித்துவத்துக்கு விரோதமாகப் பிரசாரம் செய்தது—இவையெல்லாம் பற்றி அமெரிக்கா தன் வருத்தத்தைப் பலமாக வெளிப்படுத்தியது.

பரஸ்பரக் குற்றச்சாட்டுகள், வருத்தங்கள் இவற்றின் புறப் புலனில் அப்டன் சிங்க்ளேர், சிங்க்ளேர் லூயிஸ், தியோடோர் டிரெய்சர் ஆகிய அமெரிக்க ஆசிரியர்கள் சோவியத் ருஷியாவில் ஜனரஞ்சிதமானவர்கள் ஆகினர். அவர்கள் அமெரிக்க சமூக நிலையைப் பலமாகத் தாக்குபவர். சமூகக் கருத்துடன் எழுதிய ஜான் டாஸ் பாஸ்ஸோஸ், லாங்க்ஸ்டன் ஹ்யூஸ், எர்ஸ்கின் கால்ட்வெல், ஜான் ஸ்டெயின்பெக், ரிச்சர்டு ரைட் ஆகியோரும் மேலே சொன்ன மூவருடன் விரைவிலேயே சேர்ந்துகொண்டனர்.

ருஷிய வாசகர்களின் மிகுந்த அன்புக்கு உரிய மார்க் ட்வெய்னுக்குப் பலமான போட்டியாக ஆனார் அப்டன் சிங்க்ளேர். புரட்சிக்கு நீண்டகாலம் முன்பே ருஷியாவில் சிங்க்ளேரை அறிவர். 1906-ல் ' தி ஜங்கில் ' என்ற நாவல் வெளியானதும்,

அதை மொழிபெயர்த்து ருஷியாவிலும் வெளியிடவேண்டுமென லியோ டால்ஸ்டாய் பலமாகச் சிபார்சு செய்தார். அதில், சிங்க்ளேர் அமெரிக்கத் தொழிலாளரின் தினசரி வாழ்க்கையை நன்கறிந்து சித்திரித்திருப்பதற்காக டால்ஸ்டாய் அவரைப் பாராட்டினுர். ஆனுல் அதே சமயத்தில் டால்ஸ்டாய் அவருடைய சமதர்மக்கருத்துக்களுக்காகக் குற்றுங் கூறினுர். அதிசயமாக, பல்லாண்டுகளுக்குப் பின், 1915-ல், லெனின் கூட இவ்விதமாகக் குற்றஞ்சாட்டினுர். "சிங்க்ளேர் உணர்ச்சியுள்ள சமதர்மவாதி ; கொள்கையின் புறப்புலன் அவரிடம் இல்லே. பிரச்னையை எளிய முறையில் விவரிக்கிருர். நெருங்கிவரும் யுத்தம் சம்பந்தமாக வெருண்டு, சமதர்மத்தில்தான் விமோசனத்திற்கான வழியைக் காண்கிருர்."

இவ்விதமிருந்தும், புரட்சிக்குப்பின், சிங்க்ளேரின் புத்தகங்கள் சோவியத் ருஷியாவில் ஏராளமாகப் பரவின. அவற்றில் பல, சிறப்பாக தி ஜங்கில் என்ற நாவலும், ஜிம்மி ஹிக்கின்ஸ் என்ற நாவலும், சமூக இயல், முதலாளித்வ சமூக அமைப்பு இவற்றில் ஆராய்ச்சி செய்யும் மாணவர் அனேவரும் கட்டாயமாகப் படிக்கவேண்டிய நூல்களாயின.

ட்ரெய்சரின் நாவல்களும் ஏராளமாக வெளியிடப்பட்டு நன்ருக விற்கின்றன.

இவர்களினின்று விலகி ஒரு தனி வகுப்பு போல நிற்பவர் எர்னஸ்ட் ஹெமிங்வே என்னும் பிரபல அமெரிக்க ஆசிரியர். இவர் சோவியத் வாசகர்களுக்கு, சிறப்பாக, அறிவாளிகளுக்கும் எழுத்தாளர்களுக்கும், ஒரு புதுக் காட்சியாகவே உள்ளார். இக்கால அயல்நாட்டு ஆசிரியர்களுள் இவருடைய நூல்களே மிக ஆவலுடன் படிக்கப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வருகின்றன. "இந்தச் சாவுமணி அடிப்பது யாருக்காக ?" என்னும் நூல் ஒன்றே, நான் அறிந்த வரையில், இன்னும் சோவியத் யூனியனில் வெளிவரவில்லே. அந்த நாவலில் சோவியத் ஆதிக்கம் பெற்ற கம்யூனிஸ்ட் தலைமைப்பற்றிப் பட்சமாக அவர் எழுதவில்லே. ஆயினும், சில பகுதிகள் நீக்கப்பட்டு நல்ல மொழி

பெயர்ப்பு ஒன்று பல்லாண்டுகளுக்கு முன்பே தயாரிக்கப்பட்டுள்ளது. அதை எழுத்தாளர் சங்க அங்கத்தினர் பலரும், பத்திரிகாசிரியர்கள், இலக்கிய விமர்சகர்கள், சாதாரண மக்களிற் சிலர் ஆகியோரும் படித்திருக்கின்றனர். அச்சில் வெளிவராவிடினும், அந்த நாவல் ருஷியாவில் ஒரு பரபரப்பை உண்டாக்கியிருக்கிறது.

எர்னஸ்ட் ஹெமிங்வே பற்றிப் பல விமர்சனக் கட்டுரைகள் ருஷியாவில் எழுதப்பட்டுள்ளன. சிறந்த சோவியத் விமர்சகருள் ஒருவரும் ஆங்கிலத்திலிருந்து மிக நன்றாக மொழிபெயர்க்கக்கூடியவருமான இவான் கஷ்கின் ஹெமிங்வே பற்றி நூலொன்று எழுதி முடித்திருக்கிறார். ஆனால் அது இன்னும் வெளிவரவில்லை. நாம் அறியக் கூடிய எதிர்காலத்தில் அது அநேகமாக வெளிவராது. கம்யூனிஸ்டாக இராத இக்கால அயல்நாட்டு ஆசிரியர் ஒருவரைப் புகழ்ந்து எழுதுவதானது அயலவர் ஆதரவைப் பெற அவர்கள்முன் இழிவாக நடந்து கொள்வது போலாகும் என்று ருஷியர் அர்த்தம் செய்கின்றனர். ஆனால், இளம் எழுத்தாளர் பலர் இக் கொடிய குற்றத்திற்கு ஆளாகியுள்ளனர். இன்றைய சோவியத் நாவலில் ஹெமிங்வே சம்பிரதாயம் ஒன்று ஆரம்பித்துள்ளது. 'இரவும் பகலும்', 'ருஷியப் பிரச்னை' என்ற நூல்களின் ஆசிரியரும், பிரதான சோவியத் சஞ்சிகையொன்றின் பிரதான ஆசிரியரும் எழுத்தாளர் சங்கத்தின் காரியதரிசியுமான கோன்ஸ்தாந்தின் சிமோனேவ்கூட இக் கோஷ்டியில் விருப்பமின்றி சேர்ந்திருக்கிறார்.

அமெரிக்காவின் சமூக ஊழல்களைச் சித்தரித்து அமெரிக்கரின் உணர்ச்சிகளைத் தூண்டி மனச்சாட்சி விழிப்படையுமாறு செய்யும் நூல்களே அமெரிக்க வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகச் சிலர் உறுதியாகப் பிரசாரம் செய்துவருகின்றனர். ஆயினும், அப்டன் சிங்க்ளெர், சிங்க்ளேர் லூயிஸ், தியோடோர் டிரெய்சர் போன்ற அமெரிக்க ஆசிரியர்கள் எழுதியுள்ள இத் தகைய நூல்கள் ருஷியர் அமெரிக்காவைப் பற்றி வழக்கமாகக் கொண்டுள்ள கருத்துக்களை முற்றும் மாற்றிவிடமுடியவில்லை.

ருஷியர் இன்னும் அமெரிக்காவை மானிடர் செய்த கைலாசம் என்றும் அமெரிக்கரை நேர்மையும் சுதந்திரமும் ஆனந்தமும் படைத்த தேவாம்சர்கள் என்றுமே கருதுகின்றனர். அமெரிக்க எழுத்தாளர் அதிகாரிகள் கூறுவதுபோலன்றி இவ்வளவு சுதந் திரமாக எழுதுவது ருஷியருக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. அமெரிக்காவின் இருண்ட அம்சங்களைப் படிப்பதினால் அவர்கள் அமெரிக்காவைக் கண்டிப்பது இல்லை. இந் நூல்கள், தங்க ளுடைய தொல்லிலக்கிய ஆசிரியர்கள் மக்களின் துன்பங்களை யும் நாட்டங்களையும் சித்தரித்ததுபோலவே அமைந்துள்ளன வென்றும் ஒரே மனிதத்தன்மையின் வெளிப்பாடுகளே என் றும் அவர்களுக்குத் தோற்றுவது சகஜம். இதைப்பற்றி அமெரிக்கா சந்தேகப்படவேண்டியதேயில்லை. ஏனெனில் சோவியத் எழுத்தாளர்களுடன் பல்லாண்டுகளாக நெருங்கிப் பேசியும், அவர்களின் உட்கருத்துக்களை அறிந்தும், புத்த காலயங்களில் இந் நூல்களைப் படிக்கும் ருஷிய வாசகர்கள் பதிவு செய்துள்ள தம் கருத்துக்களை ஆராய்ந்தும் உள்ள நான் இதுவே அவர்களின் உண்மையான மனோநிலை என்பதை அறிவேன்.

பகுதி எட்டு

ருஷியா பற்றிய கேள்விகளுக்குப் பதில்

அத்தியாயம் 21

மூவகைக் கேள்விகள்

நான் அமெரிக்காவினின்று வெளியேற்றப்பட்ட பின்னர், அமெரிக்காவின் பல பாகங்களில் பல கூட்டங்களில் சொற் பொழிவு ஆற்றியிருக்கிறேன். சோவியத் யூனியனைப் பற்றி நூற்றுக்கணக்கானவர்களிடம் பேசியும் இருக்கிறேன். எங்கும் என்னிடம் கேட்கப்பட்ட மிகப்பல கேள்விகள், இன்று அமெரிக் காவெங்கும் பகைநாடாக இருக்கக்கூடியதென கருதப்படு வதும் முன்பு நம் நேசநாடாக இருந்ததுமான ருஷியாவிடம் அதிசயத்தக்க அக்கறை ஏற்பட்டுள்ளதை வெளிப்படுத்துகின்றன. அமெரிக்காவுக்கும் சோவியத் ருஷியாவுக்கும் இடையே யுத்தம் மூளக்கூடும் என்ற உலகெங்கும் பரவியுள்ள கவலையையும் இக்கேள்விகள் காட்டுகின்றன.

கேள்விகளில் பல மூவகைப்படும் :

முதலாவது, யுத்தம். ருஷியாவோடு யுத்தம் தவிர்க்க முடியாததொன்றா ? ருஷிய அரசாங்கம் ஆயுதப்போர் ஒன் றைத் துரிதப்படுத்த முயன்றுவருகின்றதா ? அதைப்பற்றி ருஷிய மக்கள் என்ன நினைக்கின்றனர் ? அமெரிக்காவுக்கு விரோதமான ஒரு யுத்தத்தை அவர்கள் ஆதரிப்பாரா? அந்த பிரமாண்டமான முயற்சிக்கு சோவியத் தொழில்வன்மை ஆயத் தமாக இருக்கின்றதா ? நம்முடைய யுத்தசக்தியை சோவி யத் யுத்தசக்தியுடன் ஒப்பிடும்போது அது எந்த நிலையில் உள்ளது ?

இரண்டாவது, ஸ்டாலினைப்பற்றியும் சோவியத் யூனியனின் கொள்கைகள் யாவற்றையும் நிர்ணயிக்கும் ' பொலித் பீரோ ' வைப்பற்றியும் என்ன ? ஸ்டாலின் இறந்துவிட்டால் அது உள் நாட்டு வெளிநாட்டு நிலைமைகளை எங்ஙனம் பாதிக்கும் ?

அவரைச் சூழ்ந்துள்ளவர்களிடையே அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கான போராட்டம் நடைபெறுமா? கம்யூனிஸ்ட்களுக்கு விரோதமான கட்டுப்பாடான எதிர்ப்பு ஒன்று தோன்றுமா? கம்யூனிஸ்ட் கட்சி விலகி ஒழியுமா? சோவியத் யூனியன் தன் போக்குகளில் திருந்துமா?

இறுதியாக, ருஷியாவில் மக்களின் வாழ்க்கைத்தரம் எப் படியிருக்கிறது? இந்த சஞ்சலமான நிலைமையினால் அது எங்ஙனம் பாதிக்கப்பட்டிருக்கிறது? ருஷியர் முணுமுணுக் கின்றனரா? வாழ்க்கையின் சௌகரியங்களுக்குரிய பொருள் களுக்கும் மேலாக போக்குவரத்துக்கும் கனத்தொழிலுக்குமே முதன்மையளிக்கும் ஐந்து வருஷத் திட்டத்தை அவர்கள் ஆதரிக்கின்றனரா?

இக்கேள்விகளுக்கு விடையளிக்க முயல்வேன். முதலில் கடைசியாகச் சொன்ன கேள்விகளை எடுத்துக்கொள்கிறேன்.

ருஷியருக்கு உன்னதமான ஹாஸ்ய உணர்ச்சி உண்டு. தம் சரித்திர வரலாற்றில் நேர்ந்த பல கஷ்டங்களைச் சகிக்க அது அவர்களுக்கு உதவியாக இருந்துவந்திருக்கிறது. கவலை யளிப்பனவாயும் தியாகங்களுக்கு உட்படுத்துவனவாயுமுள்ள இந்த யுத்தபிற்கால நாட்களில் இந்த ஹாஸ்ய உணர்ச்சியே ஆதரவளிக்கும் முக்யாம்சமாக இருந்துவருகிறது.

வாழ்க்கைத்தரம் பற்றிய கதைகள்.

நான் புறப்படும் சமயம் சோவியத் தலைநகரில் பரவிய பல தமாஷ்களில், சோவியத் ருஷியாவில் வாழ்க்கைத்தரம் பற்றிய இரண்டு கதைகள் பிரதானமாக விளங்கின.

ருஷியனொருவன் அயலவன் ஒருவனிடம் இவ்விதமாகப் பெருமையடித்துக்கொண்டான்: "நடப்பிலுள்ள ஐந்து வரு ஷத்திட்டத்தின் இறுதியில், மூன்று பிரஜைகளுக்கு ஒன்று வீதம் நமக்கு ஆகாயவிமானம் கிடைக்கும். அடுத்த ஐந்து வருஷத்திட்டத்தின் இறுதியில், இருவருக்கு ஒன்றுவீதம் அது

வளர்ச்சியடையும். மற்றுமொரு ஐந்து வருஷத்திட்டத்தின் இறுதியில், நம் மகத்தான நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் ஒரு ஆகாயவிமானம் வீதம் உண்டாகிவிடும்."

" அவ்வளவு விமானங்கள் எதற்காக ? "

" ஏன ? தீப்பெட்டியொன்ருே, ஒரு சீப்போ, ஒரு ஜதை ஜோடு கட்டும் நாடாவோ வாங்கவிரும்புவதாக வைத்துக் கொள்ளுங்கள். இவையொன்றும் மாஸ்கோவில் கிடையாது. விமானத்தில் விருவிருவென்று ஏறிக்கொண்டு கோர்க்கி அல்லது ஒதெஸ்ஸாவுக்குப் பறந்துசென்று நீங்களே தீப்பெட்டி யையோ, சீப்பையோ அல்லது ஜோடு நாடாவையோ வாங்கிக் கொள்ளலாம்."

இரண்டாவது கதை ருஷியர் இருவருடன் சம்பந்தப்பட்டது :

" நல்லது, தோழா " என்கிருன் ஒருவன், " இந்நாட்களில் விஷயங்கள் போகிற போக்கைப்பார்த்தால் உறுதியளிப்பன வாகவே தோன்றுகின்றன. 1952-ம் வருஷத்திற்குள் நம்மிடம் அணுக்குண்டுகள் ஐந்து இருக்கும். அவற்றை ஐந்து பிரயாண உடுப்புப்பெட்டிகளில் போட்டு அமெரிக்கா சென்று, நியூயார்க், பிட்ஸ்பர்க், வாஷிங்டன், சிகாகோ, டெட்ராய்ட் ஆகிய ஐந்து ராணுவ முக்யமான நகரங்களில் வீசி அமெரிக்காவைப் பயமுறுத்திப் பணியவைத்துவிடலாம். அப்புறம் உலகம் நம் முடையதே ! "

" தோழா நீ சொல்வதெல்லாம் பிசகு," எனப் பதிலளித் தான் மற்றெருவன். " 1952-க்குள் ஐந்து பிரயாண உடுப் புப் பெட்டிகளைக்கூட நாம் உற்பத்திசெய்யமுடியாது."

சுருங்கக்கூறின், இதுவே வாழ்க்கைக்குரிய பொருள்களை வேண்டும் ருஷியன் விஷயமாகவும் அவன் வாழ்க்கைத்தர விஷயமாகவும் நடந்துகொண்டிருக்கிறது. இயந்திர சாதனங்கள், மக்களல்ல, முதன்மையாக நடக்கவேண்டிய விஷய ஜாப்தாவின்

உச்சியில் உள்ளது. போக்குவரத்து விஷயத்திலும் கனத் தொழில்கள் விஷயத்திலும் தீவிரமான இயக்கமொன்று நடந்து வருகையில் பாதரட்சைகள், ஜவளி, ரேடியோ, பிரயாண உடுப்புப் பெட்டிகள் ஆகிய விஷயங்களில் ஈடுபடுவதற்குப் போதிய உழைப்பாளிகளோ, மூலப்பொருள்களோ கிடையாது.

சோவியத் பிரஜையின் வாழ்க்கைத்தரம் எப்போதுமே உயர் தரமாக இருந்ததில்லை. யுத்த காலத்தில் அது மிகத் தாழ்ந்துவிட்டது. அதுமுதல் நிதானமாக உயர்ந்துவருகிறது. 1950-க்கு முன் யுத்தத்திற்குமுந்திய நிலையை அடையமுடியாது.

1947, டிசம்பரில்தான் வாழ்க்கைத்தரத்தின் மதிப்பு மிகுந்த உயர்வடைந்தது. நாணயத்தின் மதிப்பு குறைக்கப் பட்டது. கூலி ஒரே நிலையில் நின்றது. ரேஷன் முறை நிறுத்தப்பட்டது. விலைவாசிகள் தீவிரமாகக் குறைக்கப்பட்டன. இவற்றால் உடனடியாக ஏற்பட்ட பலன்கள் இரண்டு. சேமிப் புக்கள் துடைக்கப்பட்டன. வாழ்க்கைச்செலவு சட்டென்று குறைந்தது. முதல் சொன்ன பலன் பலமான ஒரு அடி. இரண்டாவதனால் ரூபிலின் வாங்கும்சக்தி அதிகரித்தது. ஆகவே, ருஷியப் பிரஜை நடைமுதல் வருமானத்தைக்கொண்டு ஜீவிக்க முடிந்தது. அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தில் உண்மையான முன்னேற்றம் ஏற்பட்டது. உணவுக்காக அதிக மாகவும் பிற தேவைகளுக்காகக் குறைவாகவும் செலவழிக்கப் பட்டது. நாடக அரங்குகள் பாதி காலியாய்விட்டன. அதிக விலைக்கு விற்றுவந்த சிற்றுண்டிச்சாலைகள் செம்மையாக நடக்க வில்லை.

1948, கோடையில், விநியோகத்தில் நெருக்கடி ஏற்பட்டது. மாஸ்கோவில் ரொட்டிக்காகவும் சர்க்கரைக்காகவும் மக்கள் மணிக்கணக்காக நீண்ட கியுவரிசையில் நின்றனர். ஆனால் சப்ளை போதிய அளவு இருந்தது. போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்ததே கஷ்டங்களுக்குக் காரணம். அதிகார வர்க்கத்தினருக்குச் சலுகைகளும் பிரத்யேக உரிமைகளும் உண்டு. அவற்றை அவர்கள் தொடர்ந்து பயன்படுத்தினர்.

சாதாரண மக்களுக்குக் கிடைக்காத உணவுவகைகளும் உபயோகத்திற்கான பிறபண்டங்களும் அவர்களுக்கு முன்போல கிடைத்தன. சில கடைகள் அவர்களுக்கு மட்டுமே வழங்கின. அன்னியர்களுக்கு வழங்கின பண்டசாலைகளில் ருஷியருக்குக் கிடைக்காத சாக்லேட், பழம், வெள்ளை ரொட்டி முதலியன தடையின்றிக் கிடைத்தன. அன்னியர்கள் சொற்ப சுங்கவரி செலுத்தி இஷ்டமான பொருள்கள் இறக்குமதி செய்ய உரிமை பெற்றிருந்தனர்.

ருஷியன் ஒருவனின் சராசரி வருமானத்தை மதிப்பிடுவது கஷ்டமானதொரு வேலையாகும். இது விஷயமாக அதிகார பூர்வமான புள்ளிவிவரங்கள் இல்லை. மாதம் ஒன்றுக்கு 500 முதல் 750 ரூபில் வரையிலும் இருக்கலாமெனச் சில உத்தேச மதிப்புகள் உண்டு. உற்பத்தியானது வேலை செய்த அளவு கூலி என்ற அடைப்படையில் நடப்பதால், சில வேலையாட்கள் மாதம் ஒன்றுக்கு 2,500 முதல் 5,000 ரூபில் வரையில் சம்பாதிக்கலாம்; ஏன்? சம்பாதிக்கத்தான் செய்கின்றனர். மற்றவருடைய வருமானம் 100 முதல் 150 ரூபில் போல குறைவாக இருக்கலாம். பலர் தம் நிலையான வேலையோடு ஒழிந்த நேரத்தில் சின்னஞ்சிறு வேலைகள் செய்து ஊதியம் பெறுகின்றனர்.

சோவியத் யூனியனில் ஒவ்வொருவரும், வீட்டைப் பரிபாலிக்கும் மனைவியுங்கூட வேலைசெய்கின்றனர். இதனால் தனிநபரின் வருமானத்தைவிட குடும்பத்தின் வருமானம் அதிகம். குடிக்கூலி முதலிய குடும்ப சௌகரியத்திற்கான சர்வீஸ்களுக்காகச் செலவுசெய்யவேண்டியது சொற்பமே. இதனாலும் வருமானத்தின் மதிப்பு அதிகரிக்கிறது. எரி பொருளாகப் பயன்படும் நிலக்கரி வாயு, மின்சாரம், டெலிபோன் சர்வீஸ்கள் அமெரிக்காவைப்போல சாதாரணமாகக் கிடைப்பதில்லை. கிடைப்பவை சொற்ப விலைக்கே கிடைக்கின்றன. நற்சமயம் தேவைக்குரிய சப்ளை இல்லை. ஆனால் புது வசதிகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

அரசாங்கம் பலவகையான உதவிகளேயும் சர்விஸ்களேயும் அளிக்கிறது. நோய், பிரசவம், இவைகளுக்குரிய லீவுகள், சம்பளத்துடன் வருஷாந்தர லீவுகள், போனஸ்கள், வைத்திய உதவி, தொழிற்பயிற்சி, கல்வி, குழந்தைகளுக்கு ஆரம்ப நர்சரி கல்வி, பெரிய குடும்பங்களுக்கு அலவன்சு—இவையெல்லாம் உண்டு. இந்த சர்வீஸ்கள் சோவியத் பிரஜையின் பண சம்பாத்தியத்துடன் சேர்ந்து 38 சதவீதம் பலன்களே அதிகரிக்கின்றன.

மானேஜர்கள் எனப்படும் நிர்வாக வகுப்பினர் மாதம் ஒன்றுக்கு 400 முதல் 3,000 வரையில் நிலேயாகப் பெறுகின்றனர். உற்பத்திவேலேயில் ஈடுபட்டுள்ள தொழிலாட்கள் ஆலே மானேஜர்களேவிட அதிகமாகச் சம்பாதிக்கமுடியும். ஆனால், மானேஜர்கள் தங்கள் பதவி காரணமாக ரேஷன் முறையின் கீழ் இதரர்களுக்குக் கிடைக்கமுடியாத குறைந்த விலேயில் வாங்கிக்கொள்ளலாம். இன்றுங்கூட அவர்களுக்கே முதன்மையாக நல்ல வீடுகள் அளிக்கப்படுகின்றன. ருஷியாவில் மானேஜர்களுக்காகவும் இஞ்சினியரிங் சிப்பந்திகளுக்காகவும் ஆலேகள் நடத்தும் சிற்றுண்டிச்சாலேகள் தொழிலாட்களுக்கும் கிடைப்பதைவிடச் சுத்தமாயும் நல்ல சப்ளேயுடையனவாயும் உள்ளன.

வாங்கும்சக்தி அதிகரித்திருப்பினும், ருஷியர் இன்றியமையாத உணவு, குடியிருப்பு ஆகியவற்றிற்கு அதிகமாக வாங்கிக்கொள்ளமுடியாது. துணிமணிகள், தமாஷாக்கள் இவைகளுக்காகச் செலவு செய்வதற்குச் சொற்பமே மிஞ்சும். ஆயினும், சில மாதங்களாக, ஜவளி, இரும்பு சாமான்கள், பீங்கான், மட்பாண்டங்கள் கடைகளில் வெளிக்காட்டப்படுகின்றன. வாங்குகிறார்களோ இல்லேயோ, இவை கிடைக்கவாவது செய்கின்றன.

சுருங்கக்கூறின், இன்று ஒவ்வொரு ருஷியனுக்கும் செழிப்பான உணவு இல்லாவிடினும், சாப்பிடப்போதுமானது கிடைக்

றது. புலாலும் வெண்ணெய்யும் வாரத்திற்கு இரண்டு தடவை வாங்கிக்கொள்ளலாம். பரம ஏழைகளும் போது மான ரொட்டியும், உருளைக்கிழங்கும், காய்கறியும், சர்க்கரை யும் வாங்கிக்கொள்ளக்கூடும்.

நகரில் வசிப்போர் தம் சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்ள வோ வாங்கிக்கொள்ளவோ முடியும். ஐந்து அறைகளுக்கு அதிகமில்லாமல் இரண்டுமாடிவீடு கட்டிக்கொள்ள 1948-ல் செய்யப்பட்ட ஆக்ஞையொன்று அனுமதிக்கிறது. தனிச் சொத்து வாங்கும் உரிமையும் பிதிரார்ச்சிதமாகப் பெறும் உரிமையும் உண்டு. அரசியல் அமைப்புச்சட்டத்தின்படி பிரஜைகளுக்குத் தனிச்சொத்துரிமை உண்டு.

சோவியத் வரலாற்றிலேயே முதல் தடவையாக சாதாரண சோவியத் பிரஜையும் மோட்டார்கார் சொந்தமாக வாங்கி வைத்துக்கொள்ளக்கூடும். அரசாங்கப் பண்டசாலைகளும் கூட் டுறவுப் பண்டசாலைகளும் அலங்காரப்பூச்சுகள், வீட்டுசாமான் கள், குளிர்ச்சிப்பெட்டிகள், ரேடியோக்கள், கிராமபோன்கள், சைகில்கள், மோட்டார் சைகில்கள் ஆகியவற்றை வெளிக்காட்டு கின்றன.

வாழ்க்கைத்தரம் நிதானமாக உயர்ந்துவருகிறது. தொழி லுற்பத்தியானது அமெரிக்காவுக்கு சரிசமானமாக இராவிடி னும் ஒப்பிடும்படியாகவேனும் இருக்கவேண்டும் என்ற லட் சியம் ருஷியரின் முன்னிலையில் வைக்கப்பட்டு ஆசை தூண்டப் படுகிறது. படிப்படியான திட்டப்படி இந்த லட்சியம் 1960-க் குள் சித்தியடையவேண்டும். அதுவரையில் சோவியத் பிரஜை பல சௌகரியங்களின்றி இருக்கநேரும். முதலில் அவன் பெரிய விஷயங்களில் தொடர்ந்து மனத்தை நிலை நிறுத்து வான். ஒருகால் 1960-ல் அமைக்க அவன் உதவிவரும் பிரமாண்டமான தொழில் ஸ்தாபனம் பாத்திரங்களைக் கழுவும் இயந்திரங்களையும் உடுப்புப்பெட்டிகளையும் செய்வதில்கூட தன் கவனத்தைச் செலுத்தலாம். அதுவரையில் கடின

மாக உழைப்பதும், முணுமுணுத்துக்கொள்வதும், வேடிக்கை யாகப் பேசுவதுமே அவன் செய்யக்கூடியவையாவும்.

ஹாஸ்யச்சுவைக்கு விலங்கு.

'குரோகோடைல்' என்பது ருஷியாவின் ஒரே ஹாஸ்யப் பத்திரிகையாகும். சோவியத் தினசரி வாழ்க்கையில் காணும் குறைபாடுகளை அது இலேசாகப் பரிகசித்துவந்தது. மேலை நாட்டு 'பூர்ஷுவா' பண்பாடுகளில் குற்றங்குறைகள் காண்பதி லும் அதன் கொள்கைச் சூன்னியம், முட்டாள்தனங்கள் ஆகிய வற்றை அம்பலப்படுத்துவதிலும் தன் ஆற்றல்களையும் கவ னத்தையும் செலுத்துமாறு அது அரசாங்கத்திடமிருந்து கட் டளை பெற்றது. அதிகாரிகள் சோவியத் ஹாஸ்யச்சுவைக்கு விலங்குபோடுகின்றனர்.

ஹாஸ்யச்சுவையை வெளியிடுவதற்கான மற்றும் இரண்டு சாதனங்கள் மாஸ்கோ சர்க்கஸ்களும் பொம்மலாட்ட அரங்கு களும் ஆகும். கரந்தாஷ் விதூஷகனுக்கு தன் சர்க்கஸ் வேடிக்கைகளில் மேனாட்டினரைப் பரிகசிப்பதில் கவனஞ் செலுத்துமாறு 'ஆலோசனை' கூறப்பட்டது. உலகிலேயே மிகச் சிறந்த பொம்மலாட்டக்காரர் எனப்பெற்ற செர்ஜை ஒப்ராத் ஜாவும் தப்பவில்லை. அவர் மாஸ்கோவில் தரைக்கீழ் செல்லும் ரயில்பாதையின் குட்டை வெளிப்படுத்தினார். அவர் பொம்மைப் பாட்டில் இரண்டடிகள் வருமாறு :

"அதிசயமான மெட்ரோ ஒன்று நமக்குண்டு
ஆனால் அம்மெட்ரோவில் நாம் ஏறத்தான் முடியாது."

ருஷிய அரசாங்கம் இந்த ஹாஸ்யத்தை விரும்பவில்லை. பொம்மைகள் இனி மெட்ரோவை நகைப்பதில்லை.

அத்தியாயம் 22

ஒரு கட்சியின் சர்வாதிகாரம்

ஸ்டாலினின் உடல்நிலை பற்றிய கேள்விகளையே என்னை அதிகமாகக் கேட்கிறார்கள். வேறெந்த கேள்விகளும் அவ்வளவு அடிக்கடி கேட்கப்படுவதில்லை. இது விநயமாகவும் கவலையாலும் கேட்கப்படும் கேள்வியல்ல என்பது வெளிப்படை. சோவியத் தலைவர் இறந்துவிடுவதனாலோ அல்லது பொது வாழ்க்கையினின்று விலகிவிடுவதனாலோ ருஷிய மக்கள் கண் திறக்கப்படுவர் என்ற நம்பிக்கை அக்கேள்வியில் உள்ளடங்கியிருக்கிறது. அவர்கள் ஜனநாயக ஒளி காண்பர். யுத்த பயம் நீங்கும். அதன்பின் நாமனைவரும் சந்தோஷமாக வாழ்வோம்.

சோவியத் தலைவர் பற்றிய இக்கருத்து உண்மை நிலைக்கு அப்பாற்பட்டதாகும். சோவியத் யூனியனில் ஸ்டாலினுக்கு உள்ள மதிப்பு அமோகமானது என்பதும் அவர் பிரயோகிக்கும் அதிகாரம் மகத்தானது என்பதும் உண்மை. நாடு முழுவதும் எத்தகைய விஷயத்திலும் அவரது செல்வாக்கு உணரப்படுகிறது என்பதும் உண்மை. ஆனால் சோவியத் யூனியன் ஒரு தனி மனிதனின் சர்வாதிகாரமன்று. குறித்த சமூக, ராஜீய, பொருளாதார கொள்கைகளையுடையதும், விரிவானதும் சிக்கலானதுமான திட்டமொன்றை அனுசரித்துவருவதுமான ஒரு ராஜீயக்கட்சியின் சர்வாதிகாரமே அது.

அக்கட்சியில் அறுபதுலட்சம் அங்கத்தினரும் உதவியாளரான ஒரு கோடி வாலிப கம்யூனிஸ்ட்களும் உள்ளனர். அவர்கள் மூலமே உலகில் ஆறில் ஒரு பகுதியான நாட்டில் வதியும் இருபதுகோடி மக்கள் வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தின் மீதும் அக்கட்சி ஆதிக்கம் செலுத்தி ஆளுகின்றது. அன்றியும்,

அமானுஷ்ய தேர்ச்சியுடைய அக்கட்சியின் இயந்திரம் நாட்டின் சேனை, ரகசிய போலீஸ், தொழில், விவசாயம் முதலிய யாவற்றின்மீதும் கட்டுப்பாடுசெலுத்துகிறது.

ருஷியாவின் ஒரே கட்சியாயும், ஆளும் கட்சியாயும் இருப்பினும், கம்யூனிஸ்ட் கட்சி சோவியத்தின் அதிகாரபூர்வமான அரசாங்கமாகாது. அரசாங்கத்துக்கு சுப்ரீம் சோவியத் என்ற உயரிய பார்லிமெண்ட் ஒன்றும், மந்திரி சபை ஒன்றும், பிரதம மந்திரி ஒருவரும் உண்டு. கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தனி ஸ்தல 'செல்கள்' என்ற அரசியல் ஸ்தாபனங்களும், அகில யூனியன் காங்கிரசும், அதன் மத்யக்கமிட்டியும், 'பொலித் பீரோ' 'ஆர்க்பீரோ' என்றவை அடங்கிய ஒரு காரியாலயமும் அதன் பொதுக்காரியதரிசியும் உண்டு. ஸ்டாலின் சோவியத் யூனியனின் பிரதமரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக்காரியதரிசியும் ஆவர். அரசாங்கத்தின் முக்யமான பதவிகள் யாவற்றையும் கட்சி அங்கத்தினர்களே வகிக்கின்றனர்.

இன்று கட்சி செய்யும் தீர்மானமொன்று நாளை தானாகவே சோவியத் சட்டம் ஆகிறது.

கம்யூனிஸ்டின் லட்சணங்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியினன் கண்டிப்பானவன். அவனை எளிதில் திருப்தி செய்யமுடியாது. கட்சி அங்கத்தினனாக விரும்புவோன் முதலில் குறித்த வருஷத்திற்கு 'அபேட்சகன்' ஆகிறான். அக்காலத்தில் அவன் 'ராஜீய இலக்கண' த்தில் செய்யும் ஆராய்ச்சிகளும் அவனுடைய வாழ்க்கைமுறையும் ஆழ்ந்து பரிசிலனை செய்யப்படுகின்றன. கட்சியின் கமிட்டியொன்று அவனைப் பரீட்சைசெய்து, தீட்சைகாலத்தின் இறுதியில் அங்கீகரிக்கும்போது, அவனுடைய நேரம், திறமை, ஆற்றல் ஆகிய யாவும் கட்சியின் சேவைக்கு உரியனவாகின்றன. கட்சி அவனுக்கு என்ன கட்டளையிடுகிறதோ அதை அவன் செய்தாகவேண்டும்; அவனை எங்கே அனுப்புகிறதோ அங்கே போயாகவேண்டும். தனக்குரிய வேலையில் அமர்ந்தும், எதே

னுமொரு வகையான சமூக சேவையில் தீவிரமாக ஈடுபட்டும் தன் சோஷலிஸ்ட் தாய்நாட்டுக்குப் பக்திசெலுத்துவான் எனக் கட்சி எதிர்பார்க்கிறது. தான் வாழும் அல்லது வேலே செய்யும் மக்களின் நலனுக்கான விஷயங்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டும் அண்டை அயலிலுள்ள குடும்பங்களே ஒழுங் காகச் சென்றுபார்த்தும் அவர்களுடன் உலக விவகாரங்களில் சர்ச்சை நடத்தியும், சோவியத் யூனியனே எதிர்நோக்கியுள்ள வேலைகளே அவர்களுக்கு விளக்கியும் வரவேண்டும்.

தனி அங்கத்தினன் கட்சிப்பிரசாரம் செய்யப்புறப்படுமுன், முதலில், கட்சியின் கொள்கை, தந்திரங்கள், அபிவிருத்திகள் ஆகியவற்றை அறியவேண்டும் என்பதைக் கட்சி உணர்கிறது. இதன் பொருட்டு கட்சியானது விரிவானதொரு கல்விமுறையை ஆதரித்து நடத்துகிறது. ஆரம்ப நிலேயிலுள்ளவர்க்கு ராஜீய இலக்கணப்பள்ளிகள் உள்ளன. கம்யூனிஸ்ட் சர்வகலாசாலே களும் ஆராய்ச்சிக்கழகங்களும், பிரசாரத்தையே தம் நோக்க மாகக் கொண்டவர்க்கும் உயரியகட்சி உத்தியோகஸ்தர்களுக் கும் செமினூர் கோஷ்டிகளும் வாசகத்திட்டங்களும் உண்டு. திறமையும் புத்திசாலித்தனமும் வாய்ந்த அங்கத்தினர்களுக் குத் தலைமைவகிப்பதற்கும் நிர்வாகத்தை நடத்துவதற்கும் உரிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்விதமாக அவர் கள் உயர்பதவி அடைய வழிகள் உண்டு.

கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களுக்குக் கவர்ச்சிகரமான சௌகரியங்கள் அளிக்கப்படுகின்றன. குடியிருக்க இடம், அதிக உணவு, நல்ல உடைகள், உதவிக்கொரு காரியதரிசி, மோட்டார்காரின் உபயோகம், டிரைவர் இவையாவும் பெரிய உத்தியோகத்துடன் வருகின்றன. கட்சி அங்கத்தினராக இருந் ததால்தான் அவ்வுத்தியோகம் கிடைத்திருக்கிறது. ஆனல், அங்கத்தினர் என்ருல் அவர்கள் தியாகமும் செய்யவேண்டிய வர்கள். கட்சி கேட்கும்போதெல்லாம் சொந்த சுகம், சௌ கரியம், ஒன்றின்மீதுவிட மற்ருென்றின்மீது அதிக விருப்பம் ஆகியவற்றையெல்லாம் கைவிட்டுவிடவேண்டும். கம்யூனிஸ்ட்கள்

அடிக்கடி தமக்குப் பிடிக்காத, கடினமான, அபாயமான வேலைகளைச் செய்யவேண்டிவரும். நிலங்கள் பொதுவுடைமையாக்கப்பட்டபோது, கோபங்கொண்ட குடியானவரிடம் நேருக்கு நேராக நின்று சமாளிக்க அனுப்பப்பட்டான். யுத்தத்தின்போது உள்நாட்டு முனையில் யுத்த முயற்சிக்கான வேலைகளை இரண்டத்தனை அதிகமாகச் செய்து உதவவேண்டியவனாக இருந்தான். யுத்தகளத்தில் அபாயமான தாக்குதல்களை நடத்தக் கம்யூனிஸ்ட்கள் அழைக்கப்பட்டனர். கம்யூனிஸ்ட்களிடையே பெருநஷ்டங்கள் ஏற்பட்டதால், சோல்ஜர்களே எளிதில் இகட்சியைச் சேரமுடிந்தது. யுத்தத்திற்குச் செல்லு முன், வாழ்ந்தால் கம்யூனிஸ்ட்களாக வாழவிரும்புவோம் என்றும், வீழ்ந்தால் கம்யூனிஸ்ட்களாக மடியவிரும்புவோம் என்றும் அவர்கள் மனுக்களில் கையெழுத்திடமுடிந்தது. யுத்த முதலாண்டில் 752,000 பேர் கட்சியில் சேர்ந்திருந்தனர். அவர்களுக்குப் போதிய அரசியல் போதனையில்லாததால், அவர்களிற் பெரும்பாலோர் தகுதியற்றவர் என முடிவுசெய்யப்பட்டது. மெல்லமெல்ல, பரிசீலனை, பரீட்சை இவற்றின் மூலம் கட்சியானது தகுதியற்றவரை விலக்கியது.

தன் சொந்த அபிப்பிராயத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்பதே கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினரிடம் கேட்கப்படும் பெருந்தியாகமாகும். சொந்த அபிப்பிராயம் கட்சியின் அபிப்பிராயத்திற்குத் தவறாது இணங்கியாகவேண்டும். தனியொருவன் எவ்வளவுதான் புத்திசாலியாக இருந்தாலும், கட்சியின் திட்டத்தை அலட்சியம் செய்து தன் சுயகருத்தின்படி நடக்க முடியாது. அங்ஙனம் நடந்தால் அவன் கட்சியின் நல்லெண்ணத்திலும் தயையிலும் இருக்கமுடியாது. சமூக சிந்தனை, கலை, விஞ்ஞானம், இவையாவும் அதிகாரபூர்வமான கம்யூனிஸ்ட் கொள்கையைப் பிரதிபலிக்க வேண்டும்.

“ பரிசுத்தம் ”

கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்துவிடுவதைவிட அதில் நீடித்து இருப்பதுதான மிகவும் கஷ்டம். கட்சியினரால் ஏற்கப்படும்

ஜெனடிக்ஸ் கொள்கையை ஏற்க விரும்பாவிடின் கட்சியினின்று வெளியேற்றப்படலாம். குடி, மற்ற இனத்தவருடன் அசூயை காட்டுதல், அன்னியருடன் பழகுதல் ஆகியவையும் வெளி யேற்றப்படுவதற்குரிய காரணங்களாகலாம். இங்ஙனமாகக் கட் சியானது குறித்த காலங்களில் 'பரிசுத்தம்' செய்யப்படும் போது, கட்சி அங்கத்தினர் பரிசீலனைக் கமிட்டியின்முன் ஆஜ ராகி தன் சிவப்பு அங்கத்தினர் கார்டை சமர்ப்பித்துவிடுகிறான். பிறகு பரீட்சை செய்வோரின் முன் நின்று தன் வரலாற்றைக் கூறி, ஏன் அக்கார்டை மீண்டும் தன்னிடம் தந்துவிடவேண்டும் என்பதற்குத் தகுந்த காரணம் காட்டுவான். கமிட்டியினர் திருப்தியடையாவிடில் கட்சி அங்கத்தினன் பதவியிலிருந்து விலக்கப்படுகிறான். ஆண்டுதோறும் இங்ஙனமாக ஆயிரக் கணக்கானவர் விலக்கப்படுகின்றனர். கட்சி மிகக்கடுமையான பிரமாணங்களை விதிக்கிறது. அவற்றின்படி ஒழுகத் தவறுகிற வர்களை விரைந்து வெளியேற்றுகிறது. கட்சியின் வலிமை வெறும் எண்ணிக்கையில் இல்லை. அங்கத்தினர் தொகை யைப் பன்மடங்கு எளிதில் பெருக்கிவிடலாம். யுத்தம் போன்ற கஷ்டமான காலத்தில்தான் தடைகள் தளர்த்தப்படுகின்றன. கூடிய சீக்கிரத்தில் தகுதியற்றவர்களையும் கட்டைக் குலைப்பவர் களையும் களைந்தெறிய முயற்சிகள் யாவும் செய்யப்படுகின்றன.

இங்ஙனம் தன் அங்கத்தினரைக் கவனமாகத் தேர்ந்தெடுப்ப தாலும், அவர்களுக்குக் கடுமையான போதனைகள் அளிக்கப் படுவதாலும், இரும்புப்பிடிபோன்ற உறுதியான கட்டுப்பாட்டு களை விதிப்பதாலுமே கம்யூனிஸ்ட் கட்சி இன்று சோவியத் யூனியனில் மிகவும் சக்திவாய்ந்த அம்சமாக விளங்குகிறது. அதுவே அன்னியநாட்டுக் கொள்கைமுதல் செஸ்விளையாட்டுப் பந்தய தேதி வரையில் யாவற்றையும் நிர்ணயிக்கிறது. கம் யூனிஸ்ட் கட்சிக்கும் ருஷிய அரசாங்கம், செஞ்சேனை, அல்லது ரகசிய சர்விஸ் ஆகியவற்றிற்கும் இடையே பெரிய அளவில் போராட்டமோ, பொருமையோ இருக்கிறதென நம்புவது தவ றாகும். இவையாவும் சோவியத் யூனியனின் உண்மையான சர்வாதிகாரியான கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கங்களேயாகும்.

ஸ்டாலின் ஒருசமயம் மிகத் தெளிவாக இங்ஙனமாகச் சொன்னார்: "கட்சியினின்று வழிகாட்டும் கட்டளைகள் வராமல் நம் சோவியத்களினாலோ பிற ஜானஸ்தாபனங்களாலோ எந்த முக்கியமான ராஜீயப் பிரச்னையோ ஸ்தாபனத்திற்குரிய பிரச்னையோ முடிவுசெய்யப்படுவது கிடையாது."

"பொலித் பீரோ"

சோவியத் யூனியனில் எங்கேயாவது அமெரிக்காவிலுள்ளதைப்போல சுதந்திரச்சிந்தனையோ, சுதந்திரப்பேச்சோ இருக்குமாயின், அது ஓரளவு கம்யூனிஸ்ட் கட்சியின் உச்சியிலுள்ள "பொலித் பீரோ" வில்தான் உண்டு. பொலித் பீரோவில் சாதாரணமாக பதினன்கு பேர் இருப்பர். அவர்களே சோவியத் யூனியனின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் யாவற்றையும் உருப்படுத்துவர். கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி என்ற தோரணையில் இந்த உயர்காபினெட் சபைக்குத் தலைமை தாங்குகிறவர் ஸ்டாலின். ருஷியாவில் இது ஒன்றே உண்மையான ஜனநாயக ஸ்தாபனமாகும். அங்கத்தினர் அனைவரும் தம் மனத்திலுள்ளதைத் தாராளமாக வெளியிடலாம். சர்ச்சையிலுள்ள கொள்கைகள் யாவும் தாராளமாக விவாதிக்கப்படலாம். நான் பார்த்துப் பேசிய ருஷியர் இவ்விதமாகவே கருதுகின்றனர்.

ஆயினும், கூட்டங்கள் அரசாங்க மாளிகையில் தாழ்ப்பாளிட்ட அறைகளிலேதான் நடக்கின்றன. ருஷியாவுக்கு உள்ளேயோ வெளியேயோ இருக்கும் எவரும் இக்கூட்டங்களில் நடப்பதைச் சரியாகக் கூறமுடியாது. பலவகை மனப்போக்குடையவர் ஒருவரோடொருவர் மோதிக்கொள்ளக்கூடிய விவாதம் முடிந்ததும் ஸ்டாலின் விவாதத்தைச் சுருக்கமாகக் கூறுவார். அவர் பெரும்பாலோருடனேயே வழக்கமாகச் சேருவார் என்று கருதப்படுகிறது. பொலித் பீரோ கூட்டங்களில் சில தடவை ஸ்டாலினுக்கு விரோதமாக வோட் செய்யப்படுமென்றும், ஸ்டாலின் பெரும்பாலோரின் தீர்ப்புக்கு விரோதமாகச் செய்வதேயில்லை என்றும் பல ருஷியர் நம்புகின்றனர்.

ஸ்டாலினுக்குப் பின்

ருஷியா கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்படுவதால், ஸ்டாலின் இறந்தாலும் சரி, அல்லது பொது வாழ்விலிருந்து விலகினாலும் சரி, ருஷியாவின் கொள்கையில் திடுமென மாறுதலொன்றும் ஏற்படாது. பொலித் பீரோ சோவியத் கொள்கைகளை வழி காட்டித் தொடர்ந்து நடத்தும். ஏகமனதாகப் போகவேண்டும் என்ற விதி இருப்பதால், பேராசை திடுமென முன்னுக்கு வருவது தடைபடும். அப்படி எவரேனும் முளைத்தாலும் ஸ்டாலினைப்போல அது மெல்லமெல்ல நிதானமாகவே வரும்.

ருஷியர் பலரின் அபிப்பிராயப்படி ஆந்திரே ஜத்னேவ் ஸ்டாலினுக்குப் பின் அவர் வகித்த கம்யூனிஸ்ட் கட்சி பொதுக்காரியதரிசிப் பதவிக்குப் பொறுக்சப்பட்டிருந்தார். ஆனால் அவர் 1948 ஆண்டில் இறந்தார். காலியிடத்தைப் பூர்த்திசெய்யக்கூடிய எவரும் பொலித் பீரோவில் இல்லை. ஸ்டாலினும் பொலித் பீரோவும் இரண்டாண்டுகள் அவரைப் பிற்காலத்தலைவராக ஆக்குவதற்கு உரியதைச் செய்துவந்தனர். மார்ஷல் திட்டத்தின்மீது போர்தொடுத்த கொமின்பாரத்தைச் சிருஷ்டித்ததும், சமீபத்தில் கொள்கைகளை வெளிப்படுத்தும் பேச்சுக்களைச் செய்ததும் ஜத்னேவ்தான். கட்சிக் கட்டுப் பாட்டை நிலைநிறுத்தினவரும், சோவியத் எழுத்தாளர்கள் கலைஞர்கள் இசைவாணர் ஆகியோரை கம்யூனிஸ்ட் கொள்கை யின் போக்குப்படி திட்டப்படுத்தியவரும் அவரே.

ஸ்டாலின் ஜத்னேவிடம் விட்டுச் செல்ல எண்ணிய இடத் திற்கு யார் வருவரோ தெரியாது.

பிரதம மந்திரியாகவோ பொதுக் காரியதரிசியாகவோ வரக் கூடியவரைக் கண்டுபிடிப்பதுதான் உண்மையான பிரச்னை. வோரோஷிலோவ், குருஷேவ் இவர்களைத் தவிர்த்து பொலித் பீரோவிலுள்ள வேறெந்த அங்கத்தினரும் இப்பதவிகளில்ஒன்றை வகிக்கத் தகுதியுடையவர்தாம். தலைவனாவதற்கு மனத்திட்ப

மும் தனி குண விசேஷங்களும் தோற்றமும் உடைய ஒருவனைக் கண்டுபிடிப்பதுதான் பிரச்னை. ஸ்டாலின் இத்தகைய தலைவராக இருந்து வந்திருப்பதே அவர் சாதித்துள்ள பெரிய காரியமாகும்.

ஆர்வம் அளவு மீறியவரும் இரக்கமற்றவருமான ஐத்னோவிடம் தலைவராவதற்குரிய சில லட்சணங்கள் இருக்கத்தான் செய்தன. அவர் சொற்பொழிவுத்தறனும் பாண்டித்தியமும் உடையவர். நடிகன் போன்று சிறிது பகட்டாயிருப்பார். அவருடைய ஹாஸ்யம் காரமாக இருக்கும். நாஜிகளிடமிருந்து லெனின்கிராட்டைக் காப்பாற்றியவர் என மக்களால் மதிக்கப் படுவர். ஸ்டாலினைச் சூழ்ந்திருப்பவரிற் பலர் பேரனுபவமும் திறமையும் வாய்ந்தவராக இருப்பினும், இவருடன் ஒப்பிடும் போது அவர்கள் மந்த புத்தியுடையவராகவே தோன்றுவர்.

மோலடாவ்

இவர்களில் மிகவும் பெயர் பெற்றவர் வியாசஸ்லாவ் மோலடாவ் என்பவர். இவரே ருஷியாவின் அடுத்த பிரதமராவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது. யுத்த பிற்கால நெருக்கடி நீளும் வரையில் இவர் அயல்நாட்டு மந்திரி வேலையையும் பார்த்துவருவார். வேறெந்த தனி மனிதரையும் விடஇவரே சோவியத் மக்களுக்கு அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக இருக்கிறார். பொலித் பீரோவின் வேறெந்த அங்கத்தினரையும்விட இவருக்குத்தான் சோவியத் அதிகாரவர்கத்தினரிடமிருந்து வேலைவாங்கத்தெரியும். ஆனால், சோவியத் யூனியனிலுள்ள எவரும் இந்த நிட்சண்யமற்ற பண்டித மனப் பான்மையுடைய மோலடாவ் எதிர்காலத் தலைவராவார் எனக் கருதவில்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் முக்யமான பதவியான பொதுக் காரியதரிசி பதவிக்கு ஜார்ஜி மாலன்கோவும் லவ்ரந்தி பெரியாவும் பலமாகப் போட்டியிடுவர்.

மாலன் கோவ்

ஜார்ஜி மாலன்கோவ் யாவற்றையும் ஒழுங்காக அட்டவணைப் படுத்தும் மதியினர் எனச் சாதாரணமாகக் கூறுவதுண்டு. ஏற்கெனவே கட்சியின் மத்தியக் கமிட்டியின் காரியதரிசியாயும் நிர்வாக சிப்பந்திகளின் தலைவராயும் இருக்கும் அவர் நாட்டில் எவருடைய வேலையையும் மாற்றிவிடும் அதிகாரமுடையவர். இப்போது முக்யமான பதவிகளில் இருப்பவர் தம் வேலையை அவரிடமிருந்தே பெற்றவர். ஸ்டாலின் பிரத்யேக காரியதரிசியாக பல்லாண்டுகள் வேலை செய்தபோது கட்சித்தலைமைக்குரிய வேறு பல நுணுக்கங்களையும் கற்றார். யுத்தத்தின்போது நாட்டின் கமாண்டர்-இன்-சீப்பாக இருந்த ஸ்டாலின் தம் நேரம் ஆற்றல் ஆகிய யாவற்றையும் அதிலேயே செலவழித்த போது மாலன்கோவே சோவியத் ருஷியா முழுவதற்கும் கட்சியின் பெரிய தலையாக இருந்தான்.

லவ்ராந்தி பெரியா

சோவியத் ருஷியாவில் மிகவும் சக்திவாய்ந்த மூன்றுவது மனிதர் லவ்ராந்தி பெரியா. சோவியத் பாதுகாப்புக்குப் பொறுப்புடைய இரண்டு அரசாங்க இலாகைகளையும் அவரே ஒன்றோடொன்று இணங்கி வேலை செய்யுமாறு செய்பவர். உள்நாட்டு விவகார மந்திரி காரியாலயத்தைச் சார்ந்த இருபது டிவிஷன்களுக்கும் சோவியத் ருஷியாவுக்கு உள்ளும் சரி, சோவியெத் செல்வாக்குக்கு உட்பட்டு அதைப் பின்பற்றும் நாடுகளிலும் சரி வேலை செய்யும் சோவியத் ரகசிய ஏஜன்ஸிகளுக்கும் அவர்தாம் பிரதம கமாண்டர் ஆவார். நாட்டின் விரிவான கட்டிட சுரங்கத் திட்டங்களை நடத்திவைக்கும் பொறுப்புடைய உள்நாட்டு மந்திரியின் தொழில் இலாகாவின் வேலையை நேராக நடத்துகிறவரும் அவரே. அவர் நடத்தும் பெரிய வேலைகளில் லட்சக்கணக்கான சோவியத் கைதிகளும் ஜர்மானியரும் ஜப்பானியரும் வேலை செய்துள்ளனர்.

1946-ல் அணுவைப் பிளப்பது சம்பந்தமான ராணுவ, தொழில் ஆராய்ச்சிகளை ஒழுங்குபடுத்தும் 'விசேஷ வேலை'

அவருக்கு அளிக்கப்பட்டது. இது இன்று பெரியாவின் பொறுப்புக்களில் மிக முக்யமானதொன்று.

பெரியா காகஸஸ்ஸில் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு என்ற நூலொன்றை எழுதியிருப்பதால் அறிவாளி என மதிக் கப்படுவதற்கு உரிமைபெற்றிருக்கிருர். ஸ்டாலினைப்போல அவரும் ஜார்ஜியா நாட்டவரே.

அவருக்கு பொதுக்காரியதரிசி பதவி அளிக்கப்படலாம். ஆனுல், சோவியத் மக்களின் கண்களில் படும்படி அவரையே தலைவ ராக்க ஆயத்தம்செய்ய ஸ்டாலினும் பொலித் பிரோவும் முடிவுசெய்வரேல், சோவியத் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக மக்கள் அவர்பால் கொண்டுள்ள அச்சம் பெருந் தடையாக இருக்கும்.

நியாயமான வார்சு

ருஷியாவில் சோவியத் தலைவர்களில் தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் ஒருவர் இருக்கிருர். அவரைப்பற்றி உலகம் அதிகம் அறியாது. ஆயினும் மற்றெவரையும் விட அவரே ஸ்டாலினின் வாரிசாக நியாயமாக வரவேண்டியவர். அவர் தாம் மார்ஷல் நிக்கோலை புல்கானின். அவர் படை மந்திரி யாகவும் பொலித் பீரோவில் ஒருவருக்குப் பிரதியாக வரக்கூடிய அங்கத்தினராகவும் இருக்கிருர். நீலக்கண்களும் அழகிய தோற்றமும் உடைய இந்த ருஷியரை யுத்தத்திற்கு முன் மாஸ்கோவுக்கு வெளியிலே எவரும் அறியார். சோவியத் தலைநகரின் மேயராகவும், கனத்தொழில் ஒன்றின் கிளைக்கு அட்மினிஸ்டிரேடராகவும் ராஜாங்க பாங்கியின் தலைவராகவும் இருந்திருக்கிருர். யுத்தகாலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் யாவற்றையும் கூர்ந்து கவனித்து ரிப்போர்ட் செய் பவராக இருந்தவர்.

ஸ்டாலின் படைகளின் மந்திரிக்குரிய கடமைகளைக் கைவிடத் தயாராக இருந்த சமயத்தில் புல்கானின்தான் அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் அவருடைய மதிப்பு உயர்ந்து

கொண்டேவருகின்றது. செஞ்சேனையிடையேயும் மக்களிடையே யும் அவர் செல்வாக்கு பெருகிவருகின்றது.

ஒரு விஷயம் மட்டும் நிச்சயமெனவே தோன்றுகிறது. ஸ்டாலி னுடைய உடல்நிலை பார்வைக்கு இன்னும் சரியாகவே இருக் கிறது. தம் வாரிசைத் தேர்ந்தெடுக்கும்போது தம் கருத்தை வெளியிடுவதற்கும், கட்சி அங்கத்தினர், சோவியத் மக்கள் இவர்கள் கண்முன் ருஷியாவின் எதிர்காலத் தலைவனைத் தயார் படுத்தும் வேலையில் உதவி புரிவதற்கும் உரிய நிலையில் இன்னும் இருக்கிறார்.

ஜோடிப்பதற்கான பல வழிகளைப் போல்ஷிவிக்கர் அறிவர். பத்திரிகைகளில் சோவியத் தலைவர்கள் பற்றிய ஜாப்தாவில் ஒரு பெயரை முதலில் வரும்படியாகச் செய்யக்கூடும். பொதுக் கூட்டங்கள், விழாக்களின்போது தலைவர்கள் தோன்றும் வரிசை முறைமையை மாற்றி அமைக்கக்கூடும். குறித்த ஒருவருக்கே அரசாங்கக் கொள்கைகளை வெளியிடும் பேச்சுக்கள் பேசும் வாய்ப்புக்களை அடிக்கடி அளிக்கக்கூடும்.

மக்களின் கடவுள்

இதற்கிடையில் இரும்பு மனிதரான ஸ்டாலின், சோவியத் மக்களின் முன்னிலையில் இப் பரந்த நாட்டின் தலைவராகவும், ஒற்றுமையின் சின்னமாகவும் தொடர்ந்து காட்டப்பட்டு வரு கிறார். ருஷியாவில் சாதிக்கப்பட்டுள்ள நன்மைகள் வெற்றி கள் யாவற்றுடனும் ஒற்றுமைப்படுத்தப்பட்டுவருகிறார். இது வரையில் எம் மனிதரும் மதிக்கப்படாத வகையில் அதிகாரப் பற்றுடைய பத்திரிகைகளிலும் ரேடியோவிலும் தம்மக்களின் நலன்களில் சதா கவனஞ்செலுத்தும் கடவுளாகவும் புதுருஷி யாவின் சிருஷ்டிகர்த்தாவாகவும் சித்திரிக்கப்படுகிறார். ஒவ் வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் தம் தனி நலன் களில் ஸ்டாலின் அக்கறைகொண்டிருக்கிறார் என்று நம்பும் படியாகத் தூண்டப்படுகின்றனர். ஒவ்வொரு பிரஜையும் ருஷி யர் அனைவர்க்கும் தந்தையென அவருடைய உதாரணத்தை

கொண்டு தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் தூண்டப் படுத்தப்படுகின்றனர்.

'செம்பிளியா ருஸ்காயா' (ருஷிய நிலம்) என்ற நூல் ஒன்றில் பின் கண்டது காணப்படுகிறது.

"ஸ்டாலின்! அவரது அருமையான பெயரை நம் உள்ளத்தில் தாங்கி நிற்கிறோம். அரசாங்க மாளிகையில் அவரது சாந்நித்தியத்தை ஒவ்வொரு அடியிலும் காண்கிறோம். சிறிது முன்பே அவரது அடிச்சுவடுகள் பட்ட கற்களின்மீது நடக்கிறோம். மண்டியிட்டு அப்புனிதச் சுவடுகளை முத்தமிடுவோம்."

சோவியத் பத்திரிகைகள், தொழிலாளரும் குடியானவரும் அறிஞரும் ஸ்டாலினைப் புகழ்ந்து நன்றி தெரிவிக்கும் கடிதங்களை முதற்பக்கங்களிலே வெளியிடாத நாட்களே கிடையாது. கொற்றர்கள் தாம் செய்யும் அபார வேலைகள்யாவும் அவராலேயே செய்யப்பட்டன என்பர். நூலாசிரியர்கள் அவர் மேதை அளிக்கும் உதவியினாலேயே தம் சிறந்த நூல்கள் எழுதப்பட்டன என்பர்.

அடக்கமற்ற இத்தகைய புகழ்ச்சி அளவு மீறிவிட்டதன் காரணமாக மக்கள் அதைத் தம் கதைகளில் பரிகசிக்கவும் ஆரம்பித்துவிட்டனர். அக்கதைகளில் ஒன்று, ஒரு நூற்றாண்டு முன் காலஞ்சென்ற ருஷியாவின் மகத்தான தேசியக் கவி அலக்சாண்டர் புஷ்கினின் ஞாபகார்த்தமாகச் செய்யப்பட்ட முயற்சியொன்றைப் பற்றியது. ஞாபகார்த்தத் திட்டங்கள் பல சமர்ப்பிக்கப்பட்டன. அவையாவும் தகாதவையெனத் தள்ளப்பட்டன. ஆனால், ஒரு நாள் யோசனையொன்று வந்தது. அது உடனே ஏகமனதாக ஏற்கப்பட்டது. நினைவுச்சின்னம் குறித்தகாலத்திற்குள் முடிக்கப்பட்டது. மகாகவிக்குரிய காணிக்கை திறந்து வைக்கப்பட்டது. அது யாருடைய சிலையென்று நினைக்கிறீர்கள்? புஷ்கின் பாடல்கள் அடங்கிய சிறு நூல் ஒன்றைப் படிக்கும் ஸ்டாலினின் பிரமாண்டமான சிலையாக இருந்தது அது!

அத்தியாயம் 23

மீண்டுமொரு யுத்தத்தைப்பற்றிய சிந்தனையை ருஷியாவைப்போல வெறுப்பது இவ்வுலகில் வேறெருநாடும் கிடையாது என்பதே என் கருத்து. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் நினைவுகள் இன்னும் மனத்தைவிட்டுப் போகவில்லை. காயங்களிற் பல இன்னும் ஆறவில்லை. சோவியத் யூனியனில் யுத்தத்தினுல் நஷ்டமடையாத குடும்பம் ஒன்றுகூட இல்லை எனலாம். யுத்தத்திற்குப் பிறகு வீடின்றி யுத்தகளத்தின் குழிகளிலும் பரிகைகளிலும் வசித்த இரண்டரை லட்சம் சோவியத் பிரஜைகள் அடங்கிய கடைசி கூட்டத்தினர் 1948-ல்தான் போதும்போதாதெனக் குடியிருப்புக்கள் இறுதியாகப் பெற்றனர்.

ருஷிய மக்களுக்கு யுத்தத்தின்மீது, அது வெற்றியளிப்பதாயினும், ஒரு ஆழ்ந்த வெறுப்புண்டு. ருஷிய வரலாற்றில் எந்த பெரிய யுத்தமும் ஆக்கிரமிப்பு யுத்தமாக இருந்ததே கிடையாது. அவையாவும் ருஷிய மக்களின்மீது புறத்திலிருந்து திணிக்கப்பட்டவையே.

சோவியத் பிரஜைகள் இன்றைய சர்வதேச நிலைமையின் நெருக்கடியை அறிவர். அவர்களுடைய மனவமைதி குலையாதிருப்பது ஒரு பாக்கியமே. கட்டுப்படுத்தப்பட்ட பத்திரிகைகளும் ரேடியோவும் யுத்த விஷயத்தில் ஆர்வங்காட்டுவதில்லை. அமெரிக்காவைபோல எழுச்சியுண்டாக்கினுல், சோவியத் மக்களின் உறுதியும் உத்சாகமும் பெரிதும் பாதிக்கப்பட்டு தொழிலாளரின் உற்பத்திசக்தி குன்றும்.

ருஷிய அரசாங்கத்தின் செயல்கள் ஆத்திரமூட்டக்கூடியனவாக இருப்பினும், அது இப்போதோ அல்லது நாம் காணக்கூடிய எதிர்காலத்தில் எப்போதோ யுத்தம் செய்ய நாட்டங்

கொள்ளவில்லை என்பதே என் ஆழ்ந்த நம்பிக்கை. எந்த பிரச்னையிலும் யுத்தமேற்படும் அளவுக்கு சோவியத் யூனியன் செல்லாது என்றே நான் கருதுகிறேன். பல காரணங்கள் இம்முடிவுக்கு வரச்செய்கின்றன. முதலாவது, ருஷிய மக்கள் சோர்ந்துள்ளனர். அவர்கள் வழி வழியாக யுத்தத்தை எதிர்த் தேவந்துள்ளனர். இரண்டாவதாக, அமெரிக்காவுடன் ஒப்பிடும் போது ருஷிய யுத்தசக்தி குறைவு. மூன்றுவதாக, முத லாளித்துவம் அழிவதற்கான விதைகள் அதனிடமே உள்ள தாலும், முதலாளித்துவ சமூகம் தவிர்க்கமுடியாமல் பொரு ளாதார விபத்தாலும் சிதைவாலும் நாசமடையப்போவது திண் ணம் ஆதலாலும், காலம் தங்கள் பக்கமே உள்ளதென கம் யூனிஸ்ட்கள் திடமாக நம்புகின்றனர்.

அதே சமயத்தில், ருஷிய அரசாங்கம் உண்மையான அமைதியை விரும்பவில்லை. அமெரிக்காமீது அவநம்பிக்கை யைத் தூண்டி ஐரோப்பாவை ருஷிய வட்டத்திற்குள் இழுப் பதற்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளில் குழப்பமும் கிளர்ச்சியும் நிறைந்த நிலை மிகப் பொருத்தமாயிருக்கும்.

ருஷியா உண்மையில் விரும்புவது கால அவகாசம்தான். அது கிடைக்குமாயின், ருஷியா தன் புனருத்தாரண வேலையைத் துரிதப்படுத்தவும், தன் யுத்த இயந்திரத்தை வளர்க்கவும், தன் செல்வாக்குக்குக் கட்டுப்பட்ட நாடுகளைத் தன் னுடன் பிணைப்பதற்கான இணைப்புக்களை அமைக்கவும், அமெரிக் காவை முடமாக்கும் பொருளாதாரச் சோர்வுக்காகக் காத்திருக்க வும் கூடும்.

ருஷிய யுத்தசக்தி

ருஷிய அரசாங்கம் யுத்தம் செய்ய உண்மையாகவே தயங்கு வதற்கு மூல காரணம், ருஷிய யுத்தசக்தியானது அமெரிக்க யுத்த சக்தியுடன் சிறிதுகூட ஒப்பிட முடியாத அளவு மிகக் குறைவாக இருப்பதுதான் என்று கருதுகிறேன். 1947-ல் ருஷிய உற்பத்தியானது 1940-ல் இருந்த நிலையை எட்டிவிட்ட

தென மோலடாவ் அறிவித்தார். அமெரிக்கத் தொழில்கள் யுத்தத்தினுல் நாசமடையவில்லை. அமெரிக்க உற்பத்தி இப்போது 1940-ல் இருப்பதைவிடப் பாதியளவில்தான் உள்ளது. ஆயினும் இந்த உற்பத்தியுடன் ஒப்பிடும்போது ருஷிய உற்பத்தி அதிகமில்லை. ஒரு நாட்டின் யுத்த சக்திக்கு முக்கியமான எல்லாத் தொழில்களிலும் நாம் ஒன்றுக்கு நாலு வீதம் ருஷியாவை மிஞ்சிக்கொண்டிருக்கிறோம். மனித-மணி அடிப்படையில் பார்த்தால் புள்ளி இன்னும் அதிகமாக இருக்கும். ஒவ்வொரு அமெரிக்க ஆலைத் தொழிலாளியும் ருஷியத் தொழிலாளியைவிட ஆறு மடங்கு அதிகமாக உற்பத்தி செய்கிறுன்.

ஆயினும், இவ்விதமாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது காணும் ஒரு முக்கியமான விஷயத்தை எவ்வளவு அழுத்தமாகச் சொன்ஞலும் தகும். ருஷிய உற்பத்தி இப்போது 1940-ல் இருந்த நிலையில்தான் இருக்கிறதாயினும், யுத்த சாமான்களை உற்பத்தி செய்வதற்கான அதன் ஆற்றல் 1940-ல் இருந்ததைவிட இரண்டரை மடங்கு அதிகமாக இருக்கிறது. சோவியத் யூனியனின் பிரதான திட்டக்காரரான நிக்கோலை வோஜ்நெஸ்ஸென்ஸ்கி "விடுதலைப் போரின்போது சோவியத் ருஷியாவின் யுத்த பொருளாதாரம்" என்ற தம் நூலில் "வலுவான உற்பத்தித் திறனின் முஸ்தீப்புடன் கூடிய ஆயுதம் தாங்கிய மக்களே ஏகபோக முதலாளித்துவத்தின் விஸ்தரிப்பைத் தடுக்க முடியும்" எனக் கூறுகிருர். அமெரிக்கா உற்பத்தி செய்யும் யுத்த ஆயுதங்களைவிடப் பன்மடங்கு அதிகமான அளவில் உற்பத்தி செய்வதில் ருஷியா இப்போது உக்கிரமாக ஈடுபட்டுள்ளது.

யுத்த தளவாடங்களை உற்பத்தி செய்யும் தன் ஆற்றலை மேலும் விரிவுபடுத்த ருஷியாவில் மக்களின் சௌகரிய வாழ்வுக்குரிய தொழில்கள் பலியிடப்படுகின்றன. அதனுல் வாழ்க்கைத்தரம் தாழ்ந்து மொத்த பொருளாதாரத்தில் ஒரு பலவீனத்தை உண்டாக்குகிறதாயினும், அது தாழ்ந்த யுத்தசக்திக்கு அறிகுறியாகாது.

குறித்த காலத்திற்கு ஒரு வருஷம் முன்னதாகவே, அதாவது, 1949-லேயே நிறைவேற்றிவிடலாம் என ருஷியர் நம்பும் நடைமுதல் ஐந்து வருஷத் திட்டம் ஏற்றத் தாழ்வாக அபிவிருத்தியடைந்து வருகின்றது. சில தொழில்கள் நிர்ணய காலத்திற்கு முன்பாகவும், சில பின்னதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. ஒரேவிதமாக நடக்காமலிருப்பதற்குக் காரணம் தொழிலாளரின் தாழ்ந்த உற்பத்தி சக்தி. குடியிருப்பு வசதிகளும் இதர வசதிகளும் படுமோசமான நிலையில் இருப்பதே இத் தாழ்வுக்குக் காரணம். யூரல் போன்ற யுத்தத்தினால் பாதிக்கப்படாத பிரதேசங்களில் உற்பத்தி குறித்த காலத்திற்கு முன்னதாகவே நிறைவேறிவருகின்றது. மேற்கு ருஷியாவில் யுத்தத்தினால் பாழடைந்த பிரதேசங்கள் பின் தங்குகின்றன. உற்பத்தி கண்டிப்பாகத் துரிதப்பட்டாலொழிய 1950-ல் நிறைவேற வேண்டிய லட்சியங்கள் நிறைவேறுவது சாத்யமில்லை.

சோவியத் யூனியனின் புனருத்தாரண எழுச்சியில் எஃகு உற்பத்தியில்தான் பெரிய தடை ஏற்பட்டுள்ளது. பாழடைந்த பிரதேசங்களில் வெடி உலைகள் பாதி அளவுக்குமேல் திரும்ப அமைக்கப்பட்டுள்ளனவாயினும், பழுது பார்த்த வேலைகள் வெறும் ஒட்டுப்போட்ட வேலைகளே என்றும், தேர்ச்சி பெறாத தொழிலாளரின் வேலைத்திறன் மிக மட்டமானதென்றும், உற்பத்தி விளைவு யுத்தமுற்கால மட்டத்தில் ஐந்தில் ஒரு பங்கு வீதமே உள்ளதென்றும் அறிக்கைகள் காட்டுகின்றன. இதனால் 1950-ல் குறி நிறைவேறுவது சாத்தியமன்று. நிறைவேறினாலும், அமெரிக்க உற்பத்தியில் அது 30 சத வீதமாகவே இருக்கும்.

அமெரிக்க உற்பத்தியில் நான்கில் ஒரு பங்காகவே உள்ள ருஷிய நிலக்கரி உற்பத்தி யுத்த முற்கால அளவை மிஞ்சிவிட்டது. ஆனால், இந்த அதிகரிப்பு கீழ்த்தரமான சுரங்கங்களிலிருந்து அதிகம் கிடைத்ததனாலேயாம். டன்பாஸ் பிரதேச உயர்ந்தரக நிலக்கரியின் உற்பத்தி யுத்தத்திற்கு முந்திய

நிலையை இன்னும் எட்டவில்லை. எண்ணெய் உற்பத்தியும் 1940-ம் வருஷ புள்ளிகளுக்குக் குறைவாகவே இருக்கிறது. 1950 குறி அவற்றிற்கு 12 சத விகிதமே அதிகம். இந்த தாழ்ந்த குறி 1950-க்குள் நிறைவேறும் என்றே அறிகுறிகள் காட்டுகின்றன. ஒரு சமயம் இக் குறியையும் தாண்டிவிடலாம்.

இயந்திர உற்பத்தி யுத்தத்திற்கு முந்திய நிலைக்கும் அதிகமாகவே துரிதமாக விரிவடைந்துவருகிறது. 1950-க்குள் ருஷியர்கள் 1,500,000 இயந்திர உறுப்புக்களை ஸ்டாக் செய்ய லாமென நம்புகின்றனர். ஆனால் 1945-லேயே அமெரிக்கா வில் 1,700,000 இயந்திர உறுப்புக்கள் ஸ்டாக்கில் இருந்தன. டிராக்டர், மோட்டார் தொழில்கள் (இவை டாங்கிகளையும் ஆயு தக்கவசம் பூண்ட கார்களையும் உற்பத்தி செய்கின்றன) குறித்த காலப்படி நடக்கவில்லை. 1947-ல் 29,000 டிராக்டர்களே உற் பத்தியாயின. யுத்தகாலத்தில் மொத்தம் 530,000 டிராக்டர் களில் 137,000 நாசமடைந்தன என்பதைக் கருத்தில் கொள் ளும்போது இவ்வுற்பத்தி எவ்வளவு குறைவானது என்பது புலனாகும். 1,000 மோட்டார் வண்டிகள் கூட்டுப்பண்ணைக ளுக்கு அனுப்பப்பட்டனவென்றும் இவ்வாண்டு மேலும் 9,000 சப்ளையாகும் என்றும் 1948-ல் ஒரு பத்திரிகை பகட்டாக அறிக்கையிட்டது. மொத்த கூட்டுப்பண்ணைகள் 242,000.

பொதுவாகப் போக்கு வரத்து சாதனங்கள் தேவைக்குப் போதுமானவையாக இல்லை. இருப்பவை அளவுக்கு மீறி உழைக்கின்றன. ரயில்வேக்கள்தான் ஐந்தில் நான்கு பங்கு வீதம் ருஷியச் சாமான்களை ஏற்றிச்செல்கின்றன. இன்றி யமையாத தேவைகளுக்குப் போதிய அளவு அவை பழுதுபார்க் கப்பட்டுள்ளன. சிவில் விமானப் போக்குவரத்து துரிதமாக வளர்ச்சியடைந்து வருகிறது. 1950-க்குள் விமான லயன் கள் 110,000 மைல் பரவ திட்டம் போடப்பட்டுள்ளது. புதிய விமானப் பாதைகள் உண்டாகிவருகின்றன. புதிய விமானத் துறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

ருஷியாவில் ராணுவ விமான உற்பத்தி நம்முடையதைவிடப் பன்னிரண்டு மடங்கு அதிகமென அமெரிக்க விமானப் படை கருதுகிறது. இதனால் வருஷமொன்றுக்கு 6,000 முதல் 12,000 ராணுவ விமானங்கள் வீதம் கட்டப்படுகின்றன என்று அர்த்தமாகிறது. ஆனால் சோவியத் பாம்பர்கள் அளவிலேனும் சரி, சிறப்பிலேனும் சரி நம்முடையவற்றோடு எவ்வகையிலும் ஒப்பிடக்கூடியனவாக இல்லை.

சக்தி உற்பத்தி யுத்தத்திற்கு முந்திய நிலையை மெல்ல மெல்ல மிஞ்சிவருகிறதாயினும், 1950-க்குக் குறிக்கப்பட்ட விகிதத்தில் பாதியளவையும் எட்டவில்லை. 1950-க்குரிய 82,000,000,000 கிலோவாட்-மணியை எட்டினாலும், அது நம் நாட்டின் அவ் வருஷத்திய உத்தேச உற்பத்திக்கு மிகக் குறைவாக இருக்கும்.

கட்டிடத் தேவையைச் சமாளிக்க முயற்சி செய்யக்கூட இல்லை. குடியிருப்பு நிலை சோவியத் வரலாற்றிலேயே மிக மோசமாக உள்ளது. யுத்தத்தின்போது வீடுகளை இழந்த 25,000,000 பேர்களில், 10,000,000 பேர்களுக்கே 1943 முதல் போதிய குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. எஞ்சியவர்கள் வீடுபோல் உபயோகப்படக்கூடிய மறைவிடங்களிலும் சிறிய ஜாகைகளில் மற்றக் குடும்பங்களுடன் அடைக்கப்பட்டும் வாழ்ந்து வருகின்றனர். ஐந்து வருஷத் திட்டம் 1,000,000 புதிய வீடுகள் கட்ட ஏற்பாடு செய்கிறது. ஜனத்தொகை பெருகப் பெருக இது எந்த மூலைக்கு ? அன்றியும், திட்டம் நிறைவேற்றப்பட்டால் அதே ஒரு அற்புதமாக இருக்கும். கட்டிடச் சாமான்கள் உற்பத்தி குறிப்பிட்ட நேரத்திற்குள் நடக்காமல் பின்தங்குகிறது. கிடைக்கும் சாமான்கள் தொழில் திட்டங்களுக்கும் பொது கட்டிடங்களுக்காகவும் அளிக்கப்படுகின்றன. இந்த நிலையில் உற்பத்தி சக்தி குறைவதும், செலவு அதிகமாவதும், அதிருப்தி பரவுவதும் சகஜமாகும்.

தொழில்கள் ஒரே இடத்தில் குவியாமல் பரவலாயிருக்க வேண்டும் என்பது சோவியத் தொழில் வளர்ச்சித் திட்டத்தின்

ஒரு முக்யாம்சமாகும். உள் புறங்களில் சுயதேவைப்பூர்த்தி நோக்கத்துடன் பிரமாண்டமான புதிய மத்திய ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. ருஷியாவின் நடைமுதல் தொழில் முதலீடுகளில் பாதிக்கு மேல் கிழக்கு சைபீரியா போன்ற இடங்களில் புது தொழில்களில் போடப்பட்டு வருகின்றன. இப் பிரதேசத்தில் மெல்ல மெல்ல வளர்ந்துவரும் சமநிலை தொழில் பொருளாதாரம் விரிவடைந்து வரும் எல்லைப் புறங்களை மட்டுமன்றி தொலை கிழக்கிலுள்ள ருஷிய சேனைகளுக்கும் ஆதரவளிக்கும் ஆற்றலுடையதாக இருக்கும்.

வடமேற்கு லெனின்கிராட் பிரதேசத்தில் ஒரு பெரிய எஃகு ஆலை அமைக்கப்பட்டுவருகிறது. ருஷியா இரும்பு எஃகு உற்பத்திசக்தியில் பத்தில் ஒரு பங்கேனும் இங்கே 1960-க்குள் உற்பத்தியாகவேண்டும் என்பது திட்டம்.

விவசாய அபிவிருத்தி

நடை முதல் ஐந்து வருஷத் திட்டத்தில் இரண்டாவது ஸ்தானமே பெறுகிறதாயினும், தொழிலில்விட விவசாயத்தில் தான் அபிவிருத்தி அதிகம். இவ் வாண்டு உணவு உற்பத்தி, சிறப்பாக, தானிய உற்பத்தி ஏராளம். இதில் தலைக்கு உற்பத்தி விகிதம் மேற்கு ஐரோப்பா, அமெரிக்காவில் விட பன்மடங்கு அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1947-ல் சோவியத் யூனியனில் சாகுபடியாகும் பிரதேசங்களுக்கு மேலும் 20,000,000 ஏகர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. வெள்ளை ருஷியாவிலும் உக்ரேனிலும் யுத்தத்தினால் பழுதடைந்த ஏகர்கள் சாகுபடி செய்ய ஏற்றவையாகிவருகின்றன. விஞ்ஞானரீதியான, இயந்திர சாதன உதவியுடன் கூடிய விவசாயம் பெரு அளவில் பரவி வருகிறது.

ஐந்து வருஷத் திட்டத்தில் வாழ்க்கைக்குத் தேவையான சாமான்கள் மூன்றுவதாக வருகின்றன. உற்பத்தி நிதானமாக அதிகரித்துவருகிறது. ஆனால், ருஷியாவின் தொழிலாக்கத்திட்டம் பாதிக்கப்படலாகாது என்ற கவலை இருந்துவருவ

தால், வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் உற்பத்தி விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்படுவதில்லை. கனத் தொழில் ஆலைகள் பக்கத் தொழிலாக வாழ்க்கைக்குத் தேவை யான சில பொருள்கள் உற்பத்திசெய்கின்றன. உதாரண மாக, மாஸ்கோவிலுள்ள ஸ்டாலின் ஆட்டோ ஒர்க்ஸ், ஸ்பூன் கரண்டிகள், முள்கள், கோப்பைகள், ஷவல்கள், சம்மட்டிகள் ஆகியன பக்கத் தொழிலாகச் செய்கின்றன. ஆனால் இத் தொழில்களில் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசிய மேற்படும்போது வாழ்க்கை உபயோகத்திற்கான பொருள்களின் உற்பத்தி கைவிடப்படுகின்றது.

நான் முன்னே சொன்னபடி இப் பொருள்களில் குறைவு ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர் உறுதி தளர்கிறது. அடிக்கடி வேலைக்கு வராமல் நின்றுவிடுவது அதிகமாகிறது. தொழில் செலவு அதிகரிக்கிறது. உற்பத்தி சக்தி குறைகிறது. ஆகவே, ருஷிய யுத்தசக்தியில் தொழிலாளரே பலவீனமான அம்சம். தொழிலாளரின் எண்ணிக்கை 1947-ல் யுத்த முற்கால நிலையை எட்டிவிட்டாலும், யுத்தத்தில் தொழில் தேர்ச்சி பெற்றவர் பலர் இறந்து விட்டனர் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். யுத்தத்திற்கு முன்பிருந்ததைவிட தேர்ச்சி இப்போது குறைவு. இக் குறைவைப் போக்க ஆண் பெண் பிள்ளைகளுக்கு தொழிற் பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, சிறப்பாக, நிலக்கரி, உலோகத் தொழில்களிலும் போக்குவரத்து முறை யிலும் பயிற்சியளிக்க முயலுகின்றன. ஏறக் குறைய 2,000,000 பயிற்சியாளர் இப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் இவர்களால் தொழில்கள் பயனடைய நீண்டகாலம் ஆகும்.

அணு ஆயுதம்

யுத்தசக்தியைப் பெருக்கும் நோக்குடனேயே தொழில்கள் நடந்து வருவதால் அணுக்கால ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முயற்சி நடைபெறுகிறது. நம்முடைய உயரிய துல்லியமான தொழில்கள் ருஷியர்களிடையே கிடையா. நம்மைப் போன்று தொழில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களும் இஞ்சினியர்களும்

அவர்களிடம் இல்லை. இந்த நிலையில் அனுக்குண்டு செய்ய ருஷ்ய தொழிலுக்கு நீண்ட காலம் பிடிக்கும். தொழிலாளர், தொழில் மூலவசதிகள் இவற்றின்மீது ருஷிய அரசாங்கத்துக்கு முழு அதிகாரம் உண்டாயினும், தேவையான மனித சக்தியை யும் மூலப் பொருள்களையும் தன் அவசரத் திட்டங்களுக்காகத் திரட்டும் ஆற்றல் இருப்பினும் இக் குறை நிவர்த்தியாகவில்லை.

1950 உற்பத்தி லட்சியங்களை 1960-ல் இரட்டித்து விடலாமென சோவியத் யூனியன் நம்புகிறது. திட்டம் வெற்றியடைந்தால் தொழிலுற்பத்தி இன்று இருப்பதைவிட மும்மடங்கு பெருகு மென்பது இதன் அர்த்தம். அப்போதும் கூட சோவியத் தொழில் இன்றுள்ளதைப்போல சம நிலையற்றதாகவே இருக் கும். மக்கள் உபயோகிக்கும் சாமான்கள் 1960-ம் வருஷ திட்டங்களில் குறிப்பிடவுமில்லை. குறிகள் வைக்கப்பட்டாலும் அவை மிகக் குறைவாகவே இருக்கும்.

ருஷிய யுத்தசக்தி திட்டப்படி தொடர்ந்து பெருகுமானால், 1960-ம் வருஷ அளவில் சோவியத் தொழில் நம்முடைய தொழிலோடும் மேற்கு ஐரோப்பிய தொழிலோடும் ஒப்பிடுவ தற்கு எந்த நிலையில் இருக்கும் ? அது தாழ்வாகவே இருக்கும். அடிப்படைத் தொழில்களில் மொத்த உற்பத்தி சற்றேறக் குறைய 20 முதல் 40 சத வரையில் குறைவாகவே இருக்கும். மக்களுக்குத் தேவையான பண்டங்களைப் பற்றி, மேலும் குறை வாக இருக்குமென்பதைச் சொல்லத் தேவையில்லை.

முதலாளித்துவ உலகம் அமெரிக்காவின் தலைமையில் சீக்கி ரத்திலேயோ, அல்லது சிறிது தாமதமாகவோ சோவியத் ருஷி யாவைத் தாக்கும் என்ற நம்பிக்கையிலும், ஐரோப்பாவிலும் சீனாவிலும் ஏற்படும் புரட்சிகளுக்கு உதவியளிக்க ஓரளவு தயா ராகும் நோக்குடனும், எந்த ராணுவ நிகழ்ச்சியையும் சமாளிக்க ருஷியா ஆயத்தமாகி வருகின்றது. அமெரிக்காவும் எழக்கூடிய எத்தகைய ராணுவ நிலைமையையும் சமாளிக்கத் தயாராக வேண்டும். அவ்விதம் அது தயாராகவும் கூடும்.

யுத்தம் தவிர்க்கப்படலாம்

ஆயினும், யுத்தபிற்கால இப் பூதாகார வல்லரசுகளிடையே யுத்தம் தவிர்க்க முடியாதது அன்று என்பதே என் ஆழ்ந்த நம்பிக்கை. இன்று மூர்க்கமாக நடந்துவரும் பிரசார யுத்தத்தில் வெற்றியடைவதன் மூலம், ஆயுதப் போரை நாம் தவிர்க்க கூடும்.

ருஷியர் காலம் தங்கள் பக்கத்தில் இருக்கிறது எனக் கருதுவதுபோலத் தோற்றுகிறது. காலம் நம் பக்கமாகவும் அவர்கள் பக்கமாக இருப்பதைவிட அதிக அளவிலும் இருக்கிறது. காலத்தில் அவர்களுடையதைவிட உயர்ந்தரகமானதொரு ராணுவ இயந்திரத்தை நாம் அமைத்துக் கொள்ளக் கூடும். இதைவிட முக்கியமான விஷயம் என்னவெனில் மற்றொரு யுத்தமேற்படும் சாத்தியத்தை ஒழிக்க காலம் நமக்கு உதவியாக நிற்கும்.

நம் ஆற்றல்களையெல்லாம் கொண்டும் அமெரிக்காவை இன்றுள்ள மகத்தான நிலைக்குக் கொண்டு வந்த சம்பிரதாயங்களை நம் வலிமையாகக் கொண்டும், தீவிரமான, ஆக்கும் சக்தி வாய்ந்த சமாதானத்துக்காக நாம் போராட வேண்டும்.

கம்யூனிஸத்தின் அறைகூவலை ஏற்கவேண்டும்

சோவியத் கம்யூனிஸம் உலக ஜனநாயக நாடுகளை அறைகூவி அழைக்கிறது. நாம் அந்த அறைகூவலை ஏற்கவேண்டும். ருஷியா ஜனநாயக அரசாங்க அமைப்புக்களில் காணும் ஒவ்வொரு சமூகத் தீமையையும் எடுத்துக் காட்டி குற்றஞ் சாட்டி, கம்யூனிஸத்தையே சர்வசஞ்சீவியாக அளிக்கிறது. இத்தகைய பிரசாரத்தைக் கண்டிப்பதோடு நின்றுவிடாமல் அமெரிக்கா வேறு சில விஷயங்களையும் செய்யவேண்டும். உள் நாட்டில் மட்டுமன்றி நம் அயல்நாட்டுக் கொள்கைகளிலும் ஆக்கவேலையே நம் பதிலாக இருக்கவேண்டும். அழுகிச் செல்லரித்துப் போன சமூக பொருளாதார நிலைமைகளையோ அரசாங்கங்களையோ ஆதரிப்பதன்மூலம் நாம் தற்காப்பு

செய்து கொள்ள நம்மை அனுமதிக்கலாகாது. சமூகம் திருந்த புரட்சி இன்றியமையாதென கம்யூனிஸம் கூச்சலிடு கிறது. அதே திருத்தத்தை ஜனநாயகம் அமைதியாகச் சாதிக்க முடியும் என்பதை நாம் அறிவோம். எங்கே சமூகக் கொடுமை கள் சீழ் பிடித்துப் புரையோடுகின்றனவோ, அங்கேதான் கம்யூ னிஸம் செழிக்கிறது. அது வளர்வதற்குரிய நிலைமைகளை அகற்ற உதவினால், ஜனநாயகத்தின் அமைதியான வழி முறைகளை அபிவிருத்தியுடன் இணைப்பதில் வெற்றியடைவோம். எந்த கோரத்தின்மீது அது செழிக்கிறதோ அதைச் சட்டை செய்யாமல் கம்யூனிஸத்தைத் தாக்குவதில் மட்டுமே நம் ஆற்றலைச் செல வழித்தோமானால், விஷவேர்களை பூமிக்கடியில் விட்டுவிட்டு களைகளை வெட்டியெறிவதைப் போலவே அது இருக்கும்.

... நம் நாட்டுக்குள் இன ஏற்றத்தாழ்வுகளையும் பாதுகாப்பற்ற பயங்கர நிலைமையையும் ஒழித்து நம்மைப் பரித்தம் செய்து கொள்ளவேண்டும். வெளியே, சமூகப் புனரமைப்புக்கான அனுபவசாத்தியமான திட்டங்களுக்கு ஆதரவளிக்க நாம் தயாராக நிற்கவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் நாம் மதிக் கும் ஜனநாயக நலன்களின் பிரதிநிதிகளாக விளங்கும் தாராள மனப்போக்குடைய அம்சங்களுடன் ஒன்றி இணையவேண்டும் இந்த அம்சங்கள் தம் நம்பிக்கைகளையும் முயற்சிகளையும் அமெ ரிக்காவுடன் ஒன்றுபட்டு இணைவதற்கான திடமான காரணம் காட்டவேண்டும்.

... மார்ஷல் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினால் அதில் கலந்துகொள்ளும் நாடுகளில் கம்யூனிஸ்ட் அபாயம் நீங்குமென நம்புவதற்குக் காரணமிருக்கிறது. காலஞ்சென்ற ஜத்னோவ் கூட மார்ஷல் திட்டமே கம்யூனிஸத்தின் எதிரி எனக் கூறியிருக்கிறார். போலீஸ் ஆட்சி நடக்கும் ஒரு நாட்டுக்கு அடிமைப்படுவதற்குப் பதிலாக முடமான நாடுகள் தாமே நின்று தம் தனித்தன்மையைப் பாதுகாத்துக்கொள்வதற் கான வான்றுகோலை நாம் அளிக்கிறோம்.

நன்கு இணைந்த 'அமெரிக்கக் குரல்' இச் சயாதாளை போரில் ஒரு பெரிய ஆயுதமாகக் கூடும்; அவ்விதம் ஆக வேண்டும். ருஷியரிடையே சந்தேகத்தையும் பயத்தையும், வெறுப்பையும் விஷம்போல ஊட்ட ருஷிய அரசாங்கம் உறுதியான பிரசாரம் செய்து வருகிறதாயினும், ருஷிய மக்கள் தம் தினசரி வாழ்க்கையில் பிறரோடு கூட்டமாக வாழ்வதிலும், சகோதரபாவத்தையும் சொல்லையும் செயலையும் எளிதில் உணர்ந்து இசைந்து தக்கபடி பதில்செய்வதிலும் உலகிலேயே மிகச் சிறந்தவர்களிடையே விளங்குபவர். அவர்களிடையே தாழ்மையான எளிமையும், அறியவேண்டும் என்ற அவாவும் கற்பனைசக்தியும் நன்கமைந்துள்ளன. பிற நாட்டினரின் வாழ்க்கையிலும் போக்குகளிலும் அவர்கள் கொள்ளும் அக்கறையானது குழந்தைபோன்ற கபடமற்ற தன்மையும் உடையது. பொறாமை சிறிது இருக்கலாம். ஆனால், அதில் கெட்ட எண்ணம் இராது. அது போட்டி உணர்ச்சியை எழுப்பலாம். ஆனால், அவர்களுடைய மூலாதாரமான அன்புக்கும் வசீகர இயல்புக்கும் பங்கமேற்படுவதில்லை.

உண்மையே நம் சக்திவாய்ந்த கூட்டாளி. சோவியத் பிரஜைக்கு அமெரிக்காவைப்பற்றிய உண்மையும் நடைமுறை நிகழ்ச்சிகளும் வெகு அபூர்வமாகவே கிடைக்கின்றன. ருஷியப் பத்திரிகை அறிக்கைகள் அமெரிக்காவின்பால் அவநம்பிக்கையும் பீதியையும் பரப்புவனவாக உள்ளன. அமெரிக்க வாழ்க்கை பற்றிய சோவியத் செய்திகள் கவனமாகப் பொறுக்கியெடுக்கப்படுகின்றன. அந் நாட்டின் சமூக, பொருளாதார, இனப் பிரச்னைகளை அவை சிறிதும் தாரதம்மியமில்லாமல் மிகைபடக்கூறுகின்றன.

"அமெரிக்கக் குரல்"

ருஷிய மக்களிடையே நேராகச் செல்வதற்கு ஒரே சிறந்த வழி 'அமெரிக்கக் குரலே' யாகும். தினந்தோறும் அமெரிக்கக் குரலிலிருந்து இடையீடின்றியும் சளைப்பின்றியும் வரும் செய்திகள் ருஷிய மக்களைச் சிக்கியுள்ள வஞ்சகமான அபத்த வலையை

அகற்றுவதற்கான சிறந்த சாதனமாவன. உத்தேசமாக அமெரிக்கக் குரலைக் கேட்பவர் 12,000,000 பேர் இருக்கலாம். இவர்கள் மூலமாக சோவியத் மக்களின் பெரும் பகுதியினரை எட்ட முடியும், எட்டி ஆகவேண்டும்.

அமெரிக்க மக்கள் உலக விவகாரங்களிலுள்ள தங்கள் அக்கறையைத் தளர்த்தலாகாது. இந்நாடு உலகின் ஏனைய பகுதியிலிருந்து தனித்திருந்து அமைதியாக வாழ முடியாது என்பதைச் சென்ற தலைமுறையில் கற்றோம். மற்ற நாடுகளின் சமூக, ராஜீய, பொருளாதார, தொழிற் பிரச்னைகள் நம்முடைய பிரச்னைகளும் ஆகும். இப் பொறுப்புக்கு ஏற்ப வாழத் தவறினால், நமக்கும் ஏனைய உலகுக்கும் அபாயமே விளையும்.

காலனி ஆட்சி செலுத்துவோருக்கும் இழிவுற்ற கொடுங்கோன்மையான சர்வாதிகாரிகளுக்கும் எதிராக நடக்கும் மக்கள் புரட்சி—அமெரிக்க புரட்சிப் பிதிரார்ச்சிதத்தின் விளைவேயாம். அமெரிக்காவும் மகத்தான புரட்சியொன்றினின்று உற்பத்தியானதே. கொடுங்கோலுக்கு அடிமைப்பட்ட நாடுகள் அதை என்றும் மறப்பதில்லை. மானிட கௌரவத்தின் ஜீவனுள்ள மகத்தான உதாரணமாயும் ஜீவனுள்ள ராஜீய சுதந்திரத்தின் உயரிய பிரமாணமாயும் விளங்குவது அமெரிக்காவேயன்றி சோவியத் யூனியன் அல்ல என்னும் உண்மையை அவை புறக்கணிப்பதுமில்லை.

காம்ப் பாக்கிவோல்ட்,
அஷ்லாந்து என்.எச்.
ஜுலை—செப்டம்பர், 1948.



ராபர்ட் மாகிடாப்

ராபர்ட் மாகிடாப் ரஷ்யர்வழிப் பிறந்த அமெரிக்கப் பத்திரிகையாளர். இவர் 1935-ல் ரஷ்யாவுக்கு முதன் முதலாகச் சென்றார். அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு அவர் பத்திரிகை எழுத்தாளராக வேலை பார்த்தார். இவர் ஐரோப்பா முழுவதையும் சுற்றிப் பார்த்திருப்பவர். இவரும் இவரது மனைவியாரான நைலா என்ற ரஷ்யப் பெண்மணியும் இப்போது அமெரிக்காவில் இருக்கிறார்கள்.